ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 செப்டம்பர் 1937 கதிர் 2

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	தலையங்கம்	1
சீன ஜப்பானிய யுத்தம்		9
சீனாவின் கட்சி	"சீன ஸ்தானீகர்" (Chinese Consul)	14
ஜப்பானின் கட்சி	"ஜப்பான் ஸ்தானீகர்" (Japanese Consul)	17
ஐரோப்பிய யுத்தம் சமீபத்தில் ஏற்படுமா?	"ஓர் அரசியல் வாதி"	21
ஸ்பெயினே! உன் பதில் என்ன?	"ஓர் அநுதாபி"	23
பணம் என்றால் என்ன?	சு. கு. சர்மா, B.A., L.T.,	25
இந்த மூவர் யார்?	—பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை M. A., B.L.,	32
கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை	—கு. பக்கிரிசாமிப் பிள்ளை—பண்டிதர்	36
குழந்தைகளை வளர்ப்ப தெப்படி?	மு. சா. தாயுமானவன்	40
அவுரங்கஜீப் சக்ரவர்த்தியின் கடிதம்	"மௌனத்கஸ்யன்"	43

பிரிக்கப்பட்ட ஏடன் "சரித்திரக்காரன்" 46

கொஞ்சம் கவனியுங்கள் "கணக்காயன்" 49

ஞானக்களஞ்சியம் 50

வறுமையிலும் வாழ்வு கண்டவர்கள் "வருணன்" 52

சில ஜப்பானியப் பழமொழிகள் "ஜப்பான் நண்பர்" 54

ராஜேந்திர சோழன் "வழிப்போக்கன்" 55

இதுவன்றோ ராஜபக்தி ? "தேவ தேவன்" 57

இப்படியும் நடக்குமா? 62

சிறிய கல் மூழ்குவதேன் ? பெரிய கப்பல் மிதப்பதேன் ?
"விஞ்ஞான போதகர்" 64

டைப்ரைடிங் மெஷின் கண்டுபிடித்தது யார் ? 69

அபசாரத்திற்கு உபசாரம் மஹாமஹோபாத்யாய
தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் 70

உன்னை நான் எப்படி மறக்க முடியும் ? ஓர் "உபாசகன்" 72

உமேச சந்திர பானர்ஜி "ஒரு காங்கிரஸ் வாதி" 73

கவிஞர் நோகுச்சி நமது அந்நிய நாட்டு நிருபர் 76

நமது நிருபர்களுடன்— 78

துலாக்கோல் 82

கிரீஸ் தேசத்துக் கல்வி முறை-பழைய காலத்தில்—
வ. கு. ஜெயலட்சுமி தேவி B.A., B. Ed. 84

வியாபாரப் புள்ளிகள் 89

சராசரி வருமானமும் சம்பள விகிதமும் 91

பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகங்களின் அந்தஸ்துக் கிரமம் 91

விழ்ந்துபோன விஜயநகரம் *ஒரு பழைய மாணுக்கன்* 92

அன்ருட உலகம் 94

பர்மாவில் விவசாய சீர்திருத்தம்
அ. மு. மு. வெள்ளையன் செட்டியார் M. H. R. 97

பண்டிகைகளின் பொருளாதாரம் *"திண்டாடுகிறவன்"* 101

கனகாவின் கடிதங்கள் *"சரசா"* 103

படங்கள்.

பர்மாவில் கிராம வாழ்க்கை. (கலர்ப் படம்)

ஸ்பெயின் குழப்பத்தில்—ஐயோ!

குழந்தைகளின் பரிதாப மரணம்—ஸ்பெயினில் தான்

ஏடன் துறைமுகம்

பள்ளத்தாக்கிலேயுள்ள ஏடன் நகரம்

ஏடன் துறைமுகத்தைச் சேருமுன்

ராஜ ராஜ சோழன்

என்ன வேடிக்கை?


M T Hla

ஜோதி

சுடர் 1 செப்டம்பர் 1937. கதிர் 2

ஆவல்.

தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கிறவர்கள், இன்று காங்கிரஸ் மந்திரிகள் என்ன செய்தார்கள், என்ன மாதிரியான புதிய உத்திரவுகளை விடுத்திருக்கிறார்கள் என்று ஆவலோடும் அவசரமாகவும் பார்க்கிறார்கள். இது நியாயந்தான். ஏனென்றால் ஜனங்கள் அவ்வளவு சீக்கிரமாகச் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். பட்டினி கிடக்கும் ஒருவன், சமையல் வாசனையை மூக்கினால் நுகர்ந்து, எப்படி ஒருவித ஆறுதலை யடைகிறானோ, அப்படி, நமது தேசத்தின் தற்போதைய சீர்கேடான நிலைமையில், எந்த அற்ப மாறுதலும் அல்லது எந்தச் சிறிய சீர்திருத்தமும் ஜனங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. தேசிய வாழ்வில் அடிப்படையான மாறுதல் எவ்வளவு செய்யப்பட வேண்டுமென்பதையே, ஜனங்களின் இந்த ஆவல் காட்டுகிறது. நமக்கு முன் பின் தெரியாத அரசியல் வாதிகள் சிலரை, காங்கிரஸ் மந்திரிகள் விடுதலை செய்து விட்டார்களென்றால், அந்தச் செய்தி நமக்குத்தான் ஏதோ விடுதலையை யளித்தது போன்றதொரு சந்தோஷத்தை யளிக்கிறது. இது நல்ல காலத்திற் கறிகுறி.

இது வரையில்

இது வரையில் காங்கிரஸ்மந்திரிகள் என்ன செய்திருக்கிறார்களென்பதைச் சிறிது கவனிப்போம். அரசியல் கைதிகளைவிடுதலை செய்திருக்கிறார்கள்; பத்திரிகைகள் கட்டியிருந்த ஜாமீன் தொகைகளைத் திருப்பிக்கொடுத்திருக்கிறார்கள்; சுதேசி சாமான்களை அதிகமான உபயோகத்திற்குக்கொண்டுவர முயற்சிசெய்துகொண்டிருக்கிறார்கள்; கிராமங்களைச் சுற்றிப் பார்ப்பதும், அநாவசியமான உபசார ஆடம்பரங்கள் வேண்டாமென்று சொல்லியிருப்பதும் இவர்களிடத்தில் ஜனங்களுக்கு அதிகமான நம்பிக்கையை உண்டு பண்ணி யிருக்கிறது. ஆனால், இவையெல்லாம் பெரிய விசேஷங்களாக நாம் சொல்லிவிட முடியாது. ஏனென்றால், எந்தச் சாதாரண மந்திரிசபையும், இந்தச் சாதாரண காரியங்களைச் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாத பழைய மந்திரிசபைகளை,

தங்கள் கடமையைச் செய்யத்தவறி யவை என்று சொல்லி அவைகளை மறந்து விடுவதே நல்லது. எனவே, காங்கிரஸ் மந்திரிகள் குறைகளைத் தான் நிரப்பிக் கொண்டு வருகிறார்களே தவிர, புதிதாக ஒன்றுஞ்சிருஷ்டி செய்து விடவில்லை. அது இந்தச் சொற்ப காலத்திற்குள் முடியவும் முடியாது. ஆனால் இவர்களின் சொற்ப கால நிருவாகம், இந்திய ஜன சமுதாய எண்ணத்தில் ஒரு விகாசத்தை உண்டுபண்ணி யிருக்கிற தென்பது நிச்சயம்.

கல்வித் திட்டம்

நாம் முன்னர்க் கூறிய வண்ணம், நாட்டின் கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுவது மிக அவசியம். இது சம்பந்தமாக அறிஞர் ஷா கூறியுள்ள யோசனையை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். அதாவது, பத்தாவது வகுப்பு வரையில் படித்த ஒவ்வொருவரும், ஒரு வருஷ காலம் கிராமங்களுக்குச் சென்று, ஜனங்களுக்குக் கல்வி புகட்ட வேண்டுமென்று கட்டாய விதி ஏற்படுத்துமாறு இவர் கூறுகிறார். ஒரு கல்லினால் இரண்டு பழங்களை அடித்து வீழ்த்துவது போல, இந்தத் திட்டத்தினால் இரண்டுவித நன்மைகள் உண்டாகும். முதலாவது, ஆங்கிலம் படித்த இளைஞர்களுக்கு உலக அநுபவம் ஏற்படும்; கிராம வாழ்க்கையின் கஷ்ட நிஷ்டூரங்கள் நன்கு தெரியும். தவிர, கிராமங்களில் கல்வியை அதிகப் பணச் செலவின்றியே பரப்பலாம். இந்த ஒரு வருஷ காலமும் இளைஞர்கள் கிராமங்களில் எளிய வாழ்க்கை நடத்தி, தங்களுடைய ஜீவனத்திற்குத் தாங்களே சம்பாதித்துக் கொள்ள வேண்டும். அல்லது அரசாங்கத்தார், சாப்பாட்டுச் செலவுக்கென்று மட்டும் சொற்பத் தொகையைக் கொடுக்கலாம். இந்த ஒரு வருஷ காலத்தில் இவர்கள் செய்த வேலையைப் பரிசீலனை செய்து, அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்குத் தான் பூரணப் படிப்பும் முடிந்த சர்டிபிகேட் கொடுக்க வேண்டும். இங்ஙனம் ஒரு வருஷ காலத்தைக் கிராமங்களில் கழிக்காதவர்கள் தேர்ச்சிப் பத்திரம் பெறுவதற்கு அருகதை யுடையராதல் கூடாது. இந்தக் கட்டாயக் கல்வித் தொண்டர் படையை நமது காங்கிரஸ் மந்திரிகள் விரைவினில் ஏற்படுத்துதல் அவசியம்.

ஜெர்மனியில்

ஜெர்மனியில், 25 வயதுக்குட் பட்ட இளைஞர்கள், 'கட்டாய கை வேலை ஸ்தாபனங்க'ளில், சேர்ந்து ஒருவருஷ காலம் உழைக்க வேண்டு மென்ற முறை, நாஜி அரசாங்கத்தாரால் அநுஷ்டிக்கப் பட்டு வருகிற தென்பதை இச்சமயத்தில் காங்கிரஸ் மந்திரிகளுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். இந்த ஸ்தாபனங்களின் வேலைத் திட்டம், பாடங்கள் நடத்தப்படும் முறை முதலியவற்றை அப்படியே நாம் இந்தியாவில் கொண்டு வந்து விட வேண்டுமென்று சொல்ல வில்லை. கல்வியைப் பரப்புகிற தொண்டர்களுக்கு, ஜெர்மானிய வேலைத் திட்டம் அப்படியே பொருந்தவும் பொருந்தாது. நமது நாட்டு நிலைக்குத் தகுந்த வண்ணம் இதனை மாற்றிக் கொள்ளுதல் நல்லது. சாதாரணமாக இப்பொழுது கிராமவாசிக்கும் நகர வாசிக்கும் நெருக்கமான தொடர்பே கிடையாது. கிராமங்களின் சீரழிவுக்கு இந்தத் தொடர்பின்மைதான் காரணம். கட்டாயக் கல்வித் தொண்டர் படைகளை ஏற்படுத்துவதன் மூலம் இந்தத் தொடர்பை காங்கிரஸ் மந்திரிகள் ஏற்படுத்துவார்

களானல், அஃதொன்றே, நமது தேசிய வாழ்வுக்கு ஒரு சோபானமாக அமையும்.

சீன-ஜப்பான் சண்டை

சீன-ஜப்பானியச்சண்டை நாளுக்கு நாள் வலுத்துவருகிறது. கன்பூஷியஸின் போதனைகள் நிறைந்த சீன, இப்பொழுது அந்நியர்களுடைய ஏகாதிபத்தியப் பசிக்கு ஆகாரமாகிக் கொண்டு வருகிறது. எந்த நாடுமே, மற்றொரு நாட்டை ஆக்ரமித்துக் கொள்ளப் போகிறபோது, அநேக நியாயங்களை எடுத்துச் சொல்வது சகஜந்தான். எதியோப்பியாவை, இத்தலி விழுங்கி விட்டதற்குக்கூட, முஸோலினி எத்தனையோ நியாயங்களைத்தான் எடுத்துச் சொன்னன். 1934ம் வருஷத்து 'வால்வால்' சம்பவம், எப்படி இத்தலி-எதியோப்பிய யுத்தத்திற்கு ஒரு காரணமாயமைந்ததோ அப்படித்தான் லுகௌசியோ சம்பவமும் சீன-ஜப்பான் யுத்தத்திற்கு ஓர் ஆஸ்பதமாக ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய அநுதாபமெல்லாம் சீனவின் பக்கந்தான் செல்கிறது. அதனிடத்திலுள்ள கட்சிச் சண்டைகளும், பாஷை முதலிய பிரிவினைகளும் அதனுடைய தற்கால பரிதாப நிலைக்குக் காரணமாயிருந்தாலும் அவற்றையே ஆதாரமாகக் கொண்டு, மற்ற நாடுகள் அதனைச் சுரண்டக் கூடாதல்லவா? கீழ் நாட்டில் தனக்கு நிகரற்ற செல்வாக்குத் தேடிக்கொள்வதில் ஜப்பான் முனைந்திருக்கிறதென்பது வெளிப்படை. வியாபாரப் பெருக்கம், நாடு பெருக்கத்திற்கு முதற்படிதானே. ஆனல் இந்த யுத்தத்தில் பிரிட்டனுடைய ஸ்தானம் எங்கே?

நமது பிரார்த்தனை

ஸ்பானிஷ் அரசாங்கத்து அந்நிய நாட்டு மந்திரியாக இருந்த சென்யோர் டெல் வாயோ, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு அநுதாபம் காட்டிப் பேசியிருப்பதோடு, ஸ்பெயின் போராட்டத்தில் இந்தியர்கள் காட்டின அநுதாபத்திற்கும் நன்றி செலுத்துகிறார். இந்தியர்களும் ஸ்பானிஷ்காரர்களும் ஜனநாயக தத்துவத்திற்காகப் போராடுகிறார்கள். எனவே பரஸ்பர அநுதாபம் ஏற்படுவது இயற்கைதான். எப்படியும், ஸ்பெயின் குடியரசாங்கம் வெற்றி பெற வேண்டுமென்பதுதான் நமது பிரார்த்தனை.

பர்மாவில் வெள்ளம்

பர்மாவில் என்றுமில்லாத வெள்ளம் ஏற்பட்டு ஜனங்களுக்கும் பயிர்களுக்கும் அதிக துன்பத்தை உண்டுபண்ணி விட்டது. அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி சுமார் 83,000 ஏகராக்கள் வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு, பர்மா அரசாங்கத்தார் என்ன பரிகாரந் தேடித்தரப் போகிறார்கள்? அப்படி ஏதேனும் தேடித்தரா விட்டால் விவசாயிகளுக்கு அதிக கஷ்டம் ஏற்படக்கூடும். மொத்தம் பாதிக்கப்பட்ட ஜனங்கள் 124,000 பேர். இவர்கள் அனைவருக்கும் நமது அநுதாபம்.

அந்தமான் கைதிகள்

சென்ற ஒன்றரை மாத காலமாக அந்தமான் தீவிலுள்ள சுமார் 230 அரசியல் கைதிகள் உண்ணு விரதமிருக்கின்றனர். தங்களுடைய குறைகளுக்குச் சரியான முறையில் பரிகாரம் கிடைக்காத நிலையில்தான் இவர்கள் உண்ணுவிரதம் அநுஷ்டிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில், இந்தியா அரசாங்கத்தாரோ, வங்காள அரசாங்கத்தாரோ, 'கௌரவம்' என்ற திட்டின் மீது ஏறி நிற்பார்க

ளானால், மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்தவர்களேயாவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் வங்காள மாகாண அரசாங்கம் நடந்து கொள்கிற மாதிரிதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. மந்திரிகளின் சம்பளம் மூவாயிரம் ரூபாயாக இருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருப்பது ஏதோ பழைய வாசனை என்று ஒதுக்கி விடுவோம். ஆனால், அந்தமான் கைதிகள் விஷயத்தில் இரக்கம் காட்டாததோடு கூட, அவர்களிடத்தில் அநுதாபஞ் செலுத்தின பொது ஜனங்களின் ஊர்வலத்தைக் கலைத்து, தடியடிப் பிரயோகம் செய்ததுதான் நமக்கு விந்தையாயிருக்கிறது. வங்காள மந்திரி சபையில் இருப்பவர் அனைவரும் இந்தியர்கள்தான்!

போட்டி

ஐரோப்பிய நாடுகளிலே இப்பொழுது இரண்டு விதமான போட்டிகள் நடைபெறுகின்றன. ஒன்று பிரஜா உற்பத்தியை அதிகப் படுத்துகிற போட்டி; மற்றொன்று ஆயுதப் பெருக்கப் போட்டி. இந்த இரண்டு போட்டிகளிலும், சர்வாதிகாரிகள் மட்டும் அதிகமாக முனைந்து நிற்பது குறிப்பிடத்தக்கது. முஸோலினி, ஹிட்லர். ஸ்டாலின், கமால் ஆகிய நான்கு சர்வாதிகாரிகளின் ஆதிக்கம் செல்லும் நாடுகளில்தான் இந்த இருவிதப் போட்டிகள் தீவிரமாக நடைபெறுகின்றன. குழந்தைகளை அதிகமாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு உபகாரச் சம்பளம் முதலிய சௌகரியங்கள் செய்து கொடுக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு போட்டிகளும் எங்கே கொண்டு போய்விடும் என்பதுதான் நமது கேள்வி. நாடு பெருக்குகிற ஆசை ஏற்பட்டு விட்டால் அதற்கு எல்லைதான் ஏது?

அடுத்த காங்கிரஸ் தலைவர்

குஜராத் மாகாணத்திலேயுள்ள ஹரிபுரா என்ற கிராமத்தில், கூடப் போகிற அடுத்த காங்கிரஸுக்கு யார் தலைவர் என்பதைப்பற்றி இப்பொழுதே பேச்சு கிளம்பி விட்டது. தேசத்தின் மகத்தான முன்னேற்ற சக்திகளெல்லாம் ஒன்று திரண்டு வருகிற இந்த வேளையில், அழுகிப்போன பழையனவெல்லாம் கழிந்து போக வேண்டிய இந்தச் சமயத்தில், அசாதாரணமான ஒரு தலைவர் தேவை. அந்தத் தலைவர், கொஞ்ச காலம் வரையிலாவது சர்வாதிகாரி போலிருந்து, இந்திய தேசீய வாழ்வில், ஒழுங்கையும் ஒழுக்கத்தையும் கட்டாயப் படுத்தியாவது புகுத்த வேண்டியதவசியம். தேசத்தின் அபிலாஷைகளுக்கு அவர் ஒரு கண்ணாடி போலிருக்க வேண்டும். தவிர, காங்கிரஸ் தலைவரைத் தெரிந்தெடுக்கிற விஷயத்தில் ஹிந்து—முஸ்லீம் பிரதிநிதித்துவமோ, அல்லது மாகாண அபிமானமோ வந்து புகக் கூடாது. பொறுமையும் திற

மையும் வேண்டிய இந்தப் பதவிக்குச் சலுகை எங்ஙனம் காட்ட முடியும்.? இவையனைத்தையும் நாம் சீர் தூக்கிப் பார்க்கிற போது, பண்டித ஜவஹர்லால் நேருவின் மீது தான் மறுபடியும் இந்தப் பொறுப்பைச் சுமத்த வேண்டியிருக்கிறது. இரண்டு வருஷ கால ஓயாத உழைப்புக்குப் பிறகு, அவருக்குச் சிறிது ஓய்வு கொடுக்க வேண்டிய அவசியத்தை நாம் நன்கு உணர்கிறோம். ஆனால், உலகமெங்கும் முரண்பட்ட சக்திகள் பல போராடிக் கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், இந்திய தேசியத் துறையில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிற இந்த நெருக்கடியில், உலகத்தோடு இந்தியாவைப் பிணைத்து இழுத்துக் கொண்டு போகும் ஆற்றல் வாய்ந்தவர் அவர் ஒருவர்தான். எனவே, இப்பொழுது அவர் உழைப்பிலேதான் ஓய்வு காண வேண்டும். ஆதலின் தேசத்தார், அவரையே மறுபடியும் காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுப்பர் என்று எதிர் பார்க்கிறோம்.

வீழ்ச்சியும் மகிழ்ச்சியும்

ஸ்பெயின் யுத்தத்தில் சாண்டாண்டர் என்ற ஊர், பிராங்கோ துருப்புகளின் வசம் அகப்பட்டுக் கொண்டு விட்டதென்ற செய்தி, ரோமாபுரியில் அதிக மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. எங்கே வீழ்ச்சி! எங்கே மகிழ்ச்சி! இவ்விரண்டையும் கொண்டே, ஸ்பானிஷ் யுத்தத்தில் இத்தலிக்கு எவ்வளவு நெருங்கிய சம்பந்தம் இருக்கிறதென்பது நன்கு புலப்படும். தலையிடாத கமிட்டி வேலை செய்து கொண்டு தான் இருக்கிறது! சாண்டாண்டர் விழுந்து விட்டதனால், மாட்ரிட் பிரதேசத்தின் மீது கலகக்காரர்கள் அதிகமான கவனஞ் செலுத்தக்கூடும். அப்படியானால், ஸ்பெயினின் தலைவிதி, பாசிஸ்ட் கையால் எழுதப்படுமோ?

இன்னும் ஏன் சர்வ கலாசாலைகள்?

இந்தியாவில் (பர்மா உள்பட) இப்பொழுது மொத்தம் பதினெட்டு சர்வ கலாசாலைகள் இருக்கின்றன. இவற்றின் பெயரும் இவை ஸ்தாபிதமான வருஷமும் கீழே தரப்பட்டிருக்கின்றன:—

பெயர்	ஸ்தாபன வருஷம்
சென்னை	1857
கல்கத்தா	1857
பம்பாய்	1857
பஞ்சாப்	1882
அலஹாபாத்	1887
காசி	1916
மைசூர்	1916
பாட்னா	1917
உஸ்மானியா	1917
லட்சுமணபுரி	1920
அலிகார்	1920
ரங்கூன்	1920
டக்கா	1921
அண்ணாமலை	1921
டெல்லி	1922
நாகபுரி	1923
ஆந்திரா	1926
ஆக்ரா	1926

இந்தப் பதினெட்டு சர்வ கலாசாலைகளும் போதாவா? இன்னும் ஏன் இந்த குமாஸ்தாக்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள்? திருவாங்கூரில், ஒரு சர்வ கலாசாலையை ஏற்படுத்த ஸர் சி. பி. ராமசாமி ஐயர் தீவிர முயற்சி செய்து கொண்டிருக்கிறார். தங்களுடைய நிருவாக காலத்தில் ஏதேனும் ஒரு புதுமையைக் காட்ட வேண்டுமென்பதற்காக ஸர். ஐயர் இந்த முயற்சியை மேற்போட்டுக் கொண்டிருக்கிறார் என்று

நாம் சொல்லவில்லையானாலும், ஏற்கனவே, வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப் பட்டுக்கொண்டிருக்கும் திருவாங்கூரில் இந்தச் சர்வகலாசாலைத் திட்டம் நன்மையை உண்டு பண்ணுமா என்றுதான் கேட்கிறோம். இப்பொழுது நமது கவனமெல்லாம் ஆரம்பக் கல்வியில் தான் செல்ல வேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் இது விஷயத்தில் வழி காட்டுவார்களென்றே எதிர் பார்க்கிறோம்.

தபால் கட்டணம்

இந்தியாவுக்கும் பர்மாவுக்குமுள்ள தற்போதைய தபால் தந்தி கட்டணம் இரு நாட்டு ஜனங்களுக்கும் அதிக கஷ்டங்களை உண்டு பண்ணியிருக்கிறது. ஆனால் அரசாங்கத்தார், இந்தக் கட்டண உயர்வினால் தங்களுடைய வருமானம் குறையவில்லை யென்று எடுத்துக் காட்டுகின்றனர்.

1936-ம் வருஷ வருமானம்

ஏப்ரல்	576,000 ரூ
மே	574,000 ரூ
ஜூன்	560,000 ரூ

1937-ம் வருஷ வருமானம்

ஏப்ரல்	651,000 ரூ
மே	651,000 ரூ
ஜூன்	638,000 ரூ

வாஸ்தவம்; இலாகா வருமானம் அதிகப்பட்டிருக்கலாம். ஆனால் கடிதம், தந்தி இவைகளின் போக்குவரத்து எவ்வளவு குறைந்து விட்டது என்பதை அரசாங்கத்தார் கவனித்தார்களா? பொது ஜனங்களின் சௌகரியத்தை முகாந்திரமாக வைத்துத் தான், ஒரு சட்டத்தின் அல்லது திட்டத்தின் நன்மை தீமைகளைப் பார்க்க வேண்டும். வருமானம் ஒன்றே பிரதானமாகாது. இந்தத் தபால்-தந்திக் கட்டண விஷயத்தைப் பற்றி, பர்மா அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்டிருக்கிற வரி விசாரணைக் கமிட்டியார் இதைப்பற்றி யோசிப்பார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஏதேனும் நன்மை உண்டாகிறதா வென்று பார்ப்போம்.

பிற்போக்கு

'சநாதன தருமம்' என்றபுனிதமான பெயரால், பிற்போக்குக்கும், உலக நிலையை அறியாத மனப்பான்மைக்கும் இடங்கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு சிலரை, ஒதுங்கி யிருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். 'வருணாசிரம தரும சுயராஜ்ய சங்கம்' என்ற பெயராலும் 'சநாதன தரும மகாநாடு' என்கிற பெயராலும் ஒரு சிலர் ஒன்றுகூடிக் கொண்டு 'காங்கிரஸ் மதத்தில் தலை யிடுகிறது' 'திருவாங்கூரில் ஆலயப் பிரவேச உரிமை அளித்தது தவறு' என்பனபோன்ற அசட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் நாட்டில், சமீபத்தில் இரண்டோர் இடங்களில் இந்த வேடிக்கைக் காட்சிகள் நடைபெற்றிருக்கின்றன. தயை செய்து இவர்கள் மௌனமாக இருந்துவிடுவார்களானால் அதுவே இவர்கள், தூய்மையான ஹிந்து மதத்திற்குச்செய்த அருமையான தொண்டாகும். தேசத்தைமறந்து மதத்தைப் பற்றி இவர்கள் பேசுவார்களானால், இவர்களைத்தேசம் விரைவிலே மறந்துவிடும். தேசீய வாழ்க்கையோடுதான் சமய வாழ்க்கையும் பின்னப்பட்டிருக்கிறது. நமது சநாதன தருமம் இதையே வலியுறுத்திக் கூறுகிறது. காந்தியடிகளைவிடச் சிறந்த சநாதன ஹிந்துவேறு யார் இருக்கிறார்? அவருடைய போதனைகளையும், அவர் காட்டும் மார்க்கத்தையும் இவர்கள்

புறக்கணிப்பார்களானல், காலப்போக்கில் ஹிந்து மதத்தின் மீது படிந்து வந்திருக்கிற மாசுகளை மட்டும் ஒன்ருகத் திரட்டி, அதனையே சநாதன தருமம் என்று இவர்கள் அழைக்கிருர்கள் என்றுதான் நாம் கொள்வோம். உடன் கட்டையேறுகிற வழக்கத்தை, முன்னர்ச் சட்ட மூலமாகத் தடுத்தபோதுகூட 'மதம் போச்சு' என்று தான் கூக்குரலிட்டார்கள். அப்படியே, பாலிய விவாகத் தடைச் சட்டத்தினுல் மதம் பாழ் பட்டது என்று கத்தினுர்கள். ஆனல் இவர்களுடைய சாபங்களுக்கும் கோபங்களுக்கும் ஹிந்து மதம் பயப்படாமல் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

பாலஸ்தீனம்

பாலஸ்தீனப் பிரிவினை விஷயம் நாம் எதிர் பார்த்தபடி அராபியர்களிடையேயும் யூதர்களிடையேயும் அதிகமான கிளர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறது. ஜூரிச்சில் கூடிய அகில உலக யூதர் மகாநாடு, இந்தப் பிரிவினையைப்பலமாகக்கண்டித்திருக்கிறது. அராபியர்களின் கிளர்ச்சிக்கு, ஈராக் அரசாங்கமும் ஆதரவு கொடுப்பதாயிருக்கிறது.ஆனல் சர்வதேசசங்கத்தின் மேற் பார்வைக் கமிஷனர், பிரிவினையை ஆதரிக்கிற திட்டத்தைச் சரியென்கிற மாதிரி கூறியுள்ளனர். இந்தக் கமிஷனரின் பரிசீலனைக்கு, அறிக்கையை அனுப்பியதே, காலத்தைக் கடத்துவதற்குத் தானே என்ற ஐயம் ஆங்காங்கு உண்டாகியிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கே இஃதொரு பரிசோதனை காலம். இதில், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் சிறிது தாராள புத்தியுடன் நடந்து கொள்வார்களானல் மிகவும் நல்லது.

மணி வாசகம்

காங்கிரஸ் மந்திரிகள் எங்ஙனம் நடந்து கொள்ளவேண்டுமென்பதைப் பற்றி அடிக்கடி காந்தியடிகள் 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதிக்கொண்டு வருகிருர். அதில் பொதுவாக, ஒரு தேசிய அரசாங்கம் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை ஒருவாறு சூசிப்பித்திருக்கிருர்.

"காங்கிரஸ் மந்திரிகள் எளிய வாழ்வு நடத்திக்கஷ்டப்பட்டு வேலை செய்தால் மட்டும் போதாது. அவர்களுடைய முன்மாதிரியை, அவர்களின் நிருவாகத்திலிருக்கும் இலாகா உத்தியோகஸ்தர்களும் பின்பற்றுகிருர்களா வென்று அவர்கள் பார்க்க வேண்டும். நீதி வழங்குவது, மலிவாகவும், சீக்கிரம் முடியக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இப்பொழுது, நீதிதேடுவது என்பது, பணக் காரர்களுடைய ஆடம்பரப் பொருளாகவே இருக்கிறது. போலீஸார், ஜனங்களின் நண்பர்களாயிருக்க வேண்டும். ஜனங்களை பயமுறுத்தக் கூடாது. கல்வி முறையானது, அடியோடு மாறுதலடைய வேண்டும். சுரண்டுவோருக்கு அநுகூலமாக இருப்பதை விட்டு, எளிய கிராமவாசியின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய மாதிரி இந்தக் கல்வி முறை அமைய வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சி முறை எப்படியிருக்குமென்பதற்கு இதைவிடச் சிறந்த வியாக்கியானம் தேவையில்லையல்லவா ?

கிராம வாழ்க்கை

மேனுட்டு நாகரிகம் பரவப்பரவ, இந்தியா, பர்மா முதலிய நாடுகளிலுள்ள கிராமங்களின் வாழ்க்கை சீர்

குலைந்து போய்விட்டது. கிராமத்திலிருந்த சமுதாயக் கட்டுப்பாடு தளர்ந்து போய்விட்டது. கிராம ஜனங்கள், விவசாயத்திலே எவ்வித வருமானமும் கிடைக்க வில்லையென்று நகரங்களிலே குடி புகுந்து நிரந்தர வருமானத்தை எதிர்பார்த்துத் தொழிற்சாலைகளிலும் வேறு பல ஸ்தாபனங்களிலும் வேலைக்கமர்ந்து கொள்கிறார்கள். இதனால் இவர்கள் தேகசுகம் கெடுவதோடு கூட, நகர வாழ்க்கையிலே காணப்படும் எல்லாவிதமான ஆசைத் தூண்டுதல்களுக்கும் இரையாகி, பணத்துக்குப் பணமும் சுகத்துக்குச் சுகமும் கெட்டு சீக்கிரமாக யமலோகத்திற்குச் சென்று விடுகிறார்கள்.

கிராமங்களிலே இயற்கை அழகு நிரம்பி யிருக்கின்றது. நிம்மதியான வாழ்க்கையை நடத்தப்போதிய எல்லாச் சௌகரியங்களும் அமைந்திருக்கின்றன.

முகப்புப் படத்திலே காணப்படும் பர்மிய கிராமக் காட்சியைப் பாருங்கள். பர்மாவிலுள்ள—சிறப்பாகக் கீழ் பர்மாவிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் இந்த மாதிரியான அழகிய தோற்றத்தைக் காணலாம். இங்கே எதற்கும் குறைவிராது. ஆனால் ஜனங்களுடைய வாழ்க்கை நிலையைப் பார்த்தால் மகா பரிதாபமா யிருக்கும். ஆற்றங்கரையோரங்களிலே, குனிந்து செல்லக்கூடிய குடிசைகளிலே, களங்கமற்ற ஜனங்கள் வசித்து வருவதைப் பார்த்தால் எவனுக்கும் மனம் உருகாம லிராது.

1931-ம் வருஷத்து ஜன கணிதப் படி பர்மாவில் ஐயாயிரம் பேருக்கு மேற்பட்ட ஜனத் தொகையுடைய நகரங்கள் 79-தான். ஆனால் கிராமங்கள் 11,487. ஒவ்வொரு பத்து வருஷ ஜன கணிதப்படி, கிராமங்களின் எண்ணிக்கை குறைவதையும் நகரங்களின் எண்ணிக்கை அதிகப் படுவதையும்பார்க்கிறோம். உதாரணமாக1921ம் வருஷத்தில், பர்மாவில் மொத்தம் 13478-கிராமங்கள் இருந்தன. பத்து வருஷத்திற்குப் பிறகு 1991 கிராமங்கள் குறைந்திருக்கின்றன. அப்படியே நகரங்களின் ஜனத் தொகையும் பத்து வருஷத்திற்குப் பிறகு அதிகப்பட்டிருக்கிறது. இதனால், கிராமவாசிகள், கிராமங்களைப் புறக்கணித்து விட்டு, நகரங்களில் குடியேறுகிறார்கள் என்பது நன்கு தெரியவில்லையா?



நகரங்களிலே இப்படி ஆடம்பரமாக உண்டு வாழ்கிறோம்.

ஆனால் கிராமங்களில்—?

சீன ஜப்பானிய யுத்தம்

கீழ் நாட்டிலேயே என்று மில்லாத ஒரு மகா யுத்தம் இப்பொழுது சீனுவுக்கும் ஜப்பானுக்கும் மூண்டு விட்டது. சென்ற சுமார் ஒன்றரை மாத காலமாக, பீரங்கிச் சப்தமும், துருப்புகளின் பூட்ஸ் ஓசையும், யுத்த தளவாடங்கள் இறக்குமதியாகும் இரைச்சலும் சீனுவில் கேட்டவண்ணமாயிருக்கின்றன. ஷாங்காய் நகரம், சீன ஜப்பானிய ஆகாயப் படை, பீரங்கிப் படை, தரைப்படை ஆகிய மூன்று வித படைகளினுலும் தாக்கப்பட்டு, கட்டிடங்கள் தீக்கிரையாகின்றன. ஜனங்கள் இம்சைப்படுகிருர்கள், பலர் உயிர் துறந்தும் விட்டனர். இந்த யுத்தத்தின் காரணங்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கு முன்னர், சீனுவைப் பற்றியும் ஜப்பானைப் பற்றியும் சிறிது தெரிந்து கொள்ளுதல் நல்ல தல்லவா? அதனை முதலில் சுருக்கமாக வெளியிட்டிருக்கிறோம். இந்த யுத்தத்தின் காரணங்களைப் பற்றிப் படிக்கிற போது, இடையிடையே, நம் காதுக்குப் புது மாதிரி ஓசைப் படக்கூடிய சில பெயர்கள் வருகின்றன. அவற்றைப்பற்றியும் வாசகர்கள் தெரிந்து கொள்வதற் கநுகூலமாக. ஒரு சிறு குறிப்புக் கொடுத்துள்ளோம்.

சாதாரணமாக யுத்தம் ஏற்படுகிற காலங்களில், இரு கட்சியினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ் சாட்டுவது சகஜந்தான். இதைப்பற்றி எவரும் ஆச்சரியப் படத் தேவையில்லை. சீன-ஜப்பானிய யுத்த சம்பந்தமாக அவரவர்களுடைய கட்சியை "ஜோதி"யின் மூலமாகத் தெரிவிக்குமாறு, ரங்கூனிலுள்ள சீன ஸ்தானீகரையும் (Chinese Consul) ஜப்பானிய ஸ்தானீகரையும் (Japanese Consul) கேட்டிருந்தோம். இருவரும் தங்கள் தங்களுடைய கட்சிகளை எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். அவற்றைக் கீழே வெளி யிட்டிருக்கிறோம், இங்ஙனம் தங்கள் கட்சிகளை எடுத்துச் சொன்ன இரண்டு ஸ்தானீகர்களுக்கும் நமது வந்தனம்.

—ஆசிரியர்

சீனுவைப்பற்றி

சீன தேசம், ஆசியா கண்டத்தின் கிழக்குப் பாகத்தில் இருக்கிறது. இதன் வடக்கேயும் மேற்கேயும் ருஷ்யா; கிழக்கே ஜப்பான்; தெற்கே சையாம், இந்தோ—சைனு முதலிய தேசங்கள். உலகத்திலுள்ள பழமையான நாடுகளில் இஃது ஒன்று. தார்த்தாரியர்களுடைய படையெடுப்பைத் தடுப்பதற்காக இந்த நாட்டைச் சுற்றிச் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னுடியே பெரிய சுவர் கட்டி வைத்திருப்பதைக் கொண்டே, இந்த நாட்டின் பழமையை நன்கு உணரலாம். உலகத்தில் நீண்ட நதிகளென்று சொல்லப்படும், ஹோயாங்கோ (மஞ்சள் நதி) யாங்க்டீஸ்கியாங் என்ற நதிகள் இந்த நாட்டிலே ஓடுகின்றன. போக்கு வரவுக்குரிய வாய்க்கால்கள் பல இந்த நாட்டிலே உண்டு. இப்பொழுதுள்ள சீனுவின் மொத்த விஸ்தீரணம் 1,532,835 சதுர மைல்; உத்தேசஜனத்தொகை 435,703,000. நிருவாக சௌகரியத்திற்காகச் சீனுவைப் பதினெட்டு மாகாணங்களாகப் பிரித்திருக்கிருர்கள்.

1912ம் வருஷம் வரையில் சீனு, ஒரு சக்ரவர்த்தியினுடைய சுயேச்சாதிகார ஆளுகைக் குட்பட்டிருந்தது. இதன் பிறகு ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டு, குடியரசாக மாறியது. ஸன்-யாட்-ஸென் இந்தப் புரட்சிக்கு முக்கிய காரணுயிருந்தான். அதுமுதற் கொண்டு அடிக்கடி உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. வடக்குப் பிரதேசங்கள் ஒரு கட்சியினருடைய ஆதிக்

கத்திலும், தெற்குப் பிரதேசங்கள் மற்றோர் கட்சியினருடைய ஆதிக்கத்திலும் வந்தன. இவர்களுக்குள்ளே அடிக்கடி சண்டை. வட பாகத்திற்கு பீகிங்கையும் தெற்குப் பாகத்திற்கு காண்டனையும் இந்த இருகட்சியினரும் தலை நகரங்களாக்கிக்கொண்டனர். இந்தக் கட்சி பேதங்களை வெளி நாட்டார் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டனர். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ருஷ்யா முதலிய நாடுகளின் ஆதிக்கத்திற்கு, சீனாவிலுள்ள பல பிரதேசங்கள் நாளாவட்டத்தில் உட்பட்டன. சுமார் 40 வருஷ காலத்திற்குள், சீனாவின் நிலப் பரப்பு, மூன்றில் ஒரு பாகம் குறைந்திருக்கின்றதென்று சொல்லலாம்.

சீனாவிலுள்ள முக்கிய அரசியல் கட்சி கோ மின் டாங். ஸன்-யாட்-சென் இதனை 1911ம் வருஷம் பலப்படுத்தினான். சீனாவின் தேசியக்கட்சி இதுவேயாகும். இந்தக் கட்சியினர் தென் சீனாவின் ஆதிக்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு, காண்டனைத் தலை நகராக்கி ஆதிக்கம்செலுத்தி வந்தனர். பின்னர் 1928ம் வருஷம் இவர்கள் வட சீனாவின் தலை நகரான பீகிங்கையும் கைப்பற்றிக் கொண்டு, நாங்கிங் என்ற ஊரை, அகில சீனாவின் தலை நகராக்கினர். இந்தச் சமயத்தில் தான், பீகிங் என்ற பெயர் பீபிங் என்றாகியது. அதுமுதற் கொண்டு சீனாவில் ஒற்றுமையான தேசீய அரசாங்கம் ஏற்பட்டு நடந்து வருகிறதென்று சொல்லலாம். இதற்கே மத்திய அரசாங்கம் என்றும் நாங்கிங் அரசாங்கம் என்றும் பெயர்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நீண்ட கால தொடர்பு உண்டு. எனவே சீனாவின் தற்போதைய நிலையில் இந்தியா அநுதாபங் காட்டுவது சகஜந்தானே.

ஜப்பானைப்பற்றி

ஜப்பானுக்கு 'நிப்பன்' (Nippon) என்ற ஒரு பெயர் உண்டு. சீனாவுக்குக் கிழக்கேயுள்ள சிறிய தீவுக் கூட்டங்கள் சுமார் 4223 சேர்ந்து 'ஜப்பான்' என்று அழைக்கப் படுகிறது. 1910ம் வருஷம் கொரியா என்ற பிரதேசமும், ஜப்பானுடன் சேர்க்கப்பட்டது. மொத்தம் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் விஸ்தீரணம் 2,60,783 சதுர மைல்; மொத்த ஜனத்தொகை 90,396,043.

உலகத்திலுள்ள நாடுகளில் ஜப்பான் ஒன்றில்தான் ஒரே அரச பரம்பரையினர் தலைமுறை தலை முறையாக ஆண்டு வருகின்றனர். 16வது நூற்றாண்டிலிருந்து, இந்த நாட்டுக்குப் பல வெளி நாட்டார் வரத்தொடங்கினர்; இதற்குப் பிறகு மெது மெதுவாக இங்கே மேனாட்டு நாகரிகம் நுழையத் தொடங்கியது. ஆனால் 1860ம் வருஷத்திற்குப் பிறகுதான், ஜப்பானியர்கள் உலகத்தோடு ஒட்டிப்போக வேண்டுமென்ற உணர்ச்சி பெற்றனர் என்று சொல்லவேண்டும். இதற்குப் பிறகு, மேனாட்டு நாகரிகத்தை அப்படியே பின்பற்றி நடக்கலாயினர். துரிதமாக முன்னேற்ற மடைந்தனர். இப்பொழுது உலக வல்லரசுகளில் ஒன்றாக ஜப்பான் மதிக்கப் படுகிறது. ஜப்பானுடைய வியாபாரப் போட்டிக்கு, எல்லாத் தேசத்தாருமே தலை குனிய வேண்டியிருக்கிறது.

ஜப்பானில் 6 வயது முதல் 14 வயது வரையில் ஒவ்வொரு ஆண் பிள்ளையும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். மொத்தம் 25,000 ஆரம்ப பாடசாலைகள் ஜப்பானில் இருக்கின்றன. இதைக் கொண்டு ஜப்பானின் முன்னேற்றத்தை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.



நாற்பத்திரண்டு வருஷங்களுக்கு முன்னிருந்த சீனா

ஆனால் இப்பொழுது—?

இப்பொழுது, சீனுவில் அனைவருடைய கவனத்தையும் கவர்ந்து நிற்பவன் சியாங்--கை-ஷேக். இவன் 1886ம்வருஷம் பிறந்தவன். இவன் ஆரம்பத்தில் கோமின்டாங் கட்சியில் ஒரு முக்கியஸ்தனுக இருந்தான். 1925ம் வருஷம் ஸன்-யாட்-சென் இறந்து விட்டபிறகு, இவன் சீனத் துருப்புகளின் பிரதம சேனுதிபதியாக நியமிக்கப்பட்டான். 1928-ம் வருஷத்தில், சீன அரசாங்கத்தின் பிரசிடெண்டானுன்.

1931-ம் வருஷம், ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்ரமித்துக் கொண்ட பிறகு, சீனுவில் என்று மில்லாத ஓர் தேசீய உணர்ச்சி உண்டாயிற்று. தேசீய ஒற்றுமையைக் கருதி இவன், பிரசிடெண்ட் பதவியை ராஜீநாமா செய்துவிட்டு சேனுதிபதியாக மட்டும் இருந்தான். இதன் பிறகு இவனுடைய செல்வாக்கு ஏறியும் இறங்கியும் வந்து கொண்டிருந்தது, ஆனுல் 1935ம் வருஷத்திற்குப்பிறகு, சீனர்கள் இவனிடத்தில் அதிகமான அன்பு செலுத்தி வருகிருர்கள். இப்பொழுது இவன்தான் சீனப்படைகளின் சேனுதிபதி; சர்வாதிகாரியுங்கூட.

சியாங்கை ஷேக்கின் மனைவி. சூங் மேய் லிங் என்பது இவர் பெயர். 1927ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் தேதி சியாங்கை ஷேக்கை மணந்து கொண்டார்.

சீனுவின் புனருத் தாரணத்திற்காகக் கணவனைப்போல் பெரிதும் பாடுபட்டு வருகிருர். 'நிகழ் காலத்தில் என்ன நடந்த போதிலும், சீனுவின் எதிர்காலம் மிகப்பிரகாச மாயிருக்குமென்று நான் உறுதியாகக் கூறுகிறேன்' என்று இவர் ஓரிடத்தில் கூறியிருக்கிருர். சீன-ஜப்பானிய யுத்தம் தொடங்கிய பிறகு 1-8-37ல் இவர் சீன ஸ்திரீகள் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு சீனுவிலேயே ஒரு புத்துணர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறது. 'நாம் சிறிது காலம் தாழ்த்து வெற்றியடைந்தாலும், அந்த வெற்றியானது, அவமான கரமாக நாம் கழித்த நாட்களை மறக்கடிக்கச் செய்து நமது துக்கத்தையும் துடைக்கும்' என்றுஇவர் அச்சமயம் கூறினுர்.

சீன ஜப்பான் யுத்த சம்பந்தமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சில பெயர்கள்:—

பீபிங்—(பழைய பெயர் பீகிங்) வட சீனவின் முக்கிய பட்டணம்.

காண்டன்—தென் சீனவின் முக்கிய பட்டணம்.

நாங்கிங்—இது தான் மத்திய அரசாங்கத்தின் ராஜதானி.

ஷாங்காய்—ஜனத்தொகையில், உலகத்தில் ஐந்தாவது பெரிய நகரம். ஒரு துறைமுகம். பெரிய வியாபார ஸ்தலம்; இதில் மூன்று பகுதிகள் உண்டு. (1) இன்டர் நேஷனல் செட்டில் மெண்டு (2) பிரெஞ்சு கன்ஸெஷன் (3) சீனர்கள் வசிக்கும் இடம். இதில் முதலாவது தான் பெரிது; அதிக வியாபாரம் நடைபெறுவதும். அந்நிய நாட்டார் பலரும் இங்கு வசிக்கிறார்கள்.

ஜீஹோல்—சீனவின் வட கிழக்கில் மங்கோலியாவிலுள்ள ஒரு மாகாணம். 1932ம் வருஷம் ஜப்பானியரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது.

சீனவிலுள்ள 18 மாகாணங்களின் பெயர்—

அன்ஹ்வெய், சேகியாங், பூகியன், ஹோபை, ஹோனன், ஹ்யூனன், ஹ்யூபே, கான்ஸூ, கியாங்ஸி, கியாங்ஸூ, க்வாங்ஸி, க்வாங்டங், க்வேய்சௌ, ஷான்ஸி, ஷாண்டங், ஷென்ஸி, ஷ்ச்வான், யுன்னன்,

1901ம் வருஷத்துச் சர்வதேச ஒப்பந்தம்—(International Protocal) 1900ம் வருஷத்தில் சீனவில் அந்நியர்களுக்கு விரோதமாகப் பெரியதொரு புரட்சி ஏற்பட்டது. பலர் கொலையுண்டனர். இதன் முடிவாக அந்நிய நாடுகள் பலவற்றோடு சீன ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. இதன்படி சீன ஒரு நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

கோனே
PRINCE KONOE

இவர் ஜப்பான் ஏகாதிபத்தியத்தின் பிரதம மந்திரி. 2-6-37ல் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டார். நல்ல படிப்பாளி. இவர் பிரதம மந்திரியாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன்னர், இவரைப்பற்றிப் பொது ஜனங்களுக்கு அதிகமாகத் தெரியாது. இவர் பொதுஜன ஆரவாரத்தை விரும்புகிறவரல்ல. அடக்கமாக இருந்து நிரந்தரமான வேலைகளைச் செய்வதில் நிபுணர். இவர் சிரிப்பது அபூர்வம். அந்த அபூர்வமான ஒரு போட்டோ தான் மேலே இருப்பது.

ஹோ-உமேஸூ ஒப்பந்தம்—1935ம் வருஷம் ஜூன் மாதம் தளபதி உமேஸூ என்ற ஜப்பானிய தளகர்த்தருக்கும் தளபதி ஹோ-இன்-சிங் என்ற சீனப் பிரதிநிதிக்கும் ஏற்பட்ட சமரஸ ஒப்பந்தம்.

சீனாவின் கட்சி

"சீன ஸ்தானீகர்"
(Chinese Consul)

1931ம் வருஷம் மஞ்சூரியாவின் வட கிழக்கு மாகாணங்களை ஜப்பான் ஆக்ரமித்துக் கொண்டு விட்டது. இதன் பிறகு, ஜப்பானிய ராணுவத் தலைவர்கள், வட சீனாவில் தங்கள் ஆக்ரமிப்பு வேலையைத் தொடர்ந்து நடத்த எல்லா முயற்சிகளையும் செய்து வந்தனர். இந்தச் சமயம் தெற்கு சீனாவில், பொதுவுடமைக்காரர்களை அடக்குவதில், சீன அரசாங்கத்தார் தங்கள் கவனத்தைச் செலுத்தி வந்தனர். தவிர தங்களுடைய தேசீய நிர்மாண வேலையில் அநேக இடர்களையும் இவர்கள் சமாளித்துக் கொண்டு வர வேண்டியிருந்தது. இந்த மாதிரியான சந்தர்ப்பத்தைப் பார்த்துத்தான், ஜப்பான், ஜிஹோல் பிரதேசத்தின் மீது படையெடுத்து வந்து, அதனைக் கைப்பற்றிக் கொண்டது. இதற்குப் பிறகு, சாஹார் மாகாண எல்லைப் பிரதேசங்களின் மீது படையெடுத்து வந்தபோது, அதிகமாக முன்னேறவிடாமல் சீனத் துருப்புகள் தடுத்து விட்டபோதிலும் அநேக ஜில்லாக்களை ஜப்பான் பிடித்துக் கொண்டது. 1933ம் வருஷம், டங்க்கு (Tangku) என்ற விடத்தில் ஜப்பானியப் பிரதிநிதிகளும் சீனப் பிரதிநிதிகளும் ஒரு சமரஸத்திற்கு வந்தார்கள். இதன் பிறகு, சிறிது காலம், சச்சரவுகள் ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால், வட சீனாவைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர வேண்டுமென்ற முயற்சியை எப்பொழுதும் ஜப்பான் விட்டுவிடவேயில்லை.

மஞ்சள் நதி (ஹோயாங்கோ)க்கு வடக்கேயுள்ள ஐந்து மாகாணங்களும் (வட சீனா) தனியாகப் பிரிந்து சுதந்திரமாக வாழ வேண்டுமென்ற இயக்கத்தை வட சீனாவில் ஜப்பானியர் பகிரங்கமாகக் கிளப்பினர். ஆனால் சீனப் பொது ஜனங்கள் இதனைப் பலமாக எதிர்த்தார்கள். ஷாண்டங், ஷான்ஸி, சியு யுவான் என்ற மாகாணங்களின் தலைவர்கள் கூட இந்தப் பிரிவினை இயக்கத்தில் கலந்து கொள்ள மறுத்து விட்டார்கள். ஏனென்றால், வட பாகத்தை மட்டும், சீனாவின் மற்றப் பிரதேசத்தினின்று பிரித்து விடுகிற முயற்சியல்லவா இது? இந்த முயற்சியில் ஜப்பானியர்கள், கோரிய படி பலனை அடையவில்லை. எனவே, ஹோபை (Hopei) சாஹார் (Chahar) என்ற இரண்டு மாகாணங்களின் மீது கவனஞ் செலுத்த ஆரம்பித்தனர். இங்கே, தமக்கு விசேஷ உரிமைகள் உண்டென்று கூறினர். இந்த இரண்டு மாகாணங்களுக்கும் சேர்த்து, ஓர் அரசியல் சபை ஏற்படுத்தப் பெற்றது.

சீன தேசீய அரசாங்கத்தின் நேரான நிருவாகத்தின் கீழ் இந்தச் சபை இருந்தது. ஏறக்குறைய ஜப்பானியருடைய விருப்பத்தைப் பொறுத்தே இந்தச் சபை அமைக்கப் பட்டது. ஆனால் இது, மத்திய அரசாங்கத்தோடு (அதாவது சீன தேசீய அரசாங்கத்தோடு) நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததும், அதன் ஒத்துழைப்பைப் பெற்று வந்ததும் ஜப்பானுக்குப் பிடிக்கவில்லை. எனவே, சில சீன உத்தியோகஸ்தர்களைத் தூண்டி, ஹோபை மாகாணத்தின் கிழக்குப் பிரதேசத்தில் சுதந்திர

ஆட்சியை நிலை நிறுத்தும்படி செய்து, அதனைக் காப்பாற்றும் பொருட்டு, டங்செள என்ற ஊருக்குத் தன் துருப்புகளை அனுப்பியது. இதனைச் சீன அரசாங்கம் கண்டித்தது. ஆனால், ஹோபை, சாஹார் மாகாண சம்பந்தப் பட்ட விஷயங்களில் மத்திய அரசாங்கம் தலையிட வேண்டாமென்று ஜப்பான் கட்டளை யிட்டது. இந்த இரண்டு மாகாணங்கள் உள்பட வட சீனா முழுவதும், சீன அரசாங்க ஆதீனத்திற் குட்பட்டிருந்த படியால், சீன அரசாங்கம் இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்க முடியவில்லை. இது சம்பந்தமாக, அந்தந்த மாகாண அதிகாரிகளுக்கும், ஜப்பானியர்களுக்கும் சில சமரஸ ஏற்பாடுகள் நடை பெற்றன. இவற்றை, மத்திய அரசாங்கம் தடை செய்யவுமில்லை. ஏனென்றால், சண்டைகள் ஏற்படக் கூடாதென்ற மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இந்தச் சமரஸ ஏற்பாடுகள் ஒத்ததாயிருந்தன. ஆனாலும், ஜப்பானிய ராணுவ அதிகாரிகள், சீனாவின் விஷயத்தில், ஆக்ரமிப்பு எண்ணத்துடனேயே இருந்தார்கள். இதனுடைய விளைவுதான், 1936ம் வருஷம் ஜூலை மாதம் 7ந் தேதி, லுகௌசியோ, (Lukouchio) வான்பிங் (Wanping) என்ற இடங்களிலிருந்த சீனத் துருப்புகளின் மீது ஜப்பானியருடைய படையெடுப்பு.

லுகௌசியோ சம்பவத்தை, ஏதோ அகஸ்மாத்தாக ஏற்பட்ட சம்பவம் என்றும் நினைப்பதற்கில்லை. சீனா விஷயத்தில், தான் கொண்டுள்ள ஆக்ரமிப்பு எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள மற்றொரு முயற்சி தான் இது. ஓர் அற்ப விஷயத்திற்காகத்தான், இந்த லுகௌசியோ சம்பவம் ஆரம்பித்தது. சமாதானமாகப் போக வேண்டுமென்ற நல்லெண்ணம் ஜப்பானுக்கு இருந்திருக்குமானால், இது சமரஸமாகவே முடிந்திருக்கும். வான்பிங் நகரத்தின் மீது வேண்டுமென்றே வெடிகுண்டுகளை வீசித்தாக்கியது, ஆக்ரமிப்பு எண்ணத்தைக் கொண்டுதான். ஆனாலும், ஜப்பானுடைய கோரிக்கைகளுக்கு இணங்க, சீனத் துருப்புகள், குறிப்பிட்ட சில இடங்களுக்குப் பின் வாங்கிப்போகச் சம்மதித்தன. பின்னர், ஜப்பான், சும்மாயிராமல் தன் துருப்புகளை அதிகமாகக் கொண்டு வந்து இந்த இடங்களில் நிரப்பிய தோடுகூட, வான்பிங் நகரத்தை மட்டு மல்லாமல் பீபிங் முதலிய நகரங்களையும் தாக்க ஆரம்பித்தது. பின்னர் மாகாணத் தலைவர்களோடு தான் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களில், சீன மத்திய அரசாங்கம் தலையிடக் கூடாதென்று ஜப்பான் கூறியது. இதற்கும் மத்திய அரசாங்கம் இணங்கியது. மறுபடியும், ஜப்பான் சில அநியாயமான கோரிக்கைகளைக் கேட்டது. இவைகளுக்கு மாகாண அதிகாரிகள்கூட இணங்கவில்லை. ஜப்பானியர், நியாயமான மனப்பான்மை கொண்டிராமையால், பீபிங்—டீன்ஸ்டின் பிரதேசத்தில் பலத்த சண்டை ஏற்பட்டது.

லுகௌசியோவில் ஜப்பானியத் துருப்புகள், ராணுவப்பயிற்சி செய்து கொண்டிருந்தன. இது 1901ம் வருஷத்துச் சர்வ தேச உடன்படிக்கைக்கு விரோதமானது. ஆனாலும், ஜப்பானியர்கள், டங்கு உடன்படிக்கையையும், ஹோ-உமேட்ஸு ஒப்பந்தத்தையும் அடிக்கடி எடுத்துக் காட்டுகின்றனர். ஊன்றிப் பார்க்கப் போனால், ஹோ-உமேட்ஸு ஒப்பந்தம் அமுலுக்கு வரவில்லையென்றே சொல்ல வேண்டும். அப்பொழுது பீபிங்கின் ராணுவக்கமிஷன் தலைவரா

யிருந்தவரும் இப்பொழுது யுத்த மந்திரியாக இருக்கப்பட்டவருமான தளபதி ஹோ-யின் சின் (Gen. Ho. Yin Chin) என்பார் இந்த மாதிரியான ஒப்பந்தமேயில்லை என்று மறுக்கிறார். டின்ஸ்டீனிலுள்ள ஒரு ஜப்பானியப் பத்திரிகையில் வெளியிட்டிருந்தபடி இந்த ஒப்பந்தத்தின் ஒன்பது நிபந்தனைகளும் வாய் மூலமாகவே ஒப்புக் கொள்ளப்பட்டு அப்பொழுதே நிறைவேற்றப் பட்டன. வட சீனாவில் எந்த இடத்திற்கும் ஜப்பானிய துருப்புக்கள் செல்லலாம் என்று மேற்படி ஒப்பந்தத்தில் கூறவேயில்லை. டங்கு ஒப்பந்தத்தில் என்ன கூறுகிறதென்றால்:— நாங்கோவுக்கு வடக்கேயுள்ள எஞ்சிங் (Yenching)கிலிருந்து சாங்க்ப்பிங், கௌஒலீயிங், சுன்யி டங்சௌ, ஷியாங்கோ, பவோட்டி, ஷிட்டிங்கௌ, ஷிங்கோ, லுட்டாய், ஆகிய எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ராணுவத்தை வைத்துக்கொள்ளக்கூடாதென்பதே யாகும். இந்த எல்லைக்கு மேற்காகவும் தெற்காகவும் சீனத்துருப்புகள் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும், இந்த எல்லையை ஜப்பானியத் துருப்புகள் கடக்கக் கூடாதென்றும், பெரிய சுவர் வரையில் ஜப்பானியப் படைகள் தாமாகவே பின் வாங்கிச் செல்ல வேண்டு மென்றும் அங்கீகரித்துக் கொள்ளப்பெற்றன.

25-5-1933ல் மேற்படி சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது முதற் கொண்டு இந்த நிபந்தனைப்படி சீனத்துருப்புகள் நடந்து கொண்டு வந்திருக்கின்றன. ஆனால் ஜப்பானியரோ இந்த ஒப்பந்தப்படி நடந்து கொள்ளாமற் போனதோடுகூட டங்சௌவில் இருக்குமாறு சில துருப்புகளையும் அனுப்பினர். இந்த டங்சௌவில் துருப்புகள் இருக்க வேண்டுமென்ற குறிப்பு சர்வதேச ஒப்பந்தத்தில் இல்லவேயில்லை. வேறு எந்த ஒப்பந்தத்திலும் ஜப்பானிய துருப்புகள் இந்த ஊரில் இருக்கலாமென்பதும் சொல்லப் பெறவில்லை. உண்மையில் சர்வதேச ஒப்பந்தத்தையும் டங்கு ஒப்பந்தத்தையும் ஜப்பான் மீறி விட்டது.

மேற் சொன்ன விவரங்களிலிருந்து சீனாவின் மீது ஜப்பான் படையெடுத்தது மன்றி சீனாவின் ஒற்றுமையையும் அரச உரிமையையும் தகைந்திருக்கிறது என்பது விளங்கும். ஆனாலும் ஜப்பான் மீது படையெடுக்க வேண்டுமென்ற எண்ணம் சீனாவுக் கிருக்கிறதென்று அது சொல்லிக் கொண்டே வருகிறது. ஜப்பானுடன் எந்தவிதமான பிணக்கும் வைத்துக் கொள்ளக் கூடாதென்கிற நோக்கத்துடனேயே சென்ற ஐந்து வருஷ காலமாக மிகப்பொறுமையோடு சீனா நடந்து வந்திருக்கிறது. வட சீனாவை ஆக்ரமித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை ஜப்பானுக்குப் பூர்த்தியாகி விட்டாலுங் கூட அதற்குத் திருப்தி உண்டாகாதுபோலும். சமீபத்தில் ஷாங்காய் ஆகாய விமான நிலையத்தில் ஏற்பட்ட சம்பவமும், ஸ்வாட்டோ, சிங்டோ முதலிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களுமே ஜப்பானின் நாடு பிடிக்கும் ஆசைக்கு உதாரணங்களாகும்.

சென்ற பத்து வருஷ காலத்தில் சீனா பல சீர்திருத்தங்களையும் நிர்மாண வேலைகளையும் செய்து கொண்டு வருகின்றது. இடையிலே எவ்வளவோ கஷ்டங்களைச் சமாளித் திருக்கிறது. இப்பொழுது சீனா ஒற்றுமையான ஒரு தேசம். தேச ஜனங்கள் எல்லோரும் ஒருமுகமாக மத்திய அரசாங்கத்

ஜப்பானின் கட்சி

—"ஜப்பானிய ஸ்தானீகர்"
(Japanese Consul)

1937-ம் வருஷம் ஜூலை மாதம் ஏழாந்தேதி புதன் கிழமை. பீபிங்குக்குத் தென் மேற்கே, லுகௌசியோ, லுங்க்வாங்க்மியோ என்ற கிராமங்களுக்குச் சமீபத்தில் ஜப்பானியத் துருப்புகள் வழக்கம்போல் யுத்தப் பயிற்சி செய்து கொண்டிருந்தன. துருப்புகளை மேற்பார்வை செய்யும் காலம் சமீபித்து விட்டபடியால், இவை, இரவும் பகலுமாகத் தேகப் பயிற்சி செய்து கொண்டிருந்தன. இந்த விஷயம், சீன அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு விட்டது.

ஆனால் அன்றிரவு 11-40 மணிக்கு ஜப்பானியத் துருப்புகளை நோக்கி, சீனப்படையினர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். ஜப்பானியர்களுக்கு இஃது ஆச்சரியமாக இருந்தது. இவர்கள், பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முடியாமையால், தங்கள் தலைமை ஸ்தானத்திற்கு உதவிக்குச் சொல்லியனுப்பினர். அங்கிருந்து படைகள் வந்தன. பதில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதுதான் முதல் மனஸ்தாபம்.

பீபிங்கிலுள்ள சீன அதிகாரிக்கு இஃது உடனே தெரிவிக்கப்பட்டது. மத்தியஸ்தம் செய்வதற்காக, சீன ஜப்பானியப்பிரதிநிதிக்கூட்டம் ஒன்று வந்தது. ஆனால், இதற்குள் மறுநாள் காலை 5-20 மணிக்கு மறுபடியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. உடனே 6 மணிக்கெல்லாம் சமாதானத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் சீனத் துருப்புகள் இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளாமலோ அல்லது வேண்டுமென்றோ மீண்டும் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தார்கள். எனவே சண்டை பகல் மூன்று மணிக்கு ஒரு தரமும் ஆறு மணிக்கு ஒரு தரமுமாக நடந்தது.

9-7-37ல் ஒரு சமரஸம் ஏற்பட்டது. இதன்படி சீனத் துருப்புகள் யுங்டிங் நதிக்கு இடது புறத்திற்குச் செல்லவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மறுநாள் மாலை ஐந்து மணிக்கு, சுமார் 100 சீனத்

தை ஆதரிக்கின்றனர். சீனா தன் பிறப்புரிமையைக் காப்பாற்றிக் கொள்ள முனைந்துநிற்பது ஜப்பானுக்குப்பிடிக்கவில்லை. கீழ் நாடுகளில் தங்கள் கவனத்தைச் செலுத்த முடியாமல் ஸ்பெயின் விஷயத்திலேயே இப்பொழுது ஐரோப்பிய வல்லரசுகள் கவனம் செலுத்தி வருகின்றன. இந்தச் சந்தர்ப்பம் பார்த்து ஜப்பான் சீனாவின் மீது படை எடுத்திருக்கிறது. சீனாவின் அரசியல் தலைவரும், ராணுவத் தலைவருமான தளபதி சியாங்கை ஷேக் கூறியுள்ளபடி சமாதானத்திற்காக சீனா எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளும். ஆனால் தன்னுடைய ஒற்றுமையையும் அரச உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ள எல்லா விதமான தியாகங்களையும் செய்யும். சீன அரசாங்கத்தின் கொள்கையும் நோக்கமும் இதுதான்.

சீன நாட்டில் இப்பொழுது யுத்தம் நடை பெறுகிறது. சீனப் படைகள் அந்நியப் படைகளை எதிர்த்து நிற்பது நியாயந்தானே?

துருப்புகள் இந்த ஒப்பந்தத்தை மீறி, லுகௌசியோ கிராமத்திற்கு வடக்கே தோன்றி, ஜப்பானியர்களின் மீது பீரங்கிப் பிரயோகம் செய்தனர். மறுபடியும் ஏழு மணிக்கு மற்ெருரு சீனப்படை வந்து தாக்கியது. இவைகளை, ஜப்பானியப் படையினர் திருப்பித் தாக்கினர். அன்றிரவு இரு கட்சியினருக்கும் சமரஸம் ஏற்பட்டது. இதை நம்பிக்கொண்டு, இனி எவ்வித மனஸ்தாபமும் ஏற்படாதென்று கருதி, ஜப்பானியப் பிரதிநிதிகள் சிலர், ஊரைவிட்டும் போய் விட்டார்கள். ஆனால் மறுநாள் 10–7–37ல் சீன மத்திய அரசாங்கத்துப் படைகள் வடக்கு நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன வென்றும், சீன ஆகாய விமானப் படை அனைத்தும் யுத்த சன்னதத்திற்குத் திரட்டப்பட்டிருக்கின்றன வென்றும், பீபிங் பிரதேசத்தில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதென்றும் டோகியோவுக்குச் செய்தி எட்டியது. வட சீனுவிலுள்ள ஜப்பானியப் பிரஜைகளுக்கு ஆபத்து என்பது தெளிவாகி விட்டது.

ஆனாலும் சமாதானமாகப் போக வேண்டு மென்ற நோக்கத்துடன், ஜப்பானியப் பிரதிநிதிகள், சீனப் பிரதிநிதிகளோடு சமரஸம் பேச வேண்டுமென்று, டோக்கியோ அரசாங்கம் உத்திரவு பிறப்பித்தது. இந்தப்படி சமாதானம் ஏற்பட்டது. சீனப் பிரதிநிதிகள், கீழ்க் கண்ட நிபந்தனைகளுக்குட் பட்டார்கள்:—

(1) சச்சரவில் கலந்து கொண்ட 29வது படையினர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்; இந்தச் சச்சரவில் நேர் முகமாகச் சம்பந்தப் பட்டவர்களைத் தண்டிக்க வேண்டும்.

(2) லுகௌசியோவை விட்டு சீன துருப்புகள் காலி செய்து விடவேண்டும். இவைகளுக்குப் பதிலாக சமாதானப் படையொன்று அமர்த்தப் பட வேண்டும்.

(3) பொதுவுடமைக் கட்சியினர் செய்யும் கிளர்ச்சிகளை அடக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகள் மிகச் சாதாரணமானவை யென்பது நன்கு புலப்படும். ஆயினும், ஜப்பானிய அதிகாரிகள், வட சீனுவிலுள்ள பயங்கரமான நிலைமையை உத்தேசித்துப் படைகளை அனுப்பத் தீர்மானித்தனர். சீனுவைப் பயமுறுத்த வேண்டுமென்பதோ, அல்லது அதனைக் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமென்பதோ ஜப்பானின் நோக்கமல்ல. ஜப்பானியர்களுடைய சொத்து சுதந்திரங்களைக் காப்பாற்ற வேண்டுவது முக்கியமாக இருந்தது. தவிர, சீன அதிகாரிகள், இதற்கு முன்செய்த எத்தனையோ வாக்குறுதிகளை நிறைவேற்ருமல் விட்டிருக்கிருர்கள்.

இந்தச் சம்பவம் நடந்தவுடன் நாங்கிங் அரசாங்கத்தார் (சீன மத்திய அரசாங்கத்தார்) உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் பலத்த பிரசாரத்தில் இறங்கிவிட்டார்கள். 'சீனுவை ஆக்ரமித்துக் கொள்ள வேண்டுமென்பதே ஜப்பானின் நோக்கம்' என்று சொன்னுர்கள்.

சீனுவின் கட்சி என்ன வென்ருல், வட சீனுவில், ஜப்பானியத் துருப்புகள் இருப்பதே சட்ட விரோதமென்றும், அங்கே அவர்கள் யுத்தப் பயிற்சி செய்வது சீன தேசத்தை ஆக்ரமித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடுதானென்றும், சொல்லப் படுகின்றன. இதற்காதாரமாக ஒரு கதையைக் கட்டி விட்டிருக்கிருர்கள். சீனப் படைவீரரில் சிலர், தங்களுடைய சகோதரப் படை வீரன் ஒருவனைத் தேடிக்கொண்டிருந்த போது, ஜப்பானியப் படைகள் லுகௌசியோ கிராமத்திற்குள் நுழைந்து விட்டன

வென்று என்னென்னமோ சொல்லப்படுகின்றன. இந்தப் பிரதேசத்தின் அமைப்பைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பவர்கள், இது நடைபெறுமென்பதை உணர்வார்கள். ஏனென்றால், ஹுகௌசியோ கிராமத்தைச் சீனர்கள் பலமாகப் பாது காவல் செய்கிறார்கள். அதில் ஜப்பானியத் துருப்புகள் நுழையக் கூடாதென்று ஜப்பானிய அரசாங்கம் கட்டளை யிட்டிருக்கிறது.

வட சீனாவில் ஜப்பானியத் துருப்புகள் தங்கியிருப்பது சட்ட விரோதமென்று சொல்லப் படுவதைப் பற்றி அதிக வியாக்கியானம் தேவையில்லை, 1900ம் வருஷத்து ஒப்பந்தத்தில் இதற்கு இடம் இருக்கிறது. மற்ற வல்லரசுகளைப் போலவே ஜப்பானுக்கும் பீபிங், டீன்ஸ்டீன் முதலிய இடங்களில் காப்புச் சேனைகளை வைத்துக் கொள்ள உரிமையுண்டு. ஜப்பானியத் துருப்புகள் யுத்தப் பயிற்சி செய்வதென்பது, இந்த ஒப்பந்தத்திற்கு அநுசரணையாக ஏற்பட்ட ஓர் உரிமையேயாகும்.

இவைகளெல்லாம் போக, சீனோ ஜப்பானிய சம்பந்தத்தில் வடசீனா, ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. ஏனென்றால் இங்கே, ஜப்பானியர்களுக்கு ஏராளமான சொத்துரிமைகள் இருக்கின்றன. அது தவிர மஞ்சுகோவுக்கு அருகாமையிலும் இது இருக்கிறது.

இனி சீனாவின் அரசியல் விவகாரங்களைச் சிறிது கவனிப்போம். சீனாவில் ஜப்பானுக்கு விரோதமான ஸ்தாபனங்கள் பல இருக்கின்றன. இதனால் சீனோ ஜப்பானிய சம்பந்தம் சீர்கெடுகிறது. முதலாவது, சியாங்கை ஷேக்கே, ஜப்பானுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்கிறார். தனது ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு, ஜப்பானுக்கு விரோதமான பிரசாரத்தைத் துணையாகக் கொள்கிறார். 1935ம் வருஷம் பொதுவுடமைக் கட்சிக்காரரை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற பிரசாரம் பலமாயிருந்தது. பின்னர் இது அடங்கி ஜப்பானுக்கு விரோதமான பிரசாரம் வலுத்தது.

சீனாவிலுள்ள தேசியக் கட்சியான கோமிண்டோங் என்பது அந்நிய ஆதிக்கத்தையும், ஜப்பான் செல்வாக்கையும் எதிர்ப்பதாக இருக்கிறது. இந்த விஷயத்தில் இது சுறுசுறுப்பாக வேலை செய்கிறது. எப்படி ருஷ்யாவில், பொது வுடமைக்கட்சியும் சோவியத் அரசாங்கமும் ஒன்றுபட்டதா யிருக்கிறதோ, அப்படியே சீனாவிலும் தேசியக் கட்சியும் மத்திய அரசாங்கமும் ஒன்றே யென்று சொல்லவேண்டும். நாங்கிங் அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகம் வகிப்பவர்கள் பலரும், கட்சித் தலைவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, தேசீயக் கட்சியினர் செய்யும் வேலைகளுக்கெல்லாம் அரசாங்கமும் பொறுப்புள்ளவர்கள்தான்.

13-7-37ல் சீனப் பிரதிநிதியும் ஜப்பான் பிரதிநிதியும் சமரஸப் பேச்சுகள் நடத்தினார்கள். பீபிங் பிரதேசத்தில் அநுஷ்டானத்தில் கொண்டு வந்திருந்த ராணுவச் சட்டத்தை எடுத்து விடுவதாகவும், காப்பில் வைக்கப்பட்டிருந்த ஜப்பானியர்களை விடுதலை செய்து விடுவதாகவும், பீபிங்குக்கும் டீன்ஸ்டீனுக்கும் இடையே போக்குவரத்தை ஏற்படுத்தி விடுவதாகவும் சொல்லப்பட்டன.

ஆனால் 13-7-37 காலையில் பீபிங் நகரம் முழுவதிலும் ஜப்பானியருக்கு விரோதமான துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப் பட்டிருந்தன. அன்று நான்கு ஜப்பானிய மோட்டார் லாரி

கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. மறு நாட்களில் இன்னும் சில ஜப்பானியர்கள் தாக்கப்பட்டுக் கொலை செய்யப் பட்டார்கள். இதே சமயத்தில், சீனாவின் மற்றப் பாகங்களில் ஜப்பானுக்கு விரோதமாகப் பிரசாரங்கள் நடைபெற்று வந்தன.

18–7–37ல், முன்னே செய்து கொண்ட ஒப்பந்தப்படி, லூகௌசியோ சம்பவத்திற்கு வருந்துவதாகச் சீன தளகர்த்தர் ஜப்பான் தளகர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். சமரஸம் ஏற்படும் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. ஆனால் எல்லாம், மறுநாள் மத்திய அரசாங்கம் காட்டும் மனப் பான்மையைப் பொறுத்திருக்கிறதென்று ஜப்பானியர் மறுநாளை எதிர் பார்த்திருந்தனர்.

19–7–37ல், சீன அரசாங்கம் கீழ்க்கண்ட நிபந்தனைகளடங்கிய அறிக்கையை ஜப்பானிய ஸ்தானீகரிடம் கொடுத்தது:—

(1) குறிப்பிட்ட ஒரு தேதியில் இரண்டு அரசாங்கங்களும், தங்கள் துருப்புகளின் போக்கு வரத்தை நிறுத்திக் கொள்வது; அந்தந்தப்படைகளைப்பழைய இடத்திலேயே வாபீஸ் வாங்கிக் கொள்வது.

(2) உடனே சமரஸம் ஏற்படுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டியது.

(3) மாகாண அதிகாரிகள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கும் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் அவசியம் தேவை.

(4) சர்வதேச ஒப்பந்தங்கள் முறையில் எந்த விதமான ஒப்பந்தத்தையும் சீன அரசாங்கம் செய்து கொள்ளத் தயார்.

17–7–37ல் ஜப்பான் விடுத்த கோரிக்கைகளுக்கு இந்த 20–7–37 சீன அறிக்கை சரியான பதில் விடுக்கவில்லையென்று ஜப்பான்கருதியது.சீன துருப்புகள் பின் வாங்குவது போல் ஜப்பானியத் துருப்புகளும் பின் வாங்க வேண்டுமென்றால், லூகௌசியோ சம்பவத்திற்கு ஜப்பானும் பொறுப்பாளியாகவன்றோ ஆகிவிடுகிறது?

தவிர, தற்காப்பு நிமித்தம், சீனத் துருப்புகள் வடசீனாவுக்கு அனுப்பப் பட்டனவென்று சொல்வதே ஆபாசம். சீனத் துருப்புகள் அதிகமாக வந்து சேர்ந்ததனாலேயே, ஜப்பானியப் படைகளை இங்கே தருவிக்க வேண்டிய தவசியமாயிற்று.

தவிர ஹோபை–சாஹார் மாகாண அரசியல் சபைகள் ஸ்தாபிக்கப் பட்டதையும், அவை அதிகாரம் செலுத்தி வருவதையும், நாங்கிங் அரசாங்கம் அங்கீகரித்துக் கொண்டிருக்கிறது. இதுகாறும் அவை செய்து கொண்ட ஒப்பந்தங்களை நாங்கிங் அரசாங்கம் மறுக்கவுமில்லை. இப்பொழுது, எல்லா மாகாண ஒப்பந்தங்களும் நாங்கிங் அரசாங்க அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்று சொல்வதில் அர்த்தமேயில்லை.

கடைசியில், எவ்விதத்திலும் சமரஸம் ஏற்படாதென்று தெரிந்து, 19-7-37ல் டைன்ஸ்டைனிலுள்ள ஜப்பானிய தளகர்த்தர், நிலைமைக்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும் என்று தெரிவிக்க வேண்டியதாயிற்று.

வட சீனா சம்பவத்தை சமரஸமாக முடிக்க வேண்டு மென்பதே ஜப்பானின் விருப்பம். அது முடியவில்லையானால், அந்தப் பொறுப்பு ஜப்பானைச் சேர்ந்ததாகாது.

14-8-37ல் ஷாங்காய் நகரத்தின் மீது சீன ஆகாய விமானங்கள் வெடிகுண்டு வீசி யெறிந்தன. இதன் பேரில், தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

ஐரோப்பிய யுத்தம் சமீபத்தில் ஏற்படுமா?

—"ஓர் அரசியல் வாதி"

இந்தக் கேள்வி அநேக ராஜதந்திரிகளின் கனவிலே அடிக்கடி தோன்றி மறைகின்றது. இப்படி அடிக்கடி இந்தக் கனவு வருவதால் என்று நனவாகுமோ என்ற அச்சம் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவுதான், ஐரோப்பிய வல்லரசுகளின் ஆயுதப்பெருக்கம். ஒவ்வொரு நாடும் உலக சமாதானத்திற்காகவே தான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டு, தன் ஆயுத பலத்தைப்பெருக்கி வருகிறது. சமீபத்திலே கூட ஒரு பிரிட்டிஷ் ராஜதந்திரி பேசிய போது, 'கிரேட் பிரிட்டன் சமாதான லட்சியத்தை நாடியேதான், ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டு கம்பீரமாகப் போய்க் கொண்டிருக்கின்றது' என்று கூறவில்லையா?

ஐரோப்பிய யுத்தம் ஏன் ஏற்படும்? எல்லாம் மத்திய தரைக்கடல் ஆதிக்கத்துக்குத் தான். இதற்கு ஐந்து ஐரோப்பிய வல்லரசுகள் கண் வைத்திருக்கின்றன. அவை யாவை? இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தலி, ஜெர்மனி, ருஷ்யா.

ஸ்பெயின் யுத்தத்தில் மற்ற வல்லரசுகள் தலையிடக்கூடாதென்றெல்லாம் ஒப்பந்தம் இருந்தும் இத்தலி, மத்திய தரைக்கடலின் மேற்குப் பாகத்திலேயுள்ளதும், ஜிப்ரால்டருக்குச் சமீபமாயுள்ளதுமான க்யூடா, அல்ஜெக்ரீராஸ் முதலிய துறை முகங்களைப் பலப்படுத்தி அங்கே துருப்புகளை அனுப்பிக் கொண்டு வருகின்றன.

ஜெர்மனி, ஸ்பெயினிலும் மத்திய தரைக்கடலிலும் தனக்கு உரிமை இருக்கிறதென்பதை ஸ்தாபித்துக் கொள்ளும் பொருட்டு, ஸ்பெயினுக்குப் படைகளை அனுப்பிக் கொண்டுவருகிறது.

பிரான்ஸோ, ஆப்ரிக்காவின்வடக்கேயுள்ள அல்ஜீரியாவிலிருக்கும் மெர்ஸ்-எல்-கெபிர் என்ற துறைமுகத்தை, கப்பல் படை ஸ்தலமாகப் பலப்படுத்திக் கொண்டு வருகிறது.

இங்கிலாந்து, மத்திய தரைக்கடலிலே, தான் நிரந்தரமாக வைத்திருக்கும் கப்பற்படையைச் சமீப காலமாக அதிகப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது. அது தவிர, எகிப்திலுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தையும் பலப்படுத்தி யிருக்கிறது. மற்றும் பாலஸ்தீனத்தைப் பிரித்து ஹைபா துறைமுகத்தைதன் மேற்பார்வையில் வைத்துக்கொள்ள யோசனை செய்கிறது.

ருஷ்யாவோ, துருக்கியோடு ஒரு சமரஸ ஒப்பந்தம் செய்து கொண்டு மத்திய தரைக்கடலில் கிழக்குப் பக்கமாக நுழையப் பார்க்கிறது.

இங்கிலாந்துக்கு, மத்திய தரைக்கடல் வழியாகக் கீழ் நாடுகளுக்குச் செல்வதுதான் சுலபம். தென்னுப்பிரிக்காவைச் சுற்றிப் போக ஒரு வழி இருந்த போதிலும், மத்திய தரைக்கடல் வழியாகச் செல்வதினுல் பல நன்மைகள் இதற்கு இருக்கின்றன. ஏனென்றுல் மத்திய தரைக்கடலோரமாகவுள்ள எகிப்து, பாலஸ்தீனம், ஈராக் முதலிய பிரதேசங்களில் இங்கிலாந்தின் செல்வாக்கு அதிகம். மற்றும் எகிப்து தேசத்தின் பருத்தி, ஈராக்கின் எண்ணெய், ஸ்பானிஷ் மொராக்கோவிலுள்ள இரும்பு முதலியன, இங்கிலாந்தின் தொழிலபிவிருத்திக்கு அவசியம் தேவையாயிருக்கின்றன.

இத்தலி அரசியல் கண்கொண்டும் பொருளாதாரக் கண்கொண்டும் மத்தியதரைக் கடலில் ஆதிக்கம் வகிக்கப் பார்க்கிறது. தவிர, எதியோப்பியாவை அது ஆக்ரமித்துக் கொண்டுவிட்ட படியாலும், லிபியா முதலிய தேசங்களுக்கு அதன் செல்வாக்கைப் பரப்பிவருவதாலும்,செங்கடலிலுள்ள பிரிட்டிஷ் செல்வாக்குக்குச் சிறிது ஆட்டம் கொடுத்திருக்கிறதென்று சொல்லலாம். தவிர, எதியோப்பிய ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக, செங் கடலிலும் சில உரிமைகள் தேடிக் கொள்ள வேண்டுமென்று இத்தலி கருதுகிறது.

பிரான்ஸுக்கு, ஆப்ரிக்காவிலுள்ள தனது குடியேற்ற நாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமானால், அது மத்தியதரைக் கடல் மூலமாகத் தான் முடியும்.

ஜெர்மனியோ, யுத்தகாலத்தில் இழந்துபோன தனது ஆப்ரிக்கக் குடியேற்ற நாடுகளை மீண்டும் பெற மத்திய தரைக்கடலில் ஆதிக்கம் சம்பாதித்துக் கொள்ள விரும்புகிறது.

ருஷ்யா, வெளியுலகத்திற்குச் செல்ல வேண்டுமானால் மத்தியதரைக் கடல் ஒன்றுதான் வழி. அது, சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அப்படி மத்தியதரைக் கடல் ஆதிக்க சம்பந்தமாக யுத்தம் ஏற்பட்டால் அதில் யாராருக்கு அதிகமான பங்கு இருக்கும் என்று யோசிக்கலாம். ஆரம்பத்தில் ருஷ்யாவைத் தள்ளிவிடலாம். ஏனென்றால் அது தன் சேனைபலத்தை மத்தியதரைக் கடலுக்குக் கொண்டுவர முடியாது. அப்படி வந்தாலும், துருக்கியின் அநுசரணை வேண்டும். அது நடவாத காரியம். எனவே, ருஷ்யாவை முதலில் நீக்கிவிடலாம். ஜெர்மனியும், மத்தியதரைக் கடல் யுத்தத்தில் கலந்துகொள்ள முடியாது. ஏனென்றால் அது உள்நாடு. கடல் சண்டையில் கலந்து கொள்ளக்கூடிய கப்பற் படை அதற்கு இல்லை. இத்தலிக்குத் துணையாயிருந்து வேலை செய்யலாம். ஆனால் அப்படிப்பட்ட உதவியை, மத்தியதரைக் கடலுக்குப் புறம்பான இடங்களில்தான் உபயோகிக்கமுடியும்.

பிரான்சுக்குக்கடற்படையும் கார்ஸிகா தீவில் வைக்கப் பட்டிருக்கும் ஆகாயப்படையும், ஒரு பலமா யிருக்கின்றன. இவற்றைக் கொண்டு அஃது ஒரு கை பார்க்கலாம்.

ஆனால் சரியான போராட்டம் இங்கிலாந்துக்கும் இத்தலிக்குந் தான் இருக்குமென்று அறிஞர்கள் ஊகிக்கிறார்கள். அப்படி ஏற்படாமலிருப்பது நல்லதுதான். அப்படி ஏற்படுமானால், இத்தலிக்கு ஒரு பலஹீனம் உண்டு என்று சொல்லப்படுகிறது. மத்திய தரைக்கடலுக்குள் எந்த உணவுப்பொருள்களும் போகாதபடி ஜிப்ரால்டரிலிருந்தும் ஏடனிலிருந்தும் பிரிட்டிஷ் கப்பற் படை தகைந்துவிடலாமல்லவா? அப்பொழுது இத்தலி, கூட்டிலே இட்ட ஒரு பறவை போலாகிவிடும். தவிர, இங்கிலாந்தினுடைய ஆகாயப்படையும் கப்பற்படையும் ஒன்று சேருமானால், இத்தலியின் கடல் பலம் மிகச் சாமானியமாகிவிடும் என்று சொல்லப்படுகிறது.

இந்த மத்திய தரைக் கடல் யுத்தம்—இதன் மூலமாக மூளும் ஐரோப்பிய யுத்தம் சமீபத்தில் ஏற்படாது. ஏனென்றால், இங்கிலாந்துக்கும் இத்தலிக்கும் சுமார் ஒரு வருஷத்திற்கு முன்னர் வரை இருந்த பிணக்கு இப்பொழுது இல்லை. முஸோலினியும் சேம்பர்லேனும் கைப்பட கடிதங்கள் எழுதி உறவு கொண்டாடும் போது சண்டை சமீபத்தில் ஏற்படாது.

ஸ்பெயினே! உன் பதில் என்ன?

—"ஓர் அநுதாபி"

நமது நாட்டிலே ராமாயண யுத்தம் நடந்தது; மகாபாரதப் போர் நடந்தது. இரண்டு தரப்பிலும் லட்சக் கணக்கான வீரர்கள் சண்டையிட்டார்கள். ராமனுக்கும் ராவணனுக்கும் இருந்த பகைமையோ, கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும்இருந்த மனஸ்தாபமோ நமது கவிகள் வருணித்திருக்கிறபடி கொஞ்சமும் லேசானதல்ல. மத்தியில் ஒரு துரும்பைக் கிள்ளிப்போட்டால்கூடப் பற்றி எரியும்; அப்படிப் பட்ட மனக் கசப்பு. ஆனால் இவர்கள் யுத்த தருமம் என்பதை அநுஷ்டித்தார்கள். ஆயுதமில்லாதவர்களை நோக்கி இவர்கள் குண்டுகளை வீசி எறியவில்லை. ஸ்திரீகள், குழந்தைகள், கிழவர்கள், முதலியவர்கள் விஷயத்தில் பிரத்தியேக தயை காட்டினார்கள். தங்களுடைய பகைமையில், இவர்களைக் கொண்டு கலக்கவில்லை.

ஆனால் இந்த இருபதாம் நூற்றுண்டிலே, நாகரிகம் வாய்ந்தவர்களென்று சொல்லப் படுகின்ற சமூகத்தினர் மத்தியிலே, இந்த யுத்த தருமங்களெல்லாம் பறந்தோடிப் போய் விட்டன. ஸ்பெயின் தேசத்தில் சென்ற பதினான்கு மாத காலமாக நடை பெறுகின்ற அதரும யுத்தத்தில் கருணைக்குப் பாத்திரமாக வேண்டிய ஸ்திரீகள், குழந்தைகள் முதலிய பலர் பதினாயிரக் கணக்காக உயிர் துறக்கிறார்கள்.

குரு க்ஷேத்திர யுத்த களத்தில், கௌரவ சேனையைப் பார்த்து, அருச்சுனன், ஸ்ரீ கிருஷ்ணனிடம் என்ன சொன்னான்? 'பகவன், இதோ என் எதிரே யுத்த சன்னத்தராக நிற்கும் அத்தனை பேரும் எனது நாட்டார்: என் உறவினர்: என் ரத்தத்தோடு கலந்தவர்கள். அவர்களையா நான் கொல்வது? இதனால் நான் அடையப் போகிற நன்மைதான் என்ன?' என்று கேட்டான். ஆனால் ஸ்பெயினில், கலகக்காரத் தலைவனாகிய தளபதி பிராங்கோ, இந்தக் கேள்வியை தனக்குத் தானே கூடக் கேட்டுக் கொள்ள வில்லை. இவனுக்கு மனமில்லையா? அல்லது மன மிருந்தும், ஏதோ பின்னடி ஏற்படக் கூடிய ஒரு பெரும் நன்மையை முன்னிட்டு, இப்படி இத்தனை உயிர்கள் பலியாவதற்குக் காரணனாயிருக்கிறானா? என்ற கேள்விகள், ஸ்பானிஷ் சரித்திரத்தில் கொட்டை எழுத்துக்களில் எழுதப் படும்.

சண்டையில் நேர்முகமாகக் கலந்து கொள்கிறவர்கள் காயமடைவதும், உயிர் துறப்பதும் எங்கும் எப்பொழுதும் சகஜம். ஆனால் இப்பொழுது நடை பெறுகின்ற நாகரிக யுத்தங்களில், நிரபராதிகளான பாமர ஜனங்கள், யார்வந்து ஆதிக்கம் செலுத்தினாலும் அவர்களுக்கு உழைத்து உயிர் வாழக்கூடிய எளிய மக்கள் கொலை செய்யப்படுகிறார்கள். அபிசீனிய யுத்தத்தில் இதைக் கண்டோம். சென்ற ஒன்றேகால் வருஷமாக, ஸ்பெயினில் பார்த்து வருகிறோம். இப்பொழுது சீன-ஜப்பானிய யுத்தத்தில் இந்தக் காட்சி ஆரம்பித்திருக்கிறது. நாகரிக உலகம் என்று இந்தக் காலத்தை நாம் கூசாமல் கூறுகிறோம்! இஃது ஒரு அதிசயமில்லையா?

தளபதி பிராங்கோவுக்கு அந்நிய வல்லரசுகளின் உதவியிருக்கிறது.

ஆனால் அவனை எதிர்த்து நிற்கின்ற ஸ்பானிஷ் பொது ஜனங்களோ, தங்களுடைய தேச பக்தி யொன்றைத் தான் துணையாகக் கொண்டிருக்கிறார்கள். அந்தோ! இந்தத் தேசபக்திக்காக எவ்வளவு பலி! எத்தகைய விசாலமான ரத்த வெள்ளம்!

குழந்தைகளை இழந்த தாய் மார்கள், கணவனை இழந்த கைம் பெண்கள், அலறி அழுகிறார்கள்; உலகமெல்லாம் அவர்களுக்குச் சூனியமாயிருக்கிறது. மறுநாள் உயிர் வாழ வழி என்ன என்று ஏங்கி நிற்கிறார்கள். அப்படி நிற்கிறபோது, திடீரென்று ஆகாய விமானங்களிலிருந்து வெடி குண்டுகள் வந்து விழுகின்றன; பிரமிக்கிறார்கள்; திக்கு முக்காடிப் போய் கீழே விழுந்து விடுகிறார்கள். சிலருக்கு மூளையே கலங்கிப் போய் பைத்தியக்காரர்களாகிவிடுகிறார்கள். உடுக்க உடையில்லை; உணவு கொள்ள ஆகாரமில்லை; படுப்பது எங்கே? இவ்வளவு கஷ்டங்களும் எதற்காக? தேசத்திற்காக! தாங்கள் பிறந்த தாய் நாட்டுக்காக! தாய் நாட்டுப் பற்று, எவ்வளவு கோரமான காணிக்கைகளை வாங்கிக் கொள்கிறது!

தாயின் முகத்தைப் பார்த்துக் கொண்டே, அவள் துடையின் மீது தலை வைத்துப் படுத்து, கையையும் காலையும் வீசியவண்ணம் குழந்தை விளையாடிக் கொண்டிருக்கிறது. திடீரென்று எங்கிருந்தோ ஒரு குண்டு வந்து விழுகிறது. தாயும் குழந்தையும் ஒரே சமயத்தில் பரலோக யாத்திரை!

தெருவிலே குழந்தைகள் என்ன ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கின்றன! இவைகளுக்கு யார்சண்டையிட்டாலென்ன? இவைகளின் களங்கமற்ற மனத்திலே, எந்த விதமான துவேஷத்திற்கும் இடமில்லையல்லவா? ஆனால், அன்று மலர்ந்த புஷ்பத்தின் மீது நெருப்புத் துண்டைக் கருணையின்றி வீசி எறிவதுபோல, இந்தக் குழந்தைகளின் மீது கூட வெடி குண்டுகள் வந்து விழுகின்றன; சிரித்த முகத்தோடே, விளையாடிக் கொண்டிருந்த சுறுசுறுப்போடே, விளையாட்டுத் தோழர்களோடு பிணங்கிக்கொண்டிருந்த முகச்சுளிப்போடே, எந்தெந்தத்தன்மையில் எங்கெங்கே இருந்தனவோ அப்படி அப்படியே யமலோகத்திற்குச் செல்கின்றன. இவை என்ன நினைத்துக் கொண்டிருந்தனவோ? தங்கள் தேசத்தின் எதிர்கால க்ஷேமத்திற்கு என்னென்ன தியாகங்களைச் செய்ய வேண்டுமென்று, தங்கள் பசுமனத்தில் விதை போட்டுக் கொண்டிருந்தனவோ? எல்லாம் சாம்பலாகிவிட்டன.

அரசியல் விவகாரங்கள் ஒன்றுமே தெரியாது. முரட்டுத் தேகம், களங்கமற்ற மனம், சலியாத உழைப்பு இந்த மூன்றை மட்டும் எப்பொழுதும் துணையாகக் கொண்ட எளிய வாழ்க்கை. இவர்கள்தான் ஸ்பானிஷ் குடியானவர்கள். இவர்கள், இப்பொழுது, யுத்த அநுபவம் சிறிதுகூட இல்லாமல் போனபோதிலும் இந்த ரத்தப்பெருக்கில் முழுகி முழுகி எழுந்திருக்கிறார்கள்.

ஸ்பெயின் தேசத்துத் தாய்மார்களும் வீர புருஷர்களும் சென்ற பதினைந்து மாத காலமாக இந்தக் கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். தேசத்திற்காக! ஸ்பெயினே! இவர்களுக்கு என்ன பரிகாரந்தேடித் தரப்போகிறாய்? உன் இளகிய மண், கற்பாறையாக இறுகிப் போகுமானால், ஐரோப்பிய பூகோள படத்திலிருந்து நீ மறைந்துபோக வேண்டியதுதான்!

இந்தக் கட்டுரையை, அடுத்து வரும் படங்கள் உருவகப் படுத்திக்காட்டுகின்றன.--ஆசிரியர்.

ஸ்பெயின் குழப்பத்தில்—ஐயோ!

குழந்தைகளின் பரிதாப மரணம்—ஸ்பெயினில் தான்

பணம் என்றால் என்ன?

—சு. கு. சர்மா
B. A., L. T.,

பத்திரிகைகளில் நாணயச் செலாவணி விஷயம் ஏதேனும் வந்தால், அது சிக்கலானது என்று கருதியோ என்னவோ, அதைப் படிக்காமலே வாசகர்கள் தள்ளி விடுகிறதைப் பார்க்கிறோம். காரணம், நிரடான வாசகத்தில் இந்த விஷயங்கள் எழுதப்படுகின்றன; என்று ஒரு சிலர் கூறுவதையும் நாம் கேட்டிருக்கிறோம். அப்படியில்லாமல் ஸ்ரீமான் சர்மா இந்த வியாசத்தில், பணம் என்றால் என்ன அர்த்தம் என்பதை மிகச் சுலபமான பாஷையில் விளக்கியிருக்கிறார்.

பணம் என்ற பதம் பல பொருட்பட தற்காலத்தில் பிரயோகிக்கப்படுவதால் அதன் லக்ஷியமும் இலக்கணமும் பலருக்கு மூடு மந்திரமாகவே இருக்கிறது. ஒருவகையில் பணம் என்பது யாவரும் எளிதில் அறிந்ததே. அதுவே நமது தினசரித் தேவைகளுக்காக நாம் தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்களாகவோ, மதிப்புடைய நோட்டுகளாகவோ கொடுத்து வாங்குவதாகும். அது எனது மடியிலிருக்கும் பத்து ரூபாயென்றும், அந்த அளவிற்கு நான் எதை வேண்டுமானாலும் வாங்கக்கூடுமென்றும் கூறின் உண்மையே. நான் வாங்கவிரும்பும் ஒரு பொருளின் விலை இத்தனை ரூபாயென்றோ, அல்லது இத்தனை அணாக்களென்றோ அறிவேன். மேலும், எனது வசமிருக்கும் ஒரு ரூபாய்க்கு எவனும் இரண்டு ரூபாய்கள் கொடுக்கவும் மாட்டான்; நானும், அதை ஒரு ரூபாய்க்குக் குறைந்த விகிதத்திற்கு யாருக்கும் கொடுக்கமாட்டேன் என்பது நிச்சயம். இவ்வளவில், பணமும், பணத்தின் பயனும் நாம் அறிந்தவையேயாகும்.

ஆனால், 'பணம்' என்பதை, பணம் கடன் கொடுத்தல் என்று பொருள்பட சாதாரணமாக வழங்குகின்றனர். பண மார்க்கெட்டைப்பற்றிப் பேசும் பொழுதும், பண விலை யென்னும் பொழுதும் இப்பொருள்பற்றியே பணம் என்ற சொல் வழங்கப்படுகின்றது. ஆகவே, தினசரிப்பத்திரிகைகளில் நாம் காணும் 'பணம் மலிந்திருக்கின்றது' என்றோ அல்லது 'பண மார்க்கெட் நெருக்கடியாயிருக்கின்றது' என்றோ வரும் குறிப்புகள் நமக்கு விநோதமாய்த் தோன்றுவதுமன்றி தெளிவாக விளங்குவதுமில்லை. பணத்திற்கும் ஓர் விலையாயெனச் சந்தேகிக்கின்றோம். இதற்குக் காரணம், மேற்சொன்ன பணத்தின் இரண்டாவது பொருளை நாம் உணராததேயாகும். 'விலை', 'மார்க்கெட்' என்ற இப்பதங்கள் பண்டங்களையும், பணத்தையும் குறிக்கும் பொழுது வெவ்வேறு பொருள்படப் பிரயோகிக்கப்படுகின்றன. ஓர் குடையின் 'விலை', அக்குடை எனக்குச் சொந்தமாக வேண்டி நான் கொடுக்கும் இரண்டு ரூபாய்கள். மாாக்கெட்டென்பது குடை வியாபாரிகள் கூடியிருக்கும் இடம். பணத்தின் விலையென்பது, குறித்த ஒரு தொகையை நான் கடன் வாங்கிக் கொள்வதின் நிமித்தம், அதாவது, சில காலம் எனது பிரயோஜனத்திற்காக உபயோகப்படுத்துவதின் நிமித்தம், குறிக்கப்பட்ட ஒரு நாளில் கொடுக்கிறேன்என்று ஒப்புக்கொண்ட ஒரு ரூபாயோ, பல ரூபாய்களோ ஆகும். நான் கடன் வாங்க வசதி

யளிக்கும் இடமே பண மார்க்கெட் எனப்படும். ஆக, ஏனைய பண்டங்களைப் போல பணத்தையும் விலைக்கு வாங்கவும் விற்கவும் கூடுமென்று நினைப்பது தவறு. பணம் ஓர் பண்டமே; எனினும் இதர பண்டங்கள் யாவும் பணத்திற்கு வாங்கவும் விற்கவும் படுகின்றன. பணத்தைக் கொண்டே பணத்தைக் கொள்வது, கொடுப்பது என்பது சிறிதும் பொருந்தாது.

வட்டி

ஆனால் பணத்தை, கடன் கொடுக்கவோ, கடன் வாங்கவோ இயலுமென்பது யாவருமறிந்ததே. எனக்குக் கடன் வேண்டும். கடன்கொடுப்பவருக்குஅதனால் ஏதாவது பிரயோஜனமிருந்தாலொழிய, அவர், நான் கேட்கும் கடனைக்கொடுக்க மாட்டார். ஆகவே, அவருடைய பணத்தை எனது செலவிற்கு நான் சிறிது காலம் உபயோகப் படுத்துவதால், திருப்பிக் கொடுக்கும் தவணையன்று அவர் கொடுத்த தொகையை விட அதிகமாகக் கொடுப்பதாக நான் வாக்குறுதி யளிக்கிறேன். இவ்விரண்டு தொகைகளுக்குமுள்ள வித்தியாசத்தையே வட்டி யென்று சொல்லுகின்றோம். இவ்வட்டியையே பொதுவாக பணத்தின் விலையென்கின்றனர். வட்டியானது சதவிகிதத்திற்கே கணக்கிடப்படுவது வழக்கம்.

மேற் சொன்னவைகளிலிருந்து, பண மார்க்கெட்டின் நடவடிக்கைகள் யாவற்றிலும், காலம் ஓர் முக்கிய அம்சமாயிருப்பதை உணரக்கூடும். பணத்தைக் கொண்டு பணம் பெறுவது என்பது அர்த்தமற்றது: ஆனால் இப்பொழுது கொடுக்கும் பணத்திற்குச் சிறிது காலங்கழித்து அதிகப் பணம் அடைவதென்பது யாவரும் அறிந்ததே. அன்றியும் பண மார்க்கெட்டின் நடவடிக்கைகளில் காணும் மற்றொரு அம்சமாவது இடவேறுபாடுமாம். பின் ஒரு காலத்தில் கொடுப்பதற்கோ வாங்குவதற்கோ இப்பொழுது கடன் வாங்குவதும் கொடுப்பதும் தவிர, வேறு ஒரு இடத்தில் கொடுப்பதற்கோ, வாங்குவதற்கோ இங்குப் பணம் வாங்குவதையும் கொடுப்பதையும் செய்கின்றோம். இதன் வழித் தோன்றுவதாகும் தற்காலத்தில் நாம் காணும் 'பணமாற்று' (Exchange) எனும் நுட்பம் நிறைந்த ஏற்பாடு. நாம் ஒரு ஊரிலிருக்கும் நமது நண்பருக்கு, சந்தர்ப்பம் ஏற்பட்டபொழுது, அனுப்பி வைக்கும் தபால் ஆர்டரையோ, மணியார்டரையோ இப்பணமாற்றிற்குச் சிறிய உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

எனவே, பணத்தினாலாகிய நடவடிக்கைகளை மூன்று வகைப்படுத்திக் கூறலாம். ஒன்று, வேறு பண்டங்களையோ, பணியையோ, பணத்தைக் கொடுத்து நாம் கொள்வது; இரண்டு, எதிர் காலத்தில் ஓர் தினம் கொடுப்பதாகச் செய்த உறுதி மொழிக்குப் பதிலாக நிகழ் காலத்தில் ரொக்கம் கொடுப்பது; மூன்று, வேறு எந்த இடத்திலோ இருக்கும் பணத்திற்கு இங்குப்பணம் கொடுத்து வாங்கி மாற்றிக்கொள்வது. இதையே பணமாற்றுநடவடிக்கைகள் என்கின்றனர். இந்நடவடிக்கைகளைக்கொண்டே ரூபாய்களை இங்கிலாந்து பவுன்களாகவோ, அமெரிக்க டாலர்களாகவோ, ஜெர்மானிய மார்க்குகளாகவோ மாற்றிக் கொண்டும் கொடுத்தும் வியாபாரம் நடத்துகின்றனர். ஆனால் இம்மூன்று விதச் செய்கைகளிலும் ஒரு சாதனமானது ஒவ்வொன்றினூடும் இன்றி

யமையாததாய் இருப்பதைக் காணக்கூடும். அதுவே தற்காலத்தில் என்னிடம் இருக்கும் பணமாகும். பண்டங்கள் வாங்குவதிலும் விற்பதிலும் எனது வசமிருக்கும் ரொக்கத்தைக் கொடுத்து வாங்குகின்றேன். கடன் நடவடிக்கைகளில் இப்பொழுது எனது வசமிருக்கும் பணத்தைச் சிறிது காலம் தாழ்த்துத் தருவதாகச் சொல்லும் உறுதி மொழிக்குப் பதிலாகக் கொடுக்கின்றேன். பணமாற்று விவகாரங்களில் என் கையிலிருக்கும் பணத்தைக் கொடுத்து வேறோர் இடத்தில் கிடைக்கும்படி செய்யும் அதிகாரப் பத்திரமாக மாற்றிக் கொள்ளுகிறேன். ஆகவே, இப்பொழுது என்னிடத்தில் இருக்கும் பணமே மேற்கண்ட மூன்று விதச் செயல்களுக்கும் ஆதாரமாயிருக்கின்றது.

புராதன நாணயங்கள்

கைவச மிருக்கும் ரொக்கம் இரு வகைப்படும்: ஒன்று தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களினால் ஆக்கப்பட்ட நாணயங்கள், காசுகள்; மற்றொன்று காகிதப்பணம். முதலாவதாகிய நாணயங்கள் தற்காலத்தில் தங்கத்தினாலும், வெள்ளியினாலும், செம்பினாலும் ஆக்கப்பட்டு, ஒரு புறத்தில் அரசரது உருவத்தையும் பெயரையும் தாங்கி, மறு புறத்தில் நாணயத்தின் மதிப்பையும் எழுத்தால் பெற்று, வரம்பு கட்டின ஓரங்களுடன் காணப்படுகின்றன. ஆனால் மனிதனது நாகரிக வளர்ச்சியில் மிகவும் பழைய நாணயங்களெனக் கருதப்படுபவை இன்றைக்குச் சுமார் 2500 வருஷங்களுக்கு முன் தோன்றியிருக்கக்கூடும். அதற்கு முன், மனித சமூகத்தின் வியாபாரம், ஏனையகொள்வன கொடுப்பனவாகிய நடவடிக்கைகள் யாவும், பண்ட மாற்று முறையிலேயே நிகழ்ந்து வந்தன. இம்முறையின் அசௌகரியங்கள் வியாபார முன்னேற்றத்திற்குப் பெருந் தடையா யிருந்தன. ஆதலின், இரு திறத்தாரும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடிய வஸ்துவொன்றை அளவையாகக் கொண்டனர். ஆதி காலத்தில் ஐரோப்பாவிலும் சரி, நமது நாட்டிலும் சரி, ஒருவனுடைய செல்வம் அவனுக்கிருந்த ஆடுமாடுகளின் பெருக்கைப் பொறுத்திருந்ததாகலின், மாடுகளையே இந்த அளவையாகக் கருதி வந்தனர். பிறகு, சில காலஞ்சென்றதும், தங்கம் வெள்ளி ஆகிய விலையுயர்ந்த உலோகங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவை மாடுகளைவிட வசதியான மதிப்பு அளவைகள் என்பதைப்புராதன மனிதன் எளிதில் உணர்ந்துகொண்டான். விலையுயர்ந்தபண்டங்களைத் தங்கம், அல்லது வெள்ளி, இவைகளுக்குப் பதிலாக நிறுத்துக் கொடுத்தும், மிகச்சாதாரண பண்டங்களை சிப்பிகளுக்குப்பதிலாகவும் வாங்கத் தலைப்பட்டனர். அடுத்த படியாக, சம எடையுள்ள தங்க, வெள்ளிச் சில்லுக்களும், பாளங்களும் ஏற்பட்டன. இவைகளே ஆதி நாணயங்கள். மெல்லிய வெள்ளித் தகடுகளிலிருந்து சம வெடையாக வெட்டப்பட்டு, சதுர வடிவாகவும், வட்ட வடிவாகவு முள்ள பல நாணயங்கள் இந்தியாவில் வங்காளத்திலிருந்து கோயம்புத்தூர் வரைக்கு முள்ள பல விடங்களில் பூமியிலிருந்து தோண்டப்பட்டிருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் குறிகளையுடையதாய் இருக்கின்றது. (Punch-marked Coins). இவை 'புராண' மென்றும், 'காரண' மென்றும் அழைக்கப்படும். நாளடைவில், தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் வார்ப்பட முறையிலும், அச்சு முறையிலும் ஆக்கப்பட்டு வடிவத்திலும் வேலைப்

பாட்டிலும் சிறந்து விளங்கின. 'பது மடங்கம்', 'வராகன்' அல்லது 'பகோடா', 'பணம்', 'காசு' முதலிய பலதிறப்பட்ட நாணயங்கள் வழங்கத் தலைப்பட்டன. அன்றியும் அன்னிய நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்ததின் பயனாக ஏராளமான இதர தேசத்து நாணயங்களும் பல்வேறு இடங்களில் அகப் பட்டிருக்கின்றன.

1850ம் ஆண்டில், கன்னனூர் என்னுமிடத்தில், கி. மு. 29 முதல் கி. பி. 161 வரையில் ஆட்சி செய்த பல ரோம சக்கிரவர்த்திகளின் நாணயங்கள் தோண்டி யெடுக்கப் பட்டனவென்பதே, பண்டைய காலத்தில் நமது நாடு வியாபாரத் துறையில் முன்னணியிலிருந்த தென்பதற்கு அத்தாட்சியாகும்.§ இஃது ஒரு புறமிருக்க, நாம் அறிய வேண்டுவதீ யாதெனில் புராதன காலத்தில் மனிதன் பண்டமாற்று முறையை விடுத்து தங்கம், வெள்ளி, செம்பிவையாகிய நாணயங்களைப் பொருள்களின் விலைக்கு அளவையாகக் கொண்டான் என்பதும், இந்நாணயங்கள் நாளடைவில் அவனது நாகரீக வளர்ச்சிக்குத் தகுந்தவாறு மதிப்பிலும், வடிவத்திலும், வேலைத்திறனிலும் மேம்பட்டு தற்போதுள்ள நிலைமை யடைந்திருக்கின்றனவென்பதுமேயாகும். ஒரு விஷயம் மாத்திரம் கருத்திலிருக்க வேண்டும். நாணயமாகக் கையாளப் பட்ட எந்த உலோகமும் சில இன்றியமையாத லக்ஷணங்களை உடைத்தாயிருத்தல் வேண்டும். ஒன்று அது எல்லோராலும் அங்கீகரிக்கத் தக்கதாயிருக்க வேண்டும். அன்றியும், அது நிரந்தரமாக நீண்ட காலம் இருக்கக் கூடிய தன்மை வாய்ந்ததாயிருக்க வேண்டும். மூன்றாவதாக ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு எளிதில் மாறக்கூடிய உருவத்தையும் கனத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். கடைசியாக, ஒரே மதிப்புள்ள நாணயங்கள் பலவற்றுள், வடிவத்திலும், கனத்திலும், உலோக மதிப்பிலும், ஒன்றுக்கொன்று வித்தியாசமின்றி, ஒற்றுமையுடையனவாயிருக்க வேண்டும். ஆகவே, **'பணம்' என்று சொல்லப்படுவது, அகில அங்கீகாரத்துவம், நிரந்தரத்துவம், கைமாற்றெளிமை சமத்துவம் எனவாகிய இந் நான்கு குணங்களைப் பெரும்பாலும் உடையதாயிருத்தல் வேண்டும்.**

நாம் நமது அன்றாட வாழ்க்கையில் உபயோகித்து வரும் சவரன் அல்லது ரூபாய் நாணயம், நாட்டிலுள்ள எல்லா வியாபாரிகளாலும் தடையின்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தங்கசாலையிலிருந்து அவை வெளிவந்ததும் ஒன்றுக் கொன்று சிறிதும் மாறுபாடின்றி விளங்குகின்றன. மடியிலும், இடுப்பிலும், பையிலும் எடுத்துச் செல்வதற்கு எளிதாயிருக்கின்றது. கையிலிருக்கும் பவுனுக்கு நாணயமாகவோ, அல்லது உருக்கிய பின் தங்கக்கட்டியாகவோ, ஓர் தனி மதிப்பு என்றும் உளது. ஆனால், நாம் அனுபவித்துவரும் இச் சௌகரியம் எப்பொழுதுமே யிருந்ததில்லை. ஐந்து ஆறு நூற்றாண்டுகட்கு முன்னர் அநேக அரசர்கள் நாணயங்களிலுள்ள தங்கம், வெள்ளி இவைகளைக் குறைத்து, கலப்பு உலோகத்தை யதிகப்படுத்தி, அவர்களின் குடி ஜனங்களை நஷ்டத்திற்குள்ளாக்கியதுமுண்டு. மேலும், நாணயங்கள் செய்வதில் போதிய திறமையில்லாததினால், பலர் தங்கள் கையில் கிடைத்த நல்ல நாணயங்களிலிருந்து சிறு பாகங்களை வெட்டி யெடுக்

§ Journal of The Asiatic Society of Bengal 1851—Page 371

கவோ, ராவியெடுக்கவோ முடிந்தது. இது காரணமாக, நல்ல நாணயங்களைத் தங்களிடமே வைத்துக்கொண்டு, செதுக்கிய, வெட்டுப்பட்ட நாணயங்களைச் செலாவணி செய்ய வாரம்பித்தனர். எலிசபெத் ராணியின் பொக்கிஷ மந்திரியாயிருந்த ஸர் தாமஸ் கிரெஷாம் என்பவன், தன் காலத்தில் இந்த வழக்கம் மிகுதியாயிருந்ததைக்கண்டு, பரிசீலனை செய்து கடைசியாக, **கெட்ட நாணயம் நல்ல நாணயத்தைப்பழக்கத்திலிருந்து விலக்கிவிடுகின்றதென்ற**முடிவிற்கு வந்தான். இம்முடிவே 'கிரெஷாம் விதி' (Gresham's Law) யென்று பலர் ஒப்பமுடிந்த பொருள் நூலின் அடிப்படையான கொள்கைகளுள் ஒன்றாகும். தற்காலத்தில் இத்தகைய திருட்டுத்தனத்திற்கு இடங்கொடுக்காதபடி, நாணயங்கள், ஓரங்கள் வரம்பிடப்பட்டு அச்சாகின்றன.

காகிதப் பணம்

இனிக்காகிதப்பணத்தை யெடுத்துக்கொள்வோம். ஆதிகாலத்தில் மேனாட்டில் தங்கம் வெள்ளி வியாபாரிகளே ரொக்கலேவாதேவியும் செய்து வந்தார்கள். தங்களிடம் பணம் போட்டிருந்தவர்களுக்கு இவர்கள் பெற்றுக் கொண்டதற்கு ரசீதும், வேண்டும்போது தங்கமோ, வெள்ளியோ, அந்த மதிப்பிற்குக் கொடுப்பதாக எழுதித்தருவது வழக்கம். இவர்களுக்குச் சமூகத்தில் நல்ல மதிப்பு இருந்ததால் இவர்களுடைய கைச்சீட்டே பணத்திற்குச் சமானமாய் கருதப்பட்டு வந்தது. இப்படியிருக்கும் நாட்களில், ஒரு கெட்டிக்கார வியாபாரிக்கு ஓர் புதிய எண்ணம் உதயமாயிற்று. தன்னிடத்தில் கடன் வாங்க வருபவர்களுக்கு, தங்க நாணயங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக, தங்கம் தருவதாக வாக்களிக்கப்பட்ட 'நோட்டு'களைக் கொடுத்தாலும் ஒன்றுதானே யென்று நினைத்தான். இந்நினைவிற்குக் காரணமாயிருந்தது, அவனுடைய கைச்சீட்டு, நாணயத்தைப் போன்ற செலாவணி மதிப்புடையதாயிருந்ததேயாகும். பணத்திற்குப் பதிலாக, அதற்குச் சமானமாக, அவனுடைய நோட்டுகளைப் பொதுஜனங்கள் ஒருவரிடமிருந்து ஒருவர், தடையின்றிப் பெற்றுக் கொண்டனர். இத்தகைய ஏற்பாட்டில் அவன் இன்னுமொரு அனுகூலத்தையுங் கண்டான். தன்னுடைய நோட்டுகள் தங்கத்திற்குப் பதிலாய் பழக்கத்திலிருப்பதினால் அவ்வுலோகத்தின் செலவு சிக்கனப்படுவதுடன், தன்னிடமிருக்கும் தொகையானது பன்மடங்கு பெருக்கப்படுவதையும் உணர்ந்தான். இரு கோஷ்டியினர் ஒருவர்க்கொருவர் கடன்படும் ஒரு ஏற்பாட்டின் மூலம் பொருளுற்பத்தியையும் வியாபாரத்தையும் பெருக்குவதென்பது நூதன முறையாகக் காணப்படினும், அதுவே தற்காலத்து வியாபார மதிப்பின் அஸ்திவாரங்களுள் முக்கியமானதாயிருந்து வருகின்றது.

இம் முறையை ஓர் உதாரணத்தால் எளிதில் உரைலாம். ஒரு வங்கியில் நான் பதினாயிரம் ரூபாய் போட்டு வைக்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். அந்தத் தொகையை வங்கியானது ராமனுக்குக் கடன் கொடுக்கின்றது. ஆனால் அவனுக்கு நாணயமாகக் கொடுக்காது நோட்டுகளாகக் கொடுக்கின்றது. ஆகவே, நான் போட்ட ரூபாய் வங்கியிலேயே தங்கியிருப்பதைக் காண்கிறோம். இந்த நோட்டுகள், வேண்டும்போது குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதாக எழுதித் தரப்பட்ட உறுதி மொழிச்

சீட்டுகளாதலால், ராமனுக்கு வங்கியானது கடன் பட்டுளது. ராமன் வங்கியிலிருந்து கடன் வாங்கியதால் வங்கிக்கு கடன்பட்டும், ஆனால் நாணயங்களாகப் பெறாமல் நோட்டுகளாகப் பெற்றுக் கொண்டமையால், வங்கிக்குக் கடன் கொடுத்தும் விளங்குகிறான். வங்கியும் ராமனும் பரஸ்பரம் கடன்காரர்களாகின்றனர். இந்த ஏற்பாட்டினால், நான் வங்கியில் போட்ட பதினாயிரம் இப்பொழுது இருபதினாயிரமாய் நடமாடுகின்றது. ராமன் வாங்கிக்கொண்டுபோன நோட்டுகள் உடனே நாணயங்களாக மாற்றப்படுவதற்கு வராமல், பலர் கைமாறிப் பழக்கத்தில் இருப்பதால், வங்கியானது கிருஷ்ணனுக்கும், கோவிந்தனுக்கும், கேசவனுக்கும் கடன் கொடுக்கின்றது. எனவே, வங்கியின் கணக்குப் புஸ்தகங்களில் கீழ்க்கண்ட விதம் காணப்படும்:-

எனக்குக் கொடுக்க வேண்டியது	10,000
வெளியிடப் பட்டிருக்கும் நோட்டுகள்	40,000
	50,000
கையிருப்பு ரொக்கம்	10,000
கடன் வர வேண்டியது	40,000
	50,000

இதிலிருந்து, வங்கியானது தன்னால் கொடுக்கப் பட்டுள்ள நோட்டுகளின் பொருட்டு உத்திரவாதமாயிருக்கின்றது. அதனிடமிருந்து கடன் வாங்கியவர்களிடமிருந்து அதற்கு வரவேண்டியதும் அவ்வளவு தொகையிருக்கின்றது. பெருக்கப் பட்டிருக்கும் நாற்பதினாயிரமும் தேசத்தில் செலாவணியிலிருப்பதினால் வியாபார விருத்தியும், பண்டஉற்பத்தியும் அந்த அளவிற்கு உண்டாகிறது. ஆகவே, வங்கிக்கும் அதன் வாடிக்கைக்காரர்களுக்கும் இடையேயுள்ள பரஸ்பரக் கடனே, இப்புதுப் பணத்தைச் சிருஷ்டித்திருக்கின்றது. இங்கிலாந்தில் நோட்டுகள் இங்கிலாந்து வங்கியால் உத்திரவாதத்துடன் வெளியிடப் படுகின்றன. இந்தியாவில் அரசாங்கமே செய்கின்றது.

மேற் சொன்ன முறையில் ஒன்று கவனிக்கற் பாலது. வங்கியால் கொடுபட வேண்டிய தொகை ஐம்பதினாயிரமிருக்க, அதற்கு ஈடாக வங்கியில் உள்ள தங்க நாணயங்கள் பதினாயிரமே யுள்ளன. வங்கியானது மேன் மேலும் நோட்டுகளைப் பழக்கத்தில் புகுத்தி வருமாயின், எதிர்பாராத ஓர் சம்பவத்தின் காரணமாக, நோட்டுகள் வைத்திருப்பவர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் நாணயங்களாக மாற்றிக் கொள்ள விரும்பினால் வங்கியின் கதி அதோகதிதான். அதனால் நோட்டுகளுக்குப் பதில் நாணயங்கள் கொடுக்க வியலாது. அந்நோட்டுகளைப் பணமென மதித்து பண்டங்களை விற்றவர்களும் வாங்கினவர்களும், காகிதத்தை வைத்துக் கொண்டு விழிக்க வேண்டி வரும். பரஸ்பரக் கடனுளித்தன்மையை ஆதாரமாகக்கொண்டு பணத்தைப் பெருக்குவது சுலபமாகத்தானிருந்தது. ஆனால் செலாவணியில் இருக்கும் நோட்டுகளின் தொகைக்கு ஏற்றவாறு தங்க, வெள்ளி நாணயங்கள் வங்கியிலிருக்க வேண்டுவது அவசியம் என்று உணர்ந்தார்களில்லை. இது காரணம் பற்றி ஏற்பட்ட பல நஷ்டங்களின் பயனாக, 1844-ம் வருஷத்தில், இங்கிலாந்து வங்கியின் நோட்டுச் செலாவணியானது பெருக

வேண்டுமானால் அப்பெருக்கத்திற்குத் தக்க தங்க ஈடு ஆதாரத்தைக்கொண்டே அதிகரிக்க வேண்டுமென்று ஓர் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இங்கிலாந்து வங்கியின் நோட்டுகளைப் பணமாக அங்கீகரித்தல் வேண்டுமென்று சட்ட பூர்வமாக அரசாங்கம் விதித்திருப்பதாலும், மேற்படி நோட்டுகளை உடனே தங்க நாணயங்களாக மாற்றிக் கொள்ளக் கூடுமென்பதாலும், பண்டங்களுக்குப் பதிலாக இந்நோட்டுகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன வென்பதாலும், இவைகளுக்குத் தனிச் சிறப்பு அமைந்திருக்கிறது. இவை ஒரு வகையில் ரொக்கம்: ஒரு வகையில் கடன் பத்திரங்கள். இஷ்டப்பட்டவுடன் தங்க நாணயங்களாக மாற்றிக்கொள்ள முடியுமென்ற வகையில் ரொக்கமாகும்: குறிப்பிட்ட தொகையைத் தருவதாகக் கொடுத்த உறுதிமொழியென்ற வகையில் கடன் பத்திரங்கள்.

சேக்குகள்

1844-ம் வருஷத்திய சட்டத்தின் படியே நடந்திருந்தால், பிற்காலத்தில் ஏற்பட்ட அபார வியாபார விருத்தியானது பாங்கியின் கஜானாக்களில் ஏராளமான தங்கத்தைக் குவித்திருக்கவேண்டும். ஆனால் வியாபாரிகள், தங்களுக்கும் வங்கிக்கும் ஏற்பட்டிருந்த பரஸ்பரக்கடன் முறையின் வசதிகளை உணர்ந்திருந்தபடியால், இச்சட்ட நிபந்தனைக் குட்படாத ஒரு 'கடன் கருவி' (Credit instrument) யை உபயோகிக்கத் தலைப்பட்டனர். தினசரிக் கொடுக்கல் வாங்கலுக்குத் தத்தமது வங்கிகளுக்கு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்குமாறு உத்திரவுப் பத்திரம் விடுக்கலாயினர். இதையே சாதாரணமாக 'செக்' (Cheque) என்று கூறுவர். அன்றியும் இந்த 'செக்', கரென்சிநோட்டுகளை விட பல விதத்தில் சௌகரியமாகவுமிருந்தது. நோட்டுகளை யார் வேண்டுமானாலும் எடுத்துச் சென்று தங்க வெள்ளி நாணயங்களாக மாற்றிக் கொள்ளக்கூடும். நோட்டுகளாக ஒருவருக்கு அனுப்ப வேண்டி வரின் அவைகளின் இலக்கங்களைக் குறித்து வைத்துக் கொள்வதுமன்றி, ரிஜிஸ்தர் செய்து அனுப்பவேண்டி யிருக்கிறது. ஆனால், செக்காக அனுப்பினால், அதன் மேல் குறுக்குக் கோடுகளிட்டு, 'செலாவணியாக மாட்டாது' (Not Negotiable) என்ற எழுத்துக்களுடன் சாதாரண தபாலில் அனுப்பலாம். அதை எவனாவது திருடினால், திருடனிடமிருந்து வாங்கியவனால் வங்கியிலிருந்து பணம் பெறமுடியாது. மேலும், செக்கின் மூலம், நாம் கொடுக்க வேண்டிய தொகையை, அணா பைசா உள்பட, வேண்டிய அளவிற்கு எழுதக்கூடும். இருப்பினும், அசௌகரியங்களும் உள. நோட்டுகளை வெள்ளி நாணயங்களாக மாற்றிக் கொள்ளக்கூடும்: அரசாங்கத்தின் உறுதி மொழியைக் கொண்டிருப்பதால் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற திண்மை உண்டு. ஆனால் ஒரு செக்கின் பண மதிப்போ, ஒரு தனி மனிதனின் அப்போதைய பண இருப்பையும், ஒரு தனி வங்கியின்கொடுக்கும் சக்தியையும் பொறுத்திருக்கிறது. ஒன்று, செக் கொடுத்தவர் கணக்கில் அவ்வளவு பணமில்லையென்றோ அல்லது அப்பெயர் கொண்டவருக்கு அந்த வங்கியில் கணக்கேயில்லையென்றோ திருப்பியனுப்பக் கூடும். மற்றொன்று செக்கில் குறிப்பிட்ட வங்கி பணம் தருவதை நிறுத்தி விட்டதென்று வெறுங்கையுடன் மீளக்கூடும். இதுகார

இந்த மூவர் யார்?

—பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை
M. A., B. L.,

தேசத்திற்காக எல்லாவித துன்பங்களையும் ஒருவன் அநுபவிக்கலாம். ஆனால் அந்தத் துன்பத்திலே இன்பங் காண்பதுதான் கஷ்டம். ஸ்ரீமான் திரிகூட சுந்தரம் பிள்ளை அந்த இன்பத்தைக் காணும் ஆற்றல் பெற்றவர். பெரிய அறிவாளி. சிறந்த எழுத்தாளர். இந்தக் கட்டுரையில் 'இந்த மூவர் யார்?' என்ற பிரச்னையை எழுப்பி அதன் மூலம் அவரோடு வாசகர்களையும் சிந்தனை உலகத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

சில தினங்கட்குமுன் ஒரு நாள் பத்திரிகை படிக்கும்பொழுது ஒருசெய்தி பார்த்தேன். வடக்கே ஒரு கணவனும் அவனுடைய மனைவியும் வறுமையின் கொடுமையால் பசி தாங்க மாட்டாமல் தண்டவாளங்களின்மேல் இரவில் படுத்துக் கொண்டார்களாம்; ரயில்வண்டி அவர்கள் மீது ஏறி மாண்டார்களாம். இது, இந்தத் தேசத்தில் தினந்தோறும் நடைபெறும் சர்வ

ணம் பற்றியே, நோட்டைப் போல இச்செக்குகள் நாட்டில் சட்டப் படிச் செலாவணி அதிகாரம் பெற முடியாதிருக்கிறது. எனக்குத் தெரியாத ஓர் மனிதன், நான் அறியாத ஓர் வங்கிக்கு எழுதிக் கொடுத்த காகிதத் துண்டை எனக்குச் சேர வேண்டிய பணத்திற்குப் பதிலாக நான் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று கட்டாயப் படுத்த முடியுமா?

இந்த வகையில் 'செக்கை', ஓர் வகைப் பணம் என்று கருதுவதும் பிழையே. எனினும், கரென்சி நோட்டுகளைப் போன்று, கேட்கும் பொழுது குறிப்பிட்ட வங்கியிலிருந்து தங்க வெள்ளி நாணயங்களாக மாற்றிக் கொள்ளக் கூடும் என்ற மட்டில் பணமாகக் கொள்ளலாம். பெரும்பாலும், யார் பேருக்கு 'செக்' எழுதப் பட்டிருக்கிறதோ, அவரால் அது மாற்றப் படுவதில்லை. தன் கணக்கிருக்கும் வங்கியில் அதைத் தன் பெயருக்கு வரவு வைக்கும்படி கொடுப்பது வழக்கம். கடைசியாக, இவ்விரண்டு வங்கிகளுக்கும் இருக்கக் கூடிய கொடுக்கல் வாங்கலில் இந்த செக்கின் தொகையும் அடியட்டுப் போகும். நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டுவது யாதெனில், செக் எழுதும் உரிமையை ஒருவருக்குக் கொடுக்கும் வங்கியானது, அச் செக்குகள் தங்களிடம் மாற்றப்படுவதற்கு வருகின்ற சமயம், தடையில்லாமல் பெறுமானமுள்ள வரை கொடுப்பதற்கு வேண்டிய வெள்ளி நாணயங்களோ, கரென்ஸிநோட்டுகளோ கொடுப்பதற்குத் தயாராயிருக்கவேண்டும். இந்நாட்களில் ஒரு பாங்கர், ஒருவனுக்கு ஒரு தொகை கடன் கொடுக்கிறார் என்பதற்கு அர்த்தம், அந்தத் தொகையளவிற்குச் செக்குகள் எழுதி விடுக்க அனுமதிக்கின்றார் என்பதாகும். செக் தன்னிடம் வந்ததும் குறிப்பிட்ட தொகையைத் தருவதாக வாக்களிக்கிறான். எனவே, தற்காலத்து வியாபாரப் பொருளாதாரத்தின் அடிப்படையான கொள்கைகளுள் ஒன்றாகிய பரஸ்பரக் கடன் படும் தன்மை இம்முறையினும் பதிந்து கிடப்பதை யறிகின்றோம். ஆகவே, செக்குகளும் நோட்டுகளைப்போலவே ரொக்கமாகவும் கடன் பத்திரங்களாகவும் இரு தன்மை யெய்தி யுள்ளதை யுணர்வது நன்று.

சாதாரணமான விஷயம். ஆனாலும் அதன் காணம் என்ன?

இது விஷயமாய் யோசிக்கலானேன். இந்த யோசனையில் வெகு நேரம் ஆழ்ந்துவிட்டேன். அப்பொழுது அந்தச் சிந்தனை சமுத்திரத்தினடியில் நான் கண்ட காட்சியை 'ஜோதி' வாசக நண்பர்கட்குச் சொல்ல விரும்புகின்றேன்.

ஒரு குடும்பத்தில் இரண்டு சகோதரர்கள். இருவர்க்கும் தாகம் எடுக்கும். தண்ணீர் வேண்டியிருக்கும் அல்லவா? அதற்காக அவர்களுடைய தந்தை அவர்கள் இருவர் உபயோகத்திற்காகத் தோட்டத்தில் ஒரு கிணறு வெட்டி வைத்திருந்தார். அந்தக் கிணற்றிலும் ஜலம் நிறைந்திருந்தது. ஜலம் எடுத்து உபயோகிப்பதற்காக ஒரு வாளியும் கயிறும் போட்டு வைத்திருந்தார். அதோடு அவர் தம் குமாரர்களுக்குக் கிணற்றிலிருந்து ஜலம் இறைக்கும் விஷயமான அறிவையும் புகட்டி யிருந்தார். அந்தச் சகோதரர்களுக்கும் அவ்விதம தண்ணீர் எடுப்பதற்கு வேண்டிய ஆற்றல் அமைந்திருந்தது. அதனால் அவர்கள் இருவரும் தண்ணீர் சம்பந்தமான சங்கடம் ஒன்றுமில்லாமல் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் ஒரு நாள் தம்பி வழக்கம் போல் தாகத்திற்குத்தண்ணீர் இறைப்பதற்காகத் தோட்டத்திற்குச் சென்றான். அங்கே கிணற்றருகில் இரண்டு மனிதர்கள் பேசிக் கொண்டு நின்றார்கள். அவர்களில் ஒருவன் அண்ணன். ஆனால் மற்றவன் யார்? அவன், இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவனுமில்லை; அக்கம்பக்கத்து வீட்டுக்காரனுமில்லை; அடுத்த தெருவில் உள்ளவனோ, அதுவுமில்லை. அயல் ஊரானாகவும் தோன்றவில்லை. வெகு தொலையிலிருந்து வந்தவன்போல் தோன்றுகிறான். அவன் பேசுவதும் விளங்கவில்லை.

ஆனால் இதைப்பற்றி தம்பி அதிகம் சிந்திப்பதற்கில்லை. அவனுக்குத் தாகம் மிக அதிகம். ஆதலால் அவன் நேரே வாளி எடுக்கச் சென்றான். வாளியைத் தொட்டவுடன் அண்ணன், 'தம்பி! அது என் வாளி; என்னைக் கேட்காமல் எடுக்கலாமா?'—என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் தம்பி திடுக்கிட்டுப்போனான். இதென்ன விந்தை! தந்தை தந்துபோன வாளி, இத்தனை காலம் இருவரும் உபயோகித்து வந்த வாளி, இப்பொழுது இவன், 'என்னுடையது, எடாதே' என்கிறானே!

ஒன்றும் தோன்றாதவனாய் கிணற்றை எட்டிப்பார்த்தான். உடனே அந்த அன்னிய மனிதன் 'அப்பா! அது என் கிணறு. அருகில் வராதே' —என்று கூறினான்.

இது விந்தையிலும் விந்தையல்லவா? அவனாவது அண்ணன்: இவன் யார்? எவனோ ஒரு அன்னியன். இவனுக்கும் இந்தக் கிணற்றிற்கும் என்ன சம்பந்தம்? இதென்ன அநீதி!

தம்பி என்ன செய்வான்? சற்று யோசித்தான். அன்னியனைப் பார்த்து 'ஐயா, இந்தக் கிணறு உம்முடையது என்கிறீரே, அது எப்படி? எங்கள் இருவர்க்குமாக எங்கள் தந்தை வெட்டியதல்லவோ? எத்தனை வருஷங்களாக இருவரும் உபயோகித்து வந்திருக்கிறோம்? என் தந்தை உமக்குக் கிரயமோ தானமோ செய்துவிடவில்லையே. தஸ்தாவேஜு உண்டானால் காட்டும், பார்ப்போம்' என்று சொன்னான்.

உடனே அந்த அன்னியன் 'அப்பா, தஸ்தாவேஜா பார்க்க விரும்பு

கிறாய், இதோபார்'—என்று தன் கையி லிருந்த பெரிய தடியைக் காட்டினான். தம்பி ஸ்தம்பித்து விட்டான். அன் னிய மனிதன் அதோடு நிற்கவில்லை. 'அப்பா, உனக்கு இன்னும் சந்தே கம் இருந்தால் உன் அண்ணனைக் கேட்டுப்பார்'—என்று கூறினான்.

அவன் இவ்விதம் சொல்லி வாய் மூடுமுன், அண்ணன், 'தம்பி! கிணறு அவருடையதுதான்; அவர் கையி லுள்ளது தடி, ஜாக்கிரதை' என்று தம் பியைப் பார்த்துச் சொன்னான்.

தம்பி பார்த்தான். என்ன சொல் வான்? 'சரி அதிருக்கட்டும். அண்ணா! வாளி உன்னுடையது என்கிறாயே, அது எப்படி?' என்று அண்ணனிடம் கேட்டான்.

'தம்பி, தந்தை வைத்துப் போன வாளிதான். ஆனாலும் இப்பொழுது அது என் வாளிதான். அவரிடம் கேட்டுப்பார்' என்று அண்ணன் பதில் உரைத்தான்.

தம்பி கேட்க வேண்டியதில்லை. அன் னிய மனிதன், தானாகவே 'அப்பா, அதில் என்ன சந்தேகம்' என்று தடி பிடித்த கையைத் தூக்கிச் சொன்னான்.

இந்தச் சமயத்தில் தம்பி யோசித் தானோ இல்லையோ, நான் யோசித் தேன். அண்ணனுக்கு அன்னியன் சாட்சி; அன்னியனுக்கு அண்ணன் சாட்சி. இதற்குஎன்னகாரணம்என்று. அண்ணனுக்கு அன்னியன் உதவி வேண்டியதுதான். தந்தை வைத்துப் போன வாளியைத் தனது என்று அநியாயமாய்க் கூறுவதால், தம்பி எதிர்த்து விடுவானோ என்று பயப் படலாம். அன்னியனிடம் தடியிருப்ப தால் அவன் உதவியை நாடலாம். அதற்காக அன்னியனுக்காகச் சாட்சி சொல்லலாம்.

ஆனால் அன்னியன், கிணறு தன்னு டையது என்று அநியாயமாகக் கூறி னாலும் கையில் தடியிருப்பதால் தம் பிக்குப் பயப்படவேண்டியதில்லையே. அப்படியிருக்க அண்ணன் உதவி நாடி யதின் காரணம் என்ன? கையில் கம்பு இருப்பது உண்மைதான். அதைக்கண்டு அண்ணனும் சரி, தம்பி யும் சரி அஞ்சுவதும் உண்மைதான்; ஆனால் அண்ணனுக்கு ஞானம் உதய மாய் விட்டால், சகோதரத்வம் புத் துயிர் பெற்றுவிட்டால் அண்ணன் தம்பியோடு சேர்ந்துவிடுவானே. அப் பொழுது தடியால் என்ன பிரயோ ஜனம்?

நான் இப்படி யோசித்துக் கொண் டிருந்தேன். ஆனால் தம்பிக்குத் தாகம் தாங்க முடியவில்லை. அண்ணனையும் அன்னியனையும் திரும்பத் திரும்பப் பார்த்தான். அவர்கள் இருவரும் 'அப்பா, உனக்கு தாகம் அதிகம். அதை நாங்கள் அறியாமல் இல்லை. தாகம் அளவு கடந்துவிட்டால் சாக வும் நேரிடலாம். அதுவும் எங்களுக் குத் தெரியும். ஆனால் உன்னைச் சாக விட எங்கட்குப் பிரியமில்லை. அப்பா, உன்னைச் சாகவிடுவதால் எங்கட்கு லாபமுமில்லை. எங்கட்கு நஷ்டந் தான். கிணறும் வாளியும் இருந்தால் போதுமோ, தம்பியும் வேண்டாமோ?' —என்று கூறினார்கள்.

இதைக் கேட்டவுடன் தம்பிக்கு தைரியம் வந்தது. சரி, தண்ணீர் இறைத்துத் தாகம் தீர்த்துக் கொள்ள லாம் என்று எண்ணினான். எண்ணி வாளியை எடுக்கப் போனான். ஆனால் அவர்கள் 'அப்பா அதற்குள் அவசரப் படாதே' என்று கத்தினார்கள்.

தம்பி தொட்ட வாளியை விட்டு விட்டான். நிமிர்ந்து பார்த்தான். அவர்கள் இருவரும் 'அப்பா, கிணறும்

வாளியும் எங்களுடையது, ஒப்புக் கொள்கிறாயா? அப்படியானால்தான் தண்ணீர் இறைக்கலாம்' என்று சொன்னார்கள்.

தாகமோ பொறுக்க முடியவில்லை. தண்ணீரோ அவசியம் தேவை. கிணறும் வாளியும் அவர்களுடையதாய் இருந்து போகட்டும். தண்ணீர் கிடைத்தால் போதும் என்று தம்பி யோசித்தான். 'ஒப்புக்கொள்கிறேன், உங்களுடையவைதான்' என்று கூறிவிட்டு வாளியை எடுத்தான்.

ஆனால் அவர்கள் அப்பொழுதும் சம்மதிக்கவில்லை. 'தம்பி, இன்னும் ஒரு விஷயம்; அவசரப்படாதே' என்றார்கள்.

'ஐயா, சொல்லவேண்டியவைகளை எல்லாம் சீக்கிரம் சொல்லுங்கள். எனக்குத் தாங்க முடியவில்லை தாகம்' என்று தம்பி சொன்னான்.

'அப்பா, கிணறும் வாளியும் எங்களுடையவை என்று ஒப்புக் கொண்டாய். நீ நல்ல யோக்கியன். நிரம்ப சந்தோஷம். நீ ஜலம் இறைத்துக் கொள்ளலாம். அதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை. கிணற்றையும் வாளியையும் வைத்து நாங்கள் பூசையா செய்யப் போகின்றோம். ஆனால் நீ ஒரு சிறு காரியம் செய்ய வேண்டுமே.'

'ஐயா, சொல்லுங்கள், செய்கிறேன்; என்ன செய்யவேண்டும், சொல்லுங்கள்'

'அப்பா, உனக்குத் தண்ணீர் வேண்டுமல்லவோ? எங்கட்கும் நீ தண்ணீர் இறைக்க வேண்டும். இறைக்கிறாயா?'

'ஐயா, இது தானா? எனக்குஒருகுடம் இறைக்கப்போகிறேன். உங்களுக்கும் ஆளுக்கு ஒரு குடம் இறைத்துத்தருகிறேன். இதுதானா பிரமாதமான காரியம்?'

'அப்பா, நீ நல்ல பையன். ஆனால் உனக்கு ஒரு குடம் ஜலம் எதற்காக? நீ முகம் கால் கழுவ வேண்டாமே. நீ ஸ்நானம் செய்ய வேண்டியதில்லையே. உனக்கு வேஷ்டி துணி வெளுக்க வேண்டியதுண்டா? அப்பா, உனக்கு ஜலத்தின் அருமை தெரியாது. உனக்கு ஜலம் குடிக்க மட்டும் போதும். அதுவும் அதிகமாகக் குடித்து விடாதே. நோய் வந்து விடும்; தொண்டையைமட்டும் நனைத்துக்கொள். ஆனால் எங்களுக்கு ஒரு குடம் போதாது. நாங்கள் அடிக்கடி முகம் கழுவ வேண்டும். மூன்று முறை ஸ்நானம். எங்கள் பங்களாக்களை தினந்தோறும் ஜலம் விட்டுச் சுத்தம் செய்வோம். முற்றத்தில் பூச்செடிகள் பார்த்தாயா? தோட்டத்தில் பழ மரங்கள் கண்டாயா? அவைகளுக்கு ஜலம் வேண்டுமல்லவோ?'

'ஐயா, என்னால் இவ்வளவு ஜலம் இறைக்க முடியுமோ? இறைக்க முடிந்தாலும் எனக்கு வேறு வேலை இல்லையா? என் தந்தை எனக்கு எத்தனையோ உயர்ந்த காரியங்கள் சொல்லியிருக்கிறார். அவற்றிற்கு வேண்டிய அறிவும் ஆற்றலும் ஆவலும் அளித்திருக்கிறாரே. அவைகளை நான் செய்யவேண்டாமோ?'

'அப்பா, அவைகளைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. தண்ணீர் இறைக்கும் வேலை ஒன்று உனக்குப் போதும். முடியாது என்று நினையாதே. எங்களுக்கு வேண்டிய ஜலத்தை இறைத்துவிடு. உன் தொண்டையையும் நனைத்துக் கொள்ளலாம். நாங்கள் சொல்வதைக் கேள். நீ எங்கள் நண்பன் அல்லவா?'

தம்பி என்ன செய்வான்? தாகம் அதிகப்பட்டுவிட்டது. நாக்குச் சுற்றுகிறது. தொண்டை வறண்டுவிட்டது. இனி ஒரு க்ஷணமும் யோசிப்

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை

—கு. பக்கிரிசாமிப் பிள்ளை
—பண்டிதர்

பெண்களின் உரிமையைப்பற்றிப் போராடி வருகின்ற இக்காலத்தில் அவர்களுக்குரிமையான கற்பு என்னும் பொருள் சம்பந்தமாக நமது மூதாட்டியாரான அவ்வைப் பிராட்டியாரின் ஆழ்ந்த கருத்துக்கள் யாவை என ஆராய்தற்குக் 'கற்பெனப்படுவது சொற் றிறம்பாமை' என்னும் குறளினுங்குறிய அழகிய கொன்றை வேய்ந்தான் செய்யுளொன்றை ஆதாரமாகக் கொண்டு நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தின் தலையில் அப் பெயரை வைத்தோம்.

'கற்பு என்று சொல்லப்படுவது எதுவோ, அது சொல்லுக்கு மாறுபட்டு நடவாமலிருப்பது' என்பதே அச்செய்யுளின் பொருளாம். ஆனால் 'கற்பு, சொல்' என்னும் இரண்டு சொற்களின் பொருளையும் அறிந்தால் தான் ஆக்கியோரின் உண்மைக்கருத்தைத் தேடிப்பிடிக்க முடியும். ஆகலால் முதலாவது 'கற்பு' என்னும் சொல்லைக் குறித்துச் சிறிது ஆராய்வோம் :—

கல் + பு = கற்பு ; இது கற்றுக் கொள் என்னும் பொருள் கொண்டு ஏவல் வினையாகத் தோன்றும் கல் என்னும் வினைப் பகுதியோடு பு என்னும் தொழிற் பெயர் விகுதியானது கூடி லகரத்தின் பின் வல்லினம்வரின் அந்த லகரம் நகரமாம் என்னும் சந்தியிலக்கண விதியின்படி கற்பு என விகுதி பெற்ற தொழிற் பெயராயிற்று. கல்வி யென்னும் சொல்லுக்கும் இதே இலக்கணந்தான் பொருத்தமாயுள்ளது. இலக்கியச் சார்பாகக் கல்விக்குப் பொருள் என்ன கூறப்பெறுகின்றதோ அதுவே கற்புக்கும் பொருளாம். கல் என்றால் தோண்டு அல்லது பறி யென்று பொருள். யார் தோண்டுவது ? எதைத் தோண்டுவது ? எதற்காகத் தோண்டுவது ? என்றெல்லாம் வினாக்களைக் கிளப்பிக் கொண்டு விடைகளைக் காணப் புகுவோமாயின், கல்வி என்னும் சொல்லை ஆண்களிடத்திலும் கற்பு என்னும்சொல்லைப் பெண்களிடத்திலும் வைத்துப் பேசுவதே பெரு வழக்கமாயிருக்கும் காரண மொன்றினாலேயே இங்குத்தோண்டுவது பெண்களென்றும், சொல் திறம்பாமை என்று சொன்னதிலிருந்து, மாறுபடாதிருப்பதற்குச் சொல்லின் உண்

பதற்கில்லை. 'ஐயா, சரி, அப்படியே செய்கிறேன்'—என்று கூறி விட்டான்.

அதோ, இறைத்துக் கொட்டிக் கொண்டே இருக்கிறான். அவன் ஜலம் கொட்டுகிறான். அவன் உடம்பு வியர்வை கொட்டுகிறது. பெரு மூச்சு வாங்குகிறான். இது தலைவிதியோ என்று ஏங்குகிறான். இவன் கஷ்டத்தை உணர்வார் யார்? 'அப்பா, போதும் நிறுத்து' என்று சொல்வார் இல்லை. இவன் இறைப்பதற்கு ஓய்வுமில்லை, ஒழிவுமில்லை. இடை இடையே தொண்டையை நனைத்துக் கொள்கிறான். அவ்வளவே மிச்சம்!

வாசக நண்பர்களே, இந்த மூவர் யார்? இங்கே நடைபெறும் இரண்டு அநியாயங்கள் எவை? இவற்றை நீக்குவதற்குரிய வழியைச் சொல்ல மாட்டீர்களா?

மையை உள்ளபடி தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா, அதற்காகச் சொல்லென்னும் சொல்லையே தோண்டுவதென்றும், சொல் என்றால் யாராவது ஒருவருடைய வாயிலிருந்து வெளிப்படுவதல்லவா, அவர் யார் என்று ஆராயுமிடத்துத் 'தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை' என்னும் தெய்வத் திருமறைக் கிணங்கத் தெய்வ சொரூபமாகிய தனது கணவனுடைய சொல்லைத் தோண்டிப் பார்த்து, அதன் உட்பொருளையறிந்து, அதற்கு மாறுபடாதிருந்து அவனோடு வேறுபடாத சுக வாழ்வு துய்க்கு நிமித்தம் தோண்டுவதென்றும் தெள்ளிதின் விளங்கும்.

இனிப் புருஷன் அல்லது கணவன் என்பதற்கும் சொல் என்பதற்கும் பொருள் காண்பதிலேதான் நம் கருத்து முழுதினையும் செலுத்தல் வேண்டும். புருஷார்த்தம் அதாவது புருஷன் பெறும் பேறு தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்காம். அவைகளே தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என முறையே அழைக்கப் படுவனவாம். அந்த நான்கும் வேறு வேறன்று. அறவழியில் பொருளீட்டி அப்பொருளால் இன்பம் துய்த்து, துக்கத்தின் விடுதலையாகிய வீட்டைப் பெற்றிருப்பதே அவற்றின் உண்மை. வீடு என்பது முதனிலைதிரிந்த தொழிற் பெயராயினும் தொழிலாகு பெயராய்த் துக்கமென்னும் பொருளைத் தந்து துக்க வீடு என்னும் ஆநந்தப் பொருளைக் குறிப்பதாம். இதனை நம் பிராட்டியாரே மற்றோரிடத்தில் "ஈதலறம் தீவினைவிட்டீட்டல் பொருளெஞ்ஞான்றுங், காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு, பட்டதே இன்பம் பரனைநினைந் திம் மூன்றும், விட்டதே பேரின்ப வீடு" என்று கூறி உறுதிப் படுத்துகின்றார். அத்தகைய புருஷார்த்தத்துக் குரியவன் எவனோ, அவனல்லவோ புருஷன்? அப்புருஷனுடைய இந்த ஆநந்த லோக சஞ்சார வாழ்க்கையில், அதாவது ஆநந்தமென்று மேற்கூறப் பெற்ற வீட்டுக்குப் போய்ச்சேரப் பிரயாணம்செய்து கொண்டிருக்கின்ற இல்வாழ்க்கை என்னும் இரட்டை மாட்டு வண்டியைத் தடையுற இழுத்துச் செல்வதற்கு வலது புறத்திலிருக்கும் அவனுடன் ஒத்த மனத்தோடு கூடி இடது புறத்திலிருந்து இழுக்கத் தக்க ஒரு பொருள் வேண்டுமல்லவா? அந்தப் பொருள்தான் பெண் என்னும் பெருமையுடையாள். இது பற்றியே தான் ஸ்ரீ குமரகுருபரப் பெரியாரும் 'மருவிய காதல் மனையாளும் தானும், இருவராய்ப் பூண்டீர்ப்பினல்லால்-ஒருவரால், இல்வாழ்க்கையென்னும் இயல்புடையவான் சகடம், செல்லாது தெற்றிற்று நின்று' என்று கூறிப் போந்தார்.

புருஷன் என்னும் சொல்லுக்குப் பொருள் விளங்கினாற்போல், சொல் என்னும் சொல்லுக்கும் பொருள் விளங்கி விடுமாயின் நாம் எடுத்துக் கொண்ட விஷயத்திலிறங்கிப் பார்க்கலாம். பொருளுடைய எழுத்தும் எழுத்துக்களும் சொல்லெனப்படும். எழுத்தேதான் பொருள் நோக்கத்தால் சொல்லாய் முடிவது. 'எழுதப் படுதலினெழுத்தெனப்படுமே' என்பது விதி. அவ்வெழுத்து, வாயிலிருந்துவரும் சொல்லாகிய சப்தத்துக்குப் பின்னிட்டதாம். எழுத்துக்குச் சொல்லென்று பேர் வந்தது என்று நுணுகி யாராயுமிடத்துச் சொல்லுக்கே எழுத்தென்று பேராயிற்றென்று விளங்கும். சப்தத்துக்குச் சொல்லென்று பேர் வந்ததாக முன்னே கண்டோம். சப்தம் எதிலிருந்து வீந்

கதோ அது இலக்ஷியமாம். அந்த இலக்ஷியத்தைத்தான் தமிழர், இலக்கியமென்று கூறுகின்றனர். இங்கே இலக்கியமே எழுத்தாக முடிவதும் அதுவே சொல்லென்பதும் நுணுகியாராய்வார்க்குப் புலனும். இது கருதியே சிவப்பிரகாசப் பெருந்தகையார் 'எழுத்தறியார் கல்விப்பெருக்கமனைத்தும், எழுத்தறிவார்க் காணினிலையாம்—எழுத்தறிவார், ஆயுங்கடவுளவிர் சடை முன் கண்டளவில், வீயுஞ்சுர நீர்மிகை' என்று தக்க உபமானத்தோடு விளக்கியருளினர். இன்னும் மண்ணுலாகியகுடத்தை மண்ணென்று சொல்வது போல், எழுத்தாலாகிய சொல்லை எழுத்தெனலும் ஒக்கும். இதனல் எழுத்தாகிய இலக்கியத்தை அறிந்தவர்களுடைய ஆராய்ச்சியில் விளங்குவது தெய்வமெனவும், அத்தெய்வவடிவே புருஷனெனவும், அப்புருஷனது இலக்கியமாகி உண்மைக் கருத்துக்கு அதாவது ஆநந்த வீட்டுக்குச் செல்லும் இல்வாழ்க்கை யென்னும் வண்டியை இழுத்துச் செல்வதிலுள்ள தனது ஒத்த கருத்துக்கு இணங்கி நடப்பதே சொற்றிறம்பாமைக்குப் பொருளெனவும் நன்கு விளங்குகின்றது.

உண்மை இவ்வாறிருக்கப் புருஷன் என்னும் பதத்துக்கு மீசை முளைத்த அடையாள மொன்றை மாத்திரம் கொண்டவனென்றும், சொல் என்னும் பதத்துக்கு அந்த மீசைக்காரன் வாயிலிருந்து என்ன வருகிறதோ அதுதானென்றும், தூல புத்தியால் சிறிதளவும் ஆராய்ச்சியில்லாத் தன்மையினின்றும் தோன்றிய பொருளையே பொருளெனக் கொண்டு வெகு காலமாக அதனை வற்புறுத்தக் 'கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்' என்பது முதலான பழமொழிகளும், புருஷன் கூப்பிட்டவுடனே கிணற்றில் நீரிறைத்துக் கொண்டிருந்த ஸ்திரீயானவள் நடுக்கிணற்றில் தோண்டி வந்துகொண்டிருந்தாலும் விட்டுவிட்டுத் தான்செய்யும் கடமையை உபேக்ஷித்துச் செல்லவேண்டு மென்பதை வலியுறுத்துவதற்கான பல கதைகளும் வழங்கிவரலாயின.

கூர்ந்து கவனித்தால் இக்காலமானது பெரும்பாலும் தோலிருக்கச் சுளை முழுங்குவோரின் காலமாயிருக்கிறது. உட் கருத்தை விட்டு வெளித்தோற்றத்தை உறுதிப் படுத்திக் கொண்டு அதையே பலரையும் நம்பச் செய்து வருவோர்களே வர வர மலிந்து வருகின்றனர். ஆனல் மற்ற தேசங்களை விட நம் இந்திய தேசமானது இது விஷயத்தில் முழு மோசமென்றே சொல்ல வேண்டும். ஆகையினலேதான் மனோராஜ்ய லக்ஷணமான பல யுக்திகளும் உண்மைகளுக்கு மாருகச் செய்யப் படுகின்றன. மேலும் தமிழ்த் தம்பதிகளின் கூட்டுறவு அதாவது திருமணங் குறித்து நம் இறையனரே திருவாய் மலர்ந்தருளியதாகச் சொல்லப் பெறுகின்ற இறையனரகப் பொருள் என்னும் தெய்வத் திரு நூலில் 'ஒத்த அன்பினராகிய ஒருத்தனும் ஒருத்தியும் தாமே தனித் தெதிர்ப்பட்டுக் காதல் கலை சிறப்பக் கொடுப்போரும் அடுப்போருமின்றித் தம்மிற் களவியல் முறையிற் கலந்து கூடிப் பின்னர் கற்பியல் முறைப்படி ஊரறிய அவ்விருவரும் திருமணஞ் செய்து கொள்ள வேண்டும்' என்று விதித்திருப்பதை யறிந்த எத்தமிழ் மகனும் அதை விட வேறு முறையைக் கற்பு முறை யென ஒப்புக் கொள்வான? அதனலன்றே திருக்குறண்மறையும் காமத்துப் பாலில் களவியல், கற்பியல் என வகுத்துக் காட்டுகின்றது. அத்

தகைய கற்பு முறையால் வந்த கணவனுக்கு வாழ்க்கைத் துணையாக நேரும் மனைவியே கற்பரசி யெனப்படுவாள். அவளு டைய கற்பானது களவிலிருந்துதான் துவங்குகின்றது. அதாவது, கற்பு மறைந்திருப்பது களவியலும் கற்பு வெளிப்பட்டிருப்பது கற்பியலுமாம். ஆகவே கற்பு என்பது கணவனைத் தேர்ந்தெடுத்தல் என்று ஏற்படுகிறது. சமஸ்கிருத பாஷையில் விவாகத்துக்கு முன் சுயம்வரம் என்றும், பிள்ளைக்கு வரனென்றும் பெயர்கள் அமைந் திருப்பது கணவனைத் தேர்ந்தெடுப் பதற்குத்தான். ஆரிய முறைப்படி வரனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு வதுவாகிய பெண்ணைத்தவிர பெண் ணைச்சார்ந்த வேறு சிலருக்கும் ஏற் பட்டிருக்கின்ற உண்மையும், தமிழ் முறைப்படி அப்பொறுப்பு பெண் ணின் தலையிலேயே முற்றிலும் சுமத் தப் பட்டிருக்கின்ற உண்மையும், உள்ளபடி கண்டு பிடிக்கப் படுமாயின் பெண்ணிடம் விவாகத்துக்கு முன் அமைந்திருக்க வேண்டிய கற்பானது சிறந்த அறிவூற்றத்துக் கேதுவான கல்வி யென்றே விளங்கும். இத்த கைய கல்வி என்னும் கற்பை மறைத் துக் காதலா லொன்றுபட்ட நங்கைக் குக் கற்பின் பொருள் தெரியாதென்று யார்தான் சொல்லக்கூடும்? கணவ னோடு ஒன்றுபடக் கலந்து சுகிக்க வேண்டுவதல்லவா வாழ்க்கை முறை? அதற்காகச் சுகமடைய வேண்டு மென்று கருதுகின்ற தன்னுடைய எண்ணத்துக்குக் கணவனுடைய எண் ணம் மாறுபட்டதல்லவென்று தனது கல்வியறிவால் கண்டுகொண்ட கற் பரசி அவனுடைய நோக்கத்திற் கிணங்கி நடப்பதைத் தவிர வேறென்ன இருக்கின்றது? அதனு லன்றோ அருளாளரான நம் தாயுமான தயாபரர் "கன்னிகை யொருத்தி சிற் றின்பம் வேம்பென்னினுங்கைக் கொ ள்வள் பக்குவத்தில், கணவனருள் பெறின் முனே சொன்னவாறென் னெனக்கருதி நகையாவளது போற், சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை தோற்றிற் சுகாரம்பமாம், சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே" என்றார். இதனாலும், எவன் புருஷனோ அவனைப் புருஷனென்று தெரிந்து கொள்ளுமுன் அவன் வார்த்தைக்கு மாறுபட்டிருந் தாலும் அவனைப் புருஷனென்று தெரி ந்து கொண்டபின் அவனுடைய பிரி யத்துக் கிலக்காக அவனுடைய நோ க்கம்போல் நடந்து கொள்வதே கற்பு நிலை என்றும், ஒரு முமுக்ஷுவானவன் தான் பெரிதென நம்பியிருக்கின்ற பொருளின் கருத்துக்கிணங்க, சொன் னபடி நடந்து சுகம் பெறுவதுபோல் எப்பொழுதும் அப்பெண் சுகவாழ் விலேயே திளைக்கின்றாளென்றும் தெளிந்து கொள்ளலாம். ஆதலால் ஸ்ரீ அவ்வைப் பிராட்டியார் பெண் களுக்கு அறிவூற்றமான உண்மைக் கல்வி அவசியமென்பதை வலியுறுத் தவே 'கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை' என்னும் நீதி மொழியைக் கூறியருளினரென்று கண்டு நம்பெண் மக்களுக்கு வேண்டிய அளவு உண் மைக் கல்வி பயிற்றி வருவோமாக.

நமது பாஷையிலே மகா புனிதமானது, மென்மையானது எந்த சொல்? அதுதான் தாய்மை. இந்தத் தெய்விக மொழியைச் சுற்றி உலகத்தின் சுக துக்கங்கள் அனைத்தும் வட்டமிடுகின்றன. தாயார், மரணத்தின் நிழ லிலே நடக்கிறாள். என்? மற்றோர் உயிரைக் கொடுக்க. காதல் மேடை மீது, அவள் தன் உயிரையே பணயமாக வைக்கிறாள்.

குழந்தைகளை வளர்ப்பதெப்படி?

—மு. சா. தாயுமானவன்

பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் களவு முதலிய குற்றங்கள் செய்துவிட்டால், அவர்களைச் சீர்திருத்துவதற்கு என்று தனியான ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. இதற்கு 'சீர்திருத்தும் பள்ளிக்கூடம்' (Reformatory School) என்று பெயர். இத்தகைய பள்ளிக்கூடங்கள், தமிழ் நாட்டில், தஞ்சாவூர், செங்கற்பட்டு முதலிய ஊர்களிலும், பர்மாவில் தயட்மியோ என்ற ஊரிலும் இருக்கின்றன.

அமெரிக்காவிலுள்ள நியுயார்க் நகரத்திலும் இந்தமாதிரியான பள்ளிக்கூடம் ஒன்று உண்டு. இந்தப் பள்ளிக்கூடத்திற்குத் தன் மகனை அனுப்பிவிடுமாறு, ஒரு சமயம், ஒரு தாயார் நியுயார்க் நகர மாஜிஸ்ட்ரேட் முன்னர் விண்ணப்பித்துக் கொண்டாள். இதைக்கேட்டு ஆச்சரியப்பட்ட மாஜிஸ்ட்ரேட் 'ஏன் அப்படி?' என்று கேட்டார். 'என் பையன் மிகவும் பொல்லாதவனாயிருக்கிறான். அவனை வீட்டிலே வைத்துக் கொண்டு என்னால் சமாளிக்க முடியவில்லை' யென்றாள் தாய். உடனே பையனை அழைத்து 'ஏன் துஷ்டத்தனம் செய்கிறாய்?' என்று மாஜிஸ்ட்ரேட் கேட்டார். அவன், 'நான் அன்பாய் வளர்த்து வரும் நாயை என் தாயார் அடித்து வருகிறாள். அதனால் அவளிடத்தில் நான் எப்படி நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள முடியும்?' என்று சொன்னான்.

பின்னர் விசாரித்ததில், அடுத்த வீட்டு நண்பர் ஒருவர், இந்தப் பையனுக்கு மூன்று மாதத்து நாய்க்குட்டி ஒன்றைக் கொடுத்ததாகவும், அதை அவன் வாங்கி வளர்த்துச் சில வித்தைகள் கற்றுக் கொடுத்திருப்பதாகவும், அது தூங்குவதற்கென்று ஒரு சிறிய வீடு கட்டியிருப்பதாகவும் தெரியவந்தன.

நாய் வந்ததின் பிறகு பையன் அதிகமாக வெளியில் அலைவதில்லையென்பதைத் தாயார் ஒத்துக் கொண்டாள்.

பையனால் நேசிக்கப்படும் நாயின் மீது அன்பு செலுத்துமாறு தாயாருக்குச் சொல்லி, மாஜிஸ்ட்ரேட் தாயையும் மகனையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.

இதன் விளைவென்ன? பையன் ஒழுங்காக நடந்துகொள்ள ஆரம்பித்தான். தாயாரிடத்தில் பரமபக்தி. தாயும் சந்தோஷமடைந்தாள்.

இவையனைத்திற்கும் காரணமென்ன? அன்பு. இந்த அன்புதான் அறிவுப் பெட்டியைத் திறப்பது; இளமையை விகாசிக்கச் செய்வது. எப்படி சூரியன், எல்லாப் பொருள்களுக்கும் உயிரை அளிக்கிறானோ, அப்படியே அன்பு, குழந்தையின் வளர்ச்சிக்கு அழகை அளிக்கிறது. அன்பினால்தான், குழந்தையின் நல்ல தன்மைகள் யாவும் வெளிக்கிளம்பிப் பிரகாசிக்கின்றன.

நல்லதையும் அழகானதையும் விரும்புகிற சுபாவம் குழந்தைகளுக்கு இயற்கையாகவே உண்டு. இதனால், வீரர்களுடைய சரித்திரம், எஜமான விசுவாசம் முதலியவை சம்பந்தமான கதைகளை ஆசையோடு கேட்கும். அப்படிப்பட்ட கதைகளையே நாம் அவைகளுக்குச் சொல்லவேண்டும். மனிதனிடத்தில் இருக்கவேண்டிய

உயர்ந்த தன்மைகள் யாவும் குழந்தைகளிடத்தில் இருக்கின்றன. அவைகளை வளர்ப்பதும் நசுக்குவதும் நமது கையிலே இருக்கிறது.

குழந்தைகளின் பிற்கால வாழ்க்கையானது, அதற்கு இளமையில் ஆசிரியராக யார் அமைகிறார்கள், தோழர்கள் யாரார் முதலியவைகளைப் பொறுத்திருக்கிறது. நல்லனவும் கெட்டனவும் தரக்கூடிய எல்லாவித சக்திகளும் குழந்தைகளிடத்தில் இருக்கின்றன. நல்ல சக்திகளை மாத்திரம் நாம் தட்டி எழுப்பி விட்டோமானால், கெட்ட சக்திகள் தாமாகவே கேட்பாரற்று அழிந்து படுகின்றன. இதனால் பாலியத்தில் எங்ஙனம் குழந்தைகளைப் பழக்க வேண்டு மென்பதைப் பெற்றோர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

குழந்தைகளை எப்பொழுதும் கடிந்து பேசவே கூடாது. குறைத்தும், பழித்தும் வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது. அவர்களுடைய பலஹீனத்தை எடுத்துச் சுட்டிச் சுட்டிக் காட்டக்கூடாது.

எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பார்த்து, "அடே முட்டாள், இப்படிச் செய்யலாமா? அடே சோம்பேறி, இப்படித் தூங்கிக் கொண்டிருக்கலாமா? ஒன்றுக்கும் உதவாதவன் நீ" என்பன போன்ற பிரயோகங்களைச் சரமாரியாக உபயோகிக்கிறார்கள். இவை அவ்வளவும் கெடுதல். இதனால் பையன் உற்சாகங் குன்றி, வாழ்க்கையிலே கொஞ்சங்கூட இன்பத்தைக் காண முடியாதவனாகி விடுகிறான்.

குழந்தைகளை எப்பொழுதும் சிறிது தூக்கி வைத்தே பேச வேண்டும். தட்டிக் கொடுத்துக் கொண்டே போக வேண்டும். ஒரு பையன் தவறாக ஒரு கணக்கைப் போட்டுக் காட்டுகிறான் என்று வைத்துக் கொள்வோம். 'ஏன் தவறு செய்தாய்?' என்று திருப்பித் திருப்பி அவனைக் கேள்வி கேட்டுப் பரிகசித்துத் திட்டுவதை விடுத்து, 'இதனால் பாதகமில்லை, இனிச் சரியாகச் செய்' என்கிற மாதிரி மேலே உற்சாகப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும்.

பிள்ளைகள், தங்களிடத்தில் நம்பிக்கை வைக்கும்படியாகப்பெற்றோர்கள் நடந்து கொள்ள வேண்டும். எப்படி ஒரு சிறந்த சிநேகிதனுடைய நம்பிக்கையைப்பெறுவதில் நாம் கவலையுள்ளவர்களாக இருக்கிறோமோ அப்படியே நமது குழந்தைகளின் நம்பிக்கையைப் பெற முயற்சிக்க வேண்டும். தங்கள் பெற்றோர்களைப்பற்றி மற்றவர்களிடத்தில் சொல்வதைச் சில குழந்தைகளிடத்தில் பார்க்கலாம். ஏன் அப்படி? குழந்தைகளிடத்தில் நம்பிக்கையைச் சம்பாதித்துக் கொள்ளப் பெற்றோர்களால் முடியாவிட்டால், அவர்களை எப்படிப் பிள்ளைகள் பின்பற்ற முடியும்? அவர்களை எங்ஙனம் முன் மாதிரியாக வைத்துத் தங்கள் வாழ்க்கையை நிர்ணயித்துக் கொள்ள முடியும்? அன்பு செலுத்தினால் அன்பு கிடைக்கிறது; மரியாதை கிடைக்கிறது. இந்த விதி எல்லாருக்கும் பொதுதானே.

குழந்தைகளின் சந்தோஷகரமான வாழ்க்கைக்கு இன்றியமையாதவை மூன்று. அவையே ஆகாரம், அன்பு, விளையாட்டு. ஆகாரத்திற்கும் அன்புக்கும் அடுத்தபடியாக, குழந்தைகளின் வளர்ச்சிக்கு முக்கிய துணை செய்வது விளையாட்டுத்தான். ஆனால் அநேகம் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை விளையாட விடுகிறார்களில்லை. அதனால் தேகம் கெட்டுவிடுமென்றும்,

படிப்பிலே புத்தி செல்லாதென்றும் தவருக நினைக்கிருர்கள். ஒரு காலத்தில், இங்கிலாந்திலுள்ள கிறிஸ்துவப் பாதிரிமார்கள், குழந்தைகளை அதிகமாக விளையாட விட்டால், அவர்களுடைய ஆன்ம வளர்ச்சிக்குப் பாதகம் உண்டாகும் என்று நினைத்தார்களாம். என்ன முட்டாள்தனமான எண்ணம்!

குழந்தைகளை விளையாட விடாத பெற்ருேர்கள், அவர்களை உண்மையில் நேசிப்பவர்களில்லை யென்றுதான் சொல்ல வேண்டும். குழந்தைகளின் உடல் வளர்ச்சியை மட்டுமல்ல, அறிவு வளர்ச்சியையும் அவர்கள் கட்டுப்படுத்தின குற்றத்திற் காளாகிருர்கள். ஆதலால், பெற்ருேர்கள், குழந்தைகள் அதிகமாக விளையாடுவதற்குச் சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டும்.

முற்காலத்தில், மேனுடுகளில், அங்கஹீனமாகவோ அல்லது வேறு குறைகளுடனே உள்ள குழந்தைகளைக் காட்டு மிருகங்களுக்கு இரையாக்கி விடுவது வழக்கமாயிருந்தது. கிறிஸ்து நாதர் தோன்றி, குழந்தைகளின் உரிமைகளுக்காகப் பெரிதும் போராடியிருக்கிருர் என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. 'குழந்தைகளை நேசிக்காதவன் கழுத்தில் கல்லைக் கட்டிச் சமுத்திரத்தில் அழுத்த வேண்டியதுதான்' என்று அவர் ஓரிடத்தில் கூறவில்லையா?

டென்மார்க், இத்தலி, ஜெர்மனி, ருஷ்யா முதலிய நாடுகளில் குழந்தைகளைப்பற்றிய விஷயத்தில் அரசாங்கத்தார் பெரிதும் கவலை செலுத்தி வருகிருர்கள். குழந்தைகளுக் கென்று அரசாங்க ஆதரவில் போஷணை ஸ்தலங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படியே, ஒவ்வொரு தேச அரசாங்கமும் குழந்தைகளின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். அவைகளைத் தேசீய பொக்கிஷமாகக் கருத வேண்டும்.

சில பெற்ருேர்கள், தங்கள் குழந்தைகளுக்கு அதிகமாக 'செல்லங்' கொடுத்து வளர்த்து வருகிருர்கள். இவர்களுடைய இந்தத் தவருன அன்பு, குழந்தைகளுக்குச் சத்துருவாக வந்து முடிகிறது. உதாரணமாக, குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போக மறுத்து நோய்வந்துவிட்டதென்று பாசாங்கு செய்தால், அது பாசாங்கு என்று அறியாமல், குழந்தையை வீட்டுக்குள்ளேயே இருத்தி வைத்து முதுகையும் தலையையும் தடவிக் கொடுத்து 'கண்ணே, முத்தே' என்று கொஞ்சிக் குலவுகிருர்கள். குழந்தை, தன் காரியம் வெற்றிபெற்றதென்று கருதி, இதே முறையை அடிக்கடி கையாள்கிறது. கடைசியில் அதன் பிற்கால வாழ்க்கை அடியோடு கெட்டுவிடுகிறது.

சில பெற்ருேர்கள், தங்கள் குழந்தைகளின் சுயநலத்தை வளர்க்கிருர்கள். 'உனக்குக் கொடுத்த தின்பண்டத்தை நீயே சாப்பிடு; வேருருவருக்கும் கொடாதே. வேண்டுமானுல் அந்த மூலையில் ஒளித்திருந்து தின்றுவிட்டு வெளியே வா' என்பன போன்ற போதனைகளைச் செய்கிருர்கள். என்ன கேவலம்!

இன்னும் சிலர், குழந்தைகள் கோழைகளாகிவிடக் காரணர்களாயிருக்கிருர்கள். 'அங்கே போகாதே; இங்கே போகாதே' என்பனபோன்ற அச்சவார்த்தைகளைப் புகட்டி, குழந்தைகளுக்கு இயற்கையாயமைந்துள்ள தைரிய சுபாவத்தை நசுக்கி விடுகிருர்கள். இதனுல் இவர்கள் பிற்காலத்தில் தன்னம்பிக்கை யற்றவர்களாய், எதற்கும் பிறருடைய உதவியைத் தேட வேண்டியவர்களாகி விடுகிருர்கள்.

அவுரங்கஜீப் சக்ரவர்த்தியின் கடிதம்

—"மௌத்கல்யன்"

மொகலாய சாம்ராஜ்ய விளக்கு, சுமார் இருநூறு வருஷ காலம் எரிந்து கொண்டிருந்தது. அதன் கடைசி சுடராக எரிந்தவன் அவுரங்கஜீப். இவன் 1658ம் வருஷம் முதல் 1707ம் வருஷம் வரை ஆண்டான். இவன் மதப் பற்று நிரம்பியவனுக இருந்தாலும், ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி வந்தான். இவன் அவ்வப்பொழுது தன் குமாரர்களுக்கும் முக்கியமான உத்தியோகஸ்தர்களுக்கும் கடிதங்கள் மூலமாக அவரவர்களுடைய கடமைகளை உணர்த்தி வந்திருக்கிறுன். ஓர் அரசன் நடந்து கொள்ள வேண்டிய முறை எப்படி, குடி ஜனங்களின் நன் மதிப்பை எப்படி சம்பாதித்துக் கொள்வது என்பன போன்ற விஷயங்களைப்பற்றி மிக அழகான பாஷையில், யாருக்கு எழுதப் படுகிறதோ அவர்களுடைய மனம் புண்படாதபடி இந்தக் கடிதங்களை இவன் எழுதியிருக்கிறுன். இவற்றை நாம் ஆராய்ச்சி செய்து பார்த்தால், அவுரங்கஜீப் விஸ்தீரண முள்ள தன்து ராஜ்யத்தின் ஒவ்வொரு பாகத்திலும் என்னென்ன நடைபெறுகின்றன வென்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டு, அவற்றின் மீது அவ்வப்பொழுது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறுன் என்று தெரிகிறது,

அவுரங்கஜீபின் மூன்ருவது குமாரனுக்கு முகம்மது ஆஜம் என்று பெயர். அவன் அன்ருடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி கீழ்க்கண்ட கடிதத்தில் அவுரங்கஜீப் குறிப்பிடுகிறுன். நீ இந்தமாதிரி நடந்து கொள்ள வேண்டு மென்று நேராகக் கட்டளையிடுவது போல் சுட்டிக்காட்டாமல், என் தகப்பனுர் (ஷா ஜஹான்) இன்னின்ன விதமாக நடந்து கொண்டார் என்று எடுத்துச் சொல்லி விட்டுக் கடிதத்தை முடித்திருக்கிறுன். இந்தக் கடிதத்தின் வாயிலாக, தாஜ் மஹால் கட்டிடத்தைக் கட்டிப் புகழ் பெற்ற ஷா ஜஹான் சக்ரவர்த்தியினுடைய தினசரி வேலைகளை நாம் ஒருவாறு தெரிந்து கொள்கிறோம்.

சிரஞ்சீவி மகனே, காலஞ்சென்ற சக்ரவர்த்தி (ஷா ஜஹான்), 'வேட்டையாடுவது சோம்பேறிகளின் தொழில்' என்று சொல்வதுண்டு.

பிற்காலத்தில், இதே குழந்தைகள், தங்களை வளர்த்த பெற்ருேர்களைச் சபிக்கின்றன.

பெற்ருேர்களே! நீங்கள் எத்தனையோ குழந்தைகளுக்குப் பெற்ருேர்களாயிருக்கலாம். ஆனுல் உங்களில் எத்தனை பேருக்கு, குழந்தைகளின் மனப்பான்மையை அறிந்து நடக்கிற சக்தி இருக்கிறதென்று கேட்கிறேன். உங்களுடைய குழந்தைகளின் சுய நல எண்ணத்தை வளர்ப்பதற்காக மற்றவர்களுடைய உரிமைகளின் மீது கல் போடாதீர்கள். உங்களுடைய உரிமையின் மீது பிறர் தாக்கினுல் எவ்வளவு கோபம் வருமோ, அப்படியே பிறர் உரிமையைக் காப்பாற்றுவதிலும் உங்கள் குழந்தைகள் கவனஞ் செலுத்தட்டும்.

குழந்தைகளின் மீது எப்பொழுதுமே குற்றங்கண்டு பிடித்துக் கொண்டிருந்தீர்களானுல், அவைகளுடைய விரோதத்தைத்தான் நீங்கள் சம்பாதித்துக் கொள்ள முடியும். ஆனுல் அதற்காக அவைகளின் மீது குருட்டுத்தனமான அன்பு செலுத்திக் கெடுத்தும் விடாதீர்கள்.

குழந்தைகளை வளர்ப்பதென்பது ஒரு தெய்விகமான காரியம். இதற்கு அதிகமான முன் யோசனையும், பொறுமையும் வேண்டும். இவ்விரண்டையும் அன்பு வழியிலேயே செலுத்துங்கள்.

ஒருவன், மத விஷயங்களைப் புறக்கணித்துவிட்டு, உலக விவகாரங்களிலேயே மூழ்கியிருப்பது பெரிதும் வெறுக்கத் தக்கது. ஏனென்றால், இந்த உலகம், மறு உலகத்திற்கு விதை நிலம் போலவன்றோ இருக்கிறது?

ஷா ஜஹான் சக்ரவர்த்தி தினந்தோறும் என்ன செய்வார் தெரியுமா? விடியற்காலை நான்கு மணிக்குச் சந்தோஷகரமாக எழுந்திருப்பார். காலைக் கடன்களை முடித்துக் கொள்வார். பின்னர் தொழுகை செய்வார். உதயமானதும், பல அறிஞர்களுடன் சேர்ந்துகொண்டு காலைத் தொழுகையைச் செய்து முடிப்பார். பிறகு, 'ஜரூகா-இ-தர்சன்' † என்ற பலகணிக்குச் சென்று, தம்மைக்காண வந்திருக்கும் பிரஜைகளுக்குக் காட்சி கொடுப்பார்.

சுமார் பத்து மணிக்கு 'திவான்-இ-ஆம்' என்ற பொதுஜன சபா மண்டபத்திற்குச் செல்வார். § இங்கே எல்லா உத்தியோகஸ்தர்களும் சக்ரவர்த்திக்குத் தலைகுனிந்து வணக்கஞ் செலுத்துவர். அரண்மனை ஊழியர்கள் சம்பந்தமாகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள், அவர்கள் செய்து வரும் வேலைகளைப்பற்றிய உண்மைகள், இன்ஸ்பெக்டர்கள், போலீஸ் உத்தியோகஸ்தர்கள், சூபர்வைஸர்கள், ஜில்லா அதிகாரிகள் முதலியோரைப்பற்றிய விஷயங்கள் அனைத்தையும் மந்திரிமார்களும், பொக்கிஷதார்களும் சக்ரவர்த்திக்குத் தெரிவிப்பார்கள். இந்த இடத்தில் சக்ரவர்த்தி, அநேகருடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்து வைப்பார். பலருக்கு உற்சாக மூட்டுவார். இந்த தர்பார் முடிந்தவுடன், அரண்மனைக் குதிரைகள், யானைகள் முதலியவற்றை மேற்பார்வை செய்வார். இதற்குள் பதினோரு மணியாகிவிடும்.

உடனே 'திவான்-இ-காஸ்' மண்டபத்திற்குச் செல்வார். இங்கே, அரசாங்கக் காரியதரிசிகள், புதிதாக நியமிக்கப்பெற்ற உத்தியோகஸ்தர்களைப்பற்றின அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள். அவற்றின் மீது சக்ரவர்த்தி உத்திரவுபிறப்பிப்பார். பின்னர் காரியதரிசிகள், ஒவ்வொருமாகாணத்திலும் நடைபெறுகிற சம்பவங்களையும் வரிசையாக எடுத்துச் சொல்வார்கள். அவ்வப்பொழுது, அந்தந்த மாகாண சம்பந்தமாகச் சக்ரவர்த்தி சொல்லும் உத்திரவுகளை முடிவான உத்திரவுகளாகக் கருதி அவற்றை ஏற்றுக்கொள்வார்கள்.* இந்த விவகா

---

† அன்றாடம், குடிஜனங்களுக்குத் தரிசனம் கொடுக்க வேண்டுமென்பது, இந்தியாவில் ஆண்டுவந்த மன்னர்களின் பரம்பரை தருமமாக இருந்து வந்திருக்கிறது. தினந்தோறும் ராஜதரிசனம் செய்துவிட்டுத் தான் ஆகாரம் எடுத்துக் கொள்வதென்ற வழக்கம் அக்காலத்தில் அநேகருக்கு இருந்தது. ஜரூகா என்றால் 'பலகணி' என்று அர்த்தம். அரண்மனைப் பலகணியிலிருந்து மன்னர்கள் காட்சி கொடுப்பார்கள். கீழே கூடியிருக்கும் ராஜபக்தி நிறைந்த ஜனங்கள், கண்டு வணங்கிச் செல்வார்கள்.

§ மொகலாய மன்னர்கள் தினந்தோறும் இரண்டுவிதமான மண்டபங்களில் தர்பார் நடத்துவது வழக்கம். ஒன்று 'திவான்-இ-ஆம்' என்பது. இதில், பொதுஜனங்கள் அனைவரும் வந்து கூடி, தங்களுடைய குறை நிறைகளை நேரே சக்ரவர்த்தியினிடத்தில் தெரிவித்துக் கொள்ளச் சௌகரியமுண்டு. அப்பொழுது அரசாங்க உத்தியோகஸ்தர்களும் ஆஜராயிருப்பார்கள். மற்றொன்று 'திவான்-இ-காஸ்' என்பது. இங்கு, பிரபுக்கள், அரசாங்க மந்திரிகள் முதலியோரைச் சக்ரவர்த்தி கண்டு, அவர்களுடன் கலந்து ராஜ காரியங்களைக் கவனிப்பார். இந்த இரண்டு மண்டபங்களை இப்பொழுதும் டில்லியில் பார்க்கலாம்.

ரங்களெல்லாம் முடிய நடுப்பகலாகி விடும்.

பிறகு, நியாயமான முறையில் சக்ர வர்த்திக் கென்று தயாரிக்கப்பட்ட உணவை உட்கொள்வார். தொழுகை நடத்துவதற்கும், ஜனங்களுக்கு நீதியை வழங்குவதற்கும் தேவையாகத் தேக பலம் இருப்பதற்கு வேண்டிய ஆகாரத்தை உட்கொள்வார். இதற்குப் பிறகு, தம்மால் ஆதரிக்கப்பட்டு வருகிற அனைவருடைய ஆகார விவகாரங்களைப்பற்றி விசாரிப்பார். அங்ஙனம் சக்ரவர்த்தியினுல் ஆதரிக்கப்பட்டு வந்தவர்கள், புலவர்கள், ஏழைகள், அநாதைகள், அங்கஹீனர்கள் முதலியோர். இவர்களில் பெரும்பாலோரை, பார்த்தவுடனேயே அடையாளந் தெரிந்து கொள்ளக்கூடிய சக்தி சக்ரவர்த்தியினிடத்தில் இருந்தது.

பின்னர் தமது படுக்கையறைக்குச் சென்று ஓய்வு கொள்வார். பகல் இரண்டு மணிக்கு அறையிலிருந்து வெளியே வந்து, கை கால் சுத்தஞ் செய்து கொண்டு, திருக்குரானைப் படிப்பார். அப்புறம், கையிலே ஜபமாலையுடன் பகல் தொழுகையை நடத்துவார்.

இது முடிந்ததும், 'அஸாத் புர்ஜ்' என்ற மண்டபத்திற்கு வருவார். அங்கே அரசாங்கத்து முக்கிய மந்திரிகளனைவரும் கூடியிருந்து, வரவு செலவு சம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும் உள்ள விஷயங்களைச் சக்ரவர்த்தியின் முன்னர் ஆஜர்படுத்தி உத்திரவுகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

பின்னர், நான்கு மணிக்கு 'திவான்-இ-ஆம்' மண்டபத்திற்குச் சக்ரவர்த்தி வருவார். இங்கே, 'ரெஜிஸ்ட்ரார்' என்ற உத்தியோகஸ்தரும், அந்தரங்கக் காரியதரிசியும் ஆஜராயிருந்து, புதிதாக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்களையும், ஜாகீர் வேண்டியிருந்தவர்களையும் சக்ரவர்த்திக்கு அறிமுகப்படுத்தி வைப்பார்கள். அப்படி அறிமுகப்படுத்தி வைக்கப் பட்டவர்களின் பரம்பரை, அவர்களுடைய திறமை முதலியவற்றைப்பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்வார். பின்னர், அவரவர்களை இன்ன இன்ன இடத்திற்கு நியமனம் செய்யுமாறும், ஜாகீர் கொடுக்குமாறும் உத்திரவு செய்வார்.

அஸ்தமனமானவுடன், 'திவான்-இ-ஆம்' மண்டபத்திலிருந்து சென்று மாலைத் தொழுகை முடித்துக் கொண்டு தம்முடைய தனி அறைக்குச் செல்வார். இங்கே, வித்துவான்கள், இசைப்புலவர்கள், யாத்திரிகர்கள் முதலிய பலரும் ஆஜராயிருப்பார்கள். பெண்கள் யாவரும் படுதாவுக்குப் பின்னுலும், ஆண்கள் முன்னுடியும் உட்கார்ந்திருப்பார்கள். பலரும், பல தேசத்து விஷயங்களைப் பற்றியும், புராதன காலத்தில் நிகழ்ந்த செயல்களைப் பற்றியும் சக்ரவர்த்திக்கு இன்ப மூட்டும் வண்ணம் தெரிவிப்பார்கள். இங்ஙனம் பாதி ராத்திரிவரையில் சக்ரவர்த்தியின் காலங் கழியும். இதுமாதிரியாகவே அவர் நீதி செலுத்திவந்தார்.

மகனே! உன்மீது நான் வைத்திருக்கும் தந்தையன்பானது, என் இருதயத்திலிருந்து உண்டானது; பேனு முனையிலிருந்தல்ல. இதனுலேயே, எது நல்லதோ, எது சிறந்ததோ அதை உனக்குத் தெரிவிக்கலானேன். என் மனதில் என்ன ஞாபகத்திற்கு வந்ததோ அதை எழுதினேன். மன்னிப்பாய்.

பிரிக்கப்பட்ட ஏடன்

—"சரித்திரக்காரன்"

இந்தியாவிலிருந்து பர்மா பிரிக்கப் பட்டுவிட்டது. அதைப் போலவே, ஏடன் என்ற துறைமுகப் பிரதேசமும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பர்மாவைப்பற்றித்தான் அதிகமான பேச்சு இருக்கிறதேயொழிய, ஏடனைப்பற்றிக் கவலை கொள்வார் அதிகம் காணோம். இதற்குக்காரணம் என்ன?

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் நூற்றுக்கணக்கான வருஷங்களாக ஒரு சம்பந்தம் இருந்து வந்திருக்கிறது. தவிர, பர்மாவில் லட்சக்கணக்கான இந்தியர்கள் வசிக்கிறார்கள். இவர்கள், பர்மாவை ஓர் அந்நிய நாடாக எப்பொழுதும் கருதியது கிடையாது. அப்படி எண்ணுவதற்கான சந்தர்ப்பங்களும் நேரவில்லை. தவிர, பர்மாவின் இயற்கையமைப்பு, சீதோஷ்ணம், நிலவளம் முதலியன பலவும் இந்தியாவை ஒத்ததாகவே இருக்கிறது. இந்தமாதிரியான காரணங்களினாலேயே, அரசியல், வியாபாரம் முதலிய எல்லா வகையிலும் அநேக வருஷங்களாக ஒன்றாகக் கிடந்த இந்தியாவையும் பர்மாவையும் வெவ்வேறாகப் பிரித்து விட்டார்கள் என்றால், அது அநேகரை திடுக்கிடத்தான் செய்கிறது.

ஆனால் ஏடன் அப்படியில்லை. அது ஒரு பெரிய தேசமுமில்லை. வியாபாரப் போக்குவரத்தோ, அல்லது மத ஒற்றுமையோ மற்ற எவ்வகையிலும் இந்தியாவுக்கும் அதற்கும் அதிகமான சம்பந்தம் இருக்கவில்லை. ஏதோ ஆள்வோருடைய சௌகரியத்திற்காக ஏடனை இந்தியாவுடன் தொடர்பு படுத்தி வைத்திருந்தார்களே தவிர, வேறு எவ்விதமான பிணைப்பும் இந்தியாவுக்கும் ஏடனுக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. இதனால் ஏடனைப்பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்வதற்குரிய அவசியமும் சந்தர்ப்பமும் இந்தியாவில் அதிகமாக ஏற்படவில்லை. ஆள்வோருடைய சௌகரியத்திற்காகத்தான் இப்பொழுது, இந்தியாவினின்று அது கத்தரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஏடன் எங்கே இருக்கிறது? இது ஏன் ஒரு முக்கிய ஸ்தலமாகக் கருதப்படுகிறது? இந்த இரண்டாவது கேள்வி ஒரு சிக்கலான கேள்வி.

சாதாரணமாகப் பம்பாயிலிருந்து லண்டனுக்குச் செல்லுகின்ற ஒவ்வொருவரும், முதலில் ஏடனைத்தான் பேட்டிகாண வேண்டும். ஏனென்றால், பம்பாயிலிருந்து புறப்படுகிற கப்பல், முதல் முதலில் ஏடனில் சென்றுதான் நங்கூரம் போடுகிறது. பம்பாயிலிருந்துஏடனுக்கு 1,665மைல் தூரமிருக்கிறது. நான்கு நாள் பிரயாணம். சில மணி நேரம் கப்பல்கள் அங்கே தங்குகின்றன. இஷ்டமிருந்தால் பிரயாணிகள் அங்கே இறங்கி ஊர்சுற்றிவிட்டு மறுபடியும் கப்பலுக்கு வந்து விடலாம்.

ஏடனை நோக்கிக் கப்பல் செல்லும் போதே, அங்கேயுள்ள உயர்ந்த செங்குத்தான கற்பாறைப் பிரதேசங்கள், பார்ப்பதற்கு ஒருவித பயங்கரத் தோற்றத்தை உண்டு பண்ணும். அங்கேயுள்ள ஜல பாகத்தில் சுறா மீன்கள் மிக அதிகம். கடலும் சிறிது கொந்தளிப்பாகவே இருக்கும்.

ஏடன் அரேபியா தீபகற்பத்திற்குத் தெற்கே பம்பாய்க்கு நேர் மேற்கே இருக்கிறது. ஆப்ரிக்கா கண்டத்

தின் வட கிழக்கு மூலையில் செங் கடலின் முடிவு இடமாக இருப்பது ஏடன்.

இப்பொழுது எந்தப் பிரதேசத்தை ஏடன் என்றுசொல்கிருர்களோ, அதே இடம் முன்னர் ஓர் எரிமலையாக இருந்தது. எத்தனையோ நூற்ருண்டுகளுக்கு முன், இந்த எரிமலை இருந்ததாகவும், பின்னர் இதன் மீது எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டன வென்றும் அறிஞர்கள் சொல்கிருர்கள். ஏடன் துறை முகப் பிரதேசம் ஐந்து மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் உள்ளது. தண்ணீருக்குள் தலையை நீட்டிக் கொண்டிருப்பது போல், இது, தீப கற்பத்தினின்று சிறிது முன்ேனக்கிச் சமுத்திரத்தில் வந்திருக்கிறது. இதனுலேயே, இதனை ஒரு சௌகரியமான துறை முகமாக அமைத்துக் கொண்டார்கள். தீப கற்பத்தையும் ஏடனையும், சுமார் ஒரு மைல் அகல முள்ள மணல் நிறைந்த பிரதேசம் ஒன்று சேர்த்து வைக்கிறது. இந்த ஏடனும் இதைச் சுற்றிச் சில பிரதேசங்களும் பிரிட்டிஷாருடைய நிருவாகத்தி லிருக்கின்றன. இவற்றின் மொத்த விஸ்தீரணம் சுமார் 80 சதுர மைல். ஏடன் துறை முகத்தின் மொத்த ஜனத்தொகை சுமார் 48,000. இவர்களில் பெரும்பாலோர் அராபியர்.

ஏடன், அநேக வருஷ காலம் துருக்கியர் ஆதீனத்தில் இருந்தது. அப்பொழுது இந்தப் பிரதேசத்தைப் பல வழிகளிலும் துருக்கியர்கள் அபிவிருத்தி செய்தார்கள். பின்னர், 1513ம் வருஷம், போர்த்து கேசியர், ஆல்புகார்க் என்பவனுடைய தலைமையில் இதனைச் சுவாதீனப்படுத்திக் கொள்ள முயன்றனர்; முடியவில்லை.

1839-ம் வருஷம் ஏடன் துறை முகத்திற் கருகாமையில், ஒரு பிரிட்டிஷ் இந்தியக் கப்பல், பாறையில் மோதுண்டு உடைந்துவிட்டது. இதிலிருந்து தப்பித்துச்சென்ற பிரயாணிகளையும் மாலுமிகளையும், அராபியர்கள் துன்புறுத்திஞர்களென்று சொல்லப்படுகிறது. இதற்குப் பரிகாரந் தேடித்தரவேண்டுமென்று பிரிட்டிஷார் கேட்டனர். பயன் ஒன்றும் உண்டாகவில்லை. கடைசியில், பம்பாயிலிருந்து தளபதி பெய்லி என்பவனுடைய தலைமையில் ஒரு பிரிட்டிஷ் படை 1839-ம் வருஷம் ஜனவரிமாதம் 19-ம் தேதி ஏடனைக் கைப்பற்றிக் கொண்டது. அது முதற் கொண்டு இது பிரிட்டிஷாருடைய சுவாதீனத்திலேயே இருந்து கொண்டு வருகிறது. இங்கே புதிய கோட்டைகளும், துறை முக வசதிகளும் பின்னர் செய்யப்பட்டிருக்கின்றன.

விக்டோரியா மகாராணி பட்டத்திற்கு வந்த பிறகு, முதன்முதலாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சேர்க்கப்பட்டது இந்த ஏடன் பிரதேசந்தான்.

1932ம்வருஷம்வரை, இந்தப்பிரதேசம் பம்பாய் மாகாண அரசாங்கத்தாருடைய நிருவாகத்தின் கீழ் இருந்தது. பின்னர்—அதாவது 1932-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து இதனை ஒரு தனி பிரதம கமிஷனர் மாகாணமாக்கி, இந்தியா அரசாங்கத்தின் நேரான நிருவாகத்தின் கீழ் வைத்தார்கள். இதற்குப்பிறகு 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து, இது, இந்தியா அரசாங்க நிருவாகத்தினின்று பிரிக்கப்பட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரான நிருவாகத்திற்குட்படுத்தப் பெற்றது. இஃது இப்பொழுது ஒரு 'க்ரௌன் காலனி' (Crown colony).

இங்கே ஜனங்களின் முக்கியமான தொழில், உப்பு விளைவிப்பது, சிகரெட் செய்வது ஆகிய இரண்டுமேயாகும்.

இப்பொழுதுள்ள ஏடன் முன்னர் எரிமலையாக இருந்ததென்று சொன்னேனல்லவா? அந்த எரிமலையின் வாயிலேயே—அதாவது நாற்புறத்திலும் குன்றுகளால் சூழப்பட்டு இடையேயுள்ள ஒரு பள்ளத்தாக்கிலேயே, ஏடன் நகரத்தின் முக்கியமான பாகம் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. இங்குப் பெரும்பாலும் அராபியர்கள் வசிக்கிறார்கள்.

ஏடனில் தண்ணீர்ப் பஞ்சம் அதிகம். இதனால் முன்னர் துருக்கியின் ஆதீனத்தில் இந்தப் பிரதேசம் இருந்தபொழுது, மழை ஜலத்தையெல்லாம் தேக்கி வைக்க ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டி வைத்தனர். அதனையே புதுப்பித்து, இதிலே சில செயற்கைக் கிணறுகளும் தோண்டி, ஜனங்களின் குடி தண்ணீருக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் இங்கேயுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் இதனை அதிகமாக உபயோகிப்பதில்லை. சமுத்திர ஜலத்தையே காய்ச்சி சுத்த ஜலமாக்கிக் குடிக்கிறார்கள்.

இனி ஏடனுடைய முக்கியத்துவத்தைக் கவனிப்போம். எப்படி ஐரோப்பாவின் மேற்குப் பாகத்திலிருந்து கீழ் நாடுகளுக்கு வருவதற்கு ஜிப்ரால்டர் துறைமுகம் நுழைவாயிலாக இருக்கிறதோ, அப்படியே கீழ்நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்குச் செல்ல ஏடன் ஒரு நுழை வாயிலாக இருக்கிறது. தவிர, ஏடனுக்கு மேற்குப் புறத்திலுள்ள எதியோப்பியாவை இத்தலி ஆக்ரமித்துக் கொண்டுவிட்ட பிறகு, ஏடனின் முக்கியத்துவம் அதிகப்பட்டிருக்கிறது. எப்படி ஜிப்ரால்டரை ஒரு கடற்படை ஸ்தலமாக அமைத்துக் கொள்ளச் சௌகரியமாக இருக்கிறதோ அப்படியே ஏடனின் இயற்கை யமைப்பும் இருக்கிறது.

ஏடனில், வியாபார நிமித்தம் சென்ற சில இந்தியர்களே வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் சிந்து மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

ஏடனுக்கு அருகாமையில் பெரிம் என்ற ஒரு சிறிய தீவு இருக்கிறது. அரேபிய கரைப் பிரதேசத்திற்கு ஒன்றரை மைல் தூரத்திலும், ஆப்ரிக்க கரைப் பிரதேசத்திற்கு ஒன்பது மைல் தொலைவிலும், மிக நெருக்கமான ஜல பாகத்தில் இந்தத் தீவு அமைந்திருக்கிறது. இதன் அகலம் சுமார் ஒன்றரை மைல்; நீளம் மூன்றரை மைல். இந்தத் தீவின் மொத்த விஸ்தீரணமே ஐந்து சதுர மைலுக்கு மேல் இல்லை. இங்கே, போக்கு வரவுக் கப்பல்கள் தங்கி, தங்களுக்கு வேண்டிய நிலக்கரியை எடுத்துக் கொள்கின்றன.

1799ம் வருஷம் பிரிட்டிஷார் இந்தத் தீவைக் கைப்பற்றிக் கொண்டனர். 1861ம் வருஷம் இங்கே முதன் முதலாக ஒரு 'லைட் ஹவுஸ்' கட்டினர். பிறகு இரண்டு 'லைட் ஹவுஸ்'கள் கட்டப்பட்டன.

இந்தத் தீவில் குடி தண்ணீர் அகப்படுவது மகா கஷ்டம். இதற்காக, இங்குள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் என்னென்னவோ முயற்சிகளை யெல்லாம் செய்து பார்த்தார்கள். ஒன்றும் முடியவில்லை. இப்பொழுது கடல் நீரைக் காய்ச்சித்தான் குடி நீருக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தத் தீவில் மொத்தம் சுமார் 1,700 பேர் தான் வசிக்கிறார்கள்.



ஏடன் துறைமுகம்



பள்ளத்தாக்கிலேயுள்ள ஏடன் நகரம்



ஏடன் துறைமுகத்தைச் சேருமுன்

கொஞ்சம் கவனியுங்கள் !

—"கணக்காயன்"

எல்லாம் ஒன்றுதானு ?

$$
\begin{array}{rcccccl}
1 & \times & 9 & + & 2 & = & 11 \\
12 & \times & 9 & + & 3 & = & 111 \\
123 & \times & 9 & + & 4 & = & 1111 \\
1234 & \times & 9 & + & 5 & = & 11111 \\
12345 & \times & 9 & + & 6 & = & 111111 \\
123456 & \times & 9 & + & 7 & = & 1111111 \\
1234567 & \times & 9 & + & 8 & = & 11111111 \\
12345678 & \times & 9 & + & 9 & = & 111111111 \\
123456789 & \times & 9 & + & 10 & = & 1111111111
\end{array}
$$

எத்தனை இரண்டுகள் ?

$$
\begin{array}{r}
123,456,789 \\
987,654,321 \\
123,456,789 \\
987,654,321 \\
2 \\
\hline
2,222,222,222
\end{array}
$$

கூட்டினுலும் கழித்தாலும் 45 தான் !

$$
\begin{array}{rrcl}
 & 123,456,789 & = & 45 \\
+ & 123,456,789 & = & 45 \\
\hline
 & 246,913,578 & = & 45 \\
\hline
 & 987,654,321 & = & 45 \\
- & 123,456,789 & = & 45 \\
\hline
 & 864,197,532 & = & 45
\end{array}
$$

வகுத்துப் பாருங்கள் ! மிச்சம் வராது.

2520—இந்த எண்ணை 1,2,3,4,5,6,7,8,9 ஆகிய எதனுல் வகுத்தாலும் மிச்சம் வராது. வகுத்துப் பாருங்கள்.

மிச்சம் வந்தே தீரும்

170,141,183,460,469,231,731,687,303,716,864,105,727

—இந்தத் தொகையை 2,3,4,5,6,7,8,9 ஆகிய எந்த எண்ணுல் வகுத்தாலும் மிச்சம் வரும். கொஞ்சம் சிரமப்பட்டுப் பார்க்கிறீர்களா ?

ஞானக்களஞ்சியம்

அன்பில்லாத இடத்திலே நிரந்தரமாக வாழ்வதைக் காட்டிலும், யமனுடைய ஆட்சியின் கீழ் அனைவரையும் நேசித்துக்கொண்டு வாழ்வேன். இகலோகத்திலுள்ளவர்களை நாம் நேசியாமலிருந்தால், நமக்குப் பரலோக வாழ்வு ஏது?

ஃ ஃ ஃ

ஆன்மதாகம் எப்படித் தீர்கிறது? நம்மிடத்திலேயுள்ள அனைத்தையும் பிறர்க்கு வழங்குவதன் மூலமாகத்தான்; பிறரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதன் மூலமாகவல்ல.

ஃ ஃ ஃ

மகனே! சாபமிட்டவரை ஆசீர்வாதம் செய்; துவேஷித்தவர்களை நேசி; உன்னைத் தூஷிக்கிறவர்களை மறந்துவிடு; மற்றவர்கள் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றால் நீ விட்டுவிடு; பிறர் லாபமடைவதாயிருந்தால் நீ நஷ்டமடை.

ஃ ஃ ஃ

குற்றத்தை மன்னிப்பது நல்லது; ஆனால் அதனை மறந்துவிடுவது அதனினும் நல்லது.

ஃ ஃ ஃ

உழைப்பை எவனொருவன் காதலியாகக் கொள்கிறானோ, அவனை எல்லாக் கடவுளர்களும் விரும்புவார்கள். உழைப்பிலே இன்பங் காண்; இல்லாவிட்டால், இன்பத்தின் ருசியே உனக்குத் தெரியாது.

ஏழைக்கு உதவுகிறவன்தான் பணக்காரன்; நோயாளிக்குச் சிகிச்சை செய்கிறவன்தான் பலசாலி.

ஃ ஃ ஃ

தேவர்கள் சபையிலே சபாநாயகனாக வீற்றிருப்பது எது? அன்பு. அஃது உயிருள்ளவர்களுக்கு மட்டும் வழி காட்டுவதில்லை. இறந்தவர்களுக்குக்கூட வழி காட்டுகிறது.

ஃ ஃ ஃ

வீட்டுக்கு வந்தவுடன் எவனொருவன் அமைதி காண்கிறானோ, அவன் அரசனாயிருந்தாலும் ஆண்டியாயிருந்தாலும் மகா பாக்கிய சாலி.

ஃ ஃ ஃ

பிறர் தொண்டு என்னும் நிலத்திலே எவ்வளவுக்கெவ்வளவு அன்பு நீர் பாய்ச்சப் பெறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நமது ஆன்மப் பயிர் செழித்தோங்கி வளர்கிறது.

ஃ ஃ ஃ

எவனொருவன் காலையில் கோபத்தோடு எழுந்திருக்கிறானோ, அவன் அன்று முழுவதும் பேயோடு உறவு கொண்டவனாகிறான்.

ஃ ஃ ஃ

கடவுளினாலே தனக்குக் கொடுக்கப்பட்ட சக்திகளையெல்லாம் எவனொருவன் மனித சமூகத்தின் நன்மைக்காக வழங்கவில்லையோ, அவன் அந்தக் கடவுளினாலேயே எளிதில் புறக்கணிக்கப்படுகிறான்.

நீ செளக்கியமாக இருக்கவேண்டுமானல், மற்றவர்களுடைய நோய் போக வேண்டுமென்று பிரார்த்தனை செய். உன் குற்றங்களுக்காகக் கடவுளிடத்தில் நீ மன்னிப்புக் கோருவாயானல், முதலில் மற்றவர்களுடைய குற்றத்தை மன்னித்துவிடு.

ஃ ஃ ஃ

இளமையிலே வறுமை வருவது ஒழுக்கத்திற்கு ஆகாரங் கொடுத்துப் பலம்பெறச் செய்வதைப்போல.

ஃ ஃ ஃ

எவனொருவன் அதிகமாகப் படிக்கிருனே, அவன், தன்முனைப்பில்லாதவனுகிருன்.

ஃ ஃ ஃ

நமது உதவியில்லாமலே இந்த உலகத்தில் அநேக காரியங்கள் நடைபெறும் என்பதை நாம் எவ்வளவு சீக்கிரத்தில் உணர்கிருேமோ, அவ்வளவு நிச்சயமாக நாம் வாழ்க்கையின் தத்துவத்தை அறிந்து கொள்ள முடியும்.

ஃ ஃ ஃ

தனிமையானது, ஒருவனுடைய மனே சக்தியை அதிகப்படுத்தவாவது செய்யும்; அல்லது மந்த புத்தியுடையவனுக வாவது ஆக்கிவிடும்.

ஃ ஃ ஃ

மனிதர்களுக்கு, அதிகமாகப் பணம் சேருகிற சமயத்தில், அவர்களுக்குப் பாரிச வாய்வு நோய் வந்து விடுகிறதைப் பார்த்திருக்கிறீர்களா!

ஃ ஃ ஃ

பெரிய புயற் காற்று அடித்த பிறகு, சாதாரணமாக அமைதிதான் உண்டாவது வழக்கம்.

ஃ ஃ ஃ

நல்ல நூல்களை முதலில் படியுங்கள். நீங்கள் எத்தனை நூல்களைப் படித்திருக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல; எந்த மாதிரியான நூல்களைப் படித்திருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியமானது.

ஃ ஃ ஃ

ஆசையில்லாமல் இருப்பது திருப்தி. ஆனல் அந்தத் திருப்தியே இன்பமாகி விடுமோ? திருப்தி யடைகிறவன் முன்னேற்ற மடைய முடியாது. ஒரு லட்சியத்தின் மீது ஆவல் கொள்வதும், அதற்காக உழைப்பதும், அதனில் ஓர் அமிசத்தையாவது அடைவதுந் தான் இன்பம்.

ஃ ஃ ஃ

வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்னல், என்னென்ன செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானித்துக் கொள். திரும்பி வந்த பிறகு, இன்று என்னென்ன செய்திருக்கிருேம் என்பதைப் பற்றிச் சிந்தனை செய். பிறர் சொல்வதை அதிகமாகக் கேள். நீயே அதிகமாகப் பேசி விடாதே. உன் குழந்தைகளுக்கு நீயே பாடஞ் சொல்லிக் கொடு. நன்றியை மறவாதே. நல்ல விஷயங்களிலேயே உன் மனதை எப்பொழுதும் செலுத்திக் கொண்டிரு.

ஃ ஃ ஃ

சங்கீதத்தை வெறுக்கிறவன் மனிதனு? அதை வெறுக்க அவனுக்கு என்ன உரிமை உண்டு? அவனல் சிருஷ்டிக்கப்பட்டதா அது? கடவுளின் நன்கொடை யல்லவோ அது? சங்கீதத்தைக் கேட்ட மாத்திரத்தில் துர்த் தேவதைகள் யாவும் பறந்தோடி விடுகின்றன.

ஃ ஃ ஃ

எந்த மனிதனுவது ரோஜா புஷ்பத்தைச் சிருஷ்டி செய்து விட முடியுமா? ஆனல் உலகத்தின் எந்தப் பாகத்திலும் ஏராளமான ரோஜா மலர்கள் பூக்கின்றன. எத்தனை பேர் அதன் அழகில் ஈடுபடுகின்றனர்?

வறுமையிலும் வாழ்வு கண்டவர்கள்

—"வருணன்"

உலகத்திலே மனிதர்களை விலைக்கு வாங்கி விடலாம். விலைக்கு என்றால் அவர்கள் உடலையா? ஆம். அது மட்டுமில்லை; அவர்களுடைய மனச் சாட்சியைக்கூட. ஆனால், மனச் சாட்சியைப் பணத்திற்கு விற்கிறவர்கள் மனிதர்களா என்பது தான் கேள்வி.

மனிதனுக்குத் தரித்திரம் நாலா பக்கங்களிலும் பிடுங்கித் தின்னலாம். யமன் அவனுடைய வீட்டு வாயிலில் இருந்துகொண்டு உள்ளே எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கலாம். நோய், பல உருவங்களெடுத்து அவனைச் சித்திரவதை செய்யலாம். உலக மெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு, ஒரேகுரலில் அவனைப் பரிகசிக்கலாம். அரசாங்கத்தின் அதிருப்திக்கு அவன் இரையாகலாம். அவன் தேகத்தை, இரும்புச் சங்கிலிகள், பல வருஷங்களாக இறுக்கிப்பிடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், அவன் மனச்சாட்சியை மட்டும் எவனும் விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. அப்படிப் பட்டவன்தான் மனிதன். கடவுள் சிருஷ்டியில் அவனுக்கு முதல் ஸ்தானம் உண்டு.

சாக்கடையிலே அவன் வாழ்வு; ஆனால் அவனுடைய ஆத்மா நிர்மலமான ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. உடலெல்லாம் ஒரே அழுக்கு; உள்ளம் பனிக்கட்டி போல் சுத்தமாயிருக்கிறது.

இந்த மாதிரியான காட்சிகளை எத்தனையோ பேருடைய வாழ்க்கையில் பார்க்கிறோம். அவர்கள், தரித்திர நாராயணனைக் கண்டு பயந்து ஓடவில்லை; அவனோடு போராடினார்கள். செல்வத்தைக் கண்டு மயங்கவில்லை; அதனைக் காலால் உதறித் தள்ளக் கூடிய புழுதி மண் போல் கருதியிருக்கிறார்கள்.

சோக்ரதன். கிரீஸ் தேசத்தில் இரண்டாயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன்னே வாழ்ந்த பெரிய ஞானி. தரித்திர வாழ்க்கை. பொல்லாத மனைவி. இல்லாளை இல்லாளும் வேண்டாளல்லவா? ஆனாலும் அவன் இளைஞர்களுக்குத் தன் மனச் சாட்சிப்படி நல்லுபதேசங்களைச் செய்து கொண்டு வந்தான். கடைசியில் அவன் மீது அரசாங்கத்தார் குற்றஞ் சாட்டி மரண தண்டனை விதித்தனர். கொஞ்சமாவது மனஞ்சலித்தானா? விஷத்தை வாங்கி அப்படியே குடித்து விட்டான். அப்பொழுது கூட, சிஷ்யர்களுக்கு நல்ல உபதேசங்களைச் செய்வதாகிய கடமையைச் செய்துகொண்டுதான் இருந்தான்.

போஷியன் என்ற ஒரு கிரேக்க சேனாதிபதி. சுத்த வீரன். தூர திருஷ்டி படைத்தவன். மஹா அலெக்ஸாந்தர் என்பவன், இவனைத் தன் கட்சிக்கு இழுத்துக் கொள்ளப் பார்த்தான். ஏராளமான செல்வத்தைக் கொடுப்பதாகச் சொன்னான். 'ஆசியா கண்டத்தில் நான்கு பெரிய நகரங்களை ஜாகீராகக் கொடுக்கிறேன்' என்றான். இந்த ஆசை வார்த்தைகளுக் கெல்லாம், போஷியன் என்ன பதில் சொன்னான் தெரியுமா? 'அலெக்ஸாந்தர் உண்மையிலேயே என்னை மதிப்பதாயிருந்தால், என்னுடைய மனச்சாட்சி என்னிடத்திலேயே இருக்கச் செய்யட்டும்' என்றான்.

ஜான்ஸன் என்ற ஆங்கிலப் புலவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவன் பரம ஏழை. வயிற்றுச் சோற்றுக்காக எத்தனையோ முறை அலைந்து திரிந்திருக்கிறான். இப்படிப் பட்ட கஷ்டமான நிலையிலுங்கூட, தன்னை அண்டியவர்களுக்கு உபகாரஞ் செய்வதில் சிறிதுகூடப் பின்வாங்க மாட்டான். கிழிந்த சட்டையைப் போட்டுக் கொண்டிருப்பான். குளிரோ நடுக்கும். தன் சட்டைப்பையில் ஏதேனும் காசுகள் வைத்திருந்தால், அவற்றை மற்றவர்களுக்குத் தாராளமாக வழங்கிவிடுவான். இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தும், பணத்துக்காக இவன் ஆசைப்பட்டதே கிடையாது. ஒரு சமயம் இவன் நோயினால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். கையிலோ ஒரு காசுகூட இல்லை. அப்பொழுது, இவனுடைய புலமையில் மதிப்பு வைத்திருந்த மூன்லாவது சார்லஸ் மன்னன், இவனுடைய உபயோகத்திற் கென்று சொற்பத் தொகையை ஒரு தூதனிடம் அனுப்பி வைத்தான். ஜான்ஸன், பணத்தைத் தூதனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு, 'நான் ஒரு குறுகிய சந்தில் வசிக்கிறேன் என்பதற்காக இந்தப் பணத்தை அரசன் அனுப்பினான்போலும்; அவனுடைய ஆத்மாதான் குறுகிய சந்திலே வசிக்கிறது என்று போய்ச் சொல்' என்று சொல்லியனுப்பினான்.

கோல்ட் ஸ்மித் என்பவன் மற்றோர் ஆங்கிலப் புலவன். வறுமையின் ஆழத்தை நன்றாகக்கண்டு அநுபவித்தவன். பெரிய கவிஞன். புல்லாங்குழல் வாசித்துக் கொண்டே ஐரோப்பா முழுவதும் காலால்நடந்து சென்று தன் வயிற்றை நிரப்பிக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தான். குடிசையிலேயும், மைதானத்திலேயும் இவன் படுத்துக் கழித்த நாட்கள் பல. நடிகனாக இருந்தான்; பெரிய மனிதர் வீட்டில் சேவகம் புரிந்தான்; வைத்தியனாக வேலை பார்த்தான்; ஆனால் தரித்திரம் மட்டும் இவனை விடவேயில்லை. பட்டினி என்பது இவனுக்குச் சர்வ சகஜம். கடைசியில், பிழைப்புக்கு வேறு வழியில்லாத நிலைமையில், புஸ்தகம் எழுதத் தொடங்கினான். மேலே கூறப்பட்ட ஜான்ஸன் என்ற புலவனும் இவனும் நெருங்கிய சிநேகிதர்கள். ஒரு சமயம், கோல்ட் ஸ்மித்திடமிருந்து, ஜான்ஸனுக்கு ஒரு சீட்டு வந்தது. 'நான் நிரம்பக் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறேன்; உடனே வந்து எனக்கு உதவி செய்' என்றது அச்சீட்டு. ஜான்ஸன் ஓடினான்; பார்த்தான். கோல்ட்ஸ்மித் எங்கே? சிறையிலே. ஏன்? வீட்டு வாடகை கொடுக்கவில்லை. அதற்காக வீட்டுக்காரி, அவனைச் சிறையிலே அடைத்து விட்டாள். கோல்ட்ஸ்மித்தின் கையிலேஒன்றுமில்லை. அவன்எழுதிவைத்திருந்த கையெழுத்துப் பிரதி ஒன்றுதான் இருந்தது. இதை ஜான்ஸன் புரட்டிப் பார்த்தான். மிக அழகான நூல் என்று பட்டது. உடனே ஒரு பிரசுரகர்த்தனிடம் அதனை எடுத்துச் சென்று கொடுத்தான். அறுபது பவுன் கிடைத்தது. அதைக்கொண்டு வீட்டுக் கடனை அடைப்பித்தான். இந்தக் கையெழுத்துப் பிரதிதான் 'வைகர் ஆப் வேக்பீல்ட்' (Vicar of Wakefield) என்ற பிரபல நூல். †

இப்படி வாழ்நாள் முழுவதும் வறுமையிலே வாழ்ந்த போதிலும்—இறக்கும்போது கூட கோல்ட்ஸ்மித் கடனாளியாகவேதான் இறந்தான்—

† இது தமிழில் 'விவேகபுரத்து வேதியன்' என்ற பெயருடன் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.--ஆசிரியர்

சில ஜப்பானியப் பழமொழிகள்

—"ஜப்பான் நண்பர்"

அநியாயமாய்ச் சம்பாதித்த பணம் தங்காது. அது அநியாயமாகவே செலவாகிவிடும்.

ஃ ஃ ஃ

ஏழ்மைத் தனம் ஒருவனை மடையனாக்குகிறது. கடன் வாங்கச் செல்லுகின்றவன் துன்பத்தை வாங்கச் செல்லுகின்றவனே யாவான்.

ஃ ஃ ஃ

எங்கு நெருப்பில்லையோ அங்குப் புகையுமில்லை.

ஃ ஃ ஃ

வதந்திகட்கெல்லாம் எழுபத்தைந்து நாட்களுக்குமேல் உயிரில்லை.

ஃ ஃ ஃ

முதலாவது சுகாதாரம்; இரண்டாவது தான் மருந்து.

ஃ ஃ ஃ

சொல்லுவது சுலபம். செய்வது கடினம்.

ஃ ஃ ஃ

பணம் பாதாளம் வரை பாயும்.

வாழ்க்கை, காற்றிலே எரியும் மெழுகுவர்த்தியைப் போன்றது.

ஃ ஃ ஃ

புது வேலைக்காரன், முதல் இருபது நாட்கள் தான் சுறு சுறுப்பாய் வேலை செய்வான்.

ஃ ஃ ஃ

காலம் அம்புபோல் பறக்கிறது.

ஃ ஃ ஃ

வேடிக்கையாய்ப் பேசுவதிலே உண்மை வெளியாகி விடுகிறது.

ஃ ஃ ஃ

பணம், மடையனையும் தலைவனாக்கி விடுகிறது.

ஃ ஃ ஃ

குருடர்கள் பாம்புகளுக்குப் பயப்படுவதில்லை.

ஃ ஃ ஃ

அன்பளிப்பைக் குறித்துக் குறை கூறாதே.

ஃ ஃ ஃ

நன்றை இன்றே செய்க.

இவனைப் பணம் மயக்கிவிடவில்லை. இவன் காலத்தில், இங்கிலாந்தில் அரசியல் கட்சிகளின் பிரசாரம் மிக அதிகமாயிருந்தது. ஸர் ராபர்ட் வால்போல் என்பவன், ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவழித்து, துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் எதிர்க் கட்சியினரைத் தாக்கிப் பிரசாரம் நடத்தி வந்தான். இந்த வேலைக்கு கோல்ட்ஸ்மித்தை உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்பது அவன் ஆவல். கோல்ட்ஸ்மித் நல்ல எழுத்தாளனல்லவா? டாக்டர் ஸ்காட் என்பவனை, கோல்ட்ஸ்மித்தினிடம் அனுப்பி, பணத்துக்கு எழுத முடியுமாவென்று கேட்டு வரச் சொன்னான். அப்பொழுது கோல்ட்ஸ்மித் பரம சங்கடமான வாழ்க்கையை நடத்திக் கொண்டுவந்தான். டாக்டர் ஸ்காட், இவனை அணுகி விஷயத்தைத் தெரிவித்ததும், 'என்னுடைய தேவைகளுக்கு வேண்டிய அளவு சம்பாதித்துக் கொள்ள எனக்குத் தெரியும். உன்னுடைய உதவி தேவையில்லை' என்று கண்டிப்பாகச் சொல்லியனுப்பிவிட்டான்.

இப்படி எத்தனையோ உதாரணங்களைச் சரித்திரத்திலிருந்து நாம் எடுத்துக் காட்டலாம். பணத்திற்காக மனச் சாட்சியை விற்கிறவர்கள் மனிதர்களாக மாட்டார்கள்.

ராஜேந்திர சோழன்

——"வழிப்போக்கன்"

ராஜேந்திர சோழனைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல், பர்மாவிலே வசிக்கிற தமிழர்களுக்கு இப்பொழுது அதிகம் இருக்கிறது. ஏனென்றால், பெகு என்ற ஊரில் இவனால் ஒரு ஜெய ஸ்தம்பம் நாட்டப்பட்டிருக்கிறதல்லவா?

தென்னிந்தியாவிலே ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர் பரம்பரையில் சோழர்களே அதிகமாக அந்நிய நாடுகள் பலவற்றிற்குப் படையெடுத்துச் சென்று வெற்றியுடன் திரும்பி வந்திருக்கின்றனர். இவர்களுடைய ஆதிக்கமானது, ஒரு காலத்தில் தென்னிந்தியா மட்டுமோடு மில்லாது, இலங்கை, மலேயா தீபகற்பம், சுமத்ரா, ஜாவா, பர்மா முதலிய பல நாடுகளிலும் பரவியிருந்தது. இவர்கள், அந்நிய நாடுகளில் படையெடுத்துச் சென்று, ஊரைச் சூறையாடிவிட்டு திரும்பி வந்து விட வில்லை. அங்கங்கே தமிழர்களின் கலைஞானத்தைப் புகுத்தினார்கள்; தமிழர் நாகரிகத்தைப் பரப்பினார்கள். இந்த நாகரிகச் சின்னங்களை இப்பொழுதும், பர்மா, மலேயா முதலிய நாடுகளில் காண்கிறோமல்லவா?

சோழ மன்னர்களில் மிகப் பிரபலமானவர்கள் இருவர். ஒருவன் ராஜ ராஜ சோழன். இவன் கி. பி. 984 முதல் 1013 வரை ஆட்சி புரிந்தான். மகா மேதாவி. அரசியல் சீர்திருத்தங்கள் பல செய்தான். இவன் பல வகைச் சேனைகளை உடைத்தாயிருந்தான். தவிர, இவன் காலத்தில் நிலங்கள் அளவை செய்யப்பட்டு (சர்வே) வரி விதிக்கப்பட்டன. இதனால் இவனுக்கு 'உலகளந்தான்' என்ற பெயருமுண்டு.

இவனுடைய மகன்தான் ராஜேந்திர சோழன். இவன் கி. பி. 1013ம் வருஷம் முதல் 1044ம் வருஷம் வரை ஆண்டதாகத் தெரிகிறது. இவனுக்கு, கங்கை கொண்ட சோழன், முடி கொண்ட சோழன், நிகரிலிச் சோழன், உத்தம சோழன் முதலிய பல பெயர்கள் உண்டு. இவன் பல நாடுகளை ஜெயித்ததாக இவனுடைய மெய்க் கீர்த்தி கூறுகிறது.

இவனுக்குப் பண்டித சோழன் என்ற ஒரு பெயரும் உண்டு. இதனால் இவன் சிறந்த புலவனாயிருக்க வேண்டுமென்றும், அதனுடன் புலவர்களையும் இவன் ஆதரித்திருக்க வேண்டுமென்றும் தெரிகின்றது. இவன் கங்கை கொண்ட சோழபுரம என்ற ஒரு புதிய பட்டணத்தை நிர்மாணம் செய்து அதைத் தன் ராஜதானியாக்கிக் கொண்டான். தவிர, ஒரு பெரிய ஏரியை வெட்டி, அதன் மூலமாகப் பல கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்தான். இந்த ஏரியின் ஒரு கரையின் நீளம் பதினாறு மைல் என்றால் இதன் விஸ்தீரணத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

இவன் கொண்ட நாடுகளை இவனுடைய சாஸனத்து மெய்க்கீர்த்தி நன்கு விளக்குகிறது. அது வருமாறு:—

"திருமன்னிவளர இருநிலமடந்தை [யும்
போர்ச்சயப்பாவையும் சீர்த்தனிச் [செல்வியுந்
தன்பெருந் தேவியராகி இன்புற
நெடுதியலூழியுள் இடைதுறைநாடும்
தொடர்வனவேலிப் படர்வனவாசியும்
சுள்ளிச்சூழ்மதில் கொள்ளிப்பாக்கை [யும்
நண்ணருமுரண் மண்ணைக்கடக்கமும்

பொருகடலீழத் தரசர்த முடியும்
ஆங்கவர்தேவியர் ஓங்கெழில்முடியும்
முன்னவர்பக்கல் தென்னவர் வைத்த
சுந்தரமுடியும் இந்திரனாரமும்
தெண்டிரைஈழ மண்டலமுழுவதும்
எறிபடைக்கேரளன் முறைமையிற்
[சூடும்
குலதனமாகிய பலர்புகழ்முடியும்
செங்கதிர்மாலையும் சங்கதிர்வேலைத்
தொல்பெருங்காவல் பல்பழந்தீவும்
செருவிற்சினவி இருபத்தொருகால்
அரசர்களைக்கட்ட பரசுராமன்
மேவருஞ்சாந்திமத் தீவரண்கருதி
இருத்தியசெம்பொற் திருத்தகுமுடி
[யும்
பயங்கொடுபழிமிக முயங்கியில்முது
[கிட்
டொளித்தசயசிங்கன் அளப்பரும் புக
[ழொடும்
பீடியல் இரட்ட பாடி ஏழரை
இலக்கமும்நவநிதிக்குலப்பெருமலையும்
விக்கிரமவீரர் சக்கரக் கோட்டமும்
முதிர்படவல்லை மதுரை மண்டலமும்
காமிடைவள....நாமணைக்கோணையும்
வெஞ்சினவீரர் பஞ்சப்பள்ளியும்
பாசடை பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி ஆதிநகரவையில்
சந்திரன் றொல்குலத் திந்திரரதனை
விலை அமர்க்களத்துக் கிளையொடும்
[பிடித்துப்
பலதனத்தொடு நிறை குலதனக்
[குவையும்
கிட்டருஞ்செறிமிளை ஒட்ட விஷயமும்
பூசுரர்சேர்நற் கோச லைநாடும்
தன்மபாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்டபுத்தியும்
இரனசூரனை முரணு கத்தாக்கித்
திக்கணைக்கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந்தோடத்
தங்காதசாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்கு வொட்டல் மஹி
[பாலனை
வெஞ்சமர்வளாகத் தஞ்சுவித்தருளி
யொண்டிறல்யானையும் பெண்டிர் பண்
[டாரமும்
நித்தில நெடுங்கட லுத்திரலாடமும்
வெறி மலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்
[கையும்
அலை கடல் நடுவுட் பலகலஞ் செலு
[த்திச்
சங்கிராம விசையோத் துங்கவர்ம
னாகிய கடாரத்தரசனை வாகையம்
பொரு கடல் கும்பக் கரியோடுமகப்
[படுத்
துரிமையில் பிறக்கிய பருநிதிப் பிறக்
[கமும்
ஆர்த்த வகனகர்ப் போர்த் தொழில்
[வாசலில்
விச்சாதிரத் தோரணமும் மொய்த்
[தொளிர்
புனை மணிப்புதவமும் கனமணிக்கதவ
[மும்
நிறை சீர் விசையமும் துறை நீர்ப்
[பண்ணையும்
வன் மலையூரெயிற் றொன் மலையூரும்
ஆழ்கடலகழ்சூழ்மாயிருடிங்கமும்
கலங்காவல் வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமும்
காவலம்புரிசை மேவுலிங்கமும்
விளைப்பந்தூருடை வளைப் பந்தூரும்
கலைத்தக் கோர் புகழ் தலைத்தக் கோ
[லமும்
திதமாவல் வினை மதமாலிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரிதேச
[மும்
தேனக்கவார் பொழில் மானக்கவார
[மும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடார
[மும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோ
[ப்பரி கேசரி வன்மரான
உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ
[தேவர்க்கு யாண்டு”

இதுவன்றோ ராஜபக்தி!

—"தேவ தேவன்"

மகாராணு சங்கன். இவனுடைய பெயர், சுமார் ஐந்நூறு வருஷ வயதாகி விட்டாலும், இன்னும் ராஜ புத்திரர்களுடைய அன்றாட சம்பாஷணையிலே கலந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும் எத்தனையோ நூற்றாண்டுகள் வரை இவன், மானிட சமூகத்தின் ஞாபகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கப் போகிறானல்லவா?

எப்படி மகாராணு பிரதாபசிங்கனை, தியாக மூர்த்தியாகவும், தேச பக்தனாகவும் ராஜபுத்திரர்கள் போற்றுகிறார்களோ, அப்படியே மகாராணு சங்கனையும் வீர புருஷனாக வழிபட்டு வருகிறார்கள். தனது அருமையான தாய் நாடு—செழுமையான மீவார் தேசம்—உயிரோடு இருக்க வேண்டுமென்பதற்காக, இவன் எத்தனை முறை, தன் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருந்திருக்கிறான். சுத்த வீரனல்லவா? மானம் பெரிதெனக் கருதினான். உயிரைத் துரும்பாக மதித்தான். தன் சகோதரனோடு போராடி, ஒரு கண்ணை இழந்தான்; மாற்றரசன் ஒருவனோடு யுத்தம் செய்து ஒரு கை போய்விட்டது; குண்டொன்று விர்ரென்று வந்து இவன் காலில் விழுந்து முடவனாக்கிவிட்டது. இவை தவிர அவ்வப்பொழுது இவன் செய்த யுத்தங்களினால், இவன் தேகத்தில் மொத்தம் எண்பது காயங்கள் ஏற்பட்டன. ஆனால் உயிர் போகும் வரையில் நிமிர்ந்தே நடந்தான்; எவருக்கும் தலைகுனிய மாட்டான். இவன் தேகம் எந்த இடத்தில் தகனமாயதோ, அந்த இடத்தில்

இதில் கூறப்பட்ட கடாரம் என்பதுதான் பர்மாவென்றும், அக்காலத்தில் இங்கே ஆண்டு கொண்டிருந்த அரசன் பெயர் சங்கிராம விசைய துங்க வர்மனென்றும் புலவர்கள் கூறுகிறார்கள். கடாரம் என்ற இந்தச் சொல்லானது, பர்மாவைக் குறிக்கவில்லை யென்றும், மலேயா தீபகற்பத்திலுள்ள 'கெட்டா' என்ற ஊரைத்தான் குறிக்கிறதென்றும் ஒரு சிலர் கூறுகின்றனர். ஆனால் இதனைச் சரித்திராசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ராஜ ராஜ சோழனும், ராஜேந்திர சோழனும், இவர்களுக்குப் பின்னடி வந்த குலோத்துங்க சோழன் முதலானவர்களும், தமிழர்களின் கௌரவத்தைக் காப்பாற்றி வந்தார்கள். வெளி நாடுகளிலிருந்து வந்த புலவர்களை ஆதரித்தார்கள். உதாரணமாக ராஜேந்திர சோழன் கௌட தேசத்திலிருந்து பல பிராமண பண்டிதர்களை வரவழைத்து அவர்களுக்குப் போதிய ஆதரவு காட்டியிருக்கிறான். இவனுடைய காலத்தில், தமிழ் நாட்டு ஜனங்கள், சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடந்தார்கள். தெய்வ பக்தி நிறைந்தவர்களாயிருந்தார்கள். செல்வர்கள், தங்கள் செல்வத்தை ஏழைகளுக்கு உதவுவதிலும், கோயில்கள் கட்டிவைப்பதிலும் உபயோகப் படுத்தினார்கள்.

இப்படி எல்லா வகையிலும் ஒரு காலத்தில் செழுமையுற்றிருந்த தமிழ் நாடு, இப்பொழுது, எப்படியிருக்கிறது? அந்தோ! தமிழ் நாடே! உன்னுடைய ஞாபகச் சின்னங்களுக்குக் கூடவா ஆபத்து?

ஒரு ஞாபகச் சின்னங் கட்டிவைத்திருக்கிறார்கள். இந்தச் சின்னம், மௌனமாக இருந்து கொண்டு, இவனுடைய வாழ்க்கையை நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் ராஜ புத்திரர்கள், இவனுடைய வீரப் பிரதாபத்தைப் பாட்டோடு கலந்து, தங்கள் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்த்து வருகிறார்கள். இதனால் இவனுடைய வீரமும் வளர்ந்து கொண்டு வருகிறது.

இவன் இறக்கிறபோது, இவன் மனைவி கர்ப்பம். மொத்தம் இவனுக்கு ஏழு பிள்ளைகள்.

இவனுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தவன் ரத்ன சிங். இவன்ராணா சங்கனுடைய மூன்றாவது மகன். இவன் ஐந்து வருஷ காலமே ஆண்டு, மரித்தான். இவனுக்குப் பிறகு இவனுடைய சகோதரன்—அதாவது ராணா சங்கனுடைய நான்காவது பிள்ளை—விக்ரமஜித் சிங் என்பவன் சிங்காதனம் ஏறினான். தகப்பனாருடைய வீரமோ, அல்லது தமையனுடைய நல்ல குணங்களோ ஒன்றும் இவனிடத்தில் இல்லை. தகப்பனாருடன் சேர்ந்து போராடிய சேனாதிபதிகளை யெல்லாம் இழிவாக நடத்தினான். எவருக்கும் மரியாதை காட்டவில்லை. ராஜ்ய நிருவாகத்தில் கவனஞ் செலுத்தாமல், கேளிக்கைகளில் காலங்கழித்தான். இதனால் மீவார் தேசத்தில் எங்குங் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதிகாரிகள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஜனங்கள் அவதியுற்றார்கள்.

எந்த நாட்டிலே, ஜனங்களுக்கும் அரசனுக்கும் ஒற்றுமை யில்லையோ, அந்த நாட்டின் மீது சத்துருக்கள் கண் வைப்பது சகஜந்தானே. குஜராத் தேசத்துச் சுல்தானாகிய பகதூர் ஷா என்பவன், மீவார் மீது படையெடுத்தான். விக்ரமஜித்சிங் எதிர்த்து நின்றான். ஆயிரக் கணக்கான பேர் யுத்தகளத்தில் உயிர் துறந்தார்கள். மீவாரின் தலை நகரமாகிய சித்தூர், பஹதூர்ஷா வசம் அகப்பட்டு விடும் போலிருந்தது. அவர்களின் கையிலே அகப்பட்டு மானத்தை இழக்கக் கூடாதென்று கருதி, பதின்மூன்றாயிரம் ராஜ பத்தினிகள் நெருப்புக்கு இரையானார்கள். மகாராணா சங்கனுடைய மனைவி—கர்ணவதி தேவி—தன் கைக் குழந்தையாகிய உதய சிங்கனை, ஒரு சிற்றரசனுடைய பாதுகாவலில் ஒப்புவித்து விட்டு, மேற்படி பதின்மூன்றாயிரம் ஸ்திரீகளுக்குத் தலைவியாய், தீக் குழியிலே இறங்கி விட்டாள்.

சித்தூர் நகரம், சுமார் பதினைந்து நாட்கள்வரை பஹதூர்ஷா வசம் இருந்தது. இதற்குள் மொகலாய சக்ரவர்த்தியாகிய ஹுமாயூன், கர்ணவதி தேவியின் வேண்டுகோளுக்கு இணங்கி, மீவார் தேசத்தை பஹதூர்ஷாவின் கையினின்று மீட்கப் படை திரட்டிக் கொண்டு வந்தான். மொகலாய சேனையைக் கண்டு, பஹதூர்ஷா ஓடிவிட்டான்.

பழையபடி விக்ரமஜித் சிங், யுத்தகளத்தில் உயிர் துறந்த வீரர்கள் போக, மற்றவர்களுக்குத் தலைவனாய் சித்தூர் நகரத்திற்குள் நுழைந்தான். ஹுமாயூன் தயவினால் தனக்கு மறுபடியும் ராஜ்யம் கிடைத்ததே யென்பதைப் பற்றி இவன் சிறிது கூடச் சிந்திக்கவில்லை. தன் வாழ்க்கையில் திருந்தவு மில்லை. பழையபடி அக்கிரமங்களான காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான். துன்பம் ஒருவனுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கும் என்று சொல்வதுண்டு. ஆனால், விக்ரம ஜித் சிங், இந்தப் பழமொழிக்குப் புறம்பானவனாகவே நடந்து கொண்டான். ஒரு சமயம், தர்பார் நடந்து கொண்

டிருந்தது. ஆஸ்தானிகர் பலரும் அமர்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்து, விக்ரமஜித் சிங், கேவல வார்த்தைகளால் பேசினுன். இஃது எல்லா ஆஸ்தானிகர்களுக்கும் பிடிக்க வில்லை. இப்படி ஒருவர்க் கொருவர் பேச்சு முற்றியது. கடைசியில், கர்ம சந்திரன்என்றஓர்ஆஸ்தானிகனை விக்ரமஜித் சிங், கையோங்கி அடித்து விட்டான். இந்தக் கர்ம சந்திரன், மகாராணு சங்கனுடைய உயிர்த் துணைவனுயிருந்தவன். எஜமான விசுவாசி. இவன் இங்ஙனம் கேவலமாகத் தாக்கப்பட்டதைக் கண்டு, மற்ற சர்தார்களுக்கு ஆத்திரம் பொங்கியது. ஒரு முகமாக எழுந்தார்கள். அப்படி எழுந்திருக்கும்போது, விக்ரமஜித் சிங்கனை எப்படியாவது சிம்மாசனத்தினின்று இறக்கி விடுவது என்று உறுதி செய்து கொண்டார்கள். நேரே, வன வீரன் என்பவனிடம் சென்ருர்கள். இந்த வனவீரன், காலஞ்சென்ற மகாராணு சங்கனுடைய சகோதரன் பிருத்வி ராஜனுடைய மகன். இவனைச் சிம்மாசனத்தில் ஏற்றுவிப்பதாகச் சொன்னுர்கள். வனவீரனும் ஒத்துக் கொண்டான்.

சர்தார்கள் மனம் வைத்தால் ஆகாத காரியம் உண்டோ? விக்ரமஜித் சிங், சிம்மாசனத்தினின்று இறக்கப்பட்டான்; சிறையானுன். வன வீரன் கையில் செங்கோலைக்கொடுத்தார்கள். சர்தார்களுடைய எண்ணம் என்னவென்ருல், உதய சிங், அதாவது மகாராணு சங்கனுடைய கடைசி மகன்-கர்ணுவதி தேவியின் புதல்வன்-உதய சிங் வயது அடைகிற வரையில் வன வீரன் அரச காரியங்களைக் கவனித்துக் கொள்ளட்டும் என்பதுதான். ஆனுல் வன வீரன் அப்படி நினைக்க வில்லை. தானே நிரந்தரமாகச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட வேண்டுமென்று ஆசை கொண்டான். இந்த எண்ணத்தை முடிப்பதற்குத் தடையாயிருப்பது யார்? உதய சிங்கனல்லவா? அவனைக் கொன்று விடத்தீர்மானித்தான். முதலாவது தடை விக்ரமஜித் சிங். அவனுடைய சிறைக்குச் சென்று அவனைக் கொன்று விட்டான்.

உதய சிங்கன் பச்சிளங் குழந்தை. ஆறு வயதாகிறது. தாயு மில்லை. தந்தையு மில்லை. ஒரு தாதியின் போஷணையில் இருந்து வருகிறுன். அந்தத் தாதி யார்? பன்னு. ஒரு ராஜபத்னி; ராஜபக்தி நிறைந்தவள். உதயசிங்கனைக் கண்ணுங் கருத்துமாகப் பரிபாலித்துவந்தாள். அவள் விதவை. ஒரே ஒரு மகன் மட்டும் உண்டு. சந்தனன் என்பது அவன் பெயர். உதயனுடன் அவனையும் ஒன்ருகச் சேர்த்து வளர்த்து வந்தாள் பன்னு. இருவரும் ராம லட்சுமணர்களைப்போல், எப்பொழுதும் இணைபிரியாமலிருந்தார்கள்.

ஒரு நாள் இரவு நேரம். அரண்மனை முழுவதும் ஒரே குழப்பம். சேவகர்கள், வன வீரனின் மூர்க்கத்தைக் கண்டு நடுங்கினுர்கள். தாதிமார்கள், மூலைக்கொருத்தராய் ஒளிந்து கொண்டார்கள். குழந்தை உதய சிங், அப்பொழுதுதான், பாலுஞ் சோறுமாகச் சாப்பிட்டு விட்டு தூங்கிக்கொண்டிருக்கிறுன் பஞ்சணை மெத்தையிலே. அவனைப் படுக்க வைத்துவிட்டு, சந்தனனையும் தூங்க வைத்தாள் பன்னு. இதற்குள் அரண்மனையின் ஆரவாரம் கேட்டது. என்னவென்று வெளியே வந்து பார்த்தாள். இளவரசனுன உதய சிங்கன் உண்ட பிறகு எச்சிற் பாத்திரங்களை அப்புறப் படுத்துவதற்காக ஒரு சேவகன் வந்தான். இவன் நாவிதன். உதய சிங்கனுடைய பரம

பக்தன் ; பன்னுவினிடத்தில் தேவதா விசுவாசமுடையவன்.

இறைக்க இறைக்க ஓடி வந்தான் நாவிதன்.

'அம்மா, என்ன சொல்வேன்? புதிய அரசனுகிய வன வீரன், சிறையிலேயிருந்த விக்ரமஜித் சிங்கனைக் கொலை செய்து விட்டான். இப்பொழுது இளவரசன் உதய சிங்கனையும், தன் வாளுக்கு இரையாக்கிவிட்டுப்போக வருகிருன்.'

'அப்படியா? உதயனைக் காப்பதெப்படி?'

'அதுதான் தெரியவில்லை' யென்று அழத்தொடங்கி விட்டான் கபடமற்ற சேவகன்.

'அழாதே. ஆண் மகனல்லவா நீ? உதயனைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையாவது உனக்கு இருக்கிறதா?' என்ருள் பன்னு.

'தெரியவில்லையே. வன வீரனுடைய தயவுக்குத்தான் உதயனை விட்டுவிடவேண்டும்'.

'அவன் கடின சித்தமுள்ளவனுயிற்றே' என்று கண் கலங்கி நின்ருள் பன்னு. ஒன்றும் தோன்றவில்லை. 'சித்தூர் ராஜவம்சம் இதனேடு அழிய வேண்டியதுதானு? மகாராணு சங்கனுடைய இந்த ஒரு கொடியை எவ்வளவோ கஷ்டப்பட்டுக் காப்பாற்றிக் கொண்டு வந்தேனே! கடவுளே! உனக்குக் கண்ணில்லையா? என் உயிரைக் கொடுக்கிறேன்; என் மகனுடைய உயிரையும் வேண்டுமானுல் பலி வாங்கிக்கொள். என் இளவரசனை, மீவாரின் வருங்கால மன்னனை எப்படியாவது காப்பாற்று' என்று தனக்குத்தானே பேசத் தொடங்கினுள். இதற்குள் அரண்மனையில் ஏற்பட்ட கூச்சல் சமீபித்துவிட்டது. சிறிது நேரம் மௌனமாக நின்ருள் பன்னு. திடீரென்று ஆவேசம் பூண்டவள்போல் நிமிர்ந்து நின்ருள். உறுத்துப்பார்த்தாள் சேவகனை. நடுக்கங் கொண்ட சேவகன், கைகட்டி வாய்பொத்தி நின்ருன்.

'சகோதரா! நீ கொண்டு வந்திருக்கும் கூடையில், தூங்கிக்கொண்டிருக்கும் உதயனை அசையாமல் வைக்கிறேன். மேலே சில வாழை இலைகளைப் போட்டு மூடிவிடுகிறேன். மிக ஜாக்கிரதையாகக் கோட்டைக்கு வெளியே எடுத்துக் கொண்டுபோய் விடு. பேரி நதிக்கருகாமையிலுள்ள மயானத்தில் எனக்காகக் காத்துக் கொண்டிரு. நான் வந்துவிடுகிறேன்.'

'அப்படியானுல் வன வீரனுக்கு என்ன பதில் சொல்வாய்?'

'அவன் கண்ணில் மண்ணைப் போட்டு விடுகிறேன்!'

'எப்படி?'

'உதயனுக்குப் பதிலாக, வேறு குழந்தையை அந்த இடத்தில் தூங்க வைத்து விடுகிறேன்'.

'எந்தக் குழந்தையை?'

'சகோதரா! வனவீரனுடைய இருதயத்தைக் காட்டிலும் என் இருதயம் மகா கடினமானது.'

'ராட்சஸி! யாரை உதயனுக்குப் பதிலாகக் கட்டிலில் கிடத்தப் போகிருய்?'

'இவனைத்தான், சந்தனனை. என் வயிற்றிலே பிறந்த என் மகனை.'

சேவகன், இந்தப் பேச்சைக் கேட்டுக் கிடு கிடுத்துப்போய் விட்டான். 'இதுவன்ருே ராஜ பக்தி' என்ற சொற்கள் அவனை யறியாமலே வாயினின்று வெளிவந்தன. 'அம்மா! தாங்கள் ஸ்வர்க்கத்தில் வசிக்க வேண்டியவர்கள். ராட்சதர்கள் நிறைந்த இந்த

அரண்மனைப் புதரிலே எப்படி வந்தீர்கள்? என்று சொல்லிக் கொண்டே காலில் விழுந்து நமஸ்கரித்தான்.

பன்னு, கூடையிலே உதயனை எடுத்து வைத்தாள். இரண்டொரு துணிகளையும் கூடவைத்தாள். மேலே சில இலைகளை மூடினாள். சேவகன் தலை மீது வைத்தாள். 'ஜாக்கிரதையாகப் போ' என்கிற பாவனையில் கதவுப்பக்கம் கையை நீட்டினாள். சேவகன், பயபக்தியோடு அரண்மனையை விட்டு வெளியேறி விட்டான்.

உடனே, பன்னு, தன் மகன் சந்தனனை, உதயன் படுத்திருந்த இடத்தில் கிடத்தினாள்.

'தூங்கிக் கொண்டிருக்கிறான். தகப்பனை இழந்த அபாக்கியசாலி. கண்ணே! இதுதான் உன் கடைசி நித்திரை. முகத்திலே என்ன புன்சிரிப்பு! அரசனுக்காக உயிரைக் கொடுக்கப் போகிறோமே யென்ற சந்தோஷமா? உனக்கு நிச்சயம் வீர ஸ்வர்க்கம் கிடைக்கும். ஆனால் புத்திரனைக்கொன்ற பாபியான எனக்கு ரௌரவ நகரம், கதவைத் திறந்து கொண்டு காத்துக் கொண்டு நிற்கிறது. இளவரசன் படுத்த கட்டிலில் நீ இதுவரை படுத்து கிடையாது. கொஞ்ச நேரம் வரை விழித்துக் கொள்ளாதே. வனவீரன் விரைவில் வந்துவிடுவான்' என்றெல்லாம் என்னென்னமோ பேசிக்கொண்டிருந்தாள் பன்னு. குழந்தையின் முகத்தைத் துணியால் மூடினாள். மறுபடியும் திறந்து பார்த்தாள். முத்தம் கொடுக்க, வாயை அருகே கொண்டு போனாள். எழுந்து விட்டால் என்ன செய்வதென்று பின் வாங்கினாள்.

வந்து விட்டான் வனவீரன். கையிலே உருவிய கத்தி: அதில் ரத்தக் கறை. அவன் முகத்திலே கருணையற்ற கண்கள். பன்னுவின் இருப்பிடத்திற்கு வேகமாக வந்தான்.

'பன்னு?'

'யார்? வன வீரனா? கையிலே கத்தி! அதில் ரத்தக் கறை! என்ன அர்த்தம் இவைகளுக்கெல்லாம்?'

'உதயன் எங்கே?'

வன வீரன் காலிலே விழுந்தாள் பன்னு. 'வன வீரா! நீயல்லவோ உதயனைக் காப்பாற்றவேண்டும்? மற்றவரைக்காட்டிலும் உனக்கல்லவோ அவன் விஷயத்தில் அதிகமான தயை இருக்க வேண்டும்? க்ஷத்திரிய தருமத்தைக்கூட மறந்துவிடலாமா?'

'உதயன் என் சத்துரு. அவனைக் கொல்வது க்ஷத்திரிய தருமமல்லவோ?'

'க்ஷத்திரிய தருமமா?........ இதோ பார், உதயன்; உன் சத்துரு' என்று கலங்காத சித்தத்துடன் கையை நீட்டினாள் கட்டிலின் பக்கம்.

அருகே சென்றான் வனவீரன். உதயன் என்று நினைத்து, சந்தனனை இரண்டு துண்டாக்கி விட்டான்.

தன் கண்ணாலேயே தன் மகன் இரண்டு துண்டாக்கப் பட்டதைக் கண்டாள் பன்னு தேவி. சிறிது நேரம் பிரமித்து நின்றாள். தாய் அல்லவா? ஆனால் ராஜபக்தி, அவள் உள்ளத்திலே எழுந்திருந்த துக்கப்பிரவாகத்தைத் தடுத்து நின்றது. அரசிளங் குமரனைக் காப்பாற்றினோமே யென்று கொஞ்சம் திருப்தி கொண்டாள்.

இரவோடு இரவாக, பேரி ஆற்றங்கரையோரத்தில் உள்ள சுடுகாட்டை நோக்கி நடந்தாள் பிள்ளையைப்பறி கொடுத்த தேவி.

அங்கே, நாவிதன், உதயனோடு பேசிக்கொண்டிருப்பதைப்பார்த்தாள். 'குழந்தாய்! பிழைத்து விட்டாயா?' என்றுசொல்லி ஆனந்தக்கண்ணீரோடு துக்கக்கண்ணீரையும் கலந்து கொட்டினாள்.

இப்படியும் நடக்குமா?

ஐரோப்பா கண்டத்தின் மத்தியில் யூகோஸ்லோவியா என்றொரு நாடு இருக்கிறது. இந்த நாட்டுப் பார்லிமெண்டில் ஒரு புதிய மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்க உத்திரவுகளையோ, அல்லது நகர சபை அதிகாரிகள் விடுக்கும் உத்திரவுகளையோ எழுத்து மூலமாகவோ, வாயினாலோ புறக்கணித்தால் சிறைச்சாலைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். போலீஸ் உத்தியோகஸ்தர்களைப் பரிகசிக்கும் பாவனையாக யாரேனும் சிரித்தால் அவர்களுக்கும் தண்டனைதான்.

ஃ ஃ ஃ

கிரீஸ் தேசத்தில் ஒரு புதிய சிறைச்சாலை கட்டப் போகிறார்கள். இதற்கு 'கடன்காரர்கள் ஜெயில்' என்று பெயர். அரசாங்கத்தினிடமிருந்து கடன் வாங்கி, அதனைத் திருப்பிக் கொடாதவர்கள் இதில் அடைக்கப் படுவார்கள். இந்த ஜெயிலை இரண்டு பாகமாக வகுத்து, ஒன்றில் கடன் கொடாதவர்களையும், மற்றொன்றில் கடன் கொடுத்துவிட்டு, ஆனால் கோர்ட் செலவைக் கொடாதவர்களையும் அடைத்து வைப்பார்களாம்.

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் மொத்தம் 49 மாகாணங்கள் இருக்கின்றன வல்லவா? இவற்றில் ஒன்பது மாகாணங்களில், ஆண் பிள்ளைகள் 14 வயதிலும் பெண்பிள்ளைகள் 12 வயதிலும் விவாகம் செய்து கொள்ளலாமென்று சட்டம் இருக்கிறது. மற்ற 40 மாகாணங்களில் ஆண்கள் 16 வயதிலும் பெண்கள் 14 வயதிலும் விவாகம் செய்து கொள்ளலாம். கன்னி மேயோ நாட்டில் கூட பாலிய விவாக வழக்கம் இருக்கிறதே!

உலகத்தில் ஒரு நிமிஷத்திற்கு 68 பேர் வீதமும், ஒரு நாளைக்கு 97,920 பேர் வீதமும், ஒரு வருஷத்திற்கு 35,740,800 வீதமும் இறந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். வாழ்வாவது மாயம்; மண்ணாவது திண்ணம்.

ஃ ஃ ஃ

வடமேற்கு ரெயில்வே கம்பெனியார், ஞாயிற்றுக் கிழமை தோறும், 'விடுமுறை வண்டி' யென்று ரெயில் வண்டிகள் விடத் தொடங்கி யிருக்கின்றனர். இதற்குக் கட்டணம் ஒரு மைலுக்கு ஒரு தம்படி. உலகத்திலேயே இதுதான் மிக மலிவான கட்டணமாம். ஞாயிற்றுக் கிழமை அனைவருக்கும் ஓய்வு அல்லவா? அப்பொழுது சொற்பச் செலவில் இந்த வண்டிகளில் சென்று வரலாம்.

ஃ ஃ ஃ

இங்கிலாந்தில் சமீபத்தில் வில்லியம் பூட்ஸ் என்பவர் இறந்து போனார். இவருக்குப் பூனைப் பயித்தியம் அதிகம். எனவே, 32 லட்சம் ரூபாய் பெறுமான தமது ஆஸ்தியனைத்தையும் தெருவிலே திரியும் பூனைகளின் போஷணைக்காக உயில் எழுதி வைத்துப் போயிருக்கிறார்.

ஃ ஃ ஃ

. யுத்தம் ஏன் ஏற்படுகிறது? மனித சமூகத்தின் மூளையில் ஏதோ கோளாறு இருக்க வேண்டுமென்று சில வைத்திய நிபுணர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இதற்காக, உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள வைத்தியர்கள், யுத்தத்தின் காரணங்களை நான்கு கூறுகப் பிரித்து அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று, பிரிட்டிஷ் வைத்திய சங்கத்திற்கு, ஒரு சில வைத்திய நியுணர்கள் ஆலோசனை சொல்லி யிருக்கிறார்கள்.

நான்கு பிரிவுகள் என்னென்ன? (1) ஒரு மனிதனுடைய கர்வம், பேராசை இவைகளைத் திருப்தி செய்வதற்காக யுத்தம் தொடுத்தல்; (2) ஒரு ராஜ வமிசத்திற்கும் மற்றொரு ராஜ வமிசத்திற்கும் ஏற்பட்டிருக்கிற பரம்பரை யுத்தம்; (3) நாடு பெருக்க வேண்டுமென்ற ஆசையுடன் தொடுக்கப் படுகிற யுத்தம்; (4) வியாபார அபிவிருத்திக்காகத் தொடங்கப்படுகிற யுத்தம்.

ஃ ஃ ஃ

ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே இப்பொழுது அதிகமான மனஸ்தாபம் ஏற்பட்டு வருவதற்கு மத்திய தரைக் கடல் ஒரு முக்கிய காரணமாயிருக்கிறதல்லவா? இதனை அப்படியே மண்போட்டு நிரப்பி விட்டு, செழுமையான நிலப்பிரதேசமாகச் செய்து விடலாமென்றும், அப்பொழுது இது ஒரு தனி கண்டமாகி விடலா மென்றும், அதற்கு ‘அட்லாண்ட் ரோபா’ என்ற பெயர் வைக்கலாமென்றும் ஹெர்மான் சோர்பெல் என்ற ஒரு ஜெர்மானிய விஞ்ஞான சாஸ்திரி திட்டம் போட்டிருக்கிறார். இந்தத் திட்டம் பூரணமாக நிறைவேற 250 வருஷகாலம் பிடிக்குமாம்.

ஃ ஃ ஃ

சமீபத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரிப் பதவியிலிருந்து விலகிக் கொண்ட லார்ட் பால்ட்வினுக்கு முடக்கு வாத நோய் ஏற்பட்டிருக்கிறது. இவருக்கு இப்பொழுது வயது 70.

ஃ ஃ ஃ

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சுகாதாரத்திற்காக மட்டும் ஒவ்வொரு வருஷமும் 140,000 பவுன் செலவழிக்கிறார்கள்.

எதியோப்பியாவிலுள்ள விவாக மாகாத கன்னிகைகளையும் விதவைகளையும் பலவந்தப் படுத்தி விபசாரத் தொழில் செய்யுமாறு இத்தாலிய அதிகாரிகள் வற்புறுத்துகிறார்களென்று மாஜி மன்னர் ஹெயிலி செலாஸி உலகத்திலுள்ள கிறிஸ்தவப் பாதிரி மார்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

1935-36 வருஷத்தில் இங்கிலாந்து தபாலாபீஸ்களால் 40,250 லட்சம் கடிதங்களும், 27,250 லட்சம் பார்சல்களும், 1,410 லட்சம் பத்திரிகைகளும் பட்டுவாடா செய்யப்பட்டன.

ஃ ஃ ஃ

டிரங்கு டெலிபோன்களின் உபயோகம் இப்பொழுது அதிகப் பட்டுக் கொண்டு வருகிறது. 31-7-36 முடிய ஒரு வருஷத்தில் 26,200 தடவை டெலிபோன்கள் உபயோகப் படுத்தப் பெற்றன. ஆனால் 31-7-37 முடிய ஒரு வருஷத்தில் 29,999 தடவை உபயோகமா யிருக்கின்றன.

ஃ ஃ ஃ

காலஞ் சென்ற விக்டோரியா மகாராணிக்கு ஹிந்துஸ்தானி பாஷை தெரியுமென்று அனைவரும் கருதி வந்தனர். ஆனால் உண்மையில், அவருக்கு ‘என் கைக்குட்டையை எடு’ என்ற ஒரு ஹிந்துஸ்தானி வாக்கியந் தான் தெரியுமென்று ‘டெயிலி டெலிகிராப்’ பத்திரிகையில் ஒருவர் எழுதுகிறார். இந்தியர்கள் யாராவது தம்மைப் பார்க்க வந்தால், அந்தச் சமயம் தமது கைக்குட்டையைக் கை நழுவ விட்டு விட்டு ஹிந்துஸ்தானி பாஷையில் அதை எடுக்கச் சொல்வாராம்.



அறிவுத்துறை

சிறிய கல் மூழ்குவதேன்? பெரிய கப்பல் மிதப்பதேன்?

—— "விஞ்ஞான போதகர்"

ஒரு பாத்திரத்தில் நிறையத் தண்ணீரை வைத்துக் கொண்டு லேசான சிறியதோர் மரத்துண்டைத் தண்ணீரின்மீது கிடத்தினால் அது மிதக்கும். அதே சமயத்தில் சிறிது நீர் ததும்பி வெளியேறும். அவ்வாறு வெளியேறும் தண்ணீரைப் பிடித்து நிறுத்துப்பார்த்தால் அதன் நிறுவை, மிதக்கும் மரத்துண்டின் நிறுவையை ஒத்திருக்கும். ஆகவே, எப்பொருளாவது தண்ணீரில் மிதக்குமானால், அப்பொருளின் கனம், அஃது ஒதுக்கிவிடும் தண்ணீரின் கனத்தை ஒத்திருக்குமென்பது இதனால் அறியக் கிடக்கிறது.

மற்றோர் உண்மையும் உணரவேண்டி யிருக்கிறது. அதாவது, மிதக்கும் பொருளின் கீழ் நோக்கித் தள்ளும் சக்தி (அதன் கனம்) மேல் நோக்கித் தள்ளும் தண்ணீரின் சக்தி (ஒதுக்கப்படும் நீரின் கனம்) யை விடக் குறைவானதாகவே யிருக்கும். பொருளின் கனத்தால் ஏற்பட்ட கீழ் அமிழ்த்தும் சக்தி அதிகமானால் அப்பொருள் மூழ்க ஏற்படும்.

ஆகவே ஒரு பொருள் மிதக்க வேண்டுமானால் அதன் சிறியதொருபாகம் தண்ணீரில் அமிழ்ந்து அதனால் ஒதுக்கப்படும் தண்ணீரின்

கனம், அப்பொருளின் முழு கனத்திற்குச் சமானமாகிறது. இதனால் அந்தப்பொருள் உருவத்தில் அகலமாகவும் பெரிதாகவுமிருந்து கனத்தில் குறைவாயிருத்தல் வேண்டும்.

திருஷ்டாந்தமாக ஒரு மெழுகுத் துண்டை நீரில் விட்டால் அது மிதக்கும். அதே சுற்றளவுள்ள ஒரு கல்லை நீரில் விட்டால் அது மூழ்கி விடும். காரணம், மெழுகும் கல்லும் ஒரே சுற்றளவாயிருந்தாலும் மெழுகின் கனம் கல்லைவிட மிகவும் குறைந்ததாயிருப்பதால் அது மிதக்க ஏற்படுகிறது. இப்பொழுது ஒரு பெரிய மெழுகுத் துண்டையும், ஒரு சிறிய கல் துண்டையும் தண்ணீரில் கிடத்தினால் கல் துண்டு சிறியதானாலும் அது மூழ்கிவிடுகிறது. ஆனால் மெழுகு மிதக்கிறது. கல் சிறியதானாலும் அது ஒதுக்கும் நீரின் கனம், கல்லின் கனத்தைவிடச்சிறிதாகி விடவே தண்ணீர், கல்லைத் தாங்க முடியாமல் கல் கீழே செல்லுகிறது. ஆனால் மெழுகு பெரிய உருவமா யிருந்தாலும் அதன் சிறிய பாகத்தால் ஒதுக்கப்படும் நீரின் கனம், மெழுகின் முழுக் கனத்திற்குச்சமானமாகிவிடுவதால் தண்ணீர் மெழுகை வெகுஇலகுவில் தாங்கிக் கொள்கிறது.

இப்பொழுது ஒரு பெரிய கண்ணாடிக் கூட்டையும் ஒரு சிறிய கண்ணாடிக் குண்டையும் நீரில் விட்டால் கண்ணாடிக் குண்டு வெகு சிறியதாயிருந்தாலும் அஃது ஒதுக்கும் நீரின் கனம் குண்டின் கனத்தை விட வெகு சொற்பமாவதால் குண்டைத் தாங்க முடிவதில்லை. ஆனால் கூடு வெகு பெரிதாயிருந்தாலும் அதன் உட்பாகம் அடர்த்தியாயில்லாது கூடாயிருப்பதால் அதன் அளவுக்குத் தகுந்த கனம் இல்லாது அது ஒதுக்கும் நீரின் கனம் பதின் மடங்கு அதிகமாகி கூடு இலேசாக மிதக்க ஏற்படுகிறது.

பொதுவாக எப்பொருளாவது முழுப் பாகமும் அடர்த்தியாகவிருந்து வெகு உறுதியாகவும் கெட்டியாகவுமிருந்தால் அது நீரில் மூழ்கி விடும். அவ்வாறின்றி உட்பாகம் கூடாகவாவது அல்லது வஸ்துவின் அடர்த்தி நெருக்கமாகவாவது இராமல் இலேசாயிருக்குமானல் அப்பொருள் தண்ணீரில் மிதக்க ஏற்படுகிறது. ஆகவே மிதப்பதும், மூழ்குவதும் பொருளின் அடர்த்தியையும் உறுதியையும் பொறுத்திருக்கிறதேயன்றி உருவத்தைப் பொறுத்தில்லை என்பதே இதன் கருத்து. இதனையே மற்ருெரு விதமாகக் கூற வேண்டுமானல்:

(1) ஒரே அளவுடன் கூடிய தண்ணீரையும், ஒரு பொருளையும் எடுத்துக் கொண்டால் அப்பொருளின் கனம் தண்ணீரைவிட லேசாயிருந்தால் அப்பொருள் எப்பொருளாயிருந்தாலும் மிதக்கும். திருஷ்டாந்தமாக மரத் துண்டு, மெழுகு, முதலியன. அப்படிக்கின்றி தண்ணீரை விட கனமானபொருள் யாவும் மூழ்கி விடும். திருஷ்டாந்தமாக இரும்பு, கல், கண்ணாடிக் குண்டு முதலியன.

(2) தண்ணீரைவிட கனமான வஸ்துக்கள் தண்ணீரில் மிதக்க வேண்டுமானல் அவ்வஸ்துக்களின் உட்பாகம் கூடாக விருக்க வேண்டும். இப்படி இருந்தால்தான் அதே சுற்றளவையுடைய தண்ணீரின் கனம் அதிகமாயிருப்பதால் அப்பொருள் மிதக்கும். திருஷ்டாந்தமாக கண்ணாடிக் கூடு, ரப்பர் பந்து, மெல்லிய இரும்புத் தகட்டுக் கூடு முதலியன.

இப்பொழுது கப்பல் இரும்புத் தகட்டினல் செய்யப் பட்டு பெரிதாகத் தோன்றினலும், அதன் உட்பாகம் கூடா யிருந்து உருவத்திற்குத் தகுந்த கனமில்லாது, நாம் மேலே

குறிப்பிட்ட கண்ணாடிக் கூட்டைப் போன்று மிதக்கிறது. பொதுவாக கப்பலின் அடிப்பாகம் விரிவாக இருப்பதோடு அப்பாகத்தில் பாரத்தையும் அதிகரித்து வைப்பார்கள். அவ்வாறு அடிப்பாகம் மணல், மரம் முதலிய சாமான்களால் கனப்படுத்தினால் தான் கப்பல் காற்றால் இலேசாக ஆட ஏற்படாது. முக்கியமாகக் காற்றுக் காலங்களில் கப்பலின் அடியில் அதிகச் சாமான் ஏற்றிச் செல்லுவார்கள். சுத்த ஜலத்தில் கப்பல் சிறிது கீழே அமிழும்; ஆனால் உப்பு ஜலத்தில் மேலே கொஞ்சம் மிதக்கும். ஏனெனில் சுத்த ஜலம் உப்பு ஜலத்தைவிட கனத்தில் குறைந்தது. ஆகவே கப்பல் சுத்த ஜலத்தில் செல்லும் போது, அது அதிக நீரை ஒதுக்கி மிதக்க ஏற்படுகிறது. உப்பு நீரில் செல்லும்போது குறைந்த நீரை ஒதுக்கி மிதக்கிறது.

ஆகவே நீரின் கனம் சுத்த ஜலத்தைவிட அதிகமாயிருந்தால் வஸ்துக்கள் இலேசாக மிதக்க ஏற்படுகிறது. 'மெற்குரி' (Mercury) என்று சொல்லப்படும் ரசத்தின் கனம் தண்ணீரை விட சுமார் 14-மடங்கு அதிகமாவதால் அதில் கெட்டியான இரும்பு கூட லேசாக மிதக்கிறது. அதே இரும்பு, தண்ணீரில் வெகு சீக்கிரத்தில் மூழ்கிவிடும்.

நீரில் பனிக் கட்டி மிதப்பதேன்?

சமுத்திரத்தின் குளிர்ந்த பாகங்களில் பெரும் பனிக்கட்டிகள் மிதந்து கொண்டிருப்பதை மாலுமிகள் காண்பார்கள். நாம் சென்ற மாதத்து 'ஜோதி'யில் குறிப்பிட்டவாறு பனிக்கட்டியானது தண்ணீரின் திடபதார்த்தம். தண்ணீர் திடபதார்த்தமானால் மற்ற வஸ்துக்களைப்போல வல்லாமல் உருவத்தில் பெரிதாகி விடுகிறது. ஆதலால் அதன் உருவத்திற்குத் தகுந்த கனம் இல்லாது போய் விடுகிறது. ஒரே நிறையுள்ள நீரையும், பனிக்கட்டியையும் பார்த்தால் பனிக்கட்டி உருவத்தில் அதிகப்படவிருக்கும்.

இஃது, ஒரு வீசைப் பஞ்சும், ஒரு வீசைப் பருத்திக்காயும் போலாகிறது. இரண்டும் ஒரே தன்மையும், கனமுமானாலும் உருவத்தில் பஞ்சு அதிகப் பெரிதாகி நிற்குமல்லவா? அதேபோல் பனிக்கட்டி ஜல பதார்த்தத்திலிருந்து திடபதார்த்த நிலையடையவும் தண்ணீரைவிட லேசாகி நீரில் மிதக்க ஏற்படுகிறது.



பனிக்கட்டியின் கனம், நீரைவிட வெகு சிறிது. குறைவாகையால்— நீரின் கனம் 10 ஆனால் பனிக்கட்டியின் கனம் சுமார் 9 ஆகும்—படத்தில் காட்டியவாறு பனிக்கட்டியின் பெரும் பாகம் ஜலத்தில் அமிழ்ந்து மிதக்கும். ஆகவே பனிக்கட்டிகள் நிறைந்த பாகங்களில் செல்லும் கப்பல் வெகு ஜாக்கிரதையாகச் செல்லவேண்டும். பார்வைக்கு ஒரு சிறிய பனிக்கட்டித் துண்டு மிதப்பது போலிருந்தாலும் அதைப் போல எத்தனையோ பங்கு அதிகமாக நீரில் அமிழ்ந்திருக்கும்.

நீர் மூழ்கிக் கப்பல் இஷ்டம் போல் மிதப்பதேன்? மூழ்குவதேன்?

நீர் மூழ்கிக் கப்பல் நீர் ஒழுக்கு ஏற்படா வண்ணம் கட்டப்பட்டிருக்

கும். இக் கப்பலின் இயந்திரங்கள் எஞ்ஜினையால் ஓட்டப்படுகின்றன. இக்கப்பலின் பக்கத் தோற்றத்தைப் படத்தில் காணலாம். அதின் முன்



பின் பாகங்கள் முழுவதும், வலது இடது பக்கங்களில் சிறிய பாகங்களும் வேண்டும்போது தண்ணீர் நிரப்பிக் கொள்ளக்கூடிய காலியான இடங்கள். இப்பாகங்களில் தண்ணீர் நிரம்பா விட்டால் கப்பல் சாதாரணமாகத் தண்ணீர் மீது (சமுத்திரத்தின் மீது) மிதக்கக்கூடிய அளவுடன் கட்டப் பட்டிருக்கும். கப்பல் நீரில் மூழ்க வேண்டுமானல் நாலா பக்கங்களிலுமுள்ள காலியான இடங்களில் சிறிய கதவுகள் போன்ற அமைப்புகள் திறக்கப்படுகின்றன. அவ்வாறு திறக்கப் படவும் சமுத்திர நீர் உள்ளே பாய்ந்தோடுகிறது. கப்பல் எவ்வளவு தூரம் கீழே மூழ்க வேண்டுமோ அவ்வளவுக்களவுடன்கூடிய நீர்உள்ளே அனுமதிக்கப்படுகிறது. இதனல் கப்பல் கனம் அதிகரித்து கீழே மூழ்க ஏற்படுகிறது. மேலே வர வேண்டுமானல் நிரப்பப் பட்டிருக்கும் தண்ணீர், இயந்திரத்தினுல் வெளியேற்றப்படுகிறது. இதனுல் கனங்குறைந்து முன் போல் மேலே மிதக்க ஏதுவாகிறது.

நீர் மூழ்கிக்கப்பல் தண்ணீருக்குள்ளிருந்து பகைவரைப் பார்க்கும் வகை யாது?

நீர் மூழ்கிக்கப்பல் படத்தில், அதன் மேற்பாகத்தில் இரண்டு ஸ்தம்பங்கள் இருப்பதைப் பார்க்கலாம். அவைகளில் ஒன்றே கப்பலின் 'கண்' ஆகிறது. இந்த ஸ்தம்பம் மேலிருந்து உள் பாகம் வரை செல்லுகிறது. அதின் உள்ளமைப்பைக் கீழே யுள்ள படத்தில் காணலாம்.



(1) இஃது ஒரு சாதாரணக் கண்ணாடி மூடி; (2) இது ஓர் முக்கோணக் கண்ணாடி; (3—7) இவைகள் பலவித பருமனுள்ள 'லென்ஸ்' என்ற கண்ணாடிகள்; (8) இது மற்றொரு முக்கோணக் கண்ணாடி; (9) இதுவும் ஓர் 'லென்ஸ்' கண்ணாடி.

இப்பொழுது, ஓர் உருவத்தின் வெளிச்சம் 1வது கண்ணாடி மூடியின் வழியாக முக்கோணக் கண்ணாடியில் உட் சென்றவுடன் படத்தில் காட்டியவாறு கீழ் நோக்கி அனுப்பப்படுகிறது. இவ்வெளிச்சம் 3-4 கண்ணாடிகளால் ஒன்று சேர்க்கப்பட்டு 5-ம் கண்ணாடியால் நேர் முகமாக அனுப்பப்படுகிறது. ஆகவே 3-5 இக்கண்ணாடிகள், முதலாவது தூர திருஷ்டிக் கண்ணாடிகளாக அமைந்திருக்கின்றன.

பின்பு அதே போன்ற அமைப்புடன் கூடிய 6-7 கண்ணாடிகள் மறுபடியும் வெளிச்சத்தை நன்றாக ஒன்று சேர்த்து 8-வது முக்கோணக் கண்ணாடிக்குள் செலுத்தவே வெளிச்சம் படத்தில் காட்டி யிருப்பதுபோல் நேர் முகமாகச் செல்ல விடாமல் மறு பக்கமாக வளைக்கப்படுகிறது. கடைசியாக 9-வது கண்ணாடியால் உருவம் மிகத் தெளிவாக உணர்த்தப்படுகிறது. ஆகவே 9-வது கண்ணாடிக் கருகில் நின்று கொண்டு பார்த்தால் 1வது கண்ணாடி மூடியின் மார்க்கமாகத் தோன்றும் உருவம் நன்கு புலனாகும். எத்திசையில் பார்க்க வேண்டுமானாலும் அத்திசையில் ஸ்தம்பத்தைக் கீழிருந்து கொண்டே திருப்பிக் கொண்டு பார்க்க முடியும். படத்தில் புள்ளிகளிட்ட கோடுகள் வெளிச்சத்தைச் சேர்த்து விரித்துப் பார்வைக்குக் கொண்டு சேர்க்கப்படும் விதத்தைக் காட்டுகின்றன. சில சமயம் விரோதிக் கப்பல் சமீபத்திலும் தூரத்திலும் இருக்க ஏற்படும்போது அதன் தூரத்திற்குத் தகுந்தவாறு உருவங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள 7-ம் கண்ணாடியை உயர்த்தவும், தாழ்த்தவுங்கூடிய சாதனமுண்டு. ஓடிக் கொண்டிருக்கும் எதிரியின் கப்பலைக் கீழிருந்து கொண்டே பார்ப்பதோடல்லாமல் அதன் வேகத்தையும் தெரியவேண்டி யிருக்கிறது. இதற்காக 4-வது கண்ணாடியில் நேராகவும், குறுக்காகவும் ஒரே அளவுடன் கூடிய சிறிய கோடுகள் வரையப் பட்டிருக்கின்றன.



நீர் மூழ்கிக் கப்பலில் இருந்து கொண்டு ஸ்தம்பத்தின் வழியாகப் பார்த்தால் மேல் காட்டிய படத்தில் தோன்றுவது போல் பார்க்க முடிகிறது. இதில் எதிரியின் கப்பல் தெரிவதோடு கண்ணாடியில் வரையப் பட்டிருக்கும் கோடுகளும் தோன்றும். இதனால் எதிரியின் கப்பல் கோடுகளைக் கடந்து செல்லும் நேரத்தைத் தெரிந்து கப்பலின் வேகத்தையும் அது செல்லும் திசையையும் தெரிந்து கொள்ளுகின்றனர்.

நீர் மூழ்கிக் கப்பலின் 'கண்' ஜலத்திற்கு மேலிருப்பது அவசிய மல்லவா? இதனால் ஸ்தம்பத்தின்

மேல் பாகம்—1வது கண்ணாடி மூடி மாத்திரம்—மேலே ஜலத்திற்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கச் செய்கின்றனர். இதனைக் கீழே காட்டியிருக்கும் படத்தில் காணலாம்.



நீர் மூழ்கிக் கப்பல் எதிரியின் கப்பலை எதிர் பார்த்துக் கொண்டிருந்தால் படத்தில் காட்டியிருப்பது போல் ஸ்தம்பத்தின் மேல் பாகத்தை மேலே சிறிது நீட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கும். எதிரி இதனைக் கண்டு கொண்டதாகத் தெரிந்தால் உடனே முன்பு கூறியவாறு தண்ணீரை அதிகம் பெருக்கி ஆழத்தில் சென்று மறைந்து விடுகிறது. அவ்வாறு காணப்படாவிட்டால் எதிரிக் கப்பலின் அடிப்பாகத்திற்குச் சென்று தெரியாமல் துவாரங்கள் போட்டு கீழே வீழ்த்தி விடுகிறது.

டைப்ரைடிங் மெஷின் கண்டுபிடித்தது யார்?

வட அமெரிக்காவிலுள்ள பெனிசில்வேனியா மாகாணத்தில் 1819ம் வருஷம் ஒரு குடியானவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு ஷோலெஸ் என்று பெற்றோர் பெயரிட்டனர். இவர்கள் ஏழைகளானபடியால், ஷோலெஸை உயர் படிப்புக்கு விட முடியவில்லை. பதினான்காவது வயதில் ஓர் அச்சாபீஸில் அச்சுக்கோப்பவனாக இவன் போய் வேலைக் கமர்ந்தான். வேலையில் சுறுசுறுப்புக் காட்டி முன்னுக்கு வந்தான். இப்படியிருக்கும் போது, 1866ம் வருஷம் இவனுக்கு கார்லோஸ் கிளிட்டன் என்பவனுடையசிநேகம் கிடைத்தது. இவ்விருவரும் சேர்ந்து புதிய மாதிரி கலப்பை யொன்றைக் கண்டு பிடிக்க முயன்றார்கள். அது போது, புஸ்தகங்களுக்கு நெம்பர் போடும் மெஷினையும் கண்டு பிடிக்க இவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்குப் பிறகு, எழுத்துக்களையும் நெம்பரையும் சேர்த்து அச்சடிக்கக் கூடிய இயந்திரத்தைக் கண்டு பிடித்தார்கள். இதனை 1868ம் வருஷம், ஷோலெஸ்—கிளிட்டன் டைப்ரைடர், என்று பதிவு உரிமை (பெடெண்ட்) செய்து கொண்டார்கள். இவ்விருவருக்கும் ஜேம்ஸ் டென்ஸ்மோர் என்பவன் பணம்உதவினான். 1871-72-ம் வருஷங்களில் நியூயார்க்கில் நடை பெற்றபொருட் காட்சியில் இந்த மெஷின்கள் வைக்கப் பெற்றன. ஆனால் எவரும் இதைக் கவனிக்கவேயில்லை. இதனால் மேற்படி மூவருக்கும் சிறிது உற்சாகங் குறைந்தது. ஆனால் டென்ஸ்மோர் சிறிதும் தளர்ச்சி கொள்ளாமல், நியூ யார்க்கிலுள்ள ரெமிங்க்டன் கம்பெனியாரை அணுகினான். இவர்கள் 1873ம் வருஷம், மேற்படி டைப்ரைடிங்மெஷினின் உரிமையை விலை கொடுத்து வாங்கிக்கொண்டார்கள். பின்னர் இவர்கள் 'ரெமிங்க்டன் மாடல் நெ. 1.' என்று புதிய பெயரால் மெஷின்களை விற்பனைக்குக் கொண்டு வந்தார்கள். ஷோலெஸ், தான் கண்டுபிடித்த மெஷினின் உரிமைக்காக பன்னிரண்டாயிரம் டாலர் வாங்கிக்கொண்டான் இவன் 1890ல் இறந்து போனான்.

அபசாரத்திற்கு உபசாரம்

—உ. வே. சாமிநாதையர்

மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர்

மோசிகீரனா ரென்பவர் கடைச் சங்க காலத்தில் இருந்த புலவர்களுள் ஒருவர். அவருக்குப் பல அரசர்களும் சிற்றரசர்களும் பழக்க மானவர்கள். ஒரு நாள் அவர் சேர அரசனாகிய பெருஞ்சேரல் இரும்பொறையைப் பார்த்துப் பரிசில் பெற்று வரச் சென்றார். அப்போது வழி நெடுக வெயிலில் நடந்து போக வேண்டி யிருந்தது. சேரமானது அரண்மனையை அணுகியவுடன் அவருக்கு மிக்க களைப்பு உண்டாயிற்று. எங்கேனும் படுத்து உறங்கிக் களைப்பை ஆற்றிக் கொண்டு அப்பால் அரசனைப் பார்க்கலாமென் றெண்ணி அரண்மனையிற் புகுந்தார். அங்கே ஓர் அழகிய பெரிய கட்டில் அவர் கண்ணிற் பட்டது. அதில் மெத்தென்ற அணைகளும் எண்ணெய் நுரையைப் போன்ற மெல்லிய விரிப்புக்களும் மலர்களும் இருந்தன. வந்த களைப்பின் மிகுதியினால் அவர் அதன் மேல் ஏறிப் படுத்துக் கொண்டார். அவருக்கிருந்த அயர்ச்சியும் அந்த அணைகளின் மென்மையும் மிக இனிய தூக்கத்தை அவருக்கு உண்டாக்கின; மெய்ம் மறந்து ஆனந்தமாகத் தூங்கலானார்.

அந்தக் கட்டில் சேரமானது முரசை வைத்து வழி படுவதற்குரியது. அதனை முரசு கட்டிலென்று கூறுவர். போர் செய்யத் தொடங்குவதற்கு முன் அம் முரசத்தை முழங்குவர். அதனை மலராற் பூசித்துப் பலி கொடுத்து வழி படுவர். அதில் தெய்வம் உறைவதாகக் கருதித் தெய்வ விக்கிரகத்துக்கு எவ்வளவு சிறப்புக்கள் செய்யப்படுமோ அவ்வளவு சிறப்புக்களையும் அதற்குச் செய்வது பழைய வழக்கம்.

அன்று பகைவனது மதிலைக் கைப்பற்றுவதற்காகச் சேரமான் அம்முரசிற்குப் பூஜைசெய்ய எண்ணியிருந்தான். அதற்கு அபிடேகம் செய்து வரும்பொருட்டு ஏவலாளர்கள் அதனை எடுத்துச் சென்றிருந்தனர் ஆதலின் அக்கட்டிலினருகே ஒருவரும் அப்பொழுது இல்லை. புலவர் அதனை முரசு கட்டிலென்றறியாமல் படுத்துறங்கி விட்டார்.

அப்பொழுது அவ்வழியே சேரமான் வந்தான். அவனுடைய கண்கள் முரசு கட்டிலின்மேல் விழுந்தன; தான் கண்டதை அவன் நம்பவில்லை. 'என்ன! மனிதனா படுத்திருக்கிறான்!' என்று திடுக்குற்றுப்பார்த்தான். 'ஆம்! மனிதன் தான். சந்தேகமே யில்லை. சுகமாகத் தூங்குகிறான். என்ன துணிவு! என்ன தைரியம்! கடவுளுக்குரிய பீடத்தில் மனிதனா படுத்துறங்குவது!' என்று அவன் எண்ணினான். அவன் கண்கள் சிவந்தன; மீசை துடித்தது; அவனை அறியாமலே கை உறையினின்று வாளை உருவியது. ஒரே வீச்சில் இரண்டு துண்டாக வெட்டிவிடுவதையன்றி வேறே தண்டனை யில்லையென்று கட்டிலை அணுகினான். புலவரோ தம்முன் நிகழும் இந்தப் பயங்கரமான செய்கையொன்றையும் அறியாமல் துயின்றனர்.

புலவருக் கருகில் வந்ததும் அரசன் கையை ஓங்கினான். அவன் கண்கள் அவரது முகத்தை நோக்கின; 'ஆ!' என்று அவன் கூவினான்;

அவன் கை சோர்ந்தது; வாள் உறைக்குள்ளே சென்றது: 'என்ன பாதகம் செய்ய இருந்தேன்? மோசிகீரனாரையல்லவா கொல்லத் துணிந்தேன்? நல்ல காலம்! கடவுள் என்னைக் காப்பாற்றினர்!' என்று வாய் விட்டுச் சொல்லும்போது அவன் உடல் பதறியது. 'ஆஹா! என்ன அயர்ச்சியோடு தூங்குகிறார்! எங்கிருந்தோ பசியோடு வந்திருக்கிறார் போலும்! இவரைக் கொன்று விட்டு ஏழேழு ஜன்மத்துக்கும் அழியாத பாதகம் செய்ய வல்லவா இருந்தேன்! இவர் தூக்கத்தைக் கலைப்பது கூடப் பெரும் பாவம்!' என்று அவன் நினைந்தான்.

தன்னைச் சுற்றி அங்குமிங்கும் அரசன் பார்த்தான். அங்கே ஒரு சாமரையைக் கண்டதும் அவன் உள்ளத்தில் மகிழ்ச்சியுண்டாகியது. அதனை எடுத்து மெல்லப் புலவருக்கு வீசிக் கொண்டு நின்றான். புலவருடைய தூக்கம் எளிதில் அகல்வதற்கு வழியேது? பின்னும் சுகமாகத் தூங்கினர்.

சில நேரம் சென்றது. மோசிகீரனார் ஒருவாறு துயிலின் கரையைக் கண்டார். துயிலுணர்ந்து விழித்துப் பார்த்தார்; அருகிலே சேரர்பிரான் சாமரை வீசிக் கொண்டு நிற்கிறான்! 'கனவு காண்கின்றேமோ!' என்றெண்ணி எழுந்து கண்ணைத் துடைத்துப் பார்த்தார். எல்லாம் உண்மை! கீழே பார்த்தார். முரசு கட்டிலில் அவ்வளவு நேரம் துயின்றதும் தெளிவாயிற்று. திடீரென்று கீழே குதித்தார்; 'என்ன அன்பு! என்ன தமிழன்பு!' என்று கூவினர். அவருக்கு மேலே பேச நா எழவில்லை. 'என்ன ஆச்சரியம்! நான் பண்ணிய குற்றத்திற்கு இதுவா தண்டனை! வாளை யெடுத்து வீச வேண்டிய இந்தக் கை, கவரியை யல்லவா வீசுகிறது! அபசாரத்திற்கு உபசாரமா தண்டனை? என்னை வெட்டித் தண்டிக்காமல் இருந்த பொறுமையொன்றே இவரது தமிழன்பை வெளியிடப்போதுமே! அதற்குமேல், அபராதியாகிய எனக்கு உபசாரம் வேறு செய்யும் இவருக்கு இம்மையில் உண்டாகும் புகழுக்கு அளவேது? இப்பிறவிக்குப் பின் சுவர்க்க நிலை உண்டென்பதில் தான் ஐயம் ஏது? இவருக்கு எப்பொழுதும் வெற்றியே உண்டாவதாகுக!' என்று அப்புலவர் பிரான் தம் உள்ளத்திற்குள் வியந்து கொண்டே இருந்தார். அக்கருத்துக்களெல்லாம் அப்பால் ஒரு செய்யுளாக வெளிப்பட்டது. (புறநானூறு 50ம் செய்யுள்.)

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையோடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசினீ யீங்கிது செயலே.

உன்னை நான் எப்படி மறக்க முடியும்?

—ஓர் "உபாசகன்"

நான் தனியாகவே ஜீவன யாத்திரை செய்து கொண்டிருந்தேன். என் மனத்தில் வேறெந்த விசாரமும் இல்லை. எங்கே சென்று கொண்டிருக்கிறேன், எங்கே செல்லவேண்டும் என்பது தெரியாமலே போய்க்கொண்டிருந்தேன். உன்னைப் பற்றிய எண்ணம் ஒன்றுதான் என் உள்ளத்தில நிரம்பியிருந்தது.

அப்படி யிருக்க உன்னை நான் எப்படி மறக்க முடியும்?

கண்ணில்லாத கபோதியைப்போல், இந்த வாழ்க்கை யென்னும் மார்க்கத்தில் காலடி எடுத்து வைத்துச் சென்று கொண்டிருந்தேன். எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதுகூட எனக்குத் தெரியவில்லை. அந்தச் சமயத்தில் நீ என் எதிரே வந்து நின்றாய். என் பார்வையை உன் பக்கம் இழுத்துக்கொண்டு விட்டாய். உடனே எனக்கு வழிகாட்டியா யமைந்து, மனிதத் தன்மை என்ற லட்சியத்தை நோக்கிக் காலடி எடுத்து வைக்குமாறு உற்சாகப் படுத்தினாய்.

அப்படி யிருக்க உன்னை நான் எப்படி மறக்க முடியும்?

வழியிலே செல்லும்போது, என்னுடைய மனம், உலகத்தின் துச்ச வார்த்தைகள், வேதனையின் புலம்பல் முதலியவைகளில் ஈடுபட்டு ஓடப்பார்த்தது. அப்பொழுது நீ என் மீது கருணைபூண்டு, என்னுடைய லட்சியத்தை எனக்குக் காண்பித்து, மார்க்கத்தினின்று நழுவவிடாமல் காப்பாற்றினாய்.

அப்படி யிருக்க உன்னை நான் எப்படி மறக்க முடியும்?

சென்று கொண்டிருக்கும்போது இடையிலே எனக்குக் களைப்பு ஏற்பட்டு விட்டது. லட்சியத்தை அடைய முடியாது என்ற அவநம்பிக்கை உண்டாயிற்று. இனி இந்தப் பாதையிலே செல்வதில் பயனில்லை என்று தீர்மானித்து விட்டேன். அப்பொழுது நீ, உன்னுடைய தாமரைப் புஷ்பம் போன்ற கைகளினால் என்னைத் தூக்கி விட்டு ஊக்க மூட்டினாய்; என் மனதைத் திடப்படுத்தினாய்.

அப்படியிருக்க உன்னை நான் எப்படி மறக்க முடியும்?

உலகத்தாரின் தூற்றுதல்களைக் கேட்டு என் இருதயம் மலின மடைந்து, உடைந்து, சுக்கு நூறாகப் போகும் போலிருந்தது. அமைதியை மறந்தே விட்டேன். அப்பொழுது நீயல்லவோ முன் வந்து, உனது காதலால் என் இருதயத்தை நிரப்பி, அதற்கு ஒரு புதிய உயிரைக் கொடுத்தாய்; ஒரு சக்தியையும் அளித்தாய்.

அப்படியிருக்க உன்னை நான் எப்படி மறக்க முடியும்?

துக்கத்தின் எல்லையை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த உலக மனைத்தும் சேர்ந்து என்னை வெறுக்கத் தொடங்கி விட்டது. தனியனானேன். ஆற்றுவார் இல்லை; தேற்று வாரு மில்லை. அப்பொழுது நீ யல்லவோ என்னை ஓடோடியும் வந்து காப்பாற்றினாய். என்னுடைய ஆத்மா, என்னுடை இருதயம், என்னுடைய வாழ்க்கை யாவும் நித்தியமான சுகத்தை யடையும் பொருட்டு, உனது பிரேமை நிறைந்த இருதயத்தில் என்னை ஐக்கியப் படுத்திக் கொண்டு விட்டாய். இவ்வளவுக்கும் உனக்கு நான் நன்றி செலுத்துவதெப்படி?

நீயே சொல், உன்னை நான் எப்படி மறக்க முடியும்?



Courtesy-S. N.

ராஜ ராஜ சோழன் (கி. மு. 984-1013) தனது ஆட்சியின்முதற் பாகத்தில் அநேக நாடுகளை ஜெயித்தான். அடுத்த பதினைந்து வருஷங்களில், ஜெயித்த நாடுகளை ஒன்று படுத்தினான். இவன் அநேக கோயில்களைக் கட்டியிருக்கிறான். தஞ்சாவூரில் இவன் கட்டிய ஒரு கோயிலில், இவனுடைய படை யெடுப்புகள் பலவும் இவன் காலத்திலேயே செதுக்கப்பட்டன. ராஜ ராஜ சோழன் தனது மந்திரி பிரதானிகளுடன், மேற்படி சித்திரங்களைப் பார்வையிடுகிறான். சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த தமிழர்களின் உடைமுதலிய வற்றை இந்தப் படத்திலிருந்து ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

என்ன வேடிக்கை ?

தோட்டப்பயிர்களுக்கு ‘மூடுபனி’



மிகவும் மெல்லிய, மிருதுவான இளம் பயிர்கள் அதிக உஷ்ணத்தாலும் அதிகக் குளிராலும் சில சமயங்களில் பாதிக்கப் படுகின்றனவல்லவா ? இதைத் தடுக்க என்னவழி ? சுமார் 100 அடி உயரமுள்ள ஸ்தம்பம் நிறுவி, அதன் அடியில் இயந்திரத்தால் தண்ணீரைச் சிறு குழாயின் மூலம் மேலே வெகு வேகமாக ஏற்றி அந்நீர் அங்கிருந்து வெகு சிறிய ஊசித் துவாரங்கள் வழியாக நாலா பக்கங்களிலும் வெளியேற்றப் படுகிறது. இவ்வாறு வெளிபேறும் நீர் வெகுதூரம் வரை சிறு சிறு துளிகளாகச் சிதறி மூடுபனிபோல் தோட்ட முழுவதும் பரவி நிற்கிறது.

தானாகை நீர்பாய்ச்சும் ‘அலாரம்’



தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சும் குழாய்களை ‘அலாரம்’ கடியாரத்தோடு இணைத்துக் காலையிலும் மாலையிலும் சரியான நேரங்களில் தானாகவே நீர் பாய்ச்சும்படி செய்யப்படுகிறது. கடியாரத்தின் அலாரம் அடிக்கும் இயந்திரத்தோடு, குழாயின் அடைப்புத் திறப்பு அமைப்பை இணைத்துக் குழாயை நேரப்படி தானாகவே திறக்கவும், அடைக்கவும் செய்யப்படுகிறது.

தூக்கிச் செல்லும் மேஜைகள்



ஐரோப்பாவிலுள்ள ஜெக்கோஸ்லோவேக்கியா மாகாணத்தைச் சேர்ந்ததோர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் உலகத்திலேயே அதிகமான கடிதப் போக்கு வரத்து நகல்கள் சேர்த்து வைக்கப்படுகின்றனவாம். அவைகளுள்ள ஒவ்வொரு பெட்டியும் 10 அடி நீள முள்ளவை. இங்ஙனம் 3000 பெட்டிகள் 4000 சதுர அடி விஸ்தீரணத்தில் சுவரில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பரிசீலனை செய்ய விரும்பும் குமாஸ்தாக்கள் ஓர் இயந்திரப்பொத்தானை அமிழ்த்தியவுடன் அவர்கள் மேஜை நாற்காலிகளிலிருந்த வண்ணமே, வேண்டும் பெட்டிக் கருகில் கொண்டு போகப்படுகின்றனர். அவ்வாறு போனவுடன் பெட்டியும் தானாகவே திறந்து கொள்ளுகிறது. எவ்வளவு சிரம மில்லாத வேலை!

உடையாத மூக்குக் கண்ணாடி

இரும்புச் சுத்தியால் அடிக்கப்பட்டும் உடையாத அவ்வளவு உறுதியுடன் கூடிய மூக்குக் கண்ணாடிகள் இப்பொழுது செய்யப்படுகின்றன என்றால் நீங்கள் எவ்வளவு ஆச்சரியப்படுவீர்கள்? மரத்தினின்றும் ஊறிவரும் ஒருவித குங்கிலியத்தை ரசாயன முறைப்படி பக்குவம் செய்து இந்தக் கண்ணாடிகளைத் தயாரிக்கிறார்கள். இவ்விதக் கண்ணாடி சாதாரணக் கண்ணாடியைப் போல் அறைத்துச் சேர்க்கப்படாமல் அச்சில் வார்க்கப்படுகிறது. சாதாரணக் கண்ணாடியைவிட இந்த உடையாத கண்ணாடி 100-க்கு 40 பங்கு கனத்தில் குறைந்ததாகவும், 25 பங்கு அதிக வெளிச்சத்தை உட்புகச் செய்யும் சக்தி வாய்ந்ததாகவும் இருக்கிறது. விலை ஒரே மாதிரி தான்.

'ட்ராபிக்ஸ்கோப்' (Trafficscope)



மேடும் பள்ளமும் நிறைந்த ஒரு பிரதேசத்தில் மோட்டார் வண்டியொன்று செல்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதற்கு எதிரே வரும் மற்றொரு மோட்டார் வண்டி தெரியாதல்லவா? இதற்காக ஒரு யுக்தி கண்டுபிடித்திருக்கிறார்கள் அறிஞர்கள். அதாவது, மேட்டுப் பாங்கான இடத்தில் ஒரு பாலம் மாதிரி கட்டி அதில் பெரிய (முகம் பார்க்கும்) கண்ணாடிகளைச் சாய்த்து வைத்தால், அதில் எதிர்நோக்கி வரும் வண்டிகள் நன்றாகத் தெரிகின்றன. இதற்கு 'ட்ராபிக்ஸ்கோப்' என்று பெயர்.

கப்பல் மயக்கம் போக ஒரு தலையணை

கப்பல் மயக்கம் அநேகருக்கு ஏற்படுகிறதல்லவா? இது ஏன் உண்டாகிறது? கப்பல் ஆட்டத்தால் தலை அங்கு மிங்கும் ஆடுகிறது. இதனால் காதின் உட்பாகம் அதிகமாக அசையத் தொடங்குகிறது. இதுவே கப்பல் மயக்கத்திற்குக் காரணம். இதைத் தடுக்க என்ன வழி? தலையாடாமல் ஒரே நிலையில் இருக்கச் செய்வதற்கு ஒரு புதிய 'ஸ்பிரிங்' தலையணை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இது ரப்பரால் செய்யப்பட்டது. இதற்கு மெல்லிய துவாரங்கள் நிறைய இருக்கின்றன. இதன் மீது தலை வைத்துப்படுத்துக் கொண்டு விட்டால் ஏன் மயக்கம் வருகிறது? வரவே வராது. ஆகாயக் கப்பலில் கூட இதனை உபயோகிக்கலாம்.

உமேச சந்திர பானர்ஜி

ஜனனம்—1844 மரணம்—1906

——"ஒரு காங்கிரஸ் வாதி"

காங்கிரஸ் விருட்சத்திற்கு ஆதியில் விதை யிட்டவர்கள் பதினேழு பேர். இவர்கள் முதன் முதலாக 1884-ம் வருஷம் டிசம்பர் மாதம் கடைசி வாரம் சென்னை மயிலாப்பூரில் திவான்பகதூர் ஆர். ரகுநாதராயர் வீட்டில் கூடி காங்கிரஸ் விதையை ஊன்றினார்கள். பின்னர் பலர் இதற்குத் தண்ணீர் ஊற்றி யிருக்கிறார்கள்; ரத்தத்தைக் கொட்டி யிருக்கிறார்கள்; வாய்ப் பந்தல் வேய்ந்து, அதிகமான உஷ்ணம் தாங்காதபடி காத்தவரும் பலர். பின்னர் கர்ம வீரரான காந்தியடிகள் தோன்றி, காங்கிரஸுக்கு ஒரு புதிய சக்தியையும் வாழ்வையும் அளித்தார். இப்பொழுது காங்கிரஸில், செயலுக்கும் ஒழுக்கத்திற்குந்தான் மதிப்பு; கண்ணியத்திற்கும் கண்டிப்புக்குந்தான் முக்கியத்துவம். இந்தச் சமயத்தில் பழைய நண்பர்களை நாம் சிறிது நினைவு படுத்திக் கொள்வது நல்லதல்லவா? அவர்கள் அந்தந்தக் கால நிலைக்கேற்றவாறு போராடினார்கள். அதுவரையில் அவர்களை நாம் போற்ற வேண்டியதுதானே. இப்பொழுது நாம் கொண்டுள்ள லட்சியத்தை அவர்கள் எட்டிப் பார்க்கவில்லை யென்பதற்காக, அவர்களை மறந்து விடலாமா?

"ஜோதி" யின் ஒவ்வொரு மாதக் கதிரிலும், ஆதியிலிருந்து காங்கிரஸ் தலைவர் ஒவ்வொருவருடைய ஜீவிய சரித்திரமும் சுருக்கமாகத் தெரிவிக்கப்படும்.

1885-ம் வருஷம் டிசம்பர் மாதம் 28ந் தேதி பகல் பன்னிரண்டு மணிக்கு பம்பாய் கோகுலதாஸ் தேஜ்பால் சமஸ்கிருத கலாசாலையில் முதலாவது காங்கிரஸ் கூடியது. அதற்குத் தலைமை வகித்துப் பெருமை யடைந்தவர் உமேச சந்திர பானர்ஜி. இவரைத் தலைமை வகிக்கு மாறு கேட்டுக் கொண்டது ஏ. ஓ. ஹ்யூம் என்ற ஓர் ஆங்கிலேயர். இந்த முதலாவது காங்கிரசிலேயே, பர்மாவைப் பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதை இந்தச் சமயத்தில் ஞாபகப் படுத்திக் கொள்வது மிகவும் பொருத்தமா யிருக்குமல்லவா?

வட பர்மாவைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவதை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது. அப்படி துரதிருஷ்டவசமாக (பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்துடன்)சேர்த்துக் கொள்வதாக அரசாங்கத்தார் தீர்மானித்து விட்டால், பர்மாமுழுவதையும், இந்தியராஜப் பிரதிநிதியின் நிருவாகத்தினின்று பிரித்து, அதை ஒரு 'கிரௌன் காலனி' (Crown Colony) யாக அமைத்துவிட வேண்டும். ஏனென்றால், இந்த நாட்டு அரசாங்க அமைப்

புக்கு மாறுபட்டதாக, இலங்கையைப்போல் பர்மாவும் இருக்கிறது.

இந்த உமேச சந்திர பானர்ஜி யார்? வங்காள மாகாணத்தில் கிதர்பூர் என்ற ஒரு சிறிய நகரம் உண்டு. இதில் 'வக்கீல்வீடு' என்றால் எல்லாருக்கும் தெரியக் கூடிய பிரபலமான ஒரு குடும்பத்தினர் வசித்துக் கொண்டிருந்தனர். இவர்கள்தான் பானர்ஜி குடும்பத்தினர். உமேசருடைய பாட்டனார் பீதாம்பர பானர்ஜி. இவர் அக்காலத்தில் பெரிய அட்டர்னி. பண வருமானம் அதிகம். அதற்குத் தகுந்தாற் போல் எல்லாரிடத்திலும் கண்ணியமாக நடந்து கொண்டார். இவருடைய மகன் கிரீச சந்திர பானர்ஜி. இவரும் வக்கீலாக இருந்து, சம்பாதித்து இறந்தார். இவருடைய இரண்டாவது புத்திரராக 1844ம் வருஷம் டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் உமேசர் பிறந்தார். பாலியத்தில் இவரிடம் விசேஷமான அமிசங்கள் ஒன்றும் காணப் பெறவில்லை. பதினேழாவது வயதில் இவர் மெட்ரிகுலேஷன் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். பரீட்சை நடக்கப் போகிற சமயம். படித்தது போதும் என்று என்னமோ என்னவோ, இவருடைய பிதா, இவரைப் பள்ளிக் கூடத்தினின்று நிறுத்தி, டப்ளியு. பி. டவுனிங் என்ற ஓர் ஆங்கிலேய அட்டர்னியிடம் குமாஸ்தாவாக வேலைக்கு அமர்த்தினர். இங்கே ஒரு வருஷம் வேலை பார்த்து விட்டு, பிறகு டப்ளியு. எப். கில்லண்டர்ஸ் என்ற மற்றோர் ஆங்கிலேய வக்கீலிடம் வேலை பழகினர். கோர்ட் விவகாரங்களையெல்லாம் உமேசர் நன்றாகத் தெரிந்து கொண்டார். இந்தக் காலத்தில், இங்கிலாந்துக்குச் சென்று, பாரிஸ்டர் பரீட்சையில் தேறி விட்டு வந்து, தமது ஆங்கிலேய எஜமானர்களைப் போலவே தாமும் பிரபல வக்கீலாக வர வேண்டுமென்ற ஆசை இவருக்கு ஏற்பட்டது. அப்படி இங்கிலாந்துக்குச் சென்று படிக்கிறவர்களுக்கு உதவியளிப்பதற்காக, ருஸ்தம்ஜி ஜேம்ஷட்ஜி ஜீஜிபாய் என்ற பார்சி கனவான், ஒரு சேம நிதி ஏற்படுத்தியிருந்தார். புத்தி சாலியான இளைஞர்கள், பரீட்சைகளின் மூலம் பொறுக்கி யெடுக்கப் பட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப் பட்டார்கள். உமேசரும், புத்திசாலியான இளைஞராகையால் சுலபமாக இங்கிலாந்துக்கு அனுப்பப் பெற்று, அங்கே பாரிஸ்டர் பரீட்சையில் தேறி, 1868-ம் வருஷம் கல்கத்தாவுக்குத் திரும்பி வந்து, ஹை கோர்ட்டில் அட்வோகேட்டாகப் பதிவு செய்து கொண்டார். அக்காலத்தில் இவர் ஒருவர்தான் இந்திய பாரிஸ்டர். இதனால் இந்திய கட்சிக்காரர்களெல்லாரும் இவரிடமே வந்து கூடினார்கள். தவிர, கட்சிக்காரர்களை இவர் ஆதரித்து அன்பாக நடத்தி வந்தார். இதனால் இவருடைய செல்வாக்கு அதிகப் பட்டது; செல்வமும் குவிந்தது. மாதம் பதினாயிரம் ரூபாய் வீதம் சராசரி வருமானம் இவருக்குக் கிடைத்து வந்தது அக் காலத்திலே! அரசாங்கத்தாரும் இவருடைய திறமையைப் பெரிதும் பாராட்டினார்கள். இதனால் இவரை ஜட்ஜாக நியமிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இவர் மறுத்து விட்டார். மூன்று முறை இவர் கேட்கப் பட்டார். மூன்று முறையும் இவர் மறுத்து விட்டார்.

அக்காலத்தில் மேனாட்டு நாகரிகத்தில், வங்காள இளைஞர்கள் பெரிதும் ஈடுபட்டார்கள். நடை, உடை, பாவனைகள் யாவும் ஆங்கிலேயர் மாதிரியே மாறின. இந்த மாற்றத்தில்

உமேசரும் தீவிரமாகக் க
கொண்டார். இவருடைய உ
இருப்பிடம், ஆசார விவகார
முதலிய யாவும் ஆங்கிலேய மு
யில் அமைந்தன. யாரையாவது
பரைப் பார்த்தால் 'நமஸ்தே' எ
சொல்லி இரு கைகளையும் கூப்ப
டார். ஆங்கிலேய முறையில்
குலுக்கத்தான் செய்வார். சுருட
பிடிப்பது முதலான ஆடம்பரங்
லும் கலந்து கொண்டார். இது த
இங்கிலாந்தில், வருஷத்திற்கு
மாதம் வசிக்கவும் ஏற்பாடு செ
கொண்டார். அங்கே சொத்து
திரங்கள் முதலியன கொஞ்சம்
கினர். ஓர் ஆங்கில ஸ்திரீயை மண
கொண்டார். இந்தியாவிலே
மாதம், இங்கிலாந்திலே ஆறு
மாக இவர் காலங்கழித்தார். இ
காலங்களில் தேசத்தைப்பற்றி
தேச அரசியலைப் பற்றியோ,
அதிகமாகக் கவலை கொள்ள வி
'நாம் பாலிய விவாக வழக்கத்
கொண்டிருக்கிற வரையில், வி
களுக்கு நல்ல வழியைக் தே
கொடாத வரையில், பொதுவ
பெண்களுக்கு ஆண்களைப் போல் சம சுதந்திரம் கொடாதவரையில், நமது தேசம் எப்படி முன்னேற்ற மடையும்' என்று இவர் கேட்பார்.

இந்தக் கொள்கைகளை வற்புறுத்திப் பிரசாரம் செய்து வந்தார். இதற்காக 'வங்காளி' என்ற பத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தி வந்தார். சமூக சீர்திருத்தக் காரர் என்ற முறையிலேயே இவர் காங்கிரஸில் பெரிதும் ஈடுபட்டார். காங்கிரஸ் ஆரம்பமானது முதல் அதனுடன் இவர் நெருக்கமான சம்பந்தம் கொண்டிருந்தார். இவர் இரண்டு முறை காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டு கௌரவமடைந்தார்.

... இவருடைய மரணச் சடங்கின் போது பேசிய பேச்சில் பின் வரும் வாக்கியம் கவனிக்கத் தக்கது:—'இப்பொழுது உமேச சந்திர பானர்ஜி நம்மிடையே இல்லை. ஆனால், தேசத்திற்காக அவர் செய்திருக்கிற காரியங்கள் எப்பொழுதும் நமது ஞாபகத்திலேயே இருக்கும்.'

முதலாவது காங்கிரஸ் கூடின காலத்தில் சென்னையில் முக்கிய தலைவர்களா யிருந்தவர்கள் ஸர் சுப்பிரமணிய ஐயர், சேலம் விஜயராகவாச்சாரியார், ஜி. சுப்பிரமணிய ஐயர், ராஜா ஸர் டி. மாதவராயர், பி. ரங்கைய நாயுடு, பி. அனந்தாசார்லு முதலியோராவர்.

கவிஞர் நோகுச்சி

—நமது அந்நிய நாட்டு நிருபர்

எப்படி ரவீந்திர நாத் டாகூரை நாம் மகா கவியாகவும், உலக கவியாகவும் போற்றுகிறோமோ அப்படியே ஜப்பானியர்கள், நோகுச்சியைப் போற்றுகிறார்கள். வங்க மொழியோடு ஆங்கிலத்திலும் கவிபாடும் சக்தி எப்படி ரவீந்திரருக்கு உண்டோ, அப்படியே நோகுச்சிக்கும், ஜப்பானிய மொழியிலும் ஆங்கிலத்திலும் கவிபுனையும் ஆற்றல் உண்டு. ஜப்பானில் 'நமது அந்நிய நாட்டு நிருபர்' யாத்திரை செய்து கொண்டிருந்த காலத்தில் கவிஞர் நோகுச்சியைச் சந்தித்துச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அதனைச் சுருக்கமாக இங்கே தெரிவித்திருக்கிறார்.

இன்று உலகப் புகழ் பெற்றுள்ள ஜப்பானியக் கவிஞர்களில் யோனே நோகுச்சி ஒருவர். ஜப்பானிய பாஷையிலும் ஆங்கில பாஷையிலும் கவி புனையும் ஆற்றல் பெற்றுள்ளார் இக் கவிஞர். சென்ற ஆண்டிலே இவர் இந்தியாவிற்கு விஜயம் செய்து பல சர்வ கலாசாலைகளில் பிரசங்கம் செய்தார். காந்தியடிகளைச் சந்தித்து உரையாடினார். காந்தியடிகளின் வசீகர சக்தியால் கவரப்பெற்ற இக் கவிஞர், இந்தியாவைப் பற்றி ஜப்பானிய பாஷையில் ஒரு புத்தகம் எழுதியுள்ளார்.

சில மாதங்கட்கு முன் இக் கவிஞரைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் கிடைத்தது. டோக்கியோ நகரில் சக்குராயாமா என்ற பகுதியிலுள்ள இவ ரில்லத்திற்குச் சென்றேன். இயற்கை வனப்பு நிறைந்த சிறு தோட்டத்திற்கு நடுவே யுள்ள அழகிய வீட்டிலே இக் கவிஞர் எளிய வாழ்க்கை நடத்துகிறார். வீட்டினுள்ளே சென்றதும் வயது முதிர்ந்த ஓர் அம்மையார் வரவேற்று சிறிய அறை யொன்றிலே உட்காரும்படி கூறினார். கவிஞர் சில நிமிஷ நேரங்களில் இவ்வறைக்கு வருவார் என அறிவிக்கப் பட்டது. அவ்வறையை ஒரு முறை சுற்றி நோக்கினேன். பனையோலையில் எழுதப் பெற்ற வரவேற்புகள் ஒரு புறம்; வெள்ளித் தாம்பாளம்,

வெள்ளிக் கூஜா முதலிய சன்மானப் பொருள்கள் ஒரு புறம்; டாகூரின் அரிய நூல்கள் பிறிதொருபுறம். இந்திய சர்வகலாசாலைக ளளித்த வர வேற்புப் பத்திரங்கள் அறையிலிருப் போர் படிக்கத்தக்க நிலையில் அமைக் கப் பெற்றிருந்தன.

சில நிமிஷங்களில் கவிஞர் நோ குச்சி ஜப்பானிய உடையோடு அவ் வறைக்கு வந்தார். இந்திய முறையில் நமஸ்காரம் செய்து வரவேற்றார்.

'சென்னையில் அதிக உஷ்ணமல் லவா? சென்னையைப் பற்றிய சந் தோஷ நினைவுகள் இன்னும் என்னுள் ளத்திலே தோன்றுகின்றன. ஸ்ரீமான் சத்தியமூர்த்தியோடு காங்கிரஸ் பொருட் காட்சிக்குச் சென்றேன். சென்னை மாகாணத்தவர் பெரிதும் உணர்ச்சி யுடையவர்கள் என்பதில் ஐயமில்லை' என்றார். நான் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவனென்ப தும், பத்திரிகை நிருபன் என்பதும் கவிஞருக்கு ஏற்கனவே தெரியும்.

'உதய சங்கரைச் சந்தித்தேன்; அவர் நடனம் மட்டும் சிறந்ததல்ல. அவரும் சிறந்த மனிதர்' என்றார்.

இந்தியத் தலைவர்களோடு அவர் கொண்டிருந்த தொடர்பை எண்ண எண்ண அவர் மகிழ்ச்சியடைந்தார். இந்தியாவைப் பற்றி 'காண்டெம்பரரி ஜப்பான்' (Contemporary Japan) என்ற பத்திரிகைக்கு அனுப்புவதற் காக இருந்த கட்டுரையைப் படித் தார். இடையிடையே உரையாடி னோம்.

'காந்தியடிகள் உலகிற் சிறந்த மனி தர். அவர் புன் சிரிப்பு உலகத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையது. ஒவ்வொரு சொல்லிலும் தத்துவம் அடங்கியிருக்கிறது. அவருக் கேற்ற காரியதரிசி மகாதேவ தேசாய். அவ ருடைய அடக்கத்தையும் உபசாரத் தையும் நான் மறக்க முடியாது' என்றார் கவிஞர்.

ஜப்பானில் இந்தியாவைப் பற்றிப் பிரசாரம் செய்பவர்களில் இக்கவிஞர் குறிப்பிடத் தக்கவர். ரேடியோ பிர சங்க மொன்றில் இந்தியாவைப் பற் றிச் சில குறைகள் கூறினார். இத னைக் கண்டு ஜப்பானிலுள்ள சில இந் தியர்கள் சீறி விழுந்தனர். நம்மி டம் குறைகள் உண்டு என்பது நமக்குத் தெரியும். அவைகளை நிவர்த் திக்க நாம் முயற்சி செய்ய வேண் டும். நியாய மனப்பான்மையுள்ளவர் கள் ஒரு நாட்டின் பெருமையையும் குறையையும் ஒருங்கே கூறத் தான் செய்வார்கள். வெளி நாட்டினர், நமது குறைகளை மறைத்து நம்மைப் புகழ வேண்டு மென்று எதிர் பார்ப் பது அறியாமையே யாகும். நோகுச்சி 'அசாஹி' என்ற பிரபல பத்திரிகையில் எழுதிய தொடர்ச்சி யான கட்டுரைகளினால் ஜப்பானியர் கட்கு இந்தியாவைப் பற்றிச் சிறிது தெரிந்தது. நோகுச்சி இந்தியாவைப் பற்றிக் கூறிய குறைகளை விட பெரு மைகள் அதிகம் என்பது தான் நாம் கவனிக்கத் தக்கது.

கவிஞர் நோகுச்சி நகோயா நகருக் கருகே யுள்ள சுசிமா என்ற கிராமத் தில் பிறந்தார். பதின்மூன்றாவது வயதில் டோக்கியோ நகருக்கு வந்து கெய்யோ சர்வகலாசாலையில் பயிற்சி பெற்றார். 18-வது வயதில் அமெ ரிக்கா சென்றார். பதின்மூன்றாண்டு கள் அமெரிக்காவில் தங்கினார். இடையே ஐரோப்பா சென்று திரும்பினார். 'கண்டதும் காணாததும்' என்ற ஆங்கிலப் பாடல்களை முதலில் அமெரிக்காவில் பிரசுரித்தார். இவரு டைய நூல்கள் ஜெர்மன், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலே மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. ஆக்ஸ்

நமது நிருபர்களுடன்—

காங்கிரஸ் மந்திரிகள்

ஐயா,

ஆறு மாகாணங்களில் காங்கிரஸ்காரர்கள் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்டது, எனக்குத்தான் ஏதோ ஒரு பெரிய புதையல் கிடைத்து விட்டதுபோல் இருக்கிறது. நாட்டுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டதாக, என்னையறியாமலே ஒரு சந்தோஷம் எனக்கு உண்டாகிறது. உங்களுக்கு எப்படி யிருக்கிறதோ?

—உங்கள் சகோதரி

சகோதரியின் சந்தோஷத்தைக் கண்டு நாமும் சந்தோஷப் படுகிறோம். ஆனால் சந்தோஷத்தோடு திருப்தியடைந்து, 'ஜே' கோஷம் போட்டுவிடுவதனால் மட்டும் பயனில்லை. நமது பொறுப்பையும் நாம் உணர வேண்டும். பொறுப்பையும், நாம் இனிச் சமாளிக்க வேண்டிய தடைகளையும் சிறிது கவனித்துப் பார்த்தால், சந்தோஷத்தினால் சறுக்கி விழாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

—ஆசிரியர்

காந்தி-லின்லித்கௌ சம்பாஷணை

ஐயா,

ராஜப் பிரதிநிதியும் நமது மகாத்மா காந்தியும் சந்தித்துப் பேசினார்களே; என்ன பேசி யிருப்பார்கள்? கொஞ்சம் சூட்சுமமாகத் தெரிவிக்க முடியுமா?

—ஆத்திரக்காரன்

நாம் 'கயிறு திரிக்க'த்தயாராயில்லை. அப்படி திரிப்பதனால் நண்பருடைய ஆத்திரமும் அடங்காது. காந்தி ஒரு மனிதர். அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் லார்ட் லின்லித் கௌவுக்கு இருந்திருக்கிறது. அந்த ஆவலைப்பூர்த்தி செய்து கொண்டார். அவ்வளவுதான். லார்ட் வில்லிங்டனுக்கு இந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனால், காந்தியை அறிந்து கொள்ள எல்லாராலும் முடியுமா? வில்லிங்டன் சாதாரண ஒரு 'லார்ட்' தானே!

—ஆசிரியர்

போர்டு சர்வகலாசாலையாரின் அழைப்புக்கிணங்கி இங்கிலாந்து சென்று பிரசங்கம் செய்தார். அப்பொழுதுதான் சரோஜனி தேவியை முதன் முதலாகச் சந்தித்தார். ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்த பின்னர் தாய் நாடு திரும்பினார். மீண்டும் அமெரிக்கா சென்று பல பிரசங்கங்கள் செய்தார். சமீபத்தில் இவர் இந்தியா, சிலோன், பர்மா முதலிய நாடுகட்கு விஜயம் செய்து சொற்பெருக்கு நிகழ்த்தியது வாசகர்கட்குத் தெரியும்.

இவரிடம் விடைபெற்ற பொழுது 'இந்தியாவைப் பற்றிய எனது எண்ணங்களை நான் என்றும் மறக்க முடியாது. அவ்வரிய நாட்டிற்கு மீண்டும் செல்லும் சந்தர்ப்பத்தை எதிர் பார்க்கிறேன். நான் இந்தியா சென்ற பொழுது பண்டித நேரு ஐரோப்பாவிலிருந்தார். அவரைச் சந்திக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. எனது எண்ணங்களைக் கவிகளாகப் புனைய எண்ணியுள்ளேன்' என்றார் கவிஞர். இவரின் சிறந்த கவிகளை நாம் எதிர் பார்ப்போமாக!

கதர் அன்பளிப்பு

ஐயா,

சென்னைப் பிரதம மந்திரி ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், சர்க்கார் பிரதம காரியதரிசி ஸ்ரீ சி. எப். ப்ரேக்கன்பரிக்குக் கதர் சட்டைத் துணியை அளித்ததும், மத்திய மாகாணத்தின் பிரதம மந்திரி ஸ்ரீ காரே, கவர்னருக்கு இரண்டு கதர் பீஸ்கள் அளித்ததும், எனக்கு மற்றொரு சம்பவத்தை நினைவூட்டுகிறது. ஸர் எம். விசுவேசுவரய்யா அவர்கள், மைசூர் திவானகப் பல வருஷகாலம் இருந்தாரல்லவா? அவர், ஆரம்பத்தில் ஐரோப்பிய முறையில் 'ஹாட்' முதலியன தரித்துக் கொண்டிருந்தார். மகாராஜாவோ, இந்திய உடை முறையை அதிகமாக விரும்புகிறவர். ஒரு நாள், விசுவேசுவரய்யா, மகாராஜாவைப் பார்க்க அரண்மனைக்குச் சென்றார். அப்பொழுது உயர்ந்த சரிகைத் தலைப்பாகை யொன்றை ஒரு தட்டிலே வைத்து விசுவேசரிடம் கொடுத்து 'இதைப் போட்டுக்கொள்ளுங்கள் பார்ப்போம்; உங்களுக்கு இது மிக நன்றாயிருக்கும்' என்று சொன்னார். அது முதல் விசுவேசர், தலைப்பாகையே போட ஆரம்பித்தார். மைசூரில் நான் கேட்ட இந்த வரலாற்றை அப்படியே உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

—பழைய துப்பை

இந்தப் பழைய குப்பையிலிருந்து மாணிக்கமான செய்தியைத்தான் நமக்குத் தெரிவித்திருக்கிறார் இந்த அன்பர். இந்த வரலாற்றை நாமும் கேள்விப் பட்டிருக்கிறோம். எவ்வளவு தூரம், இந்தச் செய்தியில் கூடுதல் குறைச்சல் இருக்கு மென்பது நமக்குத் தெரியாது.

—ஆசிரியர்

அவையடக்கம்

ஐயா,

சில பேர், பிரசங்கம் செய்வதற்கு முன்னால், தங்களைப்பற்றித் தாழ்வாக 'அடியேன்' 'ஒன்றுக்கும் உதவாத சிறியேன்' என்று என்னென்னமோ பேசி, அவையடக்கம் என்ற பெயரால், அருமையான அரை மணி நேர காலத்தை வீணக்குகிறார்களே. அதை நீங்கள் விரும்புகிறீர்களா?

—அவையடக்கம் கேட்டுச்
சலித்துப்போனவன்

நாமும் விரும்பவில்லைதான். தன்னடக்கமாக ஓரிரண்டு வார்த்தைகள் சொன்னாலே போதுமானது. இஃது, எதையும் அலசிப் பார்க்கும் காலம். ஆகையால் பொது மேடைகளில் ஏறிப் பேசுகிறவர்கள், மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். கூட்டத்தாருடைய மனப்பான்மையை அறிந்து கொள்ளாமல் பேசுவோரை, பொது ஜனங்கள் சீக்கிரமாக வெறுத்து விடுவார்கள். நாவன்மை என்பதை ஒரு கலையாகப் பயில வேண்டியது தமிழ் நாட்டில் மிக அவசியமாக இருக்கிறது.

—ஆசிரியர்

கதருக்கு மகத்துவம்

ஐயா,

முன்னே யெல்லாம், சென்னைச் சட்ட சபை மண்டபத்திற்குள்ளேயோ கோட்டையிலுள்ள ஆபீஸ்களுக்குள்ளேயோ நுழைவதென்றால் பிரம பிரயத்தனம். நான் பல முறை அவதிப்பட்டிருக்கிறேன். 'கால்குழாய்' மாட்டிக் கொண்டு, டக், டக் கென்று பூட்ஸ் ஓசைப்பட போனால், கோட்டையிலே யுள்ள சேவகன் விரைப்பாகச்

சலாம் போடுவான். என்னைப்போல் கதர் ஜுப்பாவுடன் போனால், 'யாரை யா அது; வழியை அடைக்காதே; பெரியவங்கள்ளாம் வராங்கோ' என்பான். அவனோடு சண்டையிட்டுக் கொண்டு, பலவந்தமாக நான் பல முறை போயிருக்கிறேன். இப்பொழுது கதர் போட்டுக் கொண்டவர்களுக்கு என்ன மகிமை! ஏழை எளியவர்களெல்லாருங் கூட, மந்திரிமார்களைப் பேட்டி கண்டு பேசுகிறார்கள்! என் கண்ணால் பார்த்த ஒரு விசேஷத்தைக் கேளுங்கள். கரியன் என்ற ஒரு ஹரிஜன், தன் மனைவியோடும் மூன்று குழந்தைகளோடும் பரிதபிக்கத் தக்க கோலத்தோடு கோட்டை வாசலில் வந்தான். அவனுக்கு இரண்டு கையுமில்லை. எங்கேயோ விக்ரவாண்டி என்ற ஊரில் ஒரு கன்ட்ராக்டரிடம் வேலை பார்த்துக் கொண்டிருந்தானாம். ஒரு பாறையை வெடி மருந்து வைத்து உடைக்கும்போது, கை இரண்டும் போய் விட்டதாம். தன் குறையை மந்திரியிடம் தெரிவித்துக் கொண்டு, ஏதேனும் ஜீவனத்திற்கு வழி தேடிக் கொடுக்க முடியுமாவென்று கோட்டைக்கு வந்தான். சேவகர்கள் தடையில்லாமல், தொழில் மந்திரி மிஸ்டர் கிரியிடம் கொண்டு விட்டார்கள். என்ன ஆச்சரியம் ஐயா, இது? மந்திரி, இவனுடைய குறைகளையெல்லாம் பொறுமையுடன் கேட்டு, இதைப்பற்றி விசாரிப்பதாகச் சொன்னார். தவிர ஒரு ரூபாயும் கொடுத்தார். இந்த ஒரு ரூபாய், ஒரு லட்சம் அல்லவா அவனுக்கு? இந்த மாதிரியான வேடிக்கைகளை முன் மந்திரிமார் ராஜ்யத்தில் பார்த்திருக்க முடியுமா? கேட்டுத்தான் இருப்போமா? என்னுடைய சந்தோஷம் தாங்க மாட்டாமல், இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதினேன். நீங்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி!

கதர் வரலா

நினைத்துக் கொள்வதற்கு என்ன இருக்கிறது? நண்பருக்கு நன்றி செலுத்துகிறோம். கால சக்ரம் மிக வேகமாகச் சுழல்கிற தென்பதற்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

—ஆசிரியர்

ஹிந்தி கட்டாய பாடமா?

ஐயா,

ஆரியருடைய நாகரிகம் எப்படி மெது மெதுவாகத் தமிழ் நாட்டுக்குள் புகுந்து ஆதிக்கம் பெற்றதோ—அதைப் போல, இப்பொழுது வட நாட்டு நாகரிகத்தைத் தென்னாட்டிலும் புகுத்தக் கங்கணங்கட்டிக் கொண்டுவிட்டார்கள் நமது காங்கிரஸ் மந்திரிகள். முதல் மூன்று பாரங்களில், ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கப் போகிறோம் என்று திருவாளர் இராஜகோபாலாச்சாரியார் கூறியுள்ளார். இஃது என்ன விபரீதம்? அப்படியானால் தமிழின் கதி என்ன? தமிழன் நிலைமை என்னவது? தொன்று தொட்டு வந்த தமிழ், திராவிட பாஷைகளுக்கெல்லாம் தாயாயுள்ள தமிழ், இனிக் கேட்பாரற்று ஓலைச்சுவடிகளிலன்றோ பதுங்கிக் கொண்டுவிடும்? தமிழர்கள் ஒன்று சேர்ந்து இதனை எதிர்க்க வேண்டுமல்லவா? 'தமிழன் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும்' என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். இந்த ஹிந்தி, பேரிடியாகவன்றோ தமிழர் தலை மீது விழுந்திருக்கிறது. தமிழர் எப்படி தலை நிமிர்ந்து நடக்க முடியும்?

—ஒரு தமிழன்

இந்த அன்பர் ஏன் இப்படி அச்சங் கொள்ள வேண்டும்? ஹிந்தி, பள்ளிக்

மும் கொள்ளக் காணேம். அப்படி யிருக்க, தமிழரில் ஒரு சிலர் மட்டும், கவலைப் படுவதற்குக் காரணமேயில்லை. தேசீய ஒற்றுமைக்கு ஒரு கருவியாக ஹிந்தி இருக்க வேண்டுமென்று சொல்லப் படுகிறதே தவிர மற்றச் சுதேச பாஷைகளை அமுத்தி விடுவதற்காக அன்று.

—*ஆசிரியர்*

பள்ளிக்கூட நேரம்

ஐயா,

இப்பொழுது பள்ளிக்கூட நேரம், ஆபீஸ் நேரம் எல்லாம் காலை 10 மணியிலிருந்து மாலை 4 அல்லது 5 மணி வரையில் இருக்கிறது. இந்தியாவில், வருஷத்தில் பெரும்பாலான மாதங்கள் வெயில் காலம். நல்ல வெயில் நேரத்தில்தான், மூளைக்கு வேலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனல் அதிகமாக வேலை செய்ய முடிவதில்லை. சீக்கிரம் சோர்வு உண்டாகி விடுகிறது. எனவே பள்ளிக்கூட நேரத்தையும் ஆபீஸ் நேரத்தையும் காலை 7 மணியிலிருந்து 10 மணி வரையிலும் மாலை 2½ மணியிலிருந்து 5½ மணி வரையிலும் வைத்துக்கொண்டாலென்ன ?

—பகலிலே வேலை செய்கிறவன்

அன்பர் கூறும் யோசனை மிக நல்லது. நமது நாட்டுப் பழைய பள்ளிக்கூடங்கள், ஏறக்குறைய இதே நேரத்தில்தான் நடை பெற்றுக்கொண்டு வந்தன. இப்பொழுது கூட, சாந்தி நிகேதனம், காங்கிரி குருகுலம் முதலிய குருகுலங்களில் காலையிலும் மாலையிலுந்தான் வகுப்புகள் நடைபெறுகின்றன. தவிர, புதுச்சேரி முதலிய பிரேஞ்சு பிரதேசங்களில் காலையிலேயே கோர்ட் கச்சேரிகள் வேலை செய்ய ஆரம்பித்து விடுகின்றன; வெயில் வேளையில் ஓய்வு கொண்டு மீண்டும் பிற்பகல் நேரத்தில் வேலை செய்கின்றன. இந்த முறையினல், குறைவான உழைப்பில் அதிகமான வேலை நடைபெறுகிறது. காங்கிரஸ் மந்திரிகள், இந்த விஷயத்தில் கவனஞ் செலுத்துவார்க ளென்றே நம்புகிறோம்.

—*ஆசிரியர்*

அநுதாபத் தீர்மானம்

ஐயா,

ஒரு மனிதர் எவ்வளவு முற்போக்குடையவராக இருந்தாலும், பிற்போக்குடையவராக இருந்தாலும் அவர் இறந்த பிறகு அவருக்கு மரியாதை செலுத்துவது தான் முறை. அதிலும் சட்ட சபை போன்ற ஸ்தாபனங்களில் இந்த மரியாதை செலுத்த வேண்டுவது அவசியம். ஆனல் சமீபத்தில் நடைபெற்ற பர்மா சட்டசபையில் காலஞ் சென்ற ஸர் மாங் பா என்பவர் சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட அநுதாபத் தீர்மானத்தின்போது, அதனை எதிர்த்தார் ஒருவர். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

—பர்மா வாசி

நல்ல வேளையாக இந்த எதிர்ப்பை, சபை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து எடுத்து விடத் தீர்மானித்திருக்கிறார்கள். பொதுவாக இந்த மாதிரியான தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறுவது தான் நல்லது. அது தான் பார்லிமெண்டரி முறையுங் கூட.

—*ஆசிரியர்*



திருவள்ளுவர் பெருமை

இயற்றியவர்: பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர்; கிடைக்குமிடம்: நவீனகதா புத்தகசாலை, மங்கமாரி வீதி, ரங்கூன்; விலை: நான்கு அணா. டபிள் கிரவுன் அளவு 1 x 32. 125 பக்கங்கள்.

திருவள்ளுவர் பெருமையை இந்த நூலாசிரியர் நன்றாக உணர்ந்திருக்கிறார். ஆனால், எவ்வளவு தூரம் அப்பெரியாருடைய பெருமையை இந்த நூலைப்படித்த வாசகர்கள் உணர்ந்துகொள்ள முடியும் என்பது நமக்குச் சந்தேகமாக இருக்கிறது. பழைய காலத்து உரையாசிரியர்கள், தங்களுடைய புலமையைக் காட்ட மூல நூலுக்கு உரையென்று பெயரை வைத்து மற்றொரு புதிய நூலைச் செய்துவிட்டுப் போயிருக்கின்றனர். அதே வழியை இந்தக் காலத்திலும் நமது பண்டிதர்கள் பின்பற்றி நடந்தால், நமது பழைய கலைக்களஞ்சியங்களைப் பாமர ஜனங்கள் சுவைப்பது தான் எப்பொழுது?

தவிர, வாக்கியங்கள் எழுதும்போது எதுகை மோனை, தாமாக வந்தால் அவற்றைத் தடை செய்ய வேண்டியதில்லை. ஆனால் எதுகை மோனைக்காகவே வாக்கியங்கள் அமைப்பதை நாம் விரும்ப முடியாது.

"சிற்றறிவுடையோர், சீரியன புரியினும், முற்றறிவுடை முதல்வனருள் கூட்டாவழி முட்டுறல் வெட்ட வெளியாம்." -31ம் பக்கம்

"வாழ்க்கை வனப்புற வாய்மையைக் கைக்கொண்டார் பலர் பூதவுடல் பொன்றிய பின்னும் புகழுடலால் நம் கண் முன்னிற்பவர் போற் கருதப்படுகின்றனர்."

-77ம் பக்கம்

"நம் வள்ளுவர் நறுந்தமிழ் நலங் குலவத் தந்த அருணூல் மாட்சியும் குறுங் குறட்பாக்களினுட் பொதிந்த கருப்பொருள் நீட்சியும் எழுத்திலடங்க மாட்டா."

-112ம் பக்கம்

இவை இந்த நூலில் காணப்படும் சில உதாரண வாக்கியங்கள்.

இந்த நூலின் 113ம் பக்கத்தில் ஆசிரியர் கூறுகிறார்:—

"தமிழ் நெடுங் கணக்கின்படி வள்ளுவ முனிவரும் அ-முதல்-ன் என்னும் எழுத்து இறுதியாக வைத்து நூல் யாத்தமை தமிழ் மொழிக்கு இன்றியமையாப் பெருஞ் சிறப்பளித்ததாகும். 'அகரமுதல' என்று தொடங்கி 'முயங்கப்பெறின்' என்பது இறுவாயாதல் காண்க."

இது நமக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. 'ன்' என்ற எழுத்து யதேச்சையாக விழுந்திருக்கிறதே தவிர, அந்த எழுத்தோடு முடிக்க வேண்டும் என்று கவி பாடினார் என்றால், திருவள்ளுவருடைய பெருமையை நாம் குறைப்பதாகு மல்லவா? அப்படி 'ன்' என்ற எழுத்தோடு முடிக்க அவர் எண்ணியிருப்பாரானால், ஒவ்வொரு அதிகாரத்தின் ஆரம்பத்திலும் வரிசைக்கிரமமாக எழுத்துக்களைப் போட்டுக் கொண்டு வந்திருக்க வேண்டுமே; அப்படியும் காணோமே.

இதன் இரண்டாம் பதிப்பை, அச்சுப் பிழைகளைக் குறைத்து, நடையைச் சிறிது தளர்த்தி வெளியிட்டால் நன்றாயிருக்கும்.

பர்மா பிரிவினை

ஞாபகார்த்த மலர்

வெளியிட்டவர்: ஸ்ரீமான் வி, ஜி, நாயர்; ஆந்திரா நேஷனல் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது; விலை: ஒரு ரூபாய்; டபிள் கிரவுன் 1 x 8 அளவு; 112 பக்கங்கள்.

எடுத்த எடுப்பிலே இந்தப் புஸ்தகத்தின் மேலட்டை நன்றாயிருக்கிறது. ஆனால் உள்ளே புரட்டிப் பார்த்து விஷயங்களை நோக்குகிற போது ஆசாபங்கம் உண்டாகிறது. 'பிரிந்து நிற்கும் பர்மாவின் கண் ஏற்படக்கூடிய அரசியல் மாறுதல்களை ஓரளவு எடுத்துக் காட்ட வேண்டுமென்பதே இந்நூலையாக்கியோரின் நோக்கமாகும்' என்று முன்னுரையில் கூறப் பட்டிருக்கிறது. ஆனால் புதிய அம்சங்கள் ஒன்றும் இந்த நூலில் நமக்குத் தென்படவில்லை.

இந்த நூலில் மொத்தம் 16 அத்தியாயங்கள் இருக்கின்றன. ஓர் அத்தியாயத்திற்கும் மற்றோர் அத்தியாயத்திற்கும் எவ்வித விஷயத் தொடர்பும் காணோம். விஷயத்திற்குத் தக்கவாறு படங்களை நூலில் நுழைப்பதுதான் முறையென்பதையும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறோம்.

தவிர, இந்த நூலில் கூறப்பட்ட சில பொருத்தங்கள் நமக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. உதாரணமாக 5ம் பக்கத்தில்,

"அவனியெங்கும் ஆதரவு பெற்றிலங்கும் அமிர்த பஜார் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தமர்ந்து தாய்நாட்டின் சேவைக்காக உடல், பொருள், ஆவி மூன்றினையும் அர்ப்பணம் செய்த பாபு மோதிலால்கோஷ் தமது மரணப் படுக்கையில் கூறியது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். தாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் ஆதிக்கம் பெறாத ஓர் இடத்திற்குச் செல்வதால் சந்தோஷமுடன் உயிர்துறப்பதாகக் கூறினர். அதே போன்று ஊபாபே அவர்கள் தம் வாழ்க்கையின் லக்ஷியம் தம் வாழ்நாளிலேயே பூர்த்தியானது கண்டு மகிழ்ச்சியுடன் உயிர்துறக்கலாம். அவரது வாழ்க்கையின் லக்ஷியம் இந்தியா-பர்மா பிரிவினையாகும். அதனில் அவர் வெற்றியடைந்தார்"

என்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன. அப்படியானால் மோதிலால் கோஷின் லட்சியம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆதிக்கம் பெறாத ஓர் இடத்திற்குச் செல்வதுதானா?

101ம் பக்கத்தில் பர்மா கவர்னர் ஸர் ஆர்ச்சிபால்ட் காக்ரேனைப் பற்றிக் கூறும்போது,

"எதிர்கால தேச சரித்திராசிரியர்கள், இவருக்கு மேனாட்டு வீரர்களாகிய நெப்போலியன், நெல்சன் போன்ற ஸ்தானங்களோ, அன்றி கீழ்த்திசை நாட்டில் பிரசித்திபெற்றிலங்கிய ராணா பிரதாப சிம்மன், மஹாராஷ்டிர மன்னன் சிவாஜி போன்ற ஸ்தானமோ அளிக்கச் சிறிதும் தயங்கமாட்டாரென்பது உறுதி"

என்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன. இதை ஸர் ஆர்ச்சிபால்ட் காக்ரேன் எவ்வளவு தூரம் விரும்புவார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் நெப்போலியனையும் ராணா பிரதாப சிங்கனையும் எப்படி இணைத்துப் பேச முடியும்? நெப்போலியன் ஓர் ஏகாதிபத்திய வாதி; மஹாராணா பிரதாப சிங்கனோ சிறந்த தேசத் தியாகி. நெப்போலியனின் வீரம், மாற்றார்களின் மனத்தைக் கல்லாக்கியது; பிரதாப சிங்கனுடைய வீரமோ சத்துருக்களின் உள்ளத்தையும் கரைத்தது.

நல்வழி அல்லது ஸ்ரீ புத்தரின் மணிவாசகம் என்ற கடைசி அத்தியாயம் நன்றாயிருக்கிறது. படித்து இன்புறதற்குரியது.

கிரீஸ் தேசத்துக் கல்வி முறை—

பழைய காலத்தில்

—வ. கு. ஜெயலட்சுமி தேவி
B. A., B. ED.,

இந்த அம்மையார், நமது நாட்டுக் கல்வி முறையை அடியோடு மாற்றியமைக்க வேண்டுமென்ற ஆர்வங் கொண்டவர். முற்காலங்களில், ஒவ்வொரு நாட்டினுடைய கல்வி முறையும் எவ்வாறு அமைந்திருந்த தென்பதை நாம் அறிந்து கொண்டால்தான், நமது தற்கால நிலைக்குத் தக்கவாறு நமது கல்வி முறை எவ்வாறிருக்க வேண்டுமென்பதை நிர்ணயித்துக் கொள்ளமுடியும். இந்தக் கட்டுரையில், கிரேக்கர்களின் புராதனக் கல்வி எவ்வாறு அமைந்திருந்ததென்பதை நாம் சுருக்கமாகத் தெரிந்து கொள்கிறோம்.

மேனாட்டு நாகரிக முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருந்தது கிரீஸ் தேசமே. சுமார் நாலாயிரம் வருடங்களுக்கு முன் இத் தேசம் கல்விக்கும், இலக்கியத்திற்கும், தத்துவ ஞானத்திற்கும், மற்றும் பலகலைகட்கும் உறைவிடமாயிருந்தது. 'எலனிஸ்' (Hellenes) என்ற இந்நாட்டார், அக்காலத்திலிருந்த மற்ற நாட்டு மக்களைவிட மிக நாகரிகம் அடைந்திருந்தார்கள். இதற்குக் காரணம் அத்தேசத்தாரின்மனப்பான்மையே. ஸ்வதந்திரத்தை விரும்பி அதைப் பல துறைகளிலும் மிகத் திறனுடன் கையாடி உலக முன்னேற்றத்திற்கே முன் படையாக நின்றார்கள். இத்தேசத்தாரின் கல்வி முறையே இவைகளுக் கெல்லாம் ஊன்றுகோலாக விருந்தது என்று சொல்லலாம்.

இத்தகைய நாகரிக வளர்ச்சிக்கு இவர்களின் பூமி, மிக்க இசைந்ததாக இருந்தது. அதில் ஓரிடமாவது கடலுக்கு நாற்பது மைல் தூரத்திற்கப்புறமில்லை. கரடுமுரடாயும், பல மலைகளால் சூழப்பட்டும் பிரிக்கப்பட்டுமிருந்த இந்தப் பூமி இயற்கையழகையே உருவாகக் கொண்டிருந்தது. சீதோஷ்ண ஸ்திதியும் ஒரு வித ஊக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக விருந்தது. இதனால் இவர்கள், திடகாத்திர தேக முடையவர்களாகவும், புத்தி கூர்மையுடையவர்களாகவும், கற்பனா சக்தி நிறைந்தவர்களாகவும், இயற்கையழகில் பற்றுள்ளவர்களாகவுமிருந்தார்கள். இத்தகைய நாட்டை உறைவிடமாக அடைந்திருக்கிறோமென்ற பெருமை கிரேக்கர்களுக்கு அதிகம். அதனால் இயற்கையாகவே இவர்கள் மிக்க தேசாபிமானிகளாக இருந்தார்கள். தேசப்பாதுகாப்பிற்கும்,தேசபரிபாலனத்திற்கும் தங்கள் வாழ் நாட்களைச் செலவழிக்கத்தயாராக இருந்தார்கள்.

சாதாரணமாக எந்தத் தேசமானது சோற்றுக்கும் மனிதனுடைய தினசரித் தேவைக்கும் கஷ்டப்படாமலிருக்கிறதோ, அத்தேசமே, தேசபரிபாலனத்திலும், வியாபாரத்திலும், கல்வி முதலிய மற்றத் துறைகளிலும் மனதைச் செலுத்த முடியும். இவ்விஷயத்தில் கிரீஸ் தேசம் அதிர்ஷ்டம் செய்ததென்றே சொல்லலாம். இத்தகைய முன்னேற்றத்திற்கு அஸ்திவாரமாயிருந்த இவர்கள் கல்வி முறையை ஆராய்வோம்.

புராதன கிரேக்கர்கள், கல்வியானது தேசீய விஷயத்திற்கும், மத விஷயத்திற்கும், குடும்ப விஷயத்திற்

கும் அத்தியாவசியமென்றெண்ணினர்கள். அக்காலத்தில் இவர்களின் குடும்பம், மதம், குடியுரிமை யெல்லாமொன்றோடொன்று பிணைக்கப் பட்டிருந்தன. அதற்குக் கல்வியையே ஜனங்களுக்கு அளிக்க வேண்டுமென்பது கிரேக்க பொது ஜன அபிப்பிராயம். சரித்திர ஆராய்ச்சிக்குட்பட்ட கிரேக்க புராதனக் கல்வியைப் பற்றி ஆராய்கிற போது 'ஸ்பார்த்தா' (Sparta) வில் அநுஷ்டிக்கப் பட்ட முறையென்றும், ஆதென்ஸ் (Athens) நகரில் அநுஷ்டிக்கப்பட்ட முறையென்றும் இரண்டு கூறுகப் பிரிக்கலாம். இவ்விரு நகரங்களின் கல்வி முறையையே மற்ற கிரேக்க நகரங்கள் பின்பற்றின.

முதலாவது, 'ஸ்பார்த்தா' கல்வி முறையை ஆராய்வோம். இவர்களின் கல்வி, தேசத் தன்மையை யொத்து அமைக்கப்பட்டது. இவர்கள் தேசம் கரடு முரடான மலைகளால் சூழப்பட்டது. நகரவாசிகள் கொஞ்சம். அடிமைகள் அதிகம். சச்சரவுகள் மிகுதி. அதுவுமன்றி சிறு நகரங்களுக்குள் அடிக்கடி சண்டைகள் நடக்கும். இதன் பயனுக 'ஸ்பார்த்தா', தேசப் பாதுகாப்பையே முக்கியமாகக் கருதியது. அதற்குத் தகுந்த கல்வியையே ஜனங்களிடம் பரவச் செய்தது. ஜனங்களுக்கு, யுத்தவீரர்களுக்குரிய கல்வியே முக்கியமாகப் போதிக்கப்பட்டது. தற்போது ஜெர்மனியில் அநுஷ்டானத்திலிருக்கும் கல்வி முறையை இதற்கு உவமையாக ஓரளவு சொல்லலாம்.

'ஸ்பார்த்தா'வில் குழந்தைகள் பிறந்த உடனே சில பெரியோர்கள் அவைகளைப் பரிசோதிப்பார்கள். ஏதேனும் குறைபாடுகள் காணப் பட்டால், மலையடிவாரங்களுக்கு அந்தக் குழந்தைகளைக்கொண்டுபோய் எறிந்துவிடுவார்கள். திருப்திகர மாயுள்ள குழந்தைகள், தாய்மார்கள் பாதுகாப்பில், ஆண் பிள்ளைகளானுல் ஏழு வயது வரைக்கும், பெண் பிள்ளைகளானுல் இன்னும் கொஞ்சம் அதிக நாள் வரைக்கும் வைக்கப் படுவார்கள். அதற்குப் பின் ஏழு வயதிலிருந்து பதினெட்டு வயது வரைக்கும் பிள்ளைகள் போர் வீரர்கள் வசிக்கும் விடுதிகளில் வாசஞ்செய்ய வேண்டும். இங்குத் தேகப்பயிற்சி அளிக்கப்படும். 'ஸ்பார்த்தன்' தர்மம் போதிக்கப்படும். குறைவானசாப்பாடும், அவசியமான துணியும், முரடான படுக்கையுமே இவர்களுக்குக் கொடுக்கப்படும்.

பதினெட்டு வயதுவரையில் யுத்தத்திற்கு வேண்டிய கல்வியே முக்கியமாக அளிக்கப்பட்டது. இத்துடன் சங்கீதமும் கலந்திருந்தது. அப்புறம், பதினெட்டு வயதிலிருந்து இருபது வயது வரைக்கும் யுத்தப்பயிற்சி யளிக்கப்பட்டது. மாணுக்கர்களுக்கு தைரியமும், அஞ்சா நெஞ்சும், சகிப்புத் தன்மையும் உண்டாக்குவதற்கு அடிக்கடி பொதுவிடங்களில் சவுக்கால் அடிக்கப்படுவார்கள். பிறகு இருபது வயதிலிருந்து முப்பது வயது வரைக்கும் தங்கள் தேச ராணுவ உத்தியோகங்களில் அமர்ந்து ஊழியஞ் செய்ய வேண்டும். இதற் கப்புறந்தான் இவர்களுக்குப் பிரஜாஉரிமை யளிக்கப்பட்டது. ஸ்திரீகளுக்கும், சிறுமிகளுக்கும் தேகப் பயிற்சி கொடுக்கப்பட்டது. திடமான குழந்தைகளுக்குத் தாய்மார்களாக இருப்பதற்கு இவர்களின் தேகவளர்ச்சியில் அரசாங்கம் மிக்க அக்கரை யெடுத்துக் கொண்டது. 'ஸ்பார்த்தன்' ஜனங்களுக்குத் தங்கள் தேசந்தான் பிரதானம். மற்றவை இரண்டாம் பட்சந்தான். குடும்ப வாழ்க்கையும் அதற்கு அடி

மைப்பட்டதே. தேகப் பயிற்சிக்கு வேண்டியதைத் தவிர அறிவை விசாலிக்கத்தக்க கல்வியொன்றும் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை. பெரியோர்களின் சம்பாஷணைகளில் கவனஞ்செலுத்துவதும், கிரேக்க காவியங்கள் சிலவற்றை உருப்போடுவதுமே இவர்களின் அறிவைப்பெருக்கக்கூடிய கல்வியாயிருந்தது.

இரண்டாவது, புராதன 'அதீனியன்' கல்வி முறையை ஆராயுங்கால், அதற்கு நிகரானதைக் காண்பதரிது. கி.மு. 479 வருஷம் வரையில் ஒருவிதமான கல்வி முறையும், பின்னர் சற்று மாறுதலான கல்வி முறையும் கையாளப்பட்டது. பிந்தின காலத்தில்தான் 'ஆதென்ஸ்' நகர், பேர்பெற்ற உன்னத நிலைமையடைந்தது. 'ஆதென்ஸ்' நகர வாசிகள் தீவிர சுதந்திரப் பிரியர்கள். இவர்கள் கல்வி முறையில், எழுதுகிறதும், படிக்கிறதும், சங்கீதமும், தேகாப்பியாசமும் அடங்கியிருந்தன. பிரஜா உரிமைக்குக் கல்வி அவசியம். அந்தக் கல்விக்கு ஜனங்களே உத்திரவாதம். அதை அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அளித்தாலுஞ்சரி, அளிக்காவிட்டாலுஞ் சரி, அது அவர்களுடைய பொறுப்பு. சாதாரணமாக ஜனங்கள் பிரஜா உரிமைக்குரிய கல்வியைத் தங்கள் குழந்தைகளுக்கு அளித்து வந்தார்கள். ஆனால் எவன் அக்கல்வியைத் தன் மகனுக்குக் கொடுக்கவில்லையோ, அரசாங்கக் கட்டளைப்படி, அவன் தன் வயோதிகப்பருவத்தில் மகனின் உதவியை எதிர்பார்க்க முடியாது. மகனும் தகப்பனைக் காப்பாற்றக் கடமைப் பட்டவனில்லை. இவர்களின் கல்வியை 'அதீனியன்' அரசாங்கம் மேற்பார்வையிட்டு வந்தது.

இந்தக்கல்வியின் ஆசிரியர்களெல்லாரும் 'ப்ரைவேட்' உபாத்தியாயர்கள். மாணாக்கர்களிடமிருந்து பெறும் சம்பளமே இவர்களின் ஊதியம். இந்தச் சம்பளமும் உபாத்தியாயர்களுக்குத் தகுந்த மாதிரி கொடுக்கப்பட்டது. பள்ளிக்கூடங்கள் காலையிலிருந்து மாலை நேரம் வரையில் நடத்தப்படும். பள்ளிக்கூட சட்ட திட்டங்கள் கடுமை. 'அடி உதவுகிறுப்போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்' என்பதைத் தாராளமாக வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் ஆசிரியர்கள் உபயோகப் படுத்தினர்கள். சனி, ஞாயிறு விடு முறையாவது, அல்லது நீண்ட விடு முறை நாட்களாவது கிடையாது. சில பண்டிகை நாட்களில் தான் விடு முறை கொடுக்கீப்படும். பள்ளிக்கூட அறைகளை, உபாத்தியாயர்கள்தான் தயார்ப்படுத்தி வைக்க வேண்டும். தற்காலப் பள்ளிகளி லிருக்கும் கருவிகள் ஒன்றும் கிடையா. உபாத்தியாயர் உரைக்க, மாணாக்கர்கள் நெட்டுருப் பண்ணுவார்கள். இதுவே முக்கிய போதனு முறையாகக் கையாளப்பட்டது.

'ஸ்பார்த்தா' நகரைப் போல் 'ஆதென்ஸ்' நகரத்திலும் பிறந்த குழந்தைகள் பரிசோதிக்கப்படும். ஆனால் ஏழு வயதிற்கப்புறம், குழந்தைகள், தாய் தந்தையரை விட்டுப் பிரிக்கப்படுவதில்லை. ஏழு வயது வரையில் ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் ஒன்ருக வளரும். ஏழு வயதிற்கப்புறம் ஆண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படுவார்கள். பெண்கள் வீட்டிலிருந்தே, தாய்மார்களிடமிருந்து வீட்டு வேலையும், படிக்கவும், நன்ருகப் பாடவும் சித்திர மெழுதவும், தையல் வேலைசெய்யவும் கற்றுக்கொள்வார்கள்.

சிறு வயதில் 'அதீனியன்' ஆண் பிள்ளைகள், இக்காலத்துப் பள்ளிப்பிள்ளைகள் போல் ஒரு உபாத்தியாயரிடம்

படிக்கப் போவதில்லை. இரண்டு அல்லது மூன்று வித ஆசான்களிடம் செல்வார்கள். முதலில் ஓர் ஆரம்ப ஆசிரியரிடம் போய் எழுத, படிக்க, கொஞ்சம் கணக்குப் போடக் கற்றுக் கொள்வார்கள். பிறகு சங்கீதத்தில் தேர்ச்சி பெற சங்கீத ஆசிரியனிடம் செல்வார்கள். அதற்கப்புறம் தேகப் பயிற்சிக்காக 'பாலெஸ்ட்ரா' (Palaestra) என்னுமிடத்திற்குச் செல்வார்கள். இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு, தினமாவது அல்லது ஒன்று விட்டு ஒரு நாளாவது மாறி மாறிச் செல்வார்கள்.

புராதன கிரேக்கர்கள், சங்கீதத்திற்கு முக்கியத்வம் கொடுத்தார்கள். சங்கீதமானது ஆறுதலளிப்பதற்கும், மனச் சந்துஷ்டியுண்டாக்குவதற்கும், உள்ளத்தில் ஒருமை ஏற்படுத்தி மனிதனைப் புனிதனுக்குவதற்கும் இன்றியமையாத சாதனமென நினைத்தார்கள். அரிஸ்டாடல், பிளாடோ முதலிய கிரேக்க அறிஞர்கள், இதைப்பற்றி விரிவாகக் கூறியிருக்கிறார்கள். பொதுவாக கிரேக்கர்கள், மனித வாழ்க்கைக்கும் தேசப்பாதுகாப்பிற்கும் இன்றியமையாத சாதனமாகக் கல்வியை ஒழுங்கு படுத்திக் கொண்டார்கள். கடவுளுக்குப் பயப்படவும், உண்மையாக உழைக்கவும், சுகத்தையும் அதர்மத்தையும் வெறுக்கவும், சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படியவும், அண்டை அயலாரிடம் மரியாதையாக நடந்து கொள்ளவும், சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும், பெரியோர்களின் முதுமொழிகளை மதிக்கவும் கிரேக்கர்களின் கல்வி முறை துணை செய்தது.

கி. மு. 490-ம் வருஷத்தில் நடந்த பாரசீக சண்டைகளுக்கப்புறம் கிரீஸ் தேசத்தில் அநேக மாறுதல்கள் தோன்ற ஆரம்பித்தன. கி. மு. 479 லிருந்து கி. மு. 431 வரையில் அத்தேசம் (The Golden age of Greece என்று சொல்லப்பட்ட) உன்னத நிலையை யடைந்திருந்தது. பேர் பெற்ற கவிகள், கலைஞர்கள், தத்துவ ஞானிகள், அமைச்சர்கள் தோன்றினார்கள். அதுவும் தவிர, அத்தேசத்தாரின் மனோபாவமும் மாறத்தொடங்கிற்று. புது மாதிரி சித்தாந்தம் பரவலாயிற்று. அரசியல் துறையிலும் அநேக மாறுதல்கள் ஏற்பட்டன. இவைகளுக்குத் தகுந்தபடி கல்வியின் நோக்கமும் திருத்தமடைந்தது.

'ஸோபிஸ்டுகள்' (Sophists) என்று சொல்லப் பட்டவர்கள் தங்கள் புது சித்தாந்தத்தைப் பரவச் செய்தார்கள். மனிதனே எதற்கும் அளவுகோல் என்பதே இவர்களின் கொள்கை. அதற்குகந்தபடி, பழைய கல்வி முறையைத் தள்ளி, முன்னிருந்த கடினமான தேகப்பயிற்சிகளை விலக்கி, சுலபமும், மனதிற்குச் சந்தோஷந் தரக்கூடியதுமான வகைகளை ஏற்படுத்தினார்கள். கல்வித் திட்டத்தில் புது விஷயங்கள், அதாவது கணிதம், இலக்கணம், தர்க்கம், இவைகள் சேர்க்கப் பட்டன. 'ஸோபிஸ்டு'களினுடைய கல்வி முறை, மாறிக்கொண்டு வரும் கிரீஸ்தேசத் தன்மைக்கு ஒத்ததாகக் கையாளப்பட்டது. பதினாறு வயது வரையில், புராதன 'அதீனியன்' கல்வி முறையிலிருந்த பாடங்களை கையாளப்பட்டு வந்தன. ஆனால் பழைய நூலாசிரியர்களுக்குப் பதில் புதியவர்களை ஜனங்கள் ஆதரித்தார்கள். 16 வயதிற்கப்புறம், மேற்படிப்பில் கல்வியின் நோக்கம் மாறுதலடைந்தது. தேசத்திற்காக இருந்த கல்வி போய், சுய வளர்ச்சிக்காகக் கல்வி என்னும் கொள்கை பரவத்தொடங்கிற்று. பதினாறு வயதிலிருந்து , பதினெட்டு வயது வரையிலிருந்த கடின தேகப்

பயிற்சிக்குப் பதிலாக இப்பொழுது மாணக்கர்கள் 'ஸோபிஸ்டு'களின் பள்ளிக்குச் சென்ருர்கள். அவ்விடத்தில் சாதுரியமாகப் பிரசங்கம் செய்யவும், மாறுதலடைந்து வரும் தங்கள் தேசத் தன்மைக்கு ஏற்றமாதிரி தேசிய விவகாரத்தி லீடு படுவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டார்கள்.

இந்த 'ஸோபிஸ்ட்' பள்ளிக் கூடங்களுக்கு எதிரிடையாக, வேறு பள்ளிக் கூடங்கள் 'ஆதென்ஸ்' நகரில் தோன்ற ஆரம்பித்தன. இதற்கு மூலகாரணர் சாக்ரடீஸ் (கி. மு. 469-399) என்பவர். மனிதன் தன்னைத் தான் முதலில் அறிந்து கொள்ள வேண்டுமென்பதே இவர் கொள்கை. தன்னையறிவதற்காக வினவிடை மாதிரியான போதனை முறை ஏற்படுத்தி, தெருவில் போகும் ஜனங்களை ஸம்பாஷணையில் ஈடுபடச் செய்து, அதன் மூலம் அவர்களின் அறியாமையை உணர்த்தினர். அதனல் அநேக விரோதிகள் தோன்றி, கடைசியில் 'அதீனியன்' நகரவாஸிகளின் உத்தரவுப்படி கொலை செய்யப்பட்டார். சாக்ரடீஸினுடைய முக்கிய சிஷ்யர் பிளாடோ (கி. மு. 429-348). இவர் தம் குருவைப்போல் வழியில் போகும் ஜனங்களை மடக்கிக் கற்பிக்காமல், தம் கல்வியின் நோக்கங்களை 'குடியரசு' (Republic) என்னும் நூலில் தெரிவித்தார். இவர் கி. மு. 386ல் சாஸ்திர பாடசாலை ஒன்று ஏற்படுத்தி அதில் சுமார் நாற்பது வருஷம், உபந்யாசிப்பதிலும், எழுதுவதிலும் காலத்தைக் கழித்தார். இவருடைய கல்லூரி, அக்காலத்தில் மற்றவைகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தது. இக்கல்லூரியில், உபாத்தியாயர்களுக்கெல்லாம் ஒரு சங்கம், மாணக்கர்களும் உபாத்தியாயர்களும் ஒற்றுமையாயிருப்பதற்காகப் பொதுக் கோவில், புத்தகசாலை, பிரசங்க விடுதிகள், வாசஸ்தலம் இவைகளை ஏற்படுத்தி இருந்தார். இங்குத் தத்துவ ஞானம், கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கப் பட்டன. ஆண் பெண் இருபாலரும் இவர் கல்லூரியில் சேர்க்கப் பட்டார்கள். இவருடைய 'குடியரசு' என்னும் நூலில், ஒரு சமூகம் எப்படி இருக்க வேண்டும், அதற்கு எத்தகைய கல்வி வேண்டு மென்பதை விவரித்து எழுதி இருக்கிருர். இவருடைய கல்வியின் உயரிய தத்துவங்களாவன :—கல்வி இரு பாலருக்கும் அளிக்கப்படவேண்டும். அது அவரவர் இயல்பான குணத்திற்கு ஒத்த மாதிரி இருக்கவேண்டும். அவரவர் எந்தெந்த வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களென்பதைக் கண்டு பிடிப்பதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். கல்வித் துறையில் எல்லோருக்கும் வசதி யளிக்கப்பட வேண்டும்.

கிரீஸ் தேசம் சுமார் கி. மு. 338ல் பிலிப் அரசனுடைய ஆதீனத்தின் கீழ் வந்தபொழுது, ராணுவப்பயிற்சி அவசியமில்லாமல் போயிற்று. அதற்குப் பதிலாகத்தத்துவஞானபோதனைகளைக் கேட்பது கட்டாயப்படிப்பாக ஏற்படுத்தப்பட்டது. பொது ஜனங்கள் நாளாவட்டத்தில் இவைகளை ஆதரித்தார்கள். மாணக்கர்களுடைய படிப்பு, இரண்டு வருஷங்களிலிருந்து ஆறு அல்லது ஏழு வருஷப்படிப்பாக மாற்றப்பட்டது. கலாசாலை வாழ்க்கை ஏற்படத்தொடங்கிற்று. இதிலிருந்து தான் 'ஆதென்ஸ்' கலாசாலை (The University of Athens) சுமார் கி.மு. 200ல் தொடங்கியது. கிரேக்கர்களின் இந்த உயர்தரப் படிப்பே, பிற்கால உலக நாகரிக வளர்ச்சிக்கு முதற்படியாக நின்றது.

வியாபாரப் புள்ளிகள்

1936ம்வருஷத்தில், பர்மாவிலிருந்து வெளி நாடுகளுக்கு, தங்கம், வெள்ளி, ஈயம் முதலிய உலோகப் பொருள்கள் 224,697,813 ரூபாய் பெறுமான அளவு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கின்றன. இவற்றில் இந்தியாவுக்கு மட்டும் ஏற்றுமதி செய்யப் பட்டதன் மதிப்பு 179,590,919 ரூபாய்.

ஃ ஃ ஃ

அப்படியே மேற்படி 1936ம் வருஷத்தில், வெளி நாடுகளிலிருந்து பர்மாவுக்குள் இறக்குமதியான உலோகப் பொருள்களின் மதிப்பு 12,482,886 ரூபாய். இவற்றில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டதன் மதிப்பு 4,281,091 ரூபாய்.

ஃ ஃ ஃ

துருக்கியில் எண்ணெய், பெட்ரோல் முதலியவைகளுக்காக இறக்குமதித் தீர்வையை அரைப்பங்காகக் குறைத்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஜெர்மனியில் காலி புட்டிகள் என்ன விலைக்கு விற்கப்படுகின்றனவோ அதே விலைக்கு, ஜப்பானிலிருந்து பீர் நிறைந்த புட்டிகள் இறக்குமதி செய்யப் பட்டு விற்கப் படுகின்றன.

ஃ ஃ ஃ

ஜப்பானில் தயாரிக்கப் பட்ட தீப்பெட்டிகள் சீனாவில் விற்பனையாகின்றன. இவைகளின் மீது 'ஜப்பான் வீழ்க' என்ற வாசகம் காணப் படுகிறதைக்கண்டு சில ஜப்பானியர்கள் ஆச்சரியப் பட்டார்கள். பிறகு விசாரித்ததில், சீனாவில், தங்கள் தீப்பெட்டிகள் நன்றாக விலையாக வேண்டுமானால், இந்த மாதிரியான வார்த்தைகளைப் போட்டால்தான் விற்பனையாகுமென்று கருதிப் போட்டதாக, மேற்படி தீப்பெட்டி உற்பத்திக்கார கம்பெனியார் தெரிவித்தார்களாம். இத்தகைய தீப்பெட்டிகளை விற்பனைக்குக் கொண்டு வரக் கூடாதென்று சீன அதிகாரிகள் உத்திரவிட்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

1936-ம் வருஷம் முடிய ஒரு வருஷத்தில், உலகத்தில் இருக்கிற மொத்த தங்கத்தின் மதிப்பு 234,310-லட்சம் டாலராகும். ஒரு டாலர் என்பது ஏறக்குறைய மூன்று ரூபாய் மதிப்புக்கு அதிகப்பட்டது.

ஃ ஃ ஃ

உலகத்திலுள்ள மொத்த தங்க சேமிப்பில் அமெரிக்கா மட்டும் ஏறக்குறைய பாதி அளவு, தன் கைவசப் படுத்திக் கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

பர்மா மாகாணத்தில் 1936ம் வருஷம் 41,847,602 ரூபாய் பெறுமான 29,560 கிரய பத்திரங்கள் ரிஜிஸ்தர் செய்யப் பட்டிருக்கின்றன.

ஃ ஃ ஃ

மேற்படி வருஷத்தில் பர்மாவில்மட்டும் 11,415,469 ரூபாய் பெறுமான 20,047 மார்க்கீசு பத்திரங்கள் ரிஜிஸ்தர் செய்யப் பட்டிருக்கின்றன. 1935ம் வருஷத்தை விட பிரஸ்தாப வருஷத்தில் 1996 பத்திரங்கள் அதிகமாக ரிஜிஸ்டர் செய்யப் பட்டிருக்கின்றன. லேவாதேவித் தொழில் சரளமாக நடைபெறுகிறதென்பதற்கு இஃது ஓர் அடையாளம் என்று அரசாங்க அறிக்கை கூறுகிறது.

ஃ ஃ ஃ

1937ம் வருஷம் மார்ச் மாதம் முடிய ஒரு வருஷத்தில் சென்னைத் துறை முகத்தின் மூலமாகச் சுமார் 1,596¾ லட்சம் ரூபாய் பெறுமான

பொருள்கள் இறக்குமதியாயிருக்கின்றன. 1,570 லட்சம் ரூபாய் பெறுமான பொருள்கள் ஏற்றுமதியாயிருக்கின்றன.

ஃ ஃ ஃ

1936-37ம் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் 1,221 மோட்டார் வண்டிகள் இறக்குமதியாயிருக்கின்றன. இவற்றில் 167 வண்டிகள் அமெரிக்காவிலிருந்தும், 977 வண்டிகள் ஐரோப்பாவிலிருந்தும் வந்திருக்கின்றன.

ஃ ஃ ஃ

மேற்படி வருஷத்தில் சிமெண்ட் மட்டும் சென்னையில் 6,773 டன் இறங்கியிருக்கிறது. இவற்றில் 100-க்கு 97 பாகம் ஐரோப்பாவிலிருந்து.

ஃ ஃ ஃ

1936ம் வருஷத்துக் கடைசியில் மலேயா தீபகற்பத்திலுள்ள இந்தியர்களின் ஜனத்தொகை 656,517. சென்ற வருஷத்தில், தென்னிந்தியாவிலிருந்து மட்டும் 43,191 பேர் பினங்கு துறைமுகத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

சென்ற சில வருஷங்களை விட இந்த வருஷம் இங்கிலாந்தின் வர்த்தகம் செழித்திருப்பதாக அந்நாட்டிலிருந்து கிடைக்கும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. உதாரணமாக 1937ம் வருஷம் ஜூலை மாதம் இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பு 47,569,834 பவுன். 1930ம் வருஷத்திற்குப் பிறகு இவ்வளவு அதிகமான ஏற்றுமதி ஆனது இதுதான் முதல் தடவை.

ஃ ஃ ஃ

ஸ்பெயின் யுத்தமானது, இங்கிலாந்துக்கும் ஸ்பெயினுக்கும் வழக்கமாக நடைபெறுகிற வியாபாரத்தை அதிகமாகப் பாதித்திருக்கிறது. 1936ம் வருஷம் முதல் ஆறு மாதத்தில் இங்கிலாந்திலிருந்து ஸ்பெயினுக்கு 1,465,412 பவுன் பெறுமான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. 1936ம் வருஷம் பிந்திய ஆறு மாதத்தில் 990,509 பவுன் பெறுமான பொருள்கள் ஏற்றுமதியாயின. 1937ம் வருஷம் முதல் ஆறு மாத காலத்தில் 560,319 பவுன் பெறுமான பொருள்கள்தான் ஏற்றுமதியாயிருக்கின்றன

ஃ ஃ ஃ

திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தார், 1935ம் வருஷம் 83,839 ரூபாய்க்கும், 1936ம் வருஷம் 88,988 ரூபாய்க்கும் 1937ம் வருஷம் ஜூலை மாதத்தோடு முடிகிற ஆறு மாதத்தில் 37,473 ரூபாய்க்கும் கதர் விற்றிருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

அடுத்த காங்கிரஸ், குஜராத் மாகாணத்திலே ஹரிபுரா என்ற கிராமத்தில் நடைபெறப் போகிறதல்லவா? சுமார் 600 ஏகரா விஸ்தீரணமுள்ள மைதானத்தில், காங்கிரஸுக்கென்று ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். இதில் சுமார் 200 ஏகரா விஸ்தீரணமுள்ள இடத்தை, கதர் சுதேசி பொருட்காட்சிக்கென்று ஒதுக்கிவைப்பார்கள்.

ஃ ஃ ஃ

1937ம் வருஷம் ஜூலை மாதத்தில் இங்கிலாந்தில் வேலையில்லாதவர் 1,069,180 பேர்.

1936ம் வருஷம் உலகத்தில் உற்பத்தியான முக்கிய உலோகப் பொருள்கள்.

அலுமினியம்	3,587,000	டன்
செம்பு	16,000,000	,,
காரீயம்	89,600,000	,,
பெட்ரோல்	2,465,000,000	,,
தகரம்	1,660,000	,,
ரப்பர்	870,000	,,

சராசரி வருமானமும் சம்பள விகிதமும்

இந்தியா ஒன்றிலேதான், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. அந்தந்த நாட்டு ஜனங்களின் சராசரி வருமானத்திற்குத் தகுந்தபடி தான், அந்தந்த நாட்டு அரசாங்கச் செலவும் நிர்ணயிக்கப்படும். ஆனல், இந்தியாவில் உத்தியோகஸ்தர்களின் சம்பள விகிதமே, தேச வருமானத்தின் பெரும் பாகத்தை விழுங்கிவிடுகிறது. இதைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யவேண்டுமானல், மற்ற நாடுகளில், ஜனங்களின் வருமானம் எவ்வளவு உத்தியோகஸ்தர்களின், சராசரி சம்பளம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளல் நல்லதல்லவா ?

தேசத்தின் பெயர்.		ஒரு நபரின் சராசரி வருஷ வருமானம் ரூபா	சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சராசரி சம்பளம் வருஷத்திற்கு ரூபா
கிரேட் பிரிட்டன்	....	1,240	40,000
கானடா.	....	1,420	27,400
அமெரிக்கா (ஐ. மா)	....	1,850	27,400
ஜெர்மனி	....	520	14,960
ஜப்பான்	....	295	8,800
இந்தியா	....	74	48,000

பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகங்களின் அந்தஸ்துக் கிரமம்

(மேலிருந்து கீழே)

தரைப் படை	கப்பற் படை	ஆகாயப் படை
பீல்ட் மார்ஷல்	அட்மிரல் ஆப் தி ப்ளீட்	மார்ஷல் ஆர். ஏ. எப்.
ஜெனரல்	அட்மிரல்	ஏர் சீப் மார்ஷல்
லெப்டினெண்ட்-ஜெனரல்	வைஸ்-அட்மிரல்	ஏர் மார்ஷல்
மேஜர்-ஜெனரல்	ரேர்அட்மிரல்	ஏர் வைஸ் மார்ஷல்
ப்ரிகேடியர்	கம்மோடோர்	ஏர் கம்மோடோர்
கர்னல்	காப்டன்	க்ரூப் காப்டன்
லெப்டினெண்ட் கர்னல்	கமாண்டர்	விங் கமாண்டர்
மேஜர்	லெப்டினெண்ட் கமாண்டர்	ஸ்க்வாட்ரன் லீடர்
காப்டன்	லெப்டினெண்ட்	ப்ளைட்லெப்டினெண்ட்
லெப்டினெண்ட்	சப் லெப்டினெண்ட்	ப்ளையிங் ஆபீஸர்
செகண்ட் லெப்டினெண்ட்	கமிஷன் ஆபீஸர்	பைலட் ஆபீஸர்

வீழ்ந்து போன விஜயநகரம்

—ஒரு பழைய மாணாக்கன்

ஜெருசலேம் நாடு ஒரு காலத்தில் மிகவும் உன்னதமான ஸ்திதியிலிருந்தது. பிறகு அது சீரழிந்து, பார்ப்பவரின் உள்ளத்தைக் கலக்கும் தன்மையதாய் வீழ்ந்து பட்டது. அப்படி வீழ்ச்சி யுற்ற காலத்தில், அதனைப் பார்த்து ஒரு புலவன் பின் வருமாறு புலம்புகிறான்:—

"ஜனங்கள் நிறைந்த இந்த நாடு இப்பொழுது எப்படித் தனிமையாக இருக்கிறது? கணவனை இழந்த கைம் பெண்ணைப் போல் எப்படிக் காலந் தள்ளுகிறது? தேசங்களுக்கிடையே பெருமையுடைத்தாகவும், மாகாணங்களுக்குள்ளே அரசியாகவும் இருந்த இந்தப் பிரதேசம் இப்பொழுது பிறருக்கு ஆட்பட்டு எப்படிக் கிடக்கிறது?"

இந்த வாக்கியங்கள் விஜய நகரத்திற்கு முற்றிலும் பொருந்தும். ஒரு காலத்தில் அதாவது 15, 16வது நூற்றாண்டுகளில் இந்த ராஜ்யம் இருந்த சிறென்ன? உலக யாத்திரிகர்களெத்தனை பேர் இதனைப் பார்ப்பதற்காகவே ஓடோடியும் வந்து, இதன் அழகையும் வளப்பதையும் வியந்து பாராட்டிக் கொடுத்துப் போன நற்சாட்சிப் பத்திரங்கள் எத்தனை? எடுத்துப் போன பொருள்கள்தான் எவ்வளவு? ஆனால் இது பொழ்து, சரிந்து போன சுவர்களும், இடிந்து போன கட்டிடங்களும் மைல் கணக்காகப் பரவியிருக்கும் ஹம்பி பிரதேசத்தைச் சென்று பார்ப்போமானால், மேற்படி கவிஞனுடைய புலம்பல், நமது வாய்விட்டுத் தானே வெளி வரும் என்பது நிச்சயம்.

தென்னிந்தியாவிலே ஒரு காலத்தில் மிகப்பிரபலமாயிருந்த விஜய நகர ராஜ்யம் எப்படி உண்டாயிற்று என்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமைகள் பல காணக்கிடக்கின்றன. 14வது நூற்றாண்டில், முஸ்லீம்கள் வட இந்தியாவில் அரசாங்க ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்ததோடு அமையாமல், தென்னிந்தியாவின் மீதும் படை யெடுத்து வந்து, நாடுகளைப் கைப்பற்றிக் கொள்ள முயன்றனர். இந்தப் படை யெடுப்பைத் தகைய ஐந்து சகோதரர்கள் முயற்சி செய்தார்களென்றும், இந்த முயற்சியின் முடிவே விஜய நகர ராஜ்யமாகப் பிற் காலத்தில் தோன்றியதென்றும், இந்த ஐந்து பேரும் சங்கமன் என்பாருடைய புத்திரர்களென்றும் தெரிகின்றன.

இவர்களில், ஹரிஹரன், புக்கன் என்ற இரண்டு பேர் சேர்ந்து, துங்கபத்திரா நதிக்குத் தெற்குப் பக்கத்தில், ஆனேகுந்தி கோட்டைக்கு நேர் எதிராக ஒரு நகரத்தை ஸ்தாபித்தார்கள். இதுவே பின்னர் விஜய நகர ராஜ்யமாகப் பிரகாசித்தது. இவர்கள் மேற்படி நகரத்தை ஸ்தாபித்த பத்து வருஷங்களுக்குள், இவர்களுடைய செல்வாக்கு உலகத்தின் பல பாகங்களுக்குப் பரவியதோடு கூட, விஜய நகர ராஜ்ய எல்லையும் விஸ்தரித்துக் கொண்டு வந்தது. சீன தேச சக்ரவர்த்திக்கு இவர்கள் தூதனுப்பக் கூடிய அந்தஸ்து பெற்றார்களென்றால் நாம் விஸ்தரித்துக் கொண்டுபோக வேண்டியதில்லை யல்லவா?

ஆனால் இவர்களும் இவர்களுடைய சந்ததியார்களும், தங்களுடைய ராஜ்

யத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டி, சதா போராடியே வர வேண்டி யிருந்தது. டில்லி சுல்தானுக்குச் சிற்றரசனு யிருந்த ஒருவன் கி. பி. 1347-ம் வருஷத்தில் பாமினி ராஜ்யத்தை ஸ்தாபித்தான். இந்த ராஜ்யம் சுமார் 150 வருஷகாலம் அதிக செல்வாக்குடன் விளங்கி வந்தது. இது முஸ்லீம் ராஜ்யம். இதற்கும் ஹிந்து ராஜ்யமாகிற விஜய நகரத்திற்கும் எப்பொழுதும் சச்சரவுகள் நடைபெற்றுக் கொண்டு வந்தன.

பாமினி ராஜ்யம் பின்னர் பிஜபூர், பீடார், கோல்கொண்டா, ஆமத்நகர், பீரார் என்ற ஐந்து சிற்றரசுகளாகப் பிரிந்தன. பாமினி ராஜ்யத்தின் கட்டுத் தளர்ந்து போகவே, விஜயநகரராஜ்யத்தின்பலம் அதிகமாயிற்று. ஆனால் இந்த பலம் நீடித்து நிற்கவில்லை. ஏனென்றால் விஜய நகர மன்னர்கள், தங்கள் அதிகார பலத்தினுல் அதிக செருக்குக் கொண்டு தங்களுக்கு வடக்குப் புறமாக இருந்த மேற்படி ஐந்து சுல்தான்களையும் இழிவாகப் பேசியும் நடத்தியும் வந்தார்கள். எதிரிகளுக்குச்சகிக்குமோ? கடைசியில் கி. பி. 1565-ம் வருஷம் தலைக்கோட்டை யுத்தத்தில், பாமினி சுல்தான்கள், விஜய நகர மன்னனை முறியடித்து வெற்றி கொண்டார்கள். இது நிற்க.

விஜய நகரத்தின் வாழ்வைச் சிறிது கவனிப்போம். புக்கனும் ஹரிஹரனும் இந்த ராஜ்யத்தை ஸ்தாபித்த சில வருஷங்களுக்குள் விஜய நகரம் என்கிற இதன் ராஜதானி மிகவும் அழகு பெற்று விட்டது. செல்வம் குவிந்தது; ஜனத்தொகை அதிகமாயிற்று. கோட்டை கொத்தளங்கள் யாவும் பலப்படுத்தப் பெற்றன. 1420ம் வருஷம் இந்த ஊரை வந்து பார்த்த நிகோலாய் காண்டி என்ற இத்தாலிய யாத்திரிகன், பிரமிப்படைந்து பேசுகிறான். இந்தத் தலைநகரம் அறுபது சதுர மைல் விஸ்தீரண முடையதாக இருந்ததென்றும், இதில் வியாபாரம், கைத்தொழில் முதலியன பெரிதும் முன்னேற்ற மடைந்திருந்ததென்றும் கூறிச் செல்கிறான்.

1443ம் வருஷம் இவ்வூரை வந்து பார்த்த அப்துர் ரஜாக் என்பவன் இதனைச் சுற்றி ஏழு மதிற் சுவர்கள் இருந்தனவென்று சொல்கிறான். இவன் வந்து பார்க்கிற காலத்திலேயே, இந்த ஊரில் ஜனங்களுக்குக் கருங்கற் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வந்தது. ஜனங்களுக்கு வறுமை என்பது தெரியாமலிருந்தது.

இந்த ராஜ்யத்தை ஆண்ட அரசர்கள் பலர். ஆனால் இவர்களில் கிருஷ்ண தேவராயன் என்பவன் மிகச் சிறந்தவனாகப் போற்றப் பட்டு வருகிறான். இவன் கலா விநோதன். அது போலவே, ராஜ்ய நிருவாகத்திலும் மிகத் திறமையுள்ளவன். இவனுடைய அரச அவையில் மகா பண்டிதர்களும் சிறந்த ராஜதந்திரிகளும் சரி சமானமாகக் கொலு வீற்றிருந்தார்கள். கிருஷ்ண தேவ ராயன் அரசாண்ட காலத்தில் பேயிஸ் என்ற போர்த்துகேசிய யாத்திரிகன் ஒருவன், இந்த நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்தான். இவன், இந்த நாட்டைப் பற்றியும், இதன் அரசியலமைப்பைப் பற்றியும், ஜனங்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் சுவாரஸ்யமான குறிப்புகள் பல எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறான். இதிலிருந்து முக்கியமான சில அம்சங்களை மட்டும் சுருக்கமாக இங்குக் கூறுவோம்.

பேயிஸ் என்பவன் வந்து பார்க்கிறபோது—அதாவது இன்றைக்குச்



1937
ஜூலை

24 சென்னை மந்திரி திரு. எஸ். ராமநாதன், ஷேகான் கிராமத்தில் காந்தியடிகளைக் கண்டு பேசினார்.

25 ஆந்திர தேசத்திலுள்ள ஸ்ரீ பாரதி தீர்த்த சபையார், ரவீந்திரநாத் டாகூருக்கு 'கவி சம்ராட்' என்ற பட்டத்தை அளித்திருக்கின்றனர்.

27 சேலம் ஜில்லாவில் மதுவிலக்கு முறையை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதென்று சென்னை மந்திரிச் சபை தீர்மானித்தது.

சென்னை வைத்தியக் கல்லூரிக்கு டாக்டர் ஏ. லட்சுமண சாமி முதலியார், தலைவராக நியமனம் செய்யப்பட்டார். ஓர் இந்தியர் நியமனம் செய்யப்பட்டது இதுதான் முதல் தடவை.

சுமார் 450 வருஷங்களுக்கு முன்னர் விஜய நகரத்தில் சுமார் ஒரு லட்சம் வீடுகள் இருந்தன. ஜனங்கள் சௌகரியமாக வசிப்பதற்குரிய எல்லா வசதிகளும் இந்த நகரத்தில் இருந்தன. உலகத்தில் வேறெந்த நகரத்திலும் இத்தகைய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை யென்பது பேயிஸ் வாக்கு. ஆங்காங்குப் பூந்தோட்டங்களும், கிணறுகளும், ஒழுங்கு படுத்தப் பெற்று இருமருங்கும் மரங்கள் நிறைந்த பாதைகளும் கிருஷ்ண தேவராயனுடைய நிருவாகத்திறமையைக் காட்டின.

போர் வீரர்கள் பத்து லட்சம் பேர் இருந்தார்கள். இவர்களில் குதிரைப் படையினர் அதிகம். கிருஷ்ண தேவராயன் ராய்ச்சூரின் மீது படையெடுத்துச் சென்ற போது, 70,3000 காலாட் படைகளும், 32,600 குதிரைகளும் 551 யானைகளும் கூடச் சென்றன என்று பேயிஸ் கூறுகிறான். இவை தவிர, பீரங்கிப் படையும் இவனுக்கு இருந்தது.

கிருஷ்ண தேவராயனுடைய காலத்தில் நீதி இலாகா நிருவாகம் மிகக் கண்டிப்பாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. மிகச்சுலபமான முறையில் ஜனங்களுக்கு நீதி வழங்கப்பட்டதென்றும், இதில் அதிக பணச் செலவோ, காலதாமதமோ கிடையாதென்றும் தெரிகின்றன.

நாடு செழிப்புற் றிருந்ததால், கலை வளர்ச்சி மிகவும் செழிப்பாக இருந்தது. வெளி நாடுகளிலிருந்தும் பல புலவர்கள் இங்கு வந்து ஆதரவு பெற்றார்கள்.

இங்ஙனம் பல வகையிலும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த இந்த விஜய நகரம் நாஜ்யம், தன்னைப்பற்றி மிக அதிகமாக நினைத்துக் கொண்டு தனது நிலையறியாத ஒரு காரணத்தினாலேயே, 1565-ம் வருஷம் ஜனவரி மாதம் 23-ந் தேதி நடைபெற்ற தலைக் கோட்டை யுத்தத்தில் முடிவடைந்துவிட்டது.

ஸ்பெயினில், மாட்ரிட் நகருக் கருகாமை யில்நடைபெற்ற பலத்த சண்டையில் இரு தரத்திலும் சுமார் 23,000 பேர் இறந்து போயினர்.

28 பீஹார் சட்ட சபைக்கு திரு. முகுந்த பிர சாத் தாஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

கொத்தப்பட்டணம் அரசியல் டள்ளிக்கூட சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருந்த 16 பேரை விடுதலை செய்து விடுமாறு சென்னை மந்திரி சபை உத்திரவு செய்தது.

ஐக்கிய மாகாணத்தில் பின் வருவோர் மந் திரிகளாக இருப்பர் என்று அறிவிக்கப்பட் டது:- (1) பண்டித கோவிந்த வல்லப பந்த் (2) டாக்டர் கைலாசநாத் காட்ஜு (3) திருமதி. விஜய லட்சுமி பண்டிட் (4) பியாரிலால் சர்மா (5) ரபி அகமத் கித் வாய் (6) ஹபீஸ் முகம்மது இப்ராஹிம்.

'தினமணி', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'ராஜ குலதீபிகை' முதலிய பத்திரிகைகள் செலுத்தியிருந்த ஜாமீன் தொகையை வாபீஸ் செய்து விடுமாறு சென்னை மந்தி ரிச் சபை உத்திரவு செய்திருக்கிறது.

29 எகிப்து மன்னரான பரூக், இன்று முடி சூட்டப்பட்டார்.

வங்காளச் சட்ட சபையில் வரவு செலவு திட்டம் ஆஜர் படுத்தப்பட்டது. 34 லட் சம் அதிக வரவு எதிர் பார்ப்பதாக பொக் கிஷ மந்திரி கூறினர்.

30 அந்தமானிலுள்ள சுமார் 250 கைதிகள் உண்ணு விரதம் அநுஷ்டிக்கத் தொடங்கி னர்.

சென்னை மேற்சபையின் உபதலைவராகிய திரு. கே. வேங்கடசாமி நாயுடு, தமக்கு எவ்வித சம்பளமும் தேவையில்லையென்று தெரிவித்து விட்டார்.

மத்திய மாகாண சட்டசபை கூடியது. திரு. ஜி. எஸ். குப்தா, தலைவராகத் தெரிந் தெடுக்கப் பட்டார்.

ஐக்கிய மாகாண சட்டசபைக்கு பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் தலைவரா கத் தெரிந் தெடுக்கப் பட்டார்.

இந்திய தேசிய கீதத்திற்கு அனைவரும் மரி யாதை செலுத்த வேண்டுமென்று மத்திய மாகாண அரசாங்கத்தார் ஒரு சுற்றறிக்கை விடுத்தனர்,

31 சீன-ஜப்பான் யுத்தம் மும்முரமாகியது. ஜப்பானியர்கள், ஆகாய விமானத்திலி ருந்து வீசிய குண்டுகளினல் நூற்றுக் கணக் கான சீனர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஆகஸ்ட்

1 ஸ்தல ஸ்தாபனக் கட்டிடங்களின் மீது தேசியக் கொடி பறக்க விடலா மென்று சென்னை அரசாங்கத்தார் உத்திரவு விடுத்தி ருக்கின்றனர்.

2 வார்தா முனிசிபாலிடியார், நகர எல்லைக் குள் கள்ளுக் கடைகள் ஒன்றும் இருக்கக் கூடாதென்று தீர்மானம் நிறை வேற்றி யிருக்கின்றனர்.

இத்தலியும் இங்கிலாந்தும் நேசப் பான்மை யுடன் இருக்க வேண்டு மென்பதன் சம்பந்தமாக முஸோலினி, தம் கைப்பட பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லே னுக்கு ஒரு கடிதம் எழுதினர்.

3 சிறைச் சாலையிலுள்ள கைதிகளுக்கு மோர் சப்ளை செய்யப்பட வேண்டு மென்று சென்னை அரசாங்கம் ஓர் உத்திரவு பிறப் பித்தது.

4 மகாத்மா காந்தியும் லார்ட் லின்லித்கௌ வும், வைஸிராய் மாளிகையில் சந்தித்து நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அகில உலக யூதர் மகா நாடு ஜூரிச்சில் கூடி, பாலஸ்தீன் அறிக்கையைக் கண்டிக் துத் தீர்மானம் நிறை வேற்றியது.

பிரபல சரித்திராசிரியரான டாக்டர் கே.பி. ஜயஸ்வால் பாட்னவில் இறந்து போனர்.

ஈராக் அரசாங்கம், பாலஸ்தீன் அறிக்கை யைக் கண்டித்து, சர்வதேச சங்கத்திற்கு ஒரு குறிப்பு அனுப்பி யிருக்கிறது.

வட சீனவில் தொடங்கியுள்ள யுத்தத் திற்குச் சுமார 240 லட்சம் யவுன் அதி கப் பணம் தேவையென்று ஜப்பானிய அரசாங்கம் ஜப்பான் பார்லிமெண்ட் முன் னர் ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தது.

பொதுக் கூட்டங்களில் பேசப்படுபவை களைக் குறிப்பு எடுக்க வேண்டாமென்று ஒரிஸா மந்திரிச் சபையார் உத்திரவு விடுத் திருக்கின்றனர்.

5 திரு, சி. எப். ஆண்ட்ரூஸ், இங்கிலாந்திலி ருந்து பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்.

6 திரு முகுந்தலால் சர்க்காரை விடுதலை செய்து விடுமாறு சென்னை அரசாங்கத் தார் உத்திரவு செய்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மூன்று ஜெர்மானிய பத்திரிகை நிருபர்களுக்கு இங்கிலாந்திலிருந்து வெளியேறுமாறு உத்திரவு அனுப்பியிருக்கின்றனர்.

8 திரு. சி. எப். ஆண்ட்ருஸ், ஷ்வேகான் கிராமத்தில் மகாத்மா காந்தியைக் கண்டு பேசினர்.

அந்தமான் தீவிலுள்ள கைதிகள் உண்ணாவிரதம் அநுஷ்டிக்கத் தொடங்கியதற் கநுதாபமாக, அலிபூர் சிறையிலுள்ள கைதிகளும் உண்ணாவிரத மநுஷ்டிக்கத் தொடங்கினர்.

10 திருமதி இந்திரா நேருவுக்கு பம்பாயில் தொண்டை ஆபரேஷன் நடந்தது.

அரசாங்க பென்ஷனர்கள், அரசியல் ஸ்தாபனங்களில் கலந்துழைக்கலாமென்று சென்னை அரசாங்கத்தார் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

திருமதி ஹம்ஸ மேத்தா, பம்பாய் மந்திரிகளில் ஒருவருக்குக் காரியதரிசியாயிருக்குமாறு நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

மூவாயிரம் ஜப்பானியத் துருப்புகள், பீகிங் நகரத்திற்குள் நுழைந்தன.

மத்திய மாகாணத்தில் இலவசக் கல்வி முறையை அநுஷ்டிப்பதன் சம்பந்தமாக, மேற்படி மாகாணக்கல்வி மந்திரி மகாத்மா காந்தியுடன் கலந்து பேசினர்.

கான்பூரில் ஏற்பட்டிருந்த மில் வேலை நிறுத்தம், மந்திரிகளின் தலையீட்டின் பேரில், சமரஸமாக முடிந்தது.

ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் வீசுவது எப்படி என்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் பயிற்சி லண்டனில் நடைபெற்றது. 400 ஆகாய விமானங்கள் இதில் கலந்து கொண்டன.

11 ஜப்பானியர்கள் நாங்கோ ரெயில்வே ஸ்டேஷனைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள்.

பிரதம மந்திரிக்கு மாதம் மூவாயிர ரூபாயும் மற்ற,மந்திரிகளுக்கு மாதம் இரண்டாயிர ரூபாயும் சம்பளமென்ற ஒரு தீர்மானம், வங்காள சட்ட சபையில் நிறைவேறியது.

அந்தமான் கைதிகள் உண்ணாவிரதம் அநுஷ்டிப்பதன் சம்பந்தமாக இந்தியா அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள அறிக்கையில் சிறைச்சாலை ஒழுங்குகளைத் தாங்கள் தளர்த்தி விட முடியாதென்று தெரிவித்திருக்கின்றனர்.

12 ஈராக் தேசத்துப் பிரதம சேனாதிபதியும், ஆகாயப் படைத்தலைவரும், ஒரு போர் வீரனல் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்.

13 ஷாங்காய் நகரத்தில் முதன் முதலாக, சீன ஜப்பானிய யுத்த முழக்கம் கேட்டது. ஜப்பானிய இயந்திர பீரங்கிகள், சீன ஸ்தாபனங்களின் மீது வெடிகுண்டுகளை வீசி யெறிந்தன.

அந்தமான் தீவுக் கைதிகளுக்கு அநுதாபமாகக் கல்கத்தாவில் ஒரு பெரிய ஊர்வலம் நடை பெற்றது. இதனைப் போலீஸார், தடியடிப்பிரயோகம் செய்து கலைத்து விட்டனர். நாற்பதுபேர் கைதியாயினர்.

14 சீன ஆகாய விமானங்கள், ஷாங்காய் நகரத்தின் மீது வெடி குண்டுகளை எறிந்தன. அமெரிக்கர்களும் பிரிட்டிஷாரும் இதன் பயனாக இறந்து போயினர்.

15 பாலஸ்தீனத்துப் பிரிவினை சம்பந்தமாக ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் தங்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு பிரெஞ்சு அரசாங்கம் ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறது.

15 காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் வார்தாவில் நடைபெற்றது. காங்கிரஸ் மந்திரிகள் நிருவாக விஷயத்தில் எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

16 பர்மாவிலுள்ள சீன ஸ்திரீகளின் கூட்டம் ஒன்று ரங்கூனில் நடை பெற்றது. சீன யுத்தத்திற்கு அனைவரும் உதவி செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

17 பர்மா சட்ட சபைகள் இரண்டும் கூடின.

அந்தமான் கைதிகளுக்கு அநுதாபங் காட்டும் பொருட்டு, சென்னை நகர சபை தன் கூட்டத்தைத் தள்ளி வைத்தது.

பாலஸ்தீனப் பிரிவினை சம்பந்தமாகப் பிரிட்டிஷார் போட்டுள்ள திட்டத்தை நிராகரிக்கத் தாங்கள் தயாராயில்லையென்று சர்வதேச சங்கத்தின் உப கமிட்டி

பர்மாவில் விவசாய சீர்திருத்தம்

—அ. மு. மு. வெள்ளையன் செட்டியார்
M. H. R.

ஸ்ரீமான் வெள்ளையன் செட்டியார் பர்மா சட்டசபையில் ஓர் அங்கத்தினர். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் பிரதிநிதி. தற்போதைய பர்மா சட்டசபையில், இந்தியர்களை மறைமுகமாகப் பாதிக்கக்கூடிய பல மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவற்றில் நிலச் சீர்திருத்த மசோதாக்கள், சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. இது பலருக்கும் கவலையை உண்டுபண்ணி யிருக்கிறது. இந்தக் கட்டுரையில், ஸ்ரீமான் செட்டியார், எத்தகைய நிலச் சீர்திருத்தங்கள் செய்யப்படல் வேண்டுமென்பதைச் சுருக்கமாகத் தெரிவிக்கிறார்.

உலக சரித்திரத்தை நோக்கின் ஆதி காலத்திலிருந்தே மனிதன், நிலத்தின் மூலமாகவே தன் தேவைகளை யெல்லாம் பூர்த்தி செய்து கொண்டு வந்திருக்கிறான். தான் உழுது பயிரிடுகிற நிலத்தை அவன் தெய்வமாகப் போற்றி வந்திருக்கிறான். பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற பஞ்ச பூதங்களையே மனித சமூகம் தன் வாழ்க்கைக்கு ஜீவாதாரமாகக் கொண்டிருக்கிறது. ஆதலின், ஒருவன், தான் பிறந்து வளர்ந்த நாட்டை நேசிப்பதும், அதில் உரிமை கொண்டாடுவதும் சகஜந்தானே.

உலகத்தில் நாகரிகம் எப்பொழுது தோன்ற ஆரம்பித்ததோ அப்பொழுதுமுதல் விவசாயப்பிரச்னை என்பது இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் இந்தப் பிரச்னையின் தன்மையும், தாரதரமும் அந்தந்த நாட்டுச்

யார் ஓர் அறிக்கை அனுப்பி யிருக்கின்றனர்.

18 ஷாங்காய் நகரத்தின் மீது, ஜப்பானிய ஆகாயப்படைகளும், கப்பற் படைகளும், தரைப் படைகளும் சேர்ந்து வெடிகுண்டு வீசி எறிந்தன. சீனத் துருப்புகள் பதிலுக்குப் பதில் தாக்கின.

வங்காள மாகாண சட்ட சபைகளிலுள்ள காங்கிரஸ்காரர் அங்கத்தினர்கள் என்ற ஹோதாவில் தங்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தில் பாதியை மாகாண காங்கிரஸ் கமிட்டிக்குக் கொடுத்து விடுவதென்று தீர்மானித்திருக்கின்றனர்.

19 பிலிப்பைன் தீவிலுள்ள மணிலாவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சொற்ப சேதம்.

20 சீன-ஜப்பானியப் படைகள், வெடி குண்டுகள் வீசி யெறிந்ததனால் ஷாங்காய் நகரத்தில் பெரிய தீவிபத்து ஏற்பட்டது. இதுகாறும் இத்தகைய தீவிபத்து ஏற்பட்டதில்லை யென்று சொல்லப்படுகிறது. பல கட்டிடங்களும் பொருள்களும் சேதம்.

21 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையின் பெர்லின் நிருபர். ஜெர்மானிய அரசாங்க உத்திரவுப்படி லண்டனுக்குத் திரும்பி விட்டார்.

22 முப்பதினாயிரம் டன் நிறையுள்ள ஒரு இத்தாலிய யுத்தக் கப்பல் புதிதாக ஜினோவா துறை முகத்தில் மிதக்க விடப்பட்டது,

23 சீன-ஜப்பான் யுத்த சம்பந்தமாக, ஜப்பானில் இது வரை யுத்த நிதிக்கு 100 லட்சம் யென் சேர்ந்திருக்கிறது. இதற்கு, ஜப்பானிலுள்ள இந்திய மாணுக்கர்கள் ஐம்பது யென் உதவி யிருக்கின்றனர்.

ஸ்பெயின் அரசாங்கத்துக் கப்பல்கள் ஐந்து, இத்தாலிய பீரங்கிகளால் மூழ்கடிக்கப்பட்டனவென்று, சர்வதேச சங்கத்திற்குத் தெரிவிக்கப் பட்டது.

24 பர்மா சட்ட சபையில் 'ஜூனியர் மந்திரிகள்' என்ற பெயருடன் மாதம் எழுநூற்றைம்பது ரூபா சம்பளத்தில், மந்திரிகளுக்கு உதவியாகச் சிலரை நியமிக்க வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு நிறை வேறியது.

பஹாமாஸ் தீவுகளில் ஒன்றான நஸ்ஸௌ என்ற தீவில் ஜனங்கள் பெரிய குழப்பம் விளைவித்துச் சிலரைக் கொலை செய்து விட்டனர்.

சீதோஷ்ண ஸ்திதிக்கும், ஜனங்களின் பழக்கவழக்கங்களுக்கும், அவர்களின் நாகரிக முன்னேற்றத்திற்கும் ஏற்ற மாதிரி மாறுபடும். இப்பொழுது பர்மாவுக்கு விவசாய சம்பந்தமாக ஏதேனும் சீர்திருத்தச் சட்டங்கள் செய்ய வேண்டுமானால், அவை, பர்மிய ஜனங்களின் தற்போதைய நிலைமை, அவர்களுடைய நாகரிகத் தன்மை, மதாசாரங்கள் முதலியவைகளுக்கு ஒத்ததாகவே இருக்க வேண்டும். தவிர, தேசத்தின் அமைப்புக்குத் தக்க மாதிரியும் இருக்கவேண்டும். உதாரணமாக, மலைகள் நிறைந்த ஆப்கானிஸ்தான் தேசத்தில் ஒருவிதமான விவசாயச் சட்டம் ஏற்படுத்துகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதே சட்டம், சம பூமிகள் நிறைந்த இந்தியாவுக்கோ, பர்மாவுக்கோ பொருந்தாதல்லவா? ஒரே மாதிரியான சீதோஷ்ணம், நாட்டு அமைப்பு முதலியன இருந்தால்தான், ஒரு தேசத்தில் இயற்றப்படுகிற சட்டத்தை மற்றொரு தேசத்திலும் கொண்டு புகுத்தலாம். அப்படிக்கில்லாவிட்டால், புதிதாகப் புகுத்தப்படுகிற சட்டம் பிரயோஜனமில்லாமலே போய் விடும். இப்பொழுது, பர்மா சட்ட சபையில், நில சம்பந்தமாகப் பல புதிய மசோதாக்களைப் பர்மிய அங்கத்தினர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்ஙனம் புதிய சட்டங்கள் செய்யப்பட வேண்டுமென்று சொல்கிறவர்கள், விவசாய நிலங்களின் பெரும் பாகம் விவசாயிகளல்லாதார் வசம் சிக்கிக் கொண்டு விட்டதாகக் கருதுகிறார்கள். கால வேறுபாட்டினால், இந்தக் கைமாறுதல் நிலைமை ஏற்பட்டதென்பது சிறிது ஆராய்ச்சி செய்து பார்த்தால் விளங்கும்.

பர்மாவில் அரசாங்கக் கூட்டுறவு இலாகா (Co-operative Department) அவ்வளவு வெற்றிகரமாக நடைபெறவில்லை. விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதே இந்த இலாகாவின் நோக்கம்: நிலங்களைத் தன் சுவாதீனப் படுத்திக் கொண்டுவிட வேண்டுமென்பதல்ல. ஆனால் விவசாயிகளின் திறமையின்மை, ஆடம்பர வாழ்க்கை முதலியவை காரணமாக, சுமார் 70,000 ஏக்ரா நிலங்களை, இந்த இலாகா, தன் சுவாதீனப்படுத்திக் கொள்ள வேண்டி வந்து விட்டது. இது மாதிரியே, விவசாயிகளல்லாத பலரும், குடியானவர்களுக்குப் பலவழிகளிலும் உதவி செய்யப் போய், தாங்களே, கூட்டுறவு இலாகாவைப்போல் சில நிலங்களைச் சுவாதீனப் படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் செட்டியார்களைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 'நிலத்தை அபகரிக்கிறவர்கள்' என்றும், நிலத்தைப் பின்னடி சுவாதீனப்படுத்திக் கொள்ளலாமென்ற நோக்கத்துடனேயே முதலில் இவர்கள் பணத்தைக்கொடுக்கிறார்கள் என்றும் சொல்லப்படுவதை நான் பலமாக மறுக்கிறேன். செட்டியார்களுக்கு நிலம் தேவையில்லை. ரொக்க லேவாதேவிதான் அவர்கள் தொழில். இந்தத் தொழில் ஒன்றில்தான் அவர்கள் நோக்கம் என்று பர்மா மாகாண பாங்கிங் விசாரணைக் கமிட்டியாரும் கூறியிருக்கின்றனர். அப்படியிருந்தும், அவர்கள் கையில் வீடுகள், நிலங்கள், தொழிற்சாலைகள் முதலியன வந்திருக்கின்றனவென்றால், அதற்குக் காரணம் கடன் கொடுத்தவர்களிடமிருந்து திருப்பி ரொக்கமாகப் பெறமுடியாமையே யாகும்.

விவசாயிகளல்லாதார், நிலங்களைத் தங்கள் சுவாதீனத்தில் வைத்துக்

கொள்ள விரும்புவதில்லை. அவை களை வைத்துக் கொண்டு நிருவாகம் செய்வதும் அவர்களுக்குக் கஷ்டம். நிலங்களைப் பயிரிட மற்றவர்களையே அவர்கள் எதிர்பார்க்க வேண்டியிருக் கிறது. நிலங்களை குத்தகைக்கு விடு வதிலும் குடியானவர்களிடமிருந்து நிலச்சேவாவை வசூலிப்பதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே, விவசாயிகளல்லாதவர், தங்கள் விருப் பத்திற்கு மாருகவே, இந்த நிலங்களை வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை, விவசாயிகளுக்குத் துண்டு துண்டாகப் பிரித்துக் கொடுத்து விடுதல் நல்லது என்று சில அரசியல் வாதிகள் நினைக் கிருர்கள். இதனுல் உண்டாகும் பொருளாதாரத் தீமைகளை இவர்கள் கவனிப்பதேயில்லை. நல்ல மூலதனத் துடன் பெரிய முறையில் விவசாயத் தொழிலை நடத்துவதானது, ஒரு தேசத்தின் பொருளாதாரத்திற்கு நல்ல பலமாகும். தற்கால உலக நிலை யில், விஸ்தீரண மான பிரதேசங்களை விவசாயத்திற்கு உபயோகப்படுத்து தலே அவசியமானது.

ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏகரா வீதம் இருக்க வேண்டுமென்று சொல் வது, காதுக்கு இனிமையாகத்தான் இருக்கிறது. ஆனுல் மனித சுபாவத்தை யாரும்மாற்ற முடியாது. யாருக்கு அதி ர்ஷ்டமும், உழைப்பும் இருக்கிறதோ அவர்கள் முன்னுக்கு வந்து விடுகிருர் கள். மற்றவர்கள் கீழே போகவேண் டியதுதான். திறமையுள்ளவனுக்கு ஊதிய முண்டு என்ற விதியை யாரும் புறக்கணித்து நடக்க முடியாது.

பர்மாவைப் பொறுத்த மட்டில், அஃது உலக சக்திகளோடு சேர்ந்து செல்ல வேண்டியதுதான். அது முன் னேற வேண்டுமானுல், மற்ற நாடுகளி லிருந்து, நல்ல அம்சங்களைத் திரட் டித் தனது நிலைமைக்குத் தகுந்த மாதிரி உபயோகித்துக் கொள்ள வேண்டும். அது, தன் சக்திகளை அபி விருத்தி செய்து கொள்ள வேண்டும். உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் விட, பர்மாவிலிருந்துதான் அதிக மான அரிசி ஏற்றுமதி செய்யப்படுகி றது. ஆனுல் இந்த நாட்டில், இங்கி லாந்து, ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளிலுள்ளதைப் போல் பெரிய கைத் தொழில்கள் இல்லை. ஜனங்களில் பெரும்பாலோர் விவசாயத்தையே முக்கிய தொழிலா கக் கொண்டிருக்கிருர்கள். இந்த நிலை மையில், பர்மா சட்ட சபையில் கொண்டு வரப்பட்டுள்ள விவசாய சீர்திருத்த சம்பந்தமான மசோதாக் கள், இந்த நாட்டின் விவசாய அபி விருத்தியை பாதிப்பதாகவே இருக்கு மென்று நான் அஞ்சுகிறேன்.

இனி எந்தவிதமான விவசாயச் சீர் திருத்தங்கள் செய்யப்பட வேண்டு மென்பதைப்பற்றிச்சுருக்கமாகத்தெரி விக்கவிரும்புகிறேன். தற்போது சாகு படிக்கு லாயக்கான நிலங்கள் பர்மா வில் மொத்தம் 19,149,100 ஏக்ராக் கள் இருக்கின்றன. இவற்றில் ஒருசிறு பாகம் விவசாயிக எல்லாதார்க்குச் சொந்தமாயிருந்தாலும், இவற்றைப் பயிரிட்டுச் சாகுபடி செய்வது முதலி யன விவசாயிகள் கையிலேயே இருக்கிறது. ஜனத்தொகையில் நூற் றுக்கு எண்பதுபேர் விவசாயிகள் என்று வைத்துக் கொண்டு, அவர்க ளில் ஸ்திரீகள், குழந்தைகள், வயோ திகர்கள் முதலியவர்களைத் தள்ளி விட்டுப் பார்த்தோமானுல், திடகாத் திரமுள்ள ஒவ்வொரு நபருக்கும் சராசரி ஐந்து ஏக்ரா விகிதம் ஈவு வருகிறது. இந்த ஐந்து ஏக்ரா நிலத்தை ஒவ்வொரு விவசாயிக்கும்

பங்கிட்டுக் கொடுத்தால் போது மென்பதே தற்போதைய பர்மிய அரசியல்வாதிகள் முழக்கமாயிருக்கிறது. ஆனால் வெறும் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதனால் மட்டும் பலன் உண்டாகாது. நிலத்தில் உழைக்கவும் அதனை அபிவிருத்திசெய்யவும் வேண்டும். எனவே, பர்மாவில் நிலத்திற்குக் குறைவில்லை. ஆனால் உழைப்பும் மூலதனமும்தான் தேவை. இந்தியாவைப்போல் பர்மாவிலும் விவசாயிகள் ஏழைகளே. இதனாலும், இவர்களுடைய திறமை யின்மையாலும், இவர்களால் நிலத்திலிருந்து அதிகமான உற்பத்தியைக் காட்டமுடியவில்லை. எனவே, அரசாங்க விவசாய இலாகாவானது, இவர்களுக்கு, குறைந்த செலவில் அதிகமாகச் சாகுபடி செய்யக்கூடிய முறைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும். தவிர, பல பொருள்களையும் விவசாயிகள் உற்பத்தி செய்யவேண்டும். நெல்லுக்கு நல்ல கிராக்கி இருக்கிறதென்பது வாஸ்தவந்தான். ஆனால் அதைப்போலவே இன்னும் அநேக பொருள்களுக்குக் கிராக்கி இருக்கிறது. உதாரணமாக, கரும்பு, புன்செய் தானியங்கள் முதலியவைகளை விளைவிக்க முயற்சி செய்யலாம்.

இங்ஙனம் அதிகமான உற்பத்தி செய்வதற்குத் தொழில் முறையில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தி நடத்த வேண்டும். இத்தகைய ஸ்தாபனங்களை நடத்துவதற்கு ஜனங்களுக்குப் போதிய கல்வி புகட்ட வேண்டும். இந்த மாதிரியான கைத் தொழிற் ஸ்தாபனங்களில் வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைப்பதோடு வருங்கால சந்ததியாருக்கும் நன்மை உண்டாகும்.

உற்பத்தியாகிற பொருள்களைச் சரியானபடி விற்பனை செய்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி ஏற்பாடு செய்வது சாஸ்திரீய முறையில் அமைய வேண்டும். தனிப்பட்ட நபர்கள் சில்லரை சில்லரையாக விற்பனை செய்வதை விட, கூட்டுறவு முறையில் செய்தால் பயன் அதிகம் உண்டாகும். எனவே கூட்டுறவு இலாகாவை, இந்த மாதிரியான துறைகளில் ஈடுபடுத்த வேண்டும். இந்த இலாகா செய்யக்கூடிய நன்மைகளை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். தவிர, இந்தியாவிலுள்ள மாதிரி நில அடமான பாங்கிகள் (Land Mortgage Banks) ஏற்படுத்தி, அவற்றைச் சரியானபடி நடத்தினால் நன்மை உண்டாகும்.

தொழில் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிராமங்களிலேயே உற்பத்தியாகின்றன. எனவே, கிராமங்களைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும். தவிர, கிராமக் குடிசைத் தொழில்களை ஆதரித்துப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

எனவே, விவசாயச் சீர்திருத்தம், கைத்தொழில் அபிவிருத்தி, ஜன சமூக முன்னேற்றம் ஆகியவை ஒன்றுக் கொன்று பின்னிக் கொண்டிருக்கின்றன. விவசாய அபிவிருத்திக்கு இந்த மூன்று அமிசங்களையும் ஒன்று சேர்த்தே பார்க்கவேண்டும். இதற்காக, தற்போதைய நிலைமையை நன்ருகப் பரிசீலனை செய்து பார்த்து என்னென்ன வழிகளில் அபிவிருத்தி செய்யலா மென்பதைப் பற்றி நிர்ணயிக்க வேண்டும். பர்மா அரசாங்கத்தா இதனை அறிந்தே, இப்பொழுது இரண்டு விதமான கமிட்டிகளை நியமித்திருக்கின்றனர். இவ்விரண்டு கமிட்டிகள் முன்னர் நாட்டின் நன்மையை உண்மையாக நாடுபவர்கள், அவரவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தல் நலம்.

பண்டிகைகளின் பொருளாதாரம்

——"திண்டாடுகிறவன்"

ஆனி மாதம் எப்பொழுது முடியப் போகிறதோ வென்று காத்துக்கொண்டிருக்கின்றன நமது ஹிந்துக்களின் பண்டிகைகள். தை மாதத்திலிருந்து ஆனி மாதம் வரை—ஆறு மாத காலம்—கல்யாணங்கள், சம்பந்திகளின் கொடுக்கல் வாங்கல்கள், இடையிலே மனஸ்தாபங்கள் எல்லாம் சாங்கோபாங்கமாக நடைபெறுகின்றன. அப்படி நடத்தா விட்டால் நமது பெண்கள்தான் விடுகிறார்களா? தேசத்தின் பொருளாதார நிலை எப்படி? நம்மைச் சுற்றியுள்ள ஜனங்களின் கஷ்ட நிஷ்டூரங்கள் என்ன? நாமெல்லாரும் சுதந்திரத்திற்காக என்னென்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பவைகளைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு என்ன கவலை? வழக்கம், ஆசாரம், சம்பிரதாயம் முதலிய சொற்றொடர்களில் நம்மையும், நமது பரம்பரையையும் அவர்கள் மாட்டிவிட்டு விட்டு, அந்நிய நாட்டாருடைய பரிகாசத்திற்கு நம்மை ஆளாக்குகிறார்கள். ஆனால் இப்பொழுது எவ்வளவோ பரவாயில்லை. ஐந்து நாட்கள் நடைபெற வேண்டிய கல்யாணங்களெல்லாம் ஒரு நாளாகக் குறைந்து விட்டன. 64 தினுசு பதார்த்தங்கள் பரிமாறுவது இப்பொழுது பத்து தினுசுகளுக்குமேல் இல்லையிலே போட்டுக்கொண்டு சாப்பிடுவது அநாகரிகமென்று சிலர் நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். 150 ரூபாயில் ஒரு கொட்டிப்பூச்சேலையை வாங்கிக் கட்டிக்கொள்வதைவிட, அதே ரூபாய்க்கு மூன்று புடவைகள் வாங்கி நன்றாகத் தினந்தோறும் கட்டிக்கொள்ளலாமேயென்று நினைக்கிற பெண்டுகளும், 35 ரூபாயில் சரிகை வேஷ்டி கட்டுவதைவிட, 6 வேஷ்டிகள் வாங்கித் தினந்தோறும் கட்டிக்கொள்ளலாம் என்று எண்ணுகிற புருஷர்களும் இப்பொழுது தோன்ற ஆரம்பித்திருக்கிறார்கள். நல்ல காலத்திற்கறிகுறியல்லவா இவையெல்லாம்?

இப்படியே, பண்டிகை விஷயங்களிலும், நமது ஹிந்து சகோதர சகோதரிகள் கவனஞ் செலுத்தினால் நல்லது. ஆடி மாதத்திலிருந்து, இந்தப் பண்டிகைகளின் கூட்டம் புறப்பட்டு விடுகின்றன. அந்த நோன்பு, இந்தப் படைப்பு என்று ஒன்றன்பின் ஒன்றாகப் புறப்பட்டு விடுகின்றன. இவை சாதி வித்தியாசம் பாராட்டுவதில்லை. ஒரு சாதிக்கு ஒரு மாதிரியான பண்டிகையென்றால் மற்றொரு சாதியாருக்கு வேறு தினுசான பண்டிகை இருக்கிறது. இதில் என்ன விசேஷமென்றால், இந்தப் பண்டிகைகள் ஏற்படுத்தியதன் நோக்கமென்ன, இவைகளை எங்ஙனம் கொண்டாடவேண்டும் என்பனவற்றை நாம் அறியாமலே இவைகளை நாம் கொண்டாடுகிறோம். கொண்டாடுகிறோம் என்றால் என்ன? விலாப்புடைக்கத் தின்று விட்டுப்புரள்கிறோம். மிகுந்த நேரத்தை சீட்டாடுவதிலோ, வம்புகள் பேசுவதிலோ கழித்து விட்டு, பண்டிகை சம்பிரமமாக முடிந்தது என்று சொல்லித் திருப்தி கொண்டு விடுகிறோம்.

இந்தப் பண்டிகைகள் ஏற்படுத்தின பெரியோர்களின் நோக்கமென்ன? சாதாரணமாக, இந்த மாதிரியான பண்டிகை சமயங்களில் உறவினர் பலரும் ஒன்று கூடுவது வழக்கம்.

இவர்கள் அடிக்கடி ஒன்று சேர்வதற்கும், நெருங்கிப் பழகி, பரஸ்பர அன்பை வளர்ப்பதற்கும் இந்தப் பண்டிகைகள் ஒரு சாதனமாக உபயோகப்படுத்தப்பட்டன. ஆனுல், இப்பொழுதோ, பண்டிகை வந்த தென்ருல் உறவினர்களுக்குள்ளே மனஸ்தாபந்தான். 'என்னைச் சரியாக அழைக்கவில்லை' என்பார் ஒருவர். 'என்னைக் கூப்பிடும்போது, முகம் சுளித்துக் கொண்டிருந்த மாதிரி இருந்தது. இதனுல் மனதார என்னை விரும்பவில்லை' என்று முணுமுணுப்பார் மற்ருருவர். 'வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தார்களே, இரண்டு பாக்குத்தானு எனக்கு ?' என்பார் மற்ருருவர். அதிலும், விவாகம் செய்த முதல் வருஷத்தில் வருகிற பண்டிகைகளின்போது அடடா ! என்ன மனஸ்தாபம் ! என்ன இரைச்சல் ! ஆனுல் எவ்வளவு பணச்செலவு ! இவைகளை எல்லாம் நாம் சிறிது சிரமப்பட்டு குறைந்த செலவில் அதிகமான அன்பை வெளிப்படுத்த முயற்சி செய்யக்கூடாதா ?

தவிர யாரை முன்னிலைப் படுத்தி இந்தப் பண்டிகைகளைக் கொண்டாடுகிருேமோ, அவர்களை முதலாவதாக மறந்து விடுகிருேம். உதாரணமாக கிருஷ்ண ஜெயந்தியை எடுத்துக் கொள்வோம். அன்று கிருஷ்ணன் பிறந்தநாள். அதனைக் கொண்டாடப் பண்டிகை. ஆனுல் அவனைப்பற்றி நினைப்பதே கிடையாது. கிருஷ்ணன் யார் ? அவன் செய்த காரியங்களென்ன ? இவைகளைப்பற்றி நாம் சிந்தனை செய்கிருேமா ? நாமே சிந்தனை செய்யாதபோது, நமது குழந்தைகளுக்கு கிருஷ்ணனைப்பற்றி என்ன சொல்லிக் கொடுக்கப் போகிருேம் ? கிருஷ்ண ஜெயந்தி என்ருல் குழந்தைகளுக்கு—ஏன் ? நமக்குங் கூட முறுக்கு, சீடை நினைவுதான் வருகிறதே தவிர, கிருஷ்ணனுடைய எண்ணமே உண்டாவதில்லை. இப்படியேதான் சரஸ்வதி பூஜை, தீபாவளி முதலியனவெல்லாம்.

இந்தப் பண்டிகை நாட்களில், அந்தந்த மஹா புருஷருடையவோ, அல்லது பெண் தெய்வத்தினுடையவோ, வாழ்க்கையையும், அவர்கள் உலகத்தாருக்குச் செய்த பரோபகாரச் செயல்களையும் நமது தினசரி வாழ்க்கையிலே கொண்டுவர சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். சரஸ்வதி, சங்கீதத்தின் அதிதேவதையாய், நாசூக்கான கலைகளுக் கெல்லாம் உயிராய், வாக்கிலே விளையாடும் பரம் பொருளாய் இருக்கிருள். அவளை வழிபடுகிருேமா? இல்லையே. அவள் எதிரிலே வைத்திருக்கும் வடை, சுண்டலைத் தானே வழிபடுகிருேம். இந்த மனப்பான்மையை நாம் அகற்றிக் கொள்ள வேண்டும்.

நமது தேசத்திலே லட்சக் கணக்கான மக்கள் ஒரு வேளைச் சோற்றுக்குக் கதியில்லாமல் உயிர் விட்டுக் கொண்டிருக்கிருர்கள். அப்படியிருக்க, பண்டிகை, கலியாணம்முதலியவிசேஷ காலங்களில் நாம் ஆடம்பரமாகச் சாப்பிட உரிமையே கிடையாது. அது மனிதத் தன்மையு மாகாது. தான் வருந்திப் பிறர்க்குதவும் தயை பிறந்த நாட்டிலே பிறந்த நாம், பிறர் வருந்தத்தான் உண்டுகொழுக்கலாமா? களிக்கலாமா? அதைச்செய்ய நமக்கு எப்படி மனம் துணிகிறது? மற்றவர்களுடைய அழுகைக் குரல், நமது செவியில் ஒலிக்காவிட்டாலும், இருதயத்திலே கூடவா 'எதிரொலி' கொடுக்கவில்லை?

சகோதரே சகோதரிகளே ! பண்டிகைகளில் சிக்கனஞ் செய்யுங்கள்.

கனகாவின் கடிதங்கள்

——"சரசா"

திவான் பகதூர் ரகுராம கிருஷ்ண ஜடாவல்லபர், ஈச்சம்பாடி ஜில்லா கலெக்டர். பரம வைதிகம். அவரைப் பொறுத்த மட்டில் சாது. கலெக்டர் தோரணையாகக் கூடச் சில சமயங்களில் நடந்து கொள்ளத் தெரியாது. அப்பளாக் குடுமியும், அட்சதைப் பொட்டும் அவரை ஒரு மிராசுதாராகவே எண்ணுமாறு செய்தன. அவருடைய ஒரே பெண் ஸ்ரீமதி கனகாம்புஜம், செல்லமாக வளர்ந்தாள். எல்லாம் தாயார் போதனை. கலெக்டரம்மாள்-மாது ஸ்ரீ கனம் குஞ்சம்மாள்-எப்பொழுதுமே கொஞ்சம் முடுக்காகவே பேசுவாள். ஜடாவல்லபர், தாம் கலெக்டர் என்பதை ஒருகால் மறந்து விட்டிருந்தாலும், இந்த அம்மாள் அதை ஒரு நாளும் மறந்ததில்லை. அவர் கச்சேரிக்குப் போய் கலெக்டர் உத்தியோகம் செய்தார். இவள் வீட்டிலேயே, கலெக்டர் உத்தியோகம் மட்டு மல்ல; ஜட்ஜு உத்தியோகமும் சேர்த்துச் செய்து வந்தாள். இடுப்பிலே கை வைத்துக் கொண்டுதான் சேவகர்களிடமிருந்து வேலை வாங்குவாள். மோட்டார் வண்டியில்லாமல் வெளியே எங்கும் போகத் தெரியாது, உலகத்திலுள்ள எல்லாருமே தனக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற மாதிரி பேசுவாள். இப்படிப்பட்ட தாயாரிடம் வளர்ந்த கனகாம்புஜம் எப்படி யிருப்பாள்? சொல்ல வேண்டுமா? இவளுக்குக் கல்யாணம் ஆயிற்று. ஜடாவல்லபர் என்னென்னமோ வலை போட்டுத்தான் பார்த்தார். ஒரு பீ. ஏ. பையன் கூட கனகாம்புஜத்தைக் கல்யாணஞ் செய்து கொள்ள மாட்டேனென்று சொல்லி விட்டான். வரதட்சணை எவ்வளவோ கொடுப்பதாகச் சொன்னார்: பிரயோஜன மில்லை, இவ்வளவுக்கும் காரணம் என்ன தெரியுமா? கனகாம்புஜம் கொஞ்சம் கருப்பு; அம்மை வார்த்த முகம். இந்த இரண்டுந்தான் குறை. அம்மை வடுக்களில் எவ்வளவு பவுடரைப் போட்டு அப்பினாலும் அவை மறைய மாட்டேனென்று முன்னே வந்து நின்றன. கடைசியில் முனி ரத்தின கனபாடிகளின் குமாரன் சிரஞ்சீவி ராஜராஜேசுவரனுக்குத்தான் பாணிக் கிரகணம் செய்து கொடுக்க வேண்டி நேரிட்டது. கனபாடிகள் கீழ் வேளூர் தாலுகா ஆபீஸில் ஹெட்கிளார்க்கு. நல்ல குடும்பம். சாஸ்திரோக்தமாக எதிலும் நடந்து கொள்கிறவர். பிள்ளையாண்டான் ராஜ ராஜேசுவரன், ஸ்கூல் பைனல் வகுப்பை எட்டிப் பார்த்து ஓடி வந்து விட்டவன். ஆனால் வாசாலகன். எப்படியாவது பிழைத்துப் போவான் என்ற நம்பிக்கையின் பேரில்தான், ஜடா வல்லபர் பெண்ணைக் கொடுத்தார். கலெக்டர் மாப்பிள்ளை யென்று சொல்லி அட்டகாசம் பண்ணலாமே யென்றுதான் ராஜராஜேசுவரன் கனகாம்புஜத்திற்குத் தாலி கட்டச் சம்மதித்தான்.

கொஞ்ச காலம் கழித்து, கனகாம்புஜம், மாமியார் வீட்டுக்கு வந்தாள். அங்கிருந்து, தாயாருக்கு வாரந் தோறும் தவறாமல் கடிதங்கள் எழுதிக் கொண்டு வந்தாள். புக்ககத்துக்குப் புதிதாக வந்த நாட்டுப் பெண்கள் எப்படிப் பிறந்தகத்துக்குக் கடிதம் எழுத வேண்டுமென்பதற்கு இந்தக் கடிதங்கள் ஒரு வழி காட்டியாயிருக்குமென்று கருதி, இவற்றை வெளியிடுமாறு ஸ்ரீமதி கனகம்மாள் உத்திரவு கொடுத்திருக்கிறாள். ஆனால் இந்த வழியை எத்தனை பேர் பின்பற்றுவார்களென்பது நமக்குத் தெரியாது. அதைப்பற்றி நமக்குக் கவலையு மில்லை. இந்த அம்மாள் உத்திரவுப்படி நடந்து கொண்டு விடுகிறோம். கலெக்டர் வீட்டுப் பெண்ணல்லவா?

கடிதம் 1

கீழ்வேளூர்.

என் பிரியமுள்ள அம்மாவுக்கு அநேக நமஸ்காரம். நான் போன திங்கட்கிழமை ராத்திரி இங்கே வந்து சேர்ந்தேன். ஸ்டேஷனுக்கு உன் மாப்பிள்ளையும், அவருடைய சின்ன அத்திம்பேராம் யாரோ ஒரு சிடு மூஞ்சி—அவரும் வந்திருந்தார்கள். பிசு பிசு என்று தூறல் போட்டுக் கொண்டிருந்தது. மழையிலே நனைந்து கொண்டுதான் பிளாட்பாரத்தி

லிருந்து வெளியே போனேன். உன் மாப்பிள்ளை எனக்குக் குடை கூடப் பிடிக்கவில்லை. அவருக்கு வெட்கம் போலிருக்கிறது. அந்தத் தூறலில் நனைந்தது, எனக்குத் தொண்டை கட்டிக்கொண்டு விட்டது. இன்னும் கரகரப்பு விடவில்லை. என் மாமியார், என்னமோ மிளகு லேகியம் ஒன்று பண்ணி அதைப் போட்டுக் கொள்ளச் சொல்கிறார். அந்தக் கண்ட்ராவியெல்லாம் எனக்குப் பிடிக்கிறதா? டாக்டரிடம் போய் 'த்ரோட் பில்ஸ்' (Throat Pills) ஏதாவது வாங்கிப் போட்டுக் கொண்டால் ஒன்றுமிராது. என்ன செய்வது? மாமனாரோ பணத்தில் மகா செட்டு; மாமியார் கேட்க வேண்டியதில்லை. வீட்டிலே நஞ்சானும் குஞ்சானுமாய் அஞ்சு ஆறு இருக்கிறது. அதுகள் வேறே என்னை என்ன நங்கு நங்குகிறது தெரியுமோ அம்மா! ஏன் இங்கே வாக்கு (வாழ்க்கை)ப் பட்டோம் என்று கூட நேற்று ராத்திரி தோன்றி விட்டது.

அது இருக்கட்டும். ஸ்டேஷனிலிருந்து வந்தேனா, ஜட்கா வண்டியிலே ஏறு என்றார் உன் மாப்பிள்ளை. அதில் ஏறியே எனக்குப் பழக்கமில்லை. எனக்கு அழாத குறை. கூட யாராவது ஜவான்கள் வந்திருந்தால் அவர்களையாவது திட்டி யிருப்பேன். என்ன செய்கிறது? வண்டியிலே ஏறிக்கொண்டேன். வண்டிக்காரனோ, பின்னே போ, முன்னே வா என்று உருட்டுகிறான். கூட அந்த அத்திம்பேர் ஒன்று. அது என்னமோ உளறிக்கொண்டே வந்தது. எனக்கா தலைவலி பொறுக்க முடியவில்லை. சாயந்திரம் காபி சாப்பிட வில்லையல்லவா? வீட்டுக்கு வந்து இறங்கினேன். நேரே உள்ளே போகவிட மாட்டார்களோ? வாசற்படியிலேயே, என் மாமியார் ஆரத்தி கரைத்து வைத்துக் கொண்டு, தாம்பாளமும் கையுமாய் நின்று கொண்டிருந்தாள். இது இல்லாமல் எங்கே குறையாயிருந்தது எனக்கு? எனக்கு இந்தக் கர்நாடக வழக்கங்களெல்லாம் பிடிக்கிறதில்லை. எங்கள் இரண்டு பேரையும் நிற்கவைத்து ஆரத்தி சுற்றிக் கொட்டினாள். பக்கத்திலேயிருக்கிற மாமியார் வீட்டுப் பரிவாரங்களெல்லாம் 'மதனி வந்தூட்டா' என்று கை கொட்டிச் சிரிக்கிறதுகள்.

போனால் காபி சாப்பிடச் சொல்ல மாட்டாளோ? எந்த வேளையாக இருந்தால்தானென்ன? காபிக்கு வேளை யென்ன வேண்டி யிருக்கு? பாலுஞ் சாதமுமாகச் சாப்பிடு என்றாள். எனக்குப் பிடிக்கவேயில்லை. என்ன செய்வது? விதியே என்று சாப்பிட்டேன்.

இந்த வீட்டிலே 'எலக்ட்ரிக் விளக்கே' காணோம். மின் மினிப் பூச்சிமாதிரி குத்து விளக்குத்தான் ஏற்றி வைக்கிறார்கள். அதைத் தினந்தோறும் நமஸ்காரம் செய்ய வேண்டுமாம். இது என்ன கூத்து? காலையிலே அதைப் புளிபோட்டுச் சுத்தஞ் செய்ய வேண்டும். சாயந்திரம் அதற்குக் குங்குமம் முதலிய அலங்காரங்களெல்லாம் பண்ணி, கூடத்திலே வைக்க வேண்டும். அதற்கு விளக்கெண்ணெய் ஊற்றும்போதே, எனக்கு வாந்தி யெடுக்க வருகிறது. மூஞ்சியை ஒருமாதிரி வைத்துக் கொண்டால், என் மாமியார் 'என்னடி, தீபம் ஏற்றுகிற வேளையில் முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொள்கிறாய்?' என்று ஒரு அதட்டுப் போடுகிறாள்.

உன் அன்புள்ள

கனகா.